மார்க்ஸ் எங்கெல்ஸ்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு
தொகுதிகளில்

❁

தொகுதி
4



Karl Marx

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

மார்க்ஸ் எங்கெல்ஸ்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

4

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К. Маркс, Ф. Энгельс

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 4

на тамильском языке

K. Marx, F. Engels

SELECTED WORKS IN 12 VOLUMES

Volume 4

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1985

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭ $\frac{0101010000—439}{014(01)—84}$ 334—85

பொருளடக்கம்

கா. மார்க்ஸ். லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் 7

1869ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்புக்கு கா. மார்க்சின் முன்னுரை. 7

1885ஆம் ஆண்டு மூன்றுவது ஜெர்மன் பதிப்புக்கு பி. எங்கெல்சின் முன்னுரை. 11

லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர். . . 14

I. 14

II. 31

III. 53

IV. 81

V. 101

VI. 135

VII. 172

கா. மார்க்ஸ். *The People's Paper*இன் ஆண்டுவிழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவு. லண்டன் ஏப்ரல் 14, 1856. 200

கா. மார்க்ஸ். அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை. முன்னுரை. . . 204

பி. எங்கெல்ஸ். கார்ல் மார்க்ஸ், ''அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை'' 213

I. 213

II. 220

கா. மார்க்ஸ். கா. மார்க்ஸ் யோ. வெய்டமெய
ருக்கு எழுதிய கடிதம். லண்டன், மார்ச் 5,
1852 232

கா. மார்க்ஸ். கா. மார்க்ஸ் பி. எங்கெல்சுக்கு
எழுதிய கடிதம். லண்டன், ஏப்ரல் 16, 1856 233

கா. மார்க்ஸ். கா. மார்க்ஸ் பி. எங்கெல்சுக்கு
எழுதிய கடிதம். லண்டன், செப்டெம்பர் 25,
1857 236

பதிப்பாளர் குறிப்புகள் 239

பெயர்க் குறிப்பகராதி 261

கா. மார்க்ஸ்

லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்[1]

1869ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்புக்கு கா. மார்க்சின் முன்னுரை

எனது நண்பர் யோசிப் வெய்டமெயர்*—அவருடைய அகால மரணத்தை நான் எதிர்பார்க்கவில்லை—1852 ஜனவரி முதல் தேதி முதல் நியுயார்க் நகரத்திலிருந்து ஒரு அரசியல் வார இதழை வெளியிட உத்தேசித்திருந்தார். இந்த வார இதழுக்குத் தீவிரப்புரட்சியின் வரலாற்றை எழுதுமாறு என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதன்படி பிப்ரவரி மாதத்தின் நடுப்பகுதி வரையிலும் லுயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் என்ற தலைப்பில் வாரந்தோறும் அவருக்குக் கட்டுரைகள் அனுப்பி வந்தேன். இதற்கிடையில் வெய்டமெயரின் ஆரம்பத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக 1852ம் வருட வசந்தகாலத்தின் போது, அவர் Die Revolution என்ற மாத இதழை வெளியிட ஆரம்பித்தார். அதன் முதல் வெளியீடு என்னுடைய பதினெட்டாம் புரூமேராக அமைந்திருந்தது. இதில் சில நூறு பிரதிகள் அந்த சமயத்தில் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தன; எனினும் வியாபார ரீதியில் அவை புத்தகக் கடைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஜெர்மனியில் அதிதீவிரவாதி என்ற போலிப் பெருமை கொண்ட ஒரு புத்தக வியாபாரியிடம் என் புத்தகத்தை விற்பனை செய்யுமாறு கேட்டுக்

---

* அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது சென் லூயிஸ் மாவட்டத்தின் இராணுவத் தளபதியாக இருந்தவர்.

கொண்ட பொழுது, ''காலநிலைமைகளைப் புரிந்து கொள்ளாத'' எனது ''வரம்பு மீறிய நடத்தையைக்'' கண்டு அவர் திடுக்கிட்டார்.

மேற்கூறிய விவரங்களிலிருந்து எனது புத்தகம் சம்பவங்களின் உடனடியான தாக்குதலின் பலனை உருவானது; அதிலிருக்கின்ற வரலாற்று விவரங்கள் பிப்ரவரி (1852) மாதத்துக்கு அப்பால் போகவில்லை என்பதை அறியலாம். இந்தப் புத்தகத்தின் மறுபதிப்பு வெளிவருவதற்குப் புத்தக வியாபாரத்தின் தேவைகள் பாதி காரணமென்றால், ஜெர்மனியிலிருக்கும் எனது நண்பர்களின் அவசரமான வேண்டுகோள்களும் பாதி காரணமாகும்.

என் புத்தகத்தைப் போல அநேகமாக இதே சமயத்தில் இதே பொருளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களில் இரண்டைப் பற்றி மட்டும் குறிப்பிடுவது அவசியம். அவை விக்டோர் ஹியூகோ எழுதிய *Napoleon Petit* (''சின்ன நெப்போலியன்'') மற்றும் புரூதோன் எழுதிய *Coup d'Etat* (''திடீர்ப்புரட்சி'').

விக்டோர் ஹியூகோ திடீர்ப்புரட்சியின் பொறுப்பு மிக்க பதிப்பாளரைப் பற்றி சுவைப்பும் சுவையும் கலந்த வசை மாரியைப் பொழிவதோடு நின்றுவிடுகிறார். அவருடைய புத்தகத்தில் அந்த சம்பவம் திடீரென்று வானத்திலிருந்து வந்த இடியேறு போல வர்ணிக்கப்படுகிறது. அவர் அதில் ஒரு தனிநபரின் வன்முறைச் செயலை மட்டுமே பார்க்கிறார். உலக வரலாற்றிலே ஒப்புவமை காண முடியாத தனிப்பட்ட முன்முயற்சித் திறமை உடையவராக அந்த நபரைக் காட்டும் பொழுது அவரைச் சிறியவராக்குவதற்குப் பதிலாக மிகப் பெரியவராக்கி விடுவதை அவர் கவனிக்கவில்லை. புரூதோன் அவர் பங்காக, திடீர்ப்புரட்சியை அதற்கு முன்பு நடைபெற்ற வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவு என்று காட்டுவதற்கு முயற்சி செய்கிறார். எனினும் திடீர்ப்புரட்சி வரலாற்று ரீதியாக எப்படி ஏற்பட்டது என்று அவர் காட்டுவது அதன் கதாநாயகருக்கு வரலாற்று ரீதியான ஆதரவு எழுத்தாக மாறுகிறது. அவர் இப்படி நம்முடைய புற நிலை வரலாற்று ஆசிரியர்கள் என்று

சொல்லப்படுபவர்களுக்குரிய தவறைச் செய்கிறார். இதற்கு மாறான வகையில் நான், பிரான்சில் வர்க்கப் போராட்டம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்களும் உறவுகளும் ஒரு கோமாளித்தனமான சாதாரண நபர் ஒரு மாவீரனின் பாத்திரத்தை வகிப்பதை எப்படி சாத்தியமாக்கின என்பதை விளக்கியிருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தைத் திருத்துவதென்றால் அதன் பிரத்யேகமான சாயல் இல்லாமற் போய்விடும். எனவே முதல் பதிப்பிலிருந்த அச்சுப் பிழைகளைத் திருத்துவதோடும், தற்பொழுது புரிந்து கொள்ள முடியாத குறிப்புக்களை நீக்குவதோடும் நிறுத்திக் கொண்டிருக்கிறேன்.

நான் இப்புத்தகத்தை பின்வருமாறு முடித்திருந்தேன்: ''ஆனால் கடைசியாக லுயீ போனபார்ட்டின் தலையில் சக்கரவர்த்தி மகுடம் சூட்டப்படும் பொழுது, வெண்டோம் ஸ்தூபி மீது நிறுத்தப்பட்டிருக்கும் நெப்போலியனின் வெண்கலச் சிலை உச்சியிலிருந்து கீழே விழுந்து நொறுங்கிப் போகும்.''[2] இந்த வார்த்தைகள் முன்பே நிரூபிக்கப்பட்டு விட்டன.*

1815ம் வருடப் போர் சம்பவங்களைப் பற்றி கர்னல் ஷராஸ் எழுதிய புத்தகம் நெப்போலியன் வழிபாட்டின் மீது தாக்குதலைத் தொடங்கி வைத்தது. அதற்குப் பிறகு—குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளாக—பிரெஞ்சு இலக்கியம் வரலாற்று ஆராய்ச்சி, விமர்சனம், கிண்டல், நகைச்சுவை ஆகிய ஆயுதங்களை உபயோகித்து நெப்போலியனைப் பற்றிய கற்பனைக் கதைக்கு முடிவு கட்டியது. மரபு வழிப்பட்ட பொது ஜன நம்பிக்கையோடு இப்படிக் கோபாவேசமாக முறித்துக் கொண்டது. இந்த மகத்தான கருத்துப் புரட்சி பிரான்சுக்கு வெளியே குறைவாகவே கவனிக்கப்பட்டது; அதைக் காட்டிலும் குறைவாகவே புரிந்து கொள்ளப்பட்டது.

கடைசியாக, பள்ளிக் கூடத் தன்மையைக் கொண்ட, இப்பொழுது எல்லோராலும்—குறிப்பாக ஜெர்மனியில்—உபயோகிக்கப்பட்டு வருகிற சிலிகம் என்று சொல்லப்படும்

---

* இத்தொகுதியின் பக்கம் 199 பார்க்க.—ப-ர்.

வார்த்தையை ஒழிப்பதற்கு என் புத்தகம் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த உதாரணம் வரலாற்று ரீதியாக மேலெழுந்த வாரியானது; முக்கியமான அம்சம், அதாவது பண்டைக்கால ரோமாபுரியில் வர்க்கப் போராட்டம் விசேஷமான உரிமைகளைக் கொண்ட சிறுபான்மையினர் மத்தியில்—சுதந்திரமான பணக்காரர்களுக்கும் சுதந்திரமான ஏழைகளுக்கும் இடையில்—மட்டுமே நடைபெற்றது; மக்கள் தொகையில் உற்பத்திப் பணிகளில் ஈடுபட்ட பெருந்திரளானவர்கள், அடிமைகள் இந்தப் போட்டியாளர்கள் சண்டை போடுகின்ற மிகச் சாத்வீகமான அடித்தளமாகவே இருந்தார்கள் என்பது மறக்கப்படுகிறது. சிஸ்மண்டியின் குறிப்பிடத்தக்க வார்த்தைகளை மக்கள் மறந்துவிடுகிறார்கள்: ரோமாபுரியின் பாட்டாளி வர்க்கம் சமூகத்தின் தயவில் வாழ்ந்து கொண்டிருந்தது; ஆனால் நவீன சமூகம் பாட்டாளி வர்க்கத்தின் தயவில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.[3] பண்டைக்கால வர்க்கப் போராட்டத்துக்கும் நவீனகால வர்க்கப் போராட்டத்துக்கும் இடையே பொருளாயத, பொருளாதார நிலைமைகளில் இவ்வளவு முழுமையான வேறுபாடு இருக்கும் பொழுது, அவை உற்பத்தி செய்கின்ற அரசியல் தலைவர்களுக்கு இடையில் ஒருவருக்கொருவர் பொதுவான அம்சம், கான்டர்பெரி ஆர்ச்பிஷப்புக்கும் உயர்ந்த மதகுருவான சாமுவெலுக்கும் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக இருக்காது.

கார்ல் மார்க்ஸ்

லண்டன், 1869, ஜூன் 23

1869 ஜூலையில் ஹாம்பர்கில் வெளியிடப்பட்ட கா. மார்க்சின் லுயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், இரண்டாவது பதிப்பில் அச்சிடப்பட்டது

1869ஆம் ஆண்டு பதிப்பின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

1885ஆம் ஆண்டு மூன்றாவது ஜெர்மன் பதிப்புக்கு பி. எங்கெல்சின் முன்னுரை

பதினெட்டாம் புரூமேரின் முதல் பதிப்பு வெளியிடப் பட்டு முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதற்குப் புதிய பதிப்பு அவசியமாகியிருப்பது, இந்தச் சிறிய புத்தகம் அதன் சிறப்பை இவ்வளவு காலத்துக்குப் பிறகும் இழந்து விடவில்லை என்பதை நிரூபிக்கின்றது.

இப்புத்தகம் உண்மையிலேயே ஒரு மேதையின் படைப் பாகும். அரசியல் உலகம் அனைத்தின் மீதும் வானத்திலிருந்து இடி விழுந்ததைப் போலத் தாக்கிய ஒரு சம்பவம் நடை பெற்றது. சிலர் அந்த சம்பவத்தை தார்மிக ஆவேசத் தோடு உரத்த குரலில் கண்டித்தனர்; வேறு சிலர் அது புரட்சியிலிருந்து தங்களைக் காத்தருளுமென்றும் புரட்சியின் தவறுகளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையென்றும் அதை ஏற்றுக் கொண்டனர். எல்லோரும் அதைப் பார்த்து அதி சயித்தார்களே தவிர, ஒருவரால்கூட அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த சம்பவம் நடைபெற்றவுடனே மார்க்ஸ் சுருக்கமான, செறிவான புத்தகத்தை எழுதினார். அது பிப்ரவரி நாட்களிலிருந்து[4] பிரெஞ்சு வரலாற்றின் மொத்த நிகழ்வுப் போக்கையும்—அதன் உள் இடை இணைப் புடன்—வெட்ட வெளிச்சமாக்கியது; டிசம்பர் 2ந் தேதி யன்று[5] நடைபெற்ற அதிசயம் இந்த இடை இணைப்பின் இயற்கையான, அவசியமான விளைவு என்று வகைப்படுத்தி யது. அவ்வாறு வகைப்படுத்தும் பொழுது அந்த திடீர்ப் புரட்சியின் கதாநாயகனை அவனுக்கு முற்றிலும் தகுதியுடைய இகழ்ச்சியைத் தவிர வேறு எவ்விதமாகவும் வர்ணிப்பது அவசியமில்லாததாயிற்று. அந்தச் சித்திரம் மிக அதிகமான கலைத் திறமையுடன் தீட்டப்பட்டிருந்தபடியால், அதற்குப் பிறகு வெளிவந்திருக்கும் ஒவ்வொரு புதிய விவரமும் அது யதார்த்தத்தை எவ்வளவு உண்மையோடு பிரதிபலித்தது என்பதற்குப் புதிய சான்றுக அமைந்தது. தன் காலத்தின் உண்மையான வரலாற்றைப் புரிந்துகொண்ட இந்தச்

சிறப்பு, சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கணத்திலேயே அவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் தன்மை முற்றிலும் இணையற்றதாகும்.

ஆனால் இதற்கு, பிரெஞ்சு வரலாற்றைப் பற்றிய மார்க்சின் முழுநிறைவான அறிவு தேவைப்பட்டது. வேறு எந்த நாட்டைக் காட்டிலும் பிரான்சில்தான் வரலாற்று ரீதியான வர்க்கப் போராட்டங்கள் ஒவ்வொரு தடவையும் ஒரு முடிவு ஏற்படுகின்ற அளவுக்கு நடைபெற்றிருக்கின்றன. அவை நடைபெறுகின்ற, அவற்றின் முடிவுகள் பொழித்துரைக்கப்படுகின்ற மாற்றமடைகின்ற அரசியல் வடிவங்கள் மிகவும் தெளிவான உருவரைகளால் முத்திரையிடப்படுகின்றன. மத்திய காலத்தில் நிலப்பிரபுத்துவத்தின் மையமாகவும், மறுமலர்ச்சிக் காலம் முதல்[6] பல சமூகப் படிநிலைகளைக் கொண்ட ஒன்றுபட்டதான முடியாட்சிக்கு மாதிரிப் படிவமான நாடாகவும் இருந்துவரும் பிரான்ஸ், மாபெரும் புரட்சியின் போது நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து வேறு எந்த ஐரோப்பிய தேசத்திலும் இல்லாத வகையில் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை மூலச்சிறப்பான தூய்மையோடு நிறுவியது. ஆட்சியில் இருக்கின்ற முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் இங்கே வேறு எங்கும் அறிந்திராத, பார்க்க முடியாத வடிவத்தில் தோன்றியது. பிரான்சின் கடந்தகால வரலாற்றை மார்க்ஸ் மிகுந்த ஆர்வத்தோடு பயின்றது மட்டுமல்லாமல் அதன் இன்றைய வரலாற்றில் ஒவ்வொரு விவரத்தையும் துருவித் தெரிந்து கொண்டு எதிர்கால உபயோகத்துக்காக அதைத் திரட்டிச் சேகரித்ததற்கும் இதுவே காரணம். ஆகவே அங்கே நடைபெற்ற சம்பவங்கள் ஒருபோதும் அவரைத் திடுக்கிடச் செய்யவில்லை.

மேலே கூறப்பட்டிருப்பவைகளைத் தவிர இன்னொரு காரணமும் உண்டு. வரலாற்றின் உந்து விசையைப் பற்றிய மாபெரும் விதியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ். வரலாற்று ரீதியான அனைத்துப் போராட்டங்களும், அவை அரசியல், மத, தத்துவஞான அல்லது வேறு

ஏதாவதொரு சித்தாந்தத் துறைக்குள்ளாக முன்னேறிய போதிலும், உண்மையில் அவை அநேகமாக சமூக வர்க்கங்களின் போராட்டங்களின் தெளிவான வெளியீடுகள் மட்டுமே; இந்த வர்க்கங்கள் இருப்பதும் அதன் காரணமாக இவற்றுக்கிடையே ஏற்படுகின்ற மோதல்களும் கூட அவற்றின் பொருளாதார நிலைமையின் வளர்ச்சியின் தரத்தினால், அவற்றின் உற்பத்தி முறையினாலும் அதனால் நிர்ணயிக்கப்படுகின்ற பரிவர்த்தனை முறையினாலும் நிலைப்படுத்தப்படுகின்றன என்பது அந்த விதியாகும். இயற்கை விஞ்ஞானத்தில் சக்தியின் உருமாற்றம் பற்றிய விதிக்கு உள்ள அதே முக்கியத்துவம் வரலாற்றில் இந்த விதிக்கு உண்டு. இங்கும் இந்த விதி இரண்டாவது பிரெஞ்சுக் குடியரசின்[7] வரலாற்றைப் புரிந்து கொள்வதற்குரிய திறவுகோலை அவருக்கு அளித்தது. இந்த வரலாற்றுச் சம்பவங்களில் அவர் தன்னுடைய விதியைச் சோதனை செய்தார். அதில் இந்த விதி சிறந்த வகையில் வெற்றியடைந்தது என்பதை முப்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு நாம் இன்றும் சொல்ல முடிகிறது.

பி. எ.

1885ல் எழுதப்பட்டது

Karl Marx, *Der Achtzehnte Brumaire des Louis Bonaparte*, Humburg, 1885 எனும் புத்தகத்தில் அச்சிடப்பட்டது

இப்புத்தகத்தின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

லுயீ போனபார்ட்டின்
பதினெட்டாம் புரூமேர்

I

உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள மாபெரும் சம்பவங்கள் அனைத்தும் இரண்டு தடவை தோன்றுகின்றன; மாபெரும் தலைவர்களும் இரண்டு சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார்கள் என்று ஹெகல் எழுதியுள்ளார். அவர்களுடைய தோற்றம் முதல் சந்தர்ப்பத்தில் சோகக் கதையாகவும் இரண்டாவது சந்தர்ப்பத்தில் கேலிக் கூத்தாகவும் இருக்கிறது என்பதை எழுதுவதற்கு அவர் மறந்துவிட்டார். தன்டோனுக்குப் பதிலாகக் காசிடியேர்; ரொபெஸ்பியேருக்குப் பதிலாக லுயீ பிளாங்; 1793ம் வருடமுதல் 1795ம் வருடம் முடிய இருந்த மலைக் கட்சிக்குப் பதிலாக 1848-51ம் வருடத்திய மலைக் கட்சி;[8] மாமனுக்குப் பதிலாக மருமகன். புரூமேர் பதினெட்டின் இரண்டாம் பதிப்பை[9] ஒட்டிய சந்தர்ப்பங்களிலும் அதே கேலிச் சித்திரம் தோன்றுகிறது!

மனிதர்கள் தங்களுடைய வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் தங்கள் விருப்பத்திற்கேற்ப அதை உருவாக்கிக் கொள்ள முடிவதில்லை; தாங்களே தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்றபடி இல்லாமல் கடந்த காலத்திலிருந்து கைமாற்றிக் கொடுக்கப்பட்ட, தயாராயுள்ள சூழ்நிலைமைகளுக்கு, தாங்கள் நேரடியாகச் சந்திக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்பவே வரலாற்றை உருவாக்குகிறார்கள். இதுவரை செத்துப் போயிருக்கிற பழைய தலைமுறைகளின் மரபு இன்று உயிரோடிருப்பவர்களின் மூளையில் அழுக்குப் பேயைப் போல உட்கார்ந்திருக்கிறது. அவர்கள்

தங்களையும் பொருள்களையும் புரட்சிமயமாக்கும் பணியில், இது வரை தோன்றியிராத ஒன்றைப் படைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றும் நேரத்தில், அப்படிப்பட்ட புரட்சிகரமான நெருக்கடிக் காலங்களின் போது, அவர்கள் கவலையோடு கடந்த காலத்திய ஆவிகளைத் தங்களுடைய உதவிக்குக் கூப்பிடுகிறார்கள். அந்த ஆவிகளிடமிருந்து பெயர்களையும் போர் முழக்கங்களையும் உடைகளையும் கடன் வாங்குகிறார்கள். உலக வரலாற்றின் புதிய காட்சியை மிகப் பழமையான மாறுவேடத்திலும் இரவல் மொழியிலும் காட்டுகிறார்கள். இப்படித்தான் மார்ட்டின் லூதர் திருத் தொண்டர் பாலின் முகமூடியை அணிந்து கொண்டார். 1789—1814ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சி தன்னை ரோமானியக் குடியரசென்றும் ரோமானியப் பேரரசென் றும் மாறி மாறி ஒப்பனை செய்து கொள்கிறது. 1848ம் வருடத்தின் புரட்சிக்கு ஒரு சமயத்தில் 1789ம் வருடத்தை யும் மறு சமயத்தில் 1793-95ம் வருடங்களின் புரட்சிகர மரபையும் கேலி செய்வதைத் தவிர வேறெதுவும் தெரிய வில்லை. இது போலவே புதிதாக ஒரு மொழியைக் கற்க ஆரம்பித்திருப்பவர் எப்பொழுதும் தன்னுடைய தாய் மொழியில் அதை மொழிபெயர்த்துக் கொள்வார். ஆனால் எப்பொழுது பழைய மொழியின் உதவியை நாடாமல் புதிய மொழியைக் கையாள்கிறாரோ, எப்பொழுது தாய் மொழியை மறந்து புதிய மொழியை உபயோகிக்கிறாரோ அப்பொழுது தான் அவர் புதிய மொழியின் தன்மையைப் புரிந்து கொண்டவர் எனலாம்; அவரால் தன்னுடைய கருத்துக் களை அந்த மொழியில் சுலபமாக வெளியிட முடியும் எனலாம்.

உலக வரலாற்றில் காணப்படுகிற இந்த மாயவித்தையில் ஒரு வேறுபாட்டையும் காணலாம். பிரெஞ்சுப் புரட்சியில் ஈடுபட்ட கட்சிகளையும் பொது மக்களையும் போலவே வீரத் தலைவர்களான கமீல் டெமூலேன், தன்டோன், ரொபெஸ் பியேர், சென் ஜூஸ்ட், நெப்போலியன் ஆகியோரும், பழைய ரோமானியருடைய உடைகளையும் சொற்களையும் உபயோகித்துக் கொண்டு தங்கள் காலத்திய கடமையை,

அதாவது சங்கிலிகளை உடைத்து நவீன முதலாளித்துவ சமூகத்தை நிர்மாணிக்கும் கடமையை நிறைவேற்றினர்கள். முதலில் வந்தவர்கள் நிலப்பிரபுத்துவத்தின் அஸ்திவாரத்தைச் சுக்குச்சுக்காக உடைத்து அதில் செழித்து வளர்ந்திருந்த தலைகளை வெட்டிப் போட்டார்கள். அடுத்து வந்தவர் பிரான்சில் சுதந்திரமான போட்டி வளர்ச்சி அடைதல், துண்டு துண்டாகக் கிடந்த நிலங்களைச் சரிவரப் பயன்படுத்தல், தேசத்தின் உற்பத்திச் சக்திகள் மீதான சங்கிலிகளை உடைத்து அவற்றை உபயோகம் செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நிலைமைகளை ஏற்படுத்தினர். அவர் பிரான்சின் எல்லைகளுக்கு அப்பால் எல்லா இடங்களிலும் காணப்பட்ட நிலப்பிரபுத்துவ சமூக ஏற்பாடுகளை, பிரான்சின் முதலாளித்துவ சமூகத்துக்குத் தகுந்தவாறு நவீனமான சூழ்நிலையை ஐரோப்பாவில் ஏற்படுத்துவதற்குத் தேவைப்பட்ட அளவுக்கு ஒழித்தார். புதிய சமூக அமைப்பு உருவாக்கப்பட்டதும் உடனே மிகப் பழையதாகி விட்ட நெடுஞ்சுவர்கள் மறைந்துவிட்டன. அவற்றோடு புத்துயிரளிக்கப்பட்ட ரோமானியத் தலைவர்களும்—புரூட்டஸ்கள், கிராக்கஸ்கள், புப்லீக்கோலாக்கள் ஆகியோரும் ரோமானிய மக்கள் பிரதிநிதிகளும் [tribune] செனெட்டர்களும் சீஸர் உள்பட மறைந்து விட்டார்கள். முதலாளித்துவ சமூகம் அதன் தெளிவு மிக்க யதார்த்த அனுபவத்தில், சேய்கள், குஸேன்கள், ருவயே-காலார்கள், பென்ஜமின் கான்ஸ்டான்கள், கிஸோக்கள் போன்று உண்மையை விளக்குபவர்களையும் மக்கள் கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களையும் கொண்டிருந்தது. அதன் உண்மையான தளபதிகள் கடைமுகப்புக்குப் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தார்கள். பன்றித் தலையரான பதினெட்டாம் லுயி அதன் அரசியல் தலைமையை வகித்தார். முதலாளித்துவ சமூகம் செல்வத்தைப் பெருக்குவதிலும் சமாதானப் போட்டியிலும் முழுமையாக ஈடுபட்டிருந்ததனால், ரோம் நகரத்தின் ஆதிகாலத்துப் பேய்கள் தான் பிறந்த நேரத்திலிருந்து தன்னை கவனித்துக் கொண்டு வருகின்றன என்பதை மறந்துவிட்டது. முதலாளித்துவ சமூகம் வீரமில்லாததாக இருக்கலாம். ஆனால் வீரம், தியாகம்,

பயங்கரமான செயல்கள், உள்நாட்டுப் போர், மக்களினங்களுக்கிடையிலான போராட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகத்தான் இந்தச் சமூகம் பிறந்தது. ரோமானியக் குடியரசின் மூலச்சிறப்பு முறையில் அமைந்த கண்டிப்பான மரபுகளைப் பின்பற்றி, இந்த சமூகத்தின் மற்போர் வீரர்கள், தங்களுடைய போராட்டங்களின் உள்ளடக்கத்தின் குறுகலான முதலாளித்துவ வரையறைகளைத் தங்களிடமிருந்தே மறைத்துக் கொண்டு, வரலாற்றுச் சிறப்பான சோக நாடகத்தைப் போன்று உயர்ந்த மட்டத்தில் தங்களுடைய உணர்ச்சிகளை நீடித்துக் கொள்வதற்குத் தேவையான இலட்சியங்களையும் கலை வடிவங்களையும் சுய ஏமாற்றங்களையும் கண்டு கொண்டார்கள். இதைப் போலவே, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, வேறொரு வளர்ச்சிக் கட்டத்தில் குரோம்வெலும் ஆங்கில மக்களும் தங்களுடைய முதலாளித்துவப் புரட்சிக்குத் தேவையான சொற்பொழிவுகள், ஆர்வங்கள், கற்பனைகளைப் பழைய ஏற்பாடு என்ற புத்தகத்திலிருந்து இரவல் பெற்றனர். உண்மையான நோக்கம் நிறைவேறியதும், ஆங்கில சமூகத்தின் முதலாளித்துவ மாற்றம் முடிவடைந்ததும் ஹபாக்குக்கின் இடத்தில் லாக் அமர்ந்தார்.

அந்தப் புரட்சிகளின் போது செத்துப் போனவற்றுக்குப் புத்துயிர் கொடுத்தது பழைய போராட்டங்களைக் கேலி செய்வதற்காக அல்ல; புதிய போராட்டங்களுக்குப் பெருமை சேர்ப்பதற்காகவே. யதார்த்தத்தில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பிலிருந்து தப்பி ஓடுவதற்காக அல்ல; கற்பனையில் அந்தக் குறிப்பிட்ட கடமையைப் பன்மடங்கு பெரிதாகப் பார்ப்பதற்காகவே. அந்தப் பேய்களை மீண்டும் நடமாடச் செய்வதற்கல்ல; புரட்சியின் உத்வேகத்தை மறுபடியும் பெறுவதற்காகவே.

1848ம் வருடத்திலிருந்து 1851ம் வருடம் முடிய பழைய புரட்சியின் பேய்தான் நடமாடிக் கொண்டிருந்தது. பழைய பாயீ என்று மாறுவேடம் போட்டுக் கொண்ட, மெல்லிய தோல் கையுரை அணிந்த குடியரசுவாதியான (républicain en gants jaunes) மராஸ்டிலிருந்து, தன்னுடைய அருவருக்கத்தக்க இழிவான தோற்றத்தை நெப்போலி

யனின் இரும்பினாலான மரண முகமூடியின் கீழ் மறைத்துக் கொண்டிருக்கும் சாகஸக்காரன் வரை எல்லோருமே இதில் அடங்குவார்கள். புரட்சியின் மூலமாகத் தங்களுக்கு வேகமான முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பிய தேச மக்கள் திடீரென்று எல்லாமே மறைந்து போன சகாப்தத்துக்குத் தாங்கள் திரும்பிப் போய்விட்டதைப் பார்க்கிறார்கள். நிகழ்காலத்துக்கு மீண்டும் வந்து விடலாம் என்று எவ்வகையிலும் நினைக்கக் கூடாது என்பதற்காக, பழைய தேதிகள், பழைய காலவரிசை, பழைய பெயர்கள், எப்பொழுதோ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கவனத்துக்கு உரித்தாகிவிட்ட பழைய காலத்து அரச ஆணைகள் ஆகியவை மீண்டும் உயிரோடு நடமாடுகின்றன. அது போல எப்பொழுதோ செல்லரித்துப் போன போலீஸ்காரர்களும் உயிரோடு வருகிறார்கள். ஒரு காலத்தில் பெட்லமில்[10] ஒரு பைத்தியக்கார ஆங்கிலேயன் தான் பழைய எகிப்திய பாரவோ அரசர்களின் ஆட்சியின் கீழிருப்பதாக நினைத்துக் கொண்டானும். எத்தியோப்பியாவின் தங்கச்சுரங்கங்களில் தாழிலாளியாகத் தான் தினந்தோறும் கடுமையாகப் பாடுபடுவதாகவும், பாதாளச் சிறையில் தான் அடைக்கப்பட்டிருப்பதாகவும், தலைக்கு மேலே ஒரு அகல் விளக்கு மட்டும் மங்கலாக எரிந்து கொண்டிருப்பதாகவும், அடிமைகளின் அதிகாரி கையில் நீளமான சவுக்கோடு பக்கத்தில் நிற்பது போலவும், சுரங்கத்துக்கு வெளியே ஏராளமான காட்டுமிராண்டிக் கூலிப்படைகள் நின்று கொண்டிருப்பதாகவும், அவர்களுக்குப் பொது மொழி இல்லாததால் அவர்களால் தங்களுக்கிடையே பேசிக்கொள்ள முடியாததோடு சுரங்கத்தில் கட்டாய வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களிடமும் பேச முடியாது நிற்பதாக அவன் கற்பனை செய்து கொண்டு கதறியழுததாகவும் சொல்வார். ''சுதந்திர ஆங்கிலேயனுகப் பிறந்த நான் பழைய பாரவோக்களுக்குத் தங்கத்தைச் சேர்த்துக் கொடுக்க இவ்வளவு பாடுபட வேண்டுமா?'' என்று பெருமூச்சு விட்டானும். ''போன பார்ட் குடும்பத்தின் கடன்களைத் தீர்ப்பதற்காக நாங்கள் இவ்வளவு பாடுபட வேண்டுமா?'' என்று பிரெஞ்சு தேசமே

பெருமூச்சு விடுகிறது. ஆங்கிலேயனுக்குச் சுய நினைவு இருக்கின்றவரை தங்கம் சேர்க்க வேண்டும் என்ற ஆசையைக் கைவிட மாட்டான். பிரெஞ்சுக்காரர்கள் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் வரை நெப்போலியனை மறக்க மாட்டார்கள் என்பதை டிசம்பர் மாதம் 10ந் தேதியன்று நடைபெற்ற தேர்தல் நிரூபித்தது.[11] புரட்சியின் ஆபத்துக்களை விட்டு எகிப்தின் சோற்றுப் பானைக்குத்[12] திரும்ப வேண்டுமென்று அவர்கள் மிகவும் ஆசைப்பட்டார்கள். 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி அவர்களுடைய விருப்பம் நிறைவேறியது. அவர்கள் பழைய நெப்போலியனின் கேலிச் சித்திரத்தை வைத்திருந்தது மட்டுமல்ல, ஆனால் அந்த நெப்போலியன் பதினெட்டாம் நூற்றாண்டின மத்தியில் தோன்றினால் எப்படிப்பட்ட கேலிச் சித்திரமாக இருப்பார் என்ற முறையில் அந்தப் பழைய நெப்போலியனை வைத்திருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூகப் புரட்சி தன்னுடைய கவித்திறனைப் பழங்காலத்திலிருந்து பெற முடியாது; எதிர்காலத்திலிருந்துதான் பெற முடியும். அது தன்னுடைய பணிகளை ஆரம்பிப்பதென்றால் கடந்த காலத்தைப் பற்றிய எல்லா மூடநம்பிக்கைகளையும் முதலில் ஒழிக்க வேண்டும். முன்பு நடைபெற்ற புரட்சிகள் தங்களுடைய உள்ளடக்கத்தைத் தாங்களே முன்னப்பில்லாமல் செய்வதற்காக உலக வரலாற்றில் கடந்த காலச் சம்பவங்களை நினைவு கூர்ந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புரட்சி தன்னுடைய உள்ளடக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு செத்துப் போனவர்களை செத்துப் போனவர்களைப் புதைக்குமாறு விட்டுவிட வேண்டும். அங்கே உள்ளடக்கத்தைக் காட்டிலும் சொற்கள் முக்கியமானவை; இங்கே சொற்களைக் காட்டிலும் உள்ளடக்கம் முக்கியமானது.

பிப்ரவரிப் புரட்சி ஒரு திடீர்த் தாக்குதலாகும்; பழைய சமூகம் அதற்குத் தெரியாமலேயே திடீரென்று கைப்பற்றப்பட்டுவிட்டது, இந்த எதிர்பாராத தாக்குதலைப் புதிய சகாப்தத்தைக் கொண்டுவரக் கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க சம்பவம் என்று மக்கள் அறிவித்தார்கள்.

டிசம்பர் மாதம் 2ந் தேதியன்று ஒரு மோசடிக்காரனின் தந்திரத்தால் பிப்ரவரிப் புரட்சி மறைந்துவிடுகிறது. இங்கே தூக்கி எறியப்பட்டது முடியாட்சியல்ல; பல நூற்றாண்டுகள் போராடியதன் பலனாக முடியாட்சியிலிருந்து பெற்ற மிதவாதச் சலுகைகளே தூக்கியெறியப்பட்டன. சமூகம் தனக்கொரு புதிய உள்ளடக்கத்தைப் பெறுவதற்குப் பதிலாக அரசு தன்னுடைய மிகப் பழமையான வடிவத்துக்குத் திரும்பியது. போர்வீரனின் வாளும் மதகுருவின் தொப்பியும் மக்களை அடக்கி ஆள்கின்ற அவமானகரமான நிலைமை ஏற்பட்டது. 1848ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற தீர்மானகரமான தாக்குதலுக்கு (coup de main) 1851ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசரத் தாக்குதல் (coup de tête) பதிலாகும். சுலபமாக வந்தது; சுலபமாகவே போய்விட்டது. எனினும் இந்த இடைக்காலம் பயனற்றதாகப் போய்விடவில்லை. பிப்ரவரி மாதப் புரட்சி வெறும் மேற்பரப்பை அசைப்பதோடு மட்டும் முடிந்து போய்விடாமல் இருக்க வேண்டுமென்றால் அதற்கு முன்னதாக எவ்விதமான கல்வியும் அனுபவங்களும் வாடிக்கையான, அதாவது முறைப்படியான வளர்ச்சிக்குத் தேவையோ அவற்றையெல்லாம் பிரெஞ்சு சமூகம் 1848-51ம் வருடங்களில் சுருக்கமான வழியில்—காரணம் இவ்வழி புரட்சிகரமானது—கற்றுக் கொண்டது. சமூகம் புதிய பாதையை அடைவதற்காகத் திரும்பிய இடத்திற்கும் பின்னாலே போய்விட்டது போலத் தோன்றுகிறது. உண்மையைச் சொல்வதென்றால் சமூகம் முதலில் தன்னுடைய புரட்சிக்குரிய திருப்புமுனையை, நிலையை, உறவுகளை, சூழ்நிலைமைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நவீனப் புரட்சி முக்கியமானதாக இருப்பதற்கு அத்தகைய நிலைமைகள் மட்டும் தேவை.

பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற புரட்சிகளைப் போன்ற முதலாளித்துவப் புரட்சிகள் வேகமாக வெற்றிக்கு மேல் வெற்றி அடைகின்றன. அவற்றின் ஆரவாரமான விளைவுகள் ஒன்றையொன்று மிஞ்சிவிடுகின்றன. மனிதர்களும் பொருள்களும் ஒளி வீசும் வர்ணங்களில் பளிச்

செனப் பிரகாசிக்கிறார்கள். அன்றுடம் ஆனந்த பரவசம் ஏற்படுகிறது. ஆனல் இவற்றின் ஆயுள் குறைவுதான். அவை உச்ச நிலையை வெகு சீக்கிரத்தில் எட்டுகின்றன. சமூகம் இதன் புயல் தாக்குதல் காலத்திற்கான விளைவுகளை நிதானமாக சீரணிப்பதற்குக் கற்றுக் கொள்வதற்கு முன்பு அதிகமாகக் குடித்தவர்களுக்கு ஏற்படுகின்ற கிளர்ச்சியற்ற நிலை நெடுங்காலத்துக்கு நீடிக்கிறது. இதற்கு மாறுகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்டவற்றைப் போன்ற பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் தொடர்ச்சியாகத் தங்களைத் தாமே விமர்சித்துக் கொள்கின்றன; தங்களுடைய வழிப்பயணத்தை அடிக்கடி நிறுத்திக் கொள்கின்றன; பார்வைக்கு சாதிக்கப்பட்டது மாதிரித் தோன்றும் கட்டத்துக்கே மறுபடியும் வந்து, முதலிலிருந்து மறுபடியும் தொடங்குகின்றன. தங்களுடைய முதல் முயற்சிகளின் பலவீனங்களையும் குறைபாடுகளையும் அற்பத்தனங்களையும் ஈவிரக்கமின்றிக் கண்டனம் செய்கின்றன. தங்கள் எதிரியை பூமியிலே தூக்கி எறியும் பொழுது கூட அவன் பூமியிலிருந்து புதிய பலத்தைப் பெற்றுக் கொண்டு முன்னைக் காட்டிலும் பலவானகத் தங்களுக்கு முன்னல் வர வேண்டும் என்று ஆசைப்படுவது போலத் தோன்றுகிறது. தங்களுடைய இலட்சியங்களின் தெளிவற்ற மகத்துவத்தைக் கண்டு திரும்பத் திரும்பப் பின்வாங்குவது போலத் தோன்றுகிறது. கடைசியில் திரும்பிப் போகவே முடியாத நிலை ஏற்பட்டு, சூழ்நிலை அவர்களை அறைகூவுகிறது:

> Hic Rhodus, hic salta!
> இதுதான் ரோஜா, இங்கே நடனமாடு![13]

மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை, ஓரளவுக்குத் தகுதி வாய்ந்த பார்வையாளர்கள் ஒவ்வொருவரும், பிரான்சில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் நன்றாக ஆராயாவிட்டாலும் கூட, புரட்சி படுதோல்வியடையப் போகிறது என்பதை முன்பே புரிந்து கொண்டிருப்பார்கள். 1852ம் வருடத்தின் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்று ஏற்படப் போகும் நன்மையான விளைவு

களைப்[14] பற்றி திருமிகு ஜனநாயகவாதிகள் சுயதிருப்தியோடு தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளும் பேரோசையைச் சிறிது நேரம் காது கொடுத்துக் கேட்டால் கூடப் போதுமே. அவர்கள் மனதில் 1852ம் வருடத்திய மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை, ஏசுநாதர் மீண்டும் பிறப்பார், புதிய ஊழி தோன்றும் என்று கிலியாஸ்டுகள்[15] நம்புவதைப் போல ஒரு நிலைத்த எண்ணமாக, வறட்டுச் சூத்திரமாக மாறிவிட்டது. எப்பொழுதும் நடைபெறுவது போல பலவீனம் அதிசயங்களை நம்புவதில் அடைக்கலம் பெற்றுவிட்டது. எதிரியை ஒழித்துவிட்டதாகக் கற்பனை செய்தவுடனே எதிரியை உண்மையிலேயே முறியடித்து விட்டதாக நம்பத் தொடங்கிவிட்டது. தனக்கிருக்கும் எதிர்காலக் கீர்த்தியைப் பற்றி மந்தமான வகையில் பேசிக் கொண்டு, பல வீரச் செயல்களுக்கான திட்டங்களைக் கையில் வைத்திருப்பதாகவும் அவற்றை பகிரங்கப்படுத்துவதற்கு இன்னும் உரிய காலம் வரவில்லையென்றும் சொல்லிக் காண்டு நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளத் தவறியது. ந்த வீரர்களுக்குத் திறமையில்லை என்பது எப்பொழுதோ ரூபிக்கப்பட்டுவிட்ட போதிலும், அதை மறைப்பதற்காகவே ஒருவருக்கொருவர் அனுதாபம் காட்டுவதோடு கூட்டமாகச் சேர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மூட்டை முடிச்சுகளை முன்பே கட்டி வைத்து வாகை மாலைகளையும் முன்னதாகவே வாங்கிக் கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் பங்கு மார்க்கெட்டில் யதார்த்தத்தில் இல்லாத (in partibus)[16] குடியரசுகளின் பேரில் சூதாடி லாபம் சேர்த்துக் கொண்டிருந்தார்கள்—இக்குடியரசுகளுக்காக முன்பே முன்யோசனையோடு மிகவும் அமைதியாக அரசாங்க ஊழியர்களையும் திரட்டி வைத்திருந்தார்கள். தெளிவான வானத்திலிருந்து இடி விழுவதைப் போல டிசம்பர் 2ந் தேதி அவர்கள் மீது விழுந்தது. பயந்து போயிருக்கும் நேரங்களில் பலமாகக் கூச்சல் போட்டுத் தங்கள் மனதிலிருக்கும் பயவுணர்ச்சியை மூழ்கடித்துவிட முயற்சிக்கும் மக்களினங்கள், வாத்துக் கூட்டம் சத்தம் போடுவதால் கப்பிட்டோலைக் காப்பாற்றக் கூடிய காலம் மலையேறி விட்டது என்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள்.[17]

அரசியலமைப்புச் சட்டமும், தேசிய சபையும், அரச வம்சக் கட்சிகளும், நீலக் குடியரசுவாதிகளும் சிகப்புக் குடியரசுவாதிகளும், ஆப்பிரிக்க வீரர்களும்,[18] மேடையிலே கேட்ட இடியோசையும், நாளிதழ்களிலே தோன்றிய மின்னலும், இலக்கியம் அனைத்தும், அரசியல் பெயர்களும், அறிவுத்துறையில் பெற்ற புகழும், சிவில் சட்டமும் குற்றச் சட்டமும், சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் (liberté, égalité, fraternité), 1852ம் வருடத்தின் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையும் ஒரு மனிதனின் வசியத்தின் விளைவாக மாயக் காட்சியைப் போல மறைந்து போய் விட்டன—எதிரிகள் கூட அந்த மனிதனை ஒரு மந்திரவாதி என்று வர்ணிப்பதில்லை. பொதுவான வாக்குரிமை என்பது உலகத்தோர் கண்களுக்கு முன்பாகத் தன் கையாலேயே மரண சாசனமும் உயிலும் எழுதி, ''இருப்பவை எல்லாம் அழிவது பொருத்தமே''* என்று மக்களின் பெயரால் அறிவிப்பதற்காக ஒரு கணப் பொழுது மட்டுமே, நிலைத்திருப்பதாகத் தோன்றியது.

பிரெஞ்சுக்காரர்கள் சொல்வதைப் போல திடீரென்று அது நடந்து விட்டது என்று சொல்வது மட்டும் போதுமானதல்ல. நான் கவனமில்லாதிருந்த நேரத்தில் அந்த சாகஸக்காரன் என்னைக் கற்பழித்து விட்டான் என்று சொல்லுகிற பெண்ணையோ தேசத்தையோ யாரும் மன்னிக்க மாட்டார்கள். இத்தகைய பேச்சுக்களைக் கொண்டு இந்தப் புதிரைத் தீர்க்க முடியாது; ஆனால் அதற்கு வேறு வடிவம் கொடுக்கலாம். முந்நூற்று அறுபது லட்சம் மக்களைக் கொண்ட ஒரு தேசத்தை மூன்று மோசடிக்காரர்கள் எத்தகைய எதிர்ப்பும் இல்லாமல் திடீரென்று கைப்பற்ற முடிந்தது எப்படி என்பதற்கு விளக்கம் தேவைப்படுகிறது.

1848ம் வருடம் பிப்ரவரி மாதம் 24ந் தேதியிலிருந்து 1851ம் வருடம் டிசம்பர் மாதம் முடிய பிரெஞ்சுப் புரட்சியின் வெவ்வேறு கட்டங்களை சுருக்கமாக நினைவுகூர்வோம்:

---

* கேதே, பாவுஸ்டு, பகுதி I, மூன்றும் காட்சி (''பாவுஸ்டின் காபினெட்'').—ப-ர்.

அங்கே மூன்று முக்கிய கட்டங்கள் இருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. பிப்ரவரி மாதக் கட்டம்; 1848ம் வருடம் மே மாதம் 4ந் தேதியிலிருந்து 1849ம் வருடம் மே மாதம் 28ந் தேதி வரை: குடியரசு அமைக்கப்படும் கட்டம், அல்லது தேசிய நிர்ணய சபைக் கட்டம்; 1849ம் வருடம் மே மாதம் 28ந் தேதியிலிருந்து 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி வரை: அரசியலமைப்புச் சட்டக் குடியரசுக் கட்டம், அல்லது தேசிய சட்டமன்றக் கட்டம்.

பிப்ரவரி மாதம் 24ந் தேதி முதல், அதாவது லுயி பிலிப் தூக்கியெறியப் பட்டது முதல் 1848ம் வருடம் மே மாதம் 4ந் தேதி முடிய, அதாவது அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாவது வரையுள்ள முதல் கட்டத்தை, அதாவது சரியாகச் சொன்னால் பிப்ரவரிக் கட்டத்தைப் புரட்சியின் முன்னுரை என்று கூறலாம். அதனால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமே தன்னைத் தற்காலிகமானது என்று அறிவித்ததிலிருந்து அதன் தன்மை அதிகாரபூர்வமாக எடுத்துரைக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தைப் போலவே இந்தக் கட்டத்தில் அது எழுப்பிய, முயற்சித்த, வெளியிட்ட ஒவ்வொரு விஷயமுமே அது தற்காலிகமானதுதான் என்பதைப் பறைசாற்றியது. எவருமே அல்லது எதுவுமே தான் நீடிப்பதற்கும், உண்மையான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் தனக்கு உரிமை இருப்பதாக வற்புறுத்தவில்லை. புரட்சிக்குத் தயாரிப்பு செய்த அல்லது அதை நிர்ணயித்த அனைத்தும்: அரசவம்சவாத எதிர்த்தரப்பு,[19] குடியரசுவாதிகளான முதலாளிகள், ஜனநாயக-குடியரசுவாதிகளான குட்டி முதலாளிகள் மற்றும் சோஷலிஸ்டு-ஜனநாயகவாதிகளான தொழிலாளர்கள், பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட அரசாங்கத்தில் தற்காலிகமாக இடம் பெற்றனர்.

இது வேறு விதமாக நடைபெற்றிருக்க முடியாது. பிப்ரவரி நாட்களின் போது ஆரம்பத்தில் தேர்தல் சீர்திருத்தம் உத்தேசிக்கப்பட்டது. அதன்படி சொத்துடைமை வர்க்கங்களினுள் அரசியல் சலுகைகளைப் பெற்றிருந்த நபர்களின் வட்டத்தை விரிவுபடுத்துவதும் அதன் மூலம் நிதியதிபர்களின் தனியான மேலாதிக்கத்தைத் தூக்கியெறி

வதும் நோக்கமாக இருந்தது. போராட்டம் உண்மையிலேயே வெடித்த பொழுது, பொதுமக்கள் தெருக்களில் தடையரண்களை எழுப்பிப் போராடத் தொடங்கிய பொழுது, தேசியக் காவலர் படை எந்த நடவடிக்கையையும் எடுக்காத பொழுது, இராணுவம் தீவிரமான எதிர்ப்பைக் காட்டாத பொழுது, முடியாட்சி ஒடிப்போன பொழுது, குடியாட்சி ஏற்பட்டுவிட்டது போலத் தோன்றியது. இதை ஒவ்வொரு கட்சியும் தனக்குரிய வழியில் புரிந்து கொண்டது. புரட்சியின் போது ஆயுதங்களைக் கையிலேந்தி வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் குடியரசின் மீது தன்னுடைய முத்திரையைப் பதித்து அதை ஒரு சமூகக் குடியரசு என்று அறிவித்தது. இவ்வாறு நவீனப் புரட்சியின் பொதுவான உள்ளடக்கம் சுட்டிக்காட்டப்பட்டது. உடனே, நேரடியாக, அன்று கிடைக்கக் கூடியவற்றைக் கொண்டு, வெகுஜனங்களின் கல்வி நிலைமை, அன்று நிலவிய சந்தர்ப்பங்கள், உறவுகள் ஆகியவற்றைக் கணக்கிலெடுத்து நிறைவேற்றப்படக் கூடிய எல்லாவற்றுக்கும் இவ்வுள்ளடக்கம் தனிவகையான முரண்பாட்டைக் கொண்டிருந்தது. இதற்கு மாறாக, பிப்ரவரிப் புரட்சியில் ஒத்துழைத்த மற்ற எல்லா சக்திகளின் கோரிக்கைகளும் அரசாங்கத்தில் அந்த சக்திகளுக்கு மிகவும் அதிகமான பங்கு கொடுக்கப்பட்டதன் மூலமாக நிறைவேற்றப்பட்டன. எனவே இப்படி ஆர்ப்பாட்டமான சொற்றொடர்களையும் உண்மையில் எந்த நிச்சயமுமில்லாத நிலைமையையும் அலங்கோலத்தையும்; புதுமையைப் புகுத்துவதற்காக உற்சாகமாகச் செய்யப்பட்ட முயற்சிகளையும் பழைய வழக்கங்கள் வேரூன்றி நிலவுவதையும்; வெளித்தோற்றத்துக்கு சமூகம் முழுவதும் ஒன்றிணைந்திருப்பதும் அதன் ஒவ்வொரு பகுதியும் மிகவும் ஆழமாகப் பிரிந்து நிற்பதுமான குழப்பம் நிறைந்த கலவையையும் வேறு எந்தக் காலத்திலும் நாம் பார்க்க முடியாது. பாரிஸ் நகரத்தின் பாட்டாளி வர்க்கம் தனக்கு முன்னால் ஏற்பட்டிருக்கும் மகத்தான வாய்ப்புக்களைப் பற்றி நினைத்து இன்னும் மகிழ்ச்சியடைந்து சமூகப் பிரச்சினைகளை அக்கறையோடு விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில் சமூகத்தின் பழைய

சக்திகள் தங்களை ஒன்றுசேர்த்துக் கொண்டு, அணி திரட்டி, நிதானத்துக்கு வந்தன. ஜூலை முடியாட்சிக் காலத்தின்[20] தடைகள் நொறுங்கியவுடன் அரசியல் அரங்கத்தை நோக்கிப் புயல் வேகத்தில் பாய்ந்த, தேசத்தில் பெரும்பான்மை யினராக இருந்த விவசாயிகள், குட்டி முதலாளிகளிட மிருந்து இந்தப் பழைய சக்திகளுக்கு எதிர்பாராத ஆதரவு கிடைத்தது.

இரண்டாவது கட்டம் என்பது 1848ம் வருடம் மே மாதம் 4ந் தேதி முதல் 1849ம் வருடம் மே மாத முடிவு வரையிலும் உள்ள காலமாகும். இது முதலாளித்துவக் குடி யரசு ஏற்படுத்தப்பட்டு, அமைக்கப்பட்ட காலமாகும். பிப்ரவரி நாட்களுக்குப் பிறகு உடனே அரசவம்ச எதிர்த்தரப்பு குடியரசுவாதிகளைக் கண்டும் குடியரசுவாதிகள் சோஷலிஸ்டு களைக் கண்டும் ஆச்சரியப்பட்டது மட்டுமல்ல, பிரான்ஸ் தேசம் முழுவதுமே பாரிஸ் நகரத்தைக் கண்டும் ஆச்சரியப் பட்டது. 1848ம் வருடம் மே மாதம் 4ந் தேதி கூடிய தேசிய சபை நாடு முழுவதும் நடைபெற்ற தேர்தல்களின் மூலமாக ஏற்பட்டது. எனவே அது தேசத்தின் பிரதிநிதி யாகும். பிப்ரவரி நாட்களின் போது ஏற்பட்ட ஆசை களுக்கு அது ஒரு ஜீவனுள்ள எதிர்ப்பாக இருந்தது. அந்தப் புரட்சியின் விளைவுகளை முதலாளித்துவ மட்டத்துக்குக் கீழே இறக்க வேண்டியிருந்தது. இந்த தேசிய சபையின் தன் மையை உடனடியாகப் புரிந்து கொண்ட பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கம், அந்த சபை கூடிய சில நாட்களுக்குப் பிறகு, மே மாதம் 15ந் தேதியன்று[21] அதை ஒழிக்க, கலைக்க பலவந்தமாக முயற்சி செய்தது வீண்தான். தேசத் தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த எதிர்ப்பு உணர்ச்சியினால் உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த வடிவத்தை அதன் உட் பகுதிகளாகப் பிரிக்க பலவந்தமாக முயற்சி செய்தது வீண் தான். மே மாதம் 15ந் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகள் பிளாங்கியையும் அவருடைய தோழர்களையும், அதாவது பாட்டாளி வர்க்கக் கட்சியின் உண்மையான தலைவர்களைப் பொது அரங்கிலிருந்தும் நாம் ஆராய்கின்ற முழுக் காலத் துக்கும் அகற்றியதைத் தவிர வேறு எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை என்பது நன்கு தெரிந்ததே.

லுயீ பிலிப்பின் முதலாளித்துவ முடியாட்சியைத் தொடர்ந்து ஒரு முதலாளித்துவக் குடியரசுதான் ஏற்பட முடியும். அதாவது இதுவரை மன்னர் பெயரால் முதலாளித்துவ வர்க்கத்தின் குறுகிய பகுதி ஆட்சி செய்து கொண்டிருந்ததைப் போல, இனி மேல் மக்களின் பெயரால் முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் ஆட்சி செய்யும். பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகள் வெறும் கற்பனாவாதப் பிதற்றல் என்பதால் அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அரசியல் நிர்ணய சபை இப்படி அறிவித்த பொழுது பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கம் ஐரோப்பிய உள்நாட்டுப் போர்களின் வரலாற்றில் மிகவும் பிரம்மாண்டமான ஜூன் மாத எழுச்சியின் மூலமாக அதற்கு பதில் கொடுத்தது. முதலாளித்துவக் குடியரசு வெற்றி பெற்றது. அதற்கு ஆதரவாக நிதி அதிபர்கள், தொழில் துறை முதலாளிகள், நடுத்தர வர்க்கம், குட்டி முதலாளிகள், இராணுவம், ரோந்துக் காவலர் படையில் திரட்டப்பட்டிருந்த லும்பன் பாட்டாளி வர்க்கத்தினர், அறிவுஜீவிகள், மதகுருக்கள், கிராமப்புற மக்கள் ஆகியோர் இருந்தனர். பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கத்தின் அணியில் அதைத் தவிர வேறு யாரும் இல்லை. முதலாளித்துவ வர்க்கம் வெற்றியடைந்த பிறகு மூவாயிரத்துக்கும் அதிகமான கலகக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்; பதினாயிரம் பேர்கள் விசாரணையில்லாமல் நாடு கடத்தப்பட்டார்கள். இந்தத் தோல்வியோடு பாட்டாளி வர்க்கம் புரட்சி அரங்கத்தில் பின்னணிக்குப் போய்விடுகிறது. இயக்கத்தில் புதுத் திருப்பம் ஏற்படுவது போலத் தோன்றுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது மறுபடியும் முன்னுக்கு வருவதற்கு முயற்சி செய்கிறது. ஆனால் ஒவ்வொரு தடவையும் அதன் பலம் மென்மேலும் குறைந்து வருவதோடு பலன்களும் மிகச் சிறிதளவாகிக் கொண்டு வருகின்றன. தனக்கு மேலே உள்ள ஒரு சமூகப் பகுதி புரட்சியின் கொந்தளிப்பில் ஈடுபட்டவுடன் பாட்டாளி வர்க்கம் அதனோடு கூட்டணி அமைக்கிறது. அதன் காரணமாக வெவ்வேறு கட்சிகளுக்கு ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஏற்படுகின்ற அத்

தனை தோல்விகளிலும் அது பங்கு கொள்கிறது. ஆனால் தொடர்ந்து வரும் அடிகள், அவை விழுகின்ற சமூகப் பரப்பளவு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு பலவீனமாகிவிடுகின்றன. தேசிய சபையிலும் பத்திரிகைகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் மிக முக்கியமான தலைவர்களாக இருந்தவர்கள் அடுத்தடுத்து நீதிமன்றங்களுக்குப் பலியாகிவிடுகிறார்கள். தகுதியற்ற நபர்கள் மென்மேலும் அதிகமாகத் தலைமைக்கு வருகிறார்கள். அதன் ஒரு பகுதி வறட்டுத்தனமான பரிசோதனைகளில் ஈடுபடுவதில், பரிவர்த்தனை வங்கிகளையும் தொழிலாளர் சங்கங்களையும் ஏற்படுத்துவதில், அதாவது பழைய உலகத்திற்குள் இருக்கும் மகத்தான பலம் அனைத்தையும் பயன்படுத்தி அதில் புரட்சிகர மாற்றம் செய்வதைக் கைவிட்டுவிட்டு, சமூகத்தின் முதுகுக்குப் பின்னால் தனிப்பட்ட முறையில், தன்னுடைய வாழ்க்கையின் குறுகிய நிலைமைகளுக்கு உள்ளாகவே கடைத்தேற்றம் அடையப் பாடுபட்டு அதன் காரணமாகவே அழிந்து போகிறது. அதனால் தன்னிடமுள்ள புரட்சிகரமான மகத்துவத்தை மறுபடியும் பெறுவதற்கோ, புதிதாக ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டணிகளிலிருந்து புதிய ஆற்றலைப் பெறுவதற்கோ அதனால் முடியவில்லை என்பது போலத் தோன்றுகிறது. கடைசியில் ஜூன் மாதத்தில் அது எதிர்த்து நின்ற எல்லா வர்க்கங்களும் அதற்குப் பக்கத்திலேயே பரிதாபமாக விழுந்து கிடக்கும் வரை இந்த நிலை நீடிக்கிறது. ஆனால் ஒரு மகத்தான, உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெருமையோடு பாட்டாளி வர்க்கம் விழுந்து கிடக்கிறது. ஜூன் மாதத்தில் ஏற்பட்ட பூகம்பத்தை நினைத்து பிரான்ஸ் மட்டுமல்ல ஐரோப்பாக் கண்டம் முழுவதுமே நடுங்குகிறது. இதற்குப் பிறகு மேல் வர்க்கங்களுக்கு ஏற்பட்ட தோல்விகளெல்லாம் மிகக் குறைவான விலை கொடுத்துப் பெற்ற தோல்விகள் என்ற காரணத்தால், அவற்றை முக்கியமான சம்பவங்களாகச் சித்திரிக்க வேண்டும் என்பதற்காக வெற்றியடைந்த கட்சி வெட்கங்கெட்ட முறையில் அவற்றை மிகைப்படுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. தோல்வியடைந்த கட்சி பாட்டாளி வர்க்கக்

கட்சியிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளியிருக்கிறதோ அவ் வளவு அதிகமான அவமானத்தை வெற்றியடைந்த கட்சி சுமக்கிறது.

ஜூன் மாதத்தில் கலகக்காரர்களுக்கு ஏற்பட்ட தோல்வி முதலாளித்துவ வர்க்கக் குடியரசை நிறுவுவதற் கும் அதைக் கட்டுவதற்கும் தேவையான முறையில் பூமியை சமப்படுத்தித் தயாரித்தது என்பது உண்மையே; ஆனால் அதே சமயத்தில் ஐரோப்பாவில் ''குடியரசா அல்லது முடி யாட்சியா'' என்பதைத் தவிர வேறு பிரச்சினைகளும் மோதிக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி யது. இங்கே முதலாளித்துவக் குடியரசு என்பது ஒரு வர்க் கம் மற்ற வர்க்கங்களின் மீது வரம்பில்லாத எதேச்சாதி காரத்தைக் குறிக்கும் என்பதை அது வெளிக்காட்டியது. வளர்ச்சியடைந்த வர்க்கக் கட்டமைப்பும் நவீனமான உற்பத்தி நிலைமைகளும் அதனோடு பல நூற்றாண்டுகளாக ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக மரபுவழிப்பட்ட எல் லாக் கருத்துக்களும் கரைந்துள்ள அறிவு பூர்வமான மனநிலை யும் கொண்ட, பழமையான நாகரிகமுள்ள நாடுகளில் குடி யரசு என்பது பொதுவாக முதலாளித்துவ சமூகத்தைப் புரட்சி மயமாக்கும் அரசியல் வடிவத்தைக் குறிக்கிறதே தவிர, அதன் வாழ்க்கையின் பழமைவாத வடிவத்தை அல்ல. உதாரணமாக வட அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளில் வர்க்கங்கள் ஏற்கெனவே இருந்த போதிலும் அவை இன்னும் உறுதியாகிவிடவில்லை; அவை தொடர்ச்சியான இயக்கத் திலிருக்கும் தங்களுடைய உட்பகுதிகளை இடைவிடாது கலைப்பதும் மாற்றியமைப்பதுமாக இருக்கின்றன. அங்கே நவீன உற்பத்திச் சாதனங்கள் தேங்கி நிற்கும் உபரி ஜனத் தொகையோடு பொருந்தியிராமல், அதற்கு மாறாக அங்கே ஏற்பட்டிருக்கும் மூலைகளின், கரங்களின் தேவையை ஓரளவுக்கு ஈடு செய்கிறது. கடைசியாக, அங்கே சுறு சுறுப்போடும் இளமைத் துடிப்போடும் நடைபெறுகின்ற பொருளுற்பத்தி இயக்கம் ஒரு புதிய உலகத்தைத் தன் னுடையதாக்கிக் கொள்ள வேண்டியிருப்பதால் பேய்களின் பழைய உலகத்தை ஒழிப்பதற்கு வாய்ப்பு இல்லாததோடு அதற்குரிய நேரமும் இல்லை.

ஜூன் மாதத்தின் போது பாட்டாளி வர்க்கத்தை அராஜகக் கட்சி, சோஷலிசக் கட்சி, கம்யூனிசக் கட்சி என்று கூறி அதற்கு எதிராக ஒழுங்குமுறைக் கட்சி என்ற பெயரில் எல்லா வர்க்கங்களும் கட்சிகளும் ஒன்றுசேர்ந்திருந்தன. அவை ''சமூகத்தின் எதிரிகளிடமிருந்து'' சமூகத்தைக் ''காப்பாற்றியவை''. பழைய சமூகத்தின் காவல் முழக்கமான ''சொத்து, குடும்பம், மதம், ஒழுங்கு'' ஆகியவற்றைத் தங்களுடைய இராணுவத்துக்கு அனுமதிச் சொற்களாகக் கொடுத்தன. எதிர்ப்புரட்சியின் சிலுவைப் போர்வீரர்களிடம் ''இந்தச் சின்னத்தின் மூலம் உனக்கு வெற்றி கிட்டும்''[22] என்று பறைசாற்றின. இந்தத் தருணத்திலிருந்து, ஜூன் மாதக் கிளர்ச்சிக்காரர்களை எதிர்ப்பதற்காக இந்தச் சின்னத்தின் கீழ் கூடிய எண்ணற்ற கட்சிகளில் ஏதாவதொரு கட்சி தன்னுடைய சொந்த வர்க்க நலனுக்காகப் புரட்சியின் போர்க்களத்தில் நிற்கும் பொழுது உடனே அதற்கெதிராக ''சொத்து, குடும்பம், மதம், ஒழுங்கு'' என்ற போர்க்குரலை எழுப்பி அது அழிக்கப்படுகிறது. சமூகத்தை ஆட்சி செய்கின்றவர்களின் வட்டம் குறைகின்ற பொழுதெல்லாம், விரிவான நலன்களுக்குப் பதிலாகக் குறுகிய நலன்கள் கட்டிக் காக்கப்படும் பொழுதெல்லாம், சமூகம் காப்பாற்றப்படுகிறது. மிக எளிமையான முதலாளித்துவ நிதி முறைச் சீர்திருத்தம், மிகச் சாதாரணமான மிதவாதம், மிகச் சம்பிரதாயமான குடியரசுவாதம், மிக அற்பமான ஜனநாயகவாதம் பற்றிய ஒவ்வொரு கோரிக்கையும் உடனே ''சமூகத்தின் மீது பிரயோகிக்கப்பட்ட தாக்குதலாக'' வர்ணிக்கப்பட்டு ''சோஷலிசம்'' என்று ஒரே சமயத்தில் கண்டிக்கப்படும். கடைசியில் ''மதத்தையும் ஒழுங்கு முறையையும்'' காப்பாற்றக் கிளம்பிய தலைமைப் பூசாரிகளே அவர்கள் உட்கார்ந்திருந்த பித்தியா முக்காலிகளை[23] விட்டுக் காலால் மிதிக்கப்பட்டுத் துரத்தப்படுகிறார்கள். இரவு நேரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது படுக்கையிலிருந்து இழுக்கப்பட்டு, சிறைவண்டிகளில் இருட்டறைகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்; அல்லது நாடு கடத்தப்படுகிறார்கள். அவர்களுடைய புனித ஆலயம் தரை

மட்டமாக்கப்பட்டு விட்டது; அவர்களுடைய வாய்கள் மூடப்பட்டுவிட்டன; பேனாக்கள் உடைக்கப்பட்டுவிட்டன; அவர்களுடைய சட்டம் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டு விட்டது. இதெல்லாம் மதம், சொத்து, குடும்பம், ஒழுங்கு ஆகியவற்றின் பெயரால் செய்யப்படுகிறது. ஒழுங்குமுறை யின் முதலாளித்துவ வெறியர்களைக் குடிவெறியிலிருக்கும் இராணுவத்தினர் கும்பல் அவர்களுடைய வீடுகளின் மேல் மாடிகளில் நின்று எட்டிப் பார்க்கும் பொழுதே சுட்டுப் பொசுக்குகிறது. அவர்களுடைய அமைதியான வீடுகளின் ஆசாரம் குலைக்கப்படுகிறது. வெறும் வேடிக்கைக்காகவே அவர்களுடைய வீடுகளின் மீது குண்டுகள் வெடிக்கப்படு கின்றன. எல்லாம் சொத்து, குடும்பம், மதம், ஒழுங்கு முறையின் பெயரால்தான் நடைபெறுகிறது. கடைசியில் முதலாளித்துவ சமூகத்தின் கழிசடைகள் ஒழுங்குமுறையைப் பாதுகாக்கும் புனித அணிகளை உருவாக்குகின்றனர். கிரப் புலீன்ஸ்கி என்னும் வீரர்* ''சமூகத்தின் இரட்சகர்'' என்ற முறையில் டியுல்லரீ மாளிகையில் ஆடம்பரமாகக் குடியேறு கிறார்.

II

சம்பவங்களில் வளர்ச்சித் தொடரை மீண்டும் கவனத் துக்குத் கொண்டுவருவோம்.

ஜூன் சம்பவங்களுக்குப் பிறகு அரசியல் நிர்ணய சபை யின் வரலாறு என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவான குடியரசுவாதிகளின் ஆதிக்கமும் அவர்களின் வீழ்ச்சி யும் பற்றிய வரலாறுதும். மூவர்ணக் குடியரசுவாதிகள், தூய குடியரசுவாதிகள், அரசியல் குடியரசுவாதிகள், சடங்குப் பற்றுள்ள குடியரசுவாதிகள் என்று வெவ்வேறு பெயர் களில் அழைக்கப்பட்டு வந்தது இந்தப் பிரிவுதான்.

லுயீ பிலிப்பின் முதலாளித்துவ வர்க்க முடியாட்சியின் போது இவர்கள் அதிகார பூர்வமான குடியரசுவாத எதிர்த் தரப்பாக விளங்கியவர்கள். அதன் காரணமாக, அன்றைய அரசியல் உலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பகுதியாக இருந்த

* —லுயீ போனபார்ட்.—ப-ர்.

வர்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் சபைகளில் இடம் பெற்றிருந்ததோடு பத்திரிகைகள் மத்தியிலும் கணிசமாகச் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். பாரிஸ் நகரத்திலிருந்து அவர்கள் வெளியிட்டு வந்த National என்ற செய்தித்தாள் Journal des Débats[24] என்ற சஞ்சிகையைப் போலவே மதிப் பிற்குரியதாகக் கருதப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டத் துக்கு உட்பட்ட முடியாட்சியின்போது இப்பிரிவின் நிலைக்கு அதன் தன்மை பொருத்தமாக இருந்தது. அது மாபெரும் பொது நலன்களால் ஒன்றுபட்டிருந்து உற்பத்தியின் தனிப் பட்ட நிலைமைகளால் ஒதுக்கப்பட்ட முதலாளித்துவக் கும்பல் அல்ல. அது குடியாட்சி உணர்வு படைத்த முதலாளி கள், எழுத்தாளர்கள், வழக்குரைஞர்கள், இராணுவ அதி காரிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவாகும். லுயீ பிலிப்புக்கு எதிராகத் தேசத்தில் ஏராள மானவர்களிடம் நிலவிய தனிப்பட்ட வெறுப்பும் முதலாவது குடியரசைப்[25] பற்றிய நினைவுகளும் குடியாட்சி இலட்சி யத்துக்குச் சிலரிடமிருந்த உற்சாகமான நம்பிக்கையும், எல்லாவற்றுக்கும் மேலாக பிரெஞ்சு தேசியவாதமும் அதன் செல்வாக்குக்குக் காரணமாகும். வியென்னா ஒப்பந்தங்களும்[26] இங்கிலாந்தோடு கூட்டணியையும் பிரெஞ்சு தேசிய வாதம் தொடர்ந்து எதிர்க்குமாறு இந்தக் கும்பல் எப் போழுதும் தூண்டிக் கொண்டிருந்தது. லுயீ பிலிப்பின் ஆட்சியின் கீழ் Nationalக்கு ஏற்பட்டிருந்த ஆதரவில் பெரும் பகுதிக்கு இந்த மறைமுகமான ஏகாதிபத்திய உணர்ச்சி காரணமாகும். எனவேதான் அது பிற்காலத்தில் குடியரசின் போது லுயீ போனபார்ட்டின் வடிவத்தில் National பத்திரிகைக்கு பயங்கரமான எதிரியாகக் காட்சியளித்தது. அது மற்ற முதலாளித்துவ எதிர்க் கட்சிகள் எல்லாவற்றை யும் போலவே நிதி அதிபர்களை எதிர்த்துப் போராடி யது. பிரான்சில் நிதி வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிய விவாதங்கள் நிதி அதிபர்களை எதிர்ப்பதோடு நெருங்கிய தொடர்புடையவை என்ற காரணத்தால் மிகச் சுலபமாகச் செல்வாக்குப் பெற வழி ஏற்பட்டது. பரிசுத்தவாதிகளின் தலையங்கங்களுக்கு (leading articles) இவை ஏற்படுத்தும்

அதிகமான வாய்ப்பை யார்தான் இழக்க முடியும்? பிரான்சி லிருந்த காப்புவரி விதிக்கும் முறையை National அடிமைத் தனமாக ஆதரித்த காரணத்தால் தொழில் முதலாளிகள் இதனிடம் நன்றி காட்டினர்கள். எனினும் இது காப்புவரி முறையை அரசியல்-பொருளாதார அடிப்படையைக் காட்டி லும் தேசிய அடிப்படையில்தான் ஆதரித்தது. கம்யூனிசத் தையும் சோஷலிசத்தையும் இது தீவிரமாகக் கண்டனம் செய்தபடியால் முதலாளித்துவ வர்க்கம் முழுமையுமே இதனிடம் நன்றி காட்டியது. ஆயினும் National பத்திரிகை யின் கட்சி பரிசுத்தமான குடியரசுக் கட்சியாகும், அதாவது முதலாளித்துவ ஆதிக்கத்தின் முடியாட்சி வடிவத்துக்குப் பதிலாகக் குடியர்ட்சி வடிவம் வேண்டும் என்று கோரியது; அந்த ஆட்சியில் தனக்கு மிக அதிகமான பங்கு வேண்டும் என்று கோரியது. இந்த மாற்றத்துக்கான நிலைமைகளைப் பற்றி அதனிடம் எப்படிப்பட்ட தெளிவான கருத்துக்களும் இல்லை. ஆனால் ஜனநாயகக் குட்டி முதலாளித்துவ வர்க் கத்தினரிடமும் குறிப்பாகப் புரட்சிகரமான பாட்டாளி வர்க் கத்திடமும் அதற்கு எந்தச் செல்வாக்கும் இல்லாதிருப்பதை அதுவே நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தது. லுயீ பிலிப் பின் ஆட்சியின் கடைசி நாட்களில் சீர்திருத்தத்துக்காக நடைபெற்ற விருந்துப் பேச்சுக்களில் இவ்வுண்மை தெளி வாக வெளிப்பட்டது. எல்லாப் பரிசுத்தமான குடியரசு வாதிகளையும் போல இந்தப் பரிசுத்தக் குடியரசுவாதிகளும் முதலில் ஆர்லேயான் டச்சசின் பகர ஆட்சியை ஏற்றுக் கொண்டு திருப்தியடைகின்ற கட்டத்துக்கு முதலிலேயே வந்துவிட்டார்கள். அந்தச் சமயத்தில் பிப்ரவரி மாதப் புரட்சி வெடித்ததும் அவர்களுடைய முக்கியமான பிரதிநிதிகள் தற்காலிக அரசாங்கத்தில் பதவிகளைப் பெற்றனர். ஆரம் பத்திலிருந்தே அவர்கள் முதலாளிகளின் நம்பிக்கையை யும் அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மையையும் பெற்றிருந்தது இயற்கையே. தேசிய சபை கூடியவுடன் உருவாக்கப்பட்ட நிர்வாகக் கமிஷனிலிருந்து தற்காலிக அரசாங்கத்தின் சோஷலிச நபர்கள் உடனே நீக்கிவைக்கப் பட்டனர். National பத்திரிகையின் கட்சி ஜூன் மாத

எழுச்சி வெடித்ததைக் காரணம் காட்டி நிர்வாகக் கமிஷன் முடிவுக்குக் கொண்டுவந்தது; அதன் மூலமாகத் தனக்கு மிக முக்கிய எதிரிகளான குட்டி முதலாளித்துவ அல்லது ஜனநாயகக் குடியரசுவாதிகளை (லெட்ரூ-ராலேன் முதலியோர்) வெளியேற்றியது. முதலாளித்துவக்-குடியரசுக் கட்சியின் ஜெனரலும் ஜூன் மாதப் படுகொலைக்குத் தலைமை தாங்கியவருமான கவெஞாக் நிர்வாகக் கமிஷனுக்குப் பதிலாகப் பொறுப்பேற்றார். அவருக்கு முழு சர்வாதிகாரம் கொடுக்கப்பட்டது என்று கூடச் சொல்லலாம். National பத்திரிகையின் பிரதம ஆசிரியராக முன்னர் பணியாற்றிய மராஸ்ட் தேசிய அரசியல் நிர்ணய சபைக்கு நிரந்தரத் தலைவராக நியமிக்கப்பட்டார். மந்திரி சபைப் பதவிகளும் மற்ற எல்லா முக்கியமான பதவிகளும் பரிசுத்த குடியரசுவாதிகளுக்குக் கிடைத்தன.

ஜூலை மாதத்திய முடியாட்சியின் சட்ட பூர்வமான வாரிசாகத் தன்னை வெகுகாலமாகக் கருதிக் கொண்டிருந்த குடியரசுவாத முதலாளித்துவப் பிரிவின் மிகவும் துணிச்சலான ஆசைகள் இவ்விதமாக நிறைவேறின. லுயி பிலிப்பின் காலத்தில் அது கற்பனை செய்தது போல, முடியாட்சியை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் நடத்தும் மிதவாதக் கலகத்தின் பயனாக அது ஆட்சிக்கு வரவில்லை; மூலதனத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்திய எழுச்சியின், துப்பாக்கி குண்டுகளால் நசுக்கப்பட்ட எழுச்சியின் விளைவாக அது ஆட்சிக்கு வந்தது. எதை அது தனக்குத் தானே மிகவும் புரட்சிகரமான சம்பவம் என்று கற்பனை செய்ததோ அது யதார்த்தத்தில் மிக மோசமான எதிர்ப் புரட்சி சம்பவமாக விளங்கிற்று. பழம் அதன் மடியில் விழுந்தது. ஆனால் அது அறிவு மரத்திலிருந்து விழுந்ததே தவிர வாழ்க்கைத் தண்டிலிருந்து விழவில்லை.

முதலாளித்துவக் குடியரசுவாதிகளின் தனியான ஆதிக்கம் 1848ம் வருடம் ஜூன் மாதம் 24ந் தேதி முதல் டிசம்பர் 10ந் தேதி வரை நீடித்தது. குடியாட்சி அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்ததும் பாரிஸ் நகரம் முற்றுகை நிலைக்கு

உள்ளானதும் அந்த ஆட்சியின் போது நடைபெற்ற முக்கிய மான சம்பவங்களின் சாரமாகும்.

புதிய அரசியலமைப்புச் சட்டம் என்பது உண்மையில் 1830ம் வருடத்திய அரசியலமைப்புச் சட்ட சாசனத்தின்[27] குடியரசுவாத மறுபதிப்பு என்று கூற வேண்டும். ஜூலை மாதத்திய முடியாட்சியின் குறுகலான வாக்குரிமைத் தகுதி கள் முதலாளித்துவ வர்க்கத்தில் பெரும் பகுதியினரைக் கூட அரசியல் அதிகாரத்திலிருந்து விலக்கி வைத்தன. இன்று ஒரு முதலாளித்துவக் குடியரசு ஏற்பட்டிருக்கும் காலத்தில் அது பொருந்தாது. அதன் காரணமாக பிப்ர வரிப் புரட்சி பொதுவான நேரடி வாக்குரிமை பின்பற்றப் படும் என்று உடனே அறிவித்தது. முதலாளித்துவக் குடி யரசுவாதிகளால் இதை மாற்ற முடியவில்லை. எனவே ஒரு வாக்காளர் தொகுதியில் ஆறுமாத காலம் குடியிருந்திருக்க வேண்டும் என்ற கட்டுப்படுத்தும் ஷரத்தை மட்டும் சேர்ப்பதோடு அவர்கள் திருப்தியடைய வேண்டியிருந்தது. பழைய நிர்வாக அமைப்பு, ஊராட்சி முறை, நீதிமன்ற அமைப்பு, இராணுவ அமைப்பு முதலியன எத்தகைய மாற்றமும் இல்லாமல் நீடித்தன. அல்லது அரசியலமைப்புச் சட்டம் ஏதாவது மாற்றம் செய்திருந்தால் அது பொருளடக்க வரிசையில் செய்யப்பட்ட மாற்றமே தவிர, உள்ளடக்கத் தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை; பெயர் மாற்றப் பட்டிருக்கலாமே தவிர பொருளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

1848ம் வருடத்தில் அறிவிக்கப்பட்ட சுதந்திரங்களில் அத்தியாவசியமானதும் தலைமையானதுமான தனிநபர் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், கூட்டம் நடத்தும் சுதந் திரம், கல்விச் சுதந்திரம், மத சுதந்திரம் முதலியவை அரசி யலமைப்புச் சட்டத்தின் அதிகாரத்தைப் பெற்று யாரா லும் ஊறு செய்ய முடியாத நிலையைப் பெற்றன. இந்த சுதந்திரங்கள் ஒவ்வொன்றுமே பிரெஞ்சுக் குடிமக்களின் முழுமையான உரிமை என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ''மற்றவர்களின் சமத்துவமான உரிமைகளோடு மற்றும்

பொதுஜனப் பாதுகாப்பை'' முன்னிட்டு இவை கட்டுப்படுத்தப் பட்டால் தவிர, அல்லது இத்தகைய பலவிதமான தனிநபர் சுதந்திரங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாதவாறு பார்த்துக் கொள்வதற்கும் பொதுஜனப் பாதுகாப்புக்கு மாக இயற்றப்படும் ''சட்டங்கள்'' அவ்வாறு கட்டுப்படுத் தினலொழிய இந்த சுதந்திரங்கள் வரம்பற்றவை என்றும் ஒரு நிபந்தனை வழக்கமாகத் தெரிவித்தது. உதாரணங்களைப் பார்ப்போம்: ''குடிமக்கள் சங்கங்கள் அமைப்பதற்கும், அமைதியாக, எந்த ஆயுதமுமில்லாமல் கூட்டம் நடத்து வதற்கும், மனுக் கொடுப்பதற்கும் தங்கள் கருத்துக்களைப் பத்திரிகைகள் மூலம் அல்லது வேறு வழிகளின் மூல மாகத் தெரிவிப்பதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமைகளை அனுபவிப்பதற்கு மற்றவர்களின் சமத்துவமான உரிமைகளையும் பொதுஜனப் பாதுகாப்பையும் தவிர, வேறு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது''. (பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாம் அத்தியாயம், §8)—''கல்வித்துறை சுதந்திர மானது. இந்த உரிமையை சட்டத்தின் நிபந்தனைகளுக் குட்பட்டு அரசாங்க மேற்பார்வையின் கீழ் பயன்படுத்த வேண்டும்'' (அதே நூல், §9)—''எந்தக் குடிமகனின் வீட்டுக்குள்ளேயும் சட்டத்தினுல் விதிக்கப்பட்ட முறை களைத் தவிர, வேறு வழிகளில் யாரும் நுழையக் கூடாது'' (இரண்டாம் அத்தியாயம், §3) இதரவை, இதரவை. எனவே அரசியலமைப்புச் சட்டம் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், தங்கு தடையில்லாத இந்தச் சுதந்திரங்களை அவை ஒன்றோடொன்று அல்லது பொது ஜனப் பாதுகாப்புடனே முரண்படாதவாறு அனுபவிப்பதை ஒழுங்குபடுத்துவதற்காகவும் எதிர்காலத்தில் இயற்றப்பட விருக்கும் அமைப்புக்குரிய சட்டங்களை [organic laws] அடிக்கடி குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் ஒழுங்குமுறையின் நண்பர்களால் இவ்வமைப்புக்குரிய சட்டங்கள் இயற்றப் பட்டன. இந்த உரிமைகளை முதலாளித்துவ வர்க்கம் அனு பவிக்கும் பொழுது மற்ற வர்க்கங்களின் சமத்துவமான உரிமைகளால் பாதிக்கப்படாத வகையில் இவை ஒழுங்கு படுத்தப்பட்டன. ''மற்றவர்களுக்கு'' இந்த சுதந்திரங்களை

முழுமையாக மறுக்கும் பொழுதும் அல்லது போலீஸ் சதிகள் என்று சொல்லப்படக் கூடிய பல நிபந்தனைகளுக்குட்பட்டு அவற்றை அனுபவிக்கலாம் என்று அனுமதிக்கும் பொழுதும், அது ''பொதுஜனப் பாதுகாப்புக்கு'', அதாவது அரசியலமைப்புச் சட்டம் விதிக்கிறபடி முதலாளித்துவ வர்க்கப் பாதுகாப்புக்கு ஏற்பவே நடைபெறுகிறது. இனிமேல் இரண்டு தரப்பினரும் முழு நியாயத்தோடு அரசியலமைப்புச் சட்டத்தை ஆதாரமாகக் காட்டுவார்கள். இந்த சுதந்திரங்களையெல்லாம் ரத்துச் செய்த ஒழுங்குமுறையின் நண்பர்களும் இந்த சுதந்திரங்கள் வேண்டும் என்று வற்புறுத்துகின்ற ஜனநாயகவாதிகளும் இவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்தை ஆதாரமாகக் காட்டுவார்கள். ஏனென்றால் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பாராவும் அதன் முரண்நிலையையும் கொண்டிருக்கிறது; அது தனது மேல் சபையையும் கீழ் சபையையும் கொண்டிருக்கிறது; அதாவது பொதுவான சொற்றொடரில் சுதந்திரத்தையும், அடிக்குறிப்பில் அந்த சுதந்திரத்தை ரத்துச் செய்வதையும் கொண்டிருக்கிறது. எனவே, சுதந்திரத்தின் பெயர் மதிக்கப்பட்டிருந்த வரை, அது நடைமுறையில் அனுபவிக்கப்படுவது மட்டும் சட்டபூர்வமாகவே தடுக்கப்பட்டிருந்த வரை—இயற்கையாகவே சட்டத்தின் அடிப்படையில்—சுதந்திரத்தின் மீது அன்றாட வாழ்க்கையில் எவ்வளவு கடுமையான தாக்குதல்கள் ஏற்பட்டாலும் அரசியலமைப்புச் சட்டரீதியில் அதன் வாழ்க்கை கட்டுக் குலையாமல் எவ்வகையிலும் அழிக்கப்பட முடியாமல் இருந்தது.

இவ்வளவு கெட்டிக்காரத் தனத்தோடு எவ்வகையிலும் அழிக்கப்பட முடியாதபடி அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அகிலேசைப் போல அது ஒரு இடத்தில் மிகவும் பலவீனமாகவே இருந்தது; குதிகாலில் அல்ல, தலையில் அல்லது சரியாகச் சொல்வதென்றால் அதனுடைய பலவீனம் அதன் உச்சியிலிருந்த இரண்டு தலைகளில் இருந்தது: ஒரு பக்கத்தில் சட்டமன்றம், மறுபக்கத்தில் ஜனாதிபதி. அரசியலமைப்புச் சட்டத்தை எடுத்துப் படித்துப் பாருங்கள். சட்டமன்றத்தோடு ஜனாதிபதிக்கு உள்ள

உறவை விவரிக்கின்ற பாராக்கள்தாம் முழுமையாகவும் ஆக்கபூர்வமாகவும் முரண்பாடு இல்லாமலும் திரித்துக் கூற வழியில்லாதபடியும் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் பார்க்க முடியும். ஏனென்றால் முதலாளித்துவக் குடியரசுவாதிகள் தங்களையே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பிரச்சினை இங்கே ஏற்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 45—70 ஷரத்துக்களின்படி தேசிய சபை ஜனாதிபதியை சட்டபூர்வமாக நீக்க முடியும்; ஆனால் ஜனாதிபதி தேசிய சபையைச் சட்டவிரோதமாகத்தான் கலைக்க முடியும், அதாவது அரசியலமைப்புச் சட்டத்தை நிராகரித்தால் தான் அது சாத்தியமாகும். எனவே இங்கே அரசியலமைப்புச் சட்டம் தன்னை பலவந்தமாக ஒழிப்பதற்குச் செய்யப்படும் முயற்சிகளுக்குச் சவால் விடுகிறது. 1830ம் வருடத்திய சாசனத்தைப் போல அது ஆட்சியைப் பிரித்து வைப்பதைச் சட்டமாக ஆக்குவது மட்டுமல்ல அதை சகிக்க முடியாத முரண்பாடாக விரிவுபடுத்திவிடுகிறது. சட்டமியற்றும் அதிகாரத்துக்கும் நிர்வாக அதிகாரத்துக்கும் இடையே ஏற்படுகின்ற சட்டமன்றத் தகராறை அரசியலமைப்புச் சட்டச் சக்திகளுக்கிடையே ஏற்படும் விளையாட்டு என்று கிஸோ குறிப்பிட்டார். அது 1848ம் வருடத்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை அந்தச் சூதாட்டம் எல்லாவற்றையும் பணயமாக வைத்துத் தொடர்ந்து விளையாடப்படுகிறது. ஒரு பக்கத்தில் பொதுவான வாக்குரிமை என்ற அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 750 பிரதிநிதிகள், இவர்கள் மறுபடியும் தேர்தலில் நிற்பதற்கு உரிமையுள்ளவர்கள்; இவர்கள் அனைவரையும் சேர்த்து கட்டுப்படுத்த முடியாத, கலைக்கப்பட முடியாத, பிரிக்கப்பட முடியாத தேசிய சபை அமைக்கப்படுகிறது. இந்த தேசிய சபைக்குச் சட்டம் இயற்றுவதில் முழு அதிகாரம் உண்டு. இதற்கு யுத்தம், சமாதானம், வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகிய பிரச்சினைகளில் இறுதி முடிவு செய்யும் அதிகாரமும் உண்டு. குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பளிக்கும் உரிமை இதற்கு மட்டுமே உண்டு. தேசிய சபை நிரந்தரமானது என்ற காரணத்தால் அரசியல் அரங்கத்

தில் எப்பொழுதுமே முதல் இடத்தை வகிக்கிறது. மறு பக்கத்தில் அரசர்களுக்குரிய எல்லாவிதமான அதிகாரங் களோடும் திகழ்கின்ற ஜனாதிபதி இருக்கிறார். தேசிய சபை யின் சம்மதம் இல்லாமலேயே மந்திரிகளை நியமிக்கவும் நீக்க வும் அவருக்கு அதிகாரம் உண்டு. நிர்வாக அதிகாரத்தின் எல்லா விதமான வசதிகளும் அவரிடம் இருக்கின்றன. அவர் எந்தப் பதவிக்கும் யாரையும் நியமிக்கலாம். அதன் மூலம் பிரான்சில் சுமார் பதினைந்து லட்சம் மக்களின் தலைவிதியை அவர் நிர்ணயிக்க முடியும். ஏனென்றால் அரசாங்கத்தில் எல் லாவிதமான நிலைகளிலும் பணியாற்றுகின்ற ஐந்து லட்சம் அதிகாரிகளைச் சார்ந்து இவ்வளவு அதிகமானவர்கள் இருக் கிறார்கள். இராணுவம் முழுவதுமே அவருக்குப் பின்னால் நிற்கிறது. தனிப்பட்ட குற்றவாளிகளுக்கு மன்னிப்பளிப்பதற் கும் தேசியக் காவலர் படைப் பிரிவுகளைக் கலைப்பதற்கும், அரசு கவுன்சிலின் ஒப்புதலோடு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜெனரல் கவுன்சில்கள், பிராந்திய கவுன்சில்கள், ஊராட்சிக் கவுன்சில்கள் ஆகியவற்றைக் கலைப்பதற்கும் விசேஷ அதிகாரம் அவருக்கு உண்டு. வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்வதற்கு முன்முயற்சியும் தலைமைப் பாத்திர மும் அவருக்கு உண்டு. சபையின் நடவடிக்கைகள் பகிரங்க மானவை. எனவே பொது மக்கள் தினந்தோறும் அதைப் பற்றி விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் ஜனாதிபதியோ எலிசேய்ப் புரத்தில் ஒதுங்கி வாழ்கிறார். அரசியலமைப்புச் சட்டத்தின் 45வது ஷரத்து மட்டும் அவருடைய கண் களுக்கும் இதயத்துக்கும் முன்பாகத் தோன்றி அவரிடம் ''சகோதரனே! சாவுக்கு எப்பொழுதும் தயாராயிரு!'' ("frère, il faut mourir!") என்று தினந்தோறும் சொல்லும். நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்காவது வருடத்தில் அழகு மிகுந்த மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்று உங்கள் அதிகாரம் போய்விடும்! அதன் பிறகு உங்கள் மகத்துவம் மறைந்துவிடும்; இந்த வாய்ப்பு இரண்டாவது தடவை கிடைக்காது. உங்களுக்குக் கடன் களிருந்தால், அரசியலமைப்புச் சட்டம் உங்களுக்கு ஆறு லட்சம் பிராங்குகள் வீணாகத் தருகிறதல்லவா, அந்தப்

பணத்தில் காலதாமதமில்லாமல் கடன்களை அடைத்து விடுங்கள். ஒருவேளை அழகு மிகுந்த மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று நீங்கள் கிளிஷீவுக்கு[28] போகத் தயாரென்றால் கடன்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லும். இவ்விதமாக அரசியலமைப்புச் சட்டம் உண்மையான அதிகாரத்தை ஜனாதிபதியிடமும் தார்மிக அதிகாரத்தை தேசிய சபையிடமும் ஒப்படைத்திருக்கிறது. தார்மிக அதிகாரம் என்பது சட்டங்களின் பாராக்களின் மூலம் ஏற்படுவது அல்ல என்பது ஒருபுறமிருக்கட்டும். ஜனாதிபதியை பிரெஞ்சுக்காரர்கள் அனைவரும் நேரடியான வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தியதன் விளைவாக அரசியலமைப்புச் சட்டம் தன்னைத் தானே மறுபடியும் மறுத்துக் கொள்கிறது. பிரெஞ்சு மக்களின் வாக்குகள் தேசிய சபையின் 750 உறுப்பினர்களிடம் சிதறிக் கிடக்கும் பொழுது, இங்கே அதற்கு மாறாக ஒரு தனி நபரிடம் அந்த வாக்குகள் மொத்தமாகக் குவிந்திருக்கின்றன. மக்களின் ஒவ்வொரு பிரதிநிதியும் ஏதாவதொரு கட்சியை, ஏதாவதொரு நகரத்தை அல்லது குடியிருப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார், அல்லது 750 பிரதிநிதிகளில் சேர்ந்துகொள்ள ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என்பதற்காக, அந்த நபரையோ, அவருடைய கொள்கைகளையோ சரியாக ஆராயாமல் தேர்ந்தெடுத்து அனுப்புவதும் உண்டு. ஆனால் அவர் ஜனாதிபதி பதவிக்குத் தேசத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரைத் தேர்ந்தெடுப்பதுதான் சுயவுரிமை கொண்ட மக்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை கையாளுகின்ற துருப்புச் சீட்டாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய சபை தேசத்தோடு கொண்டிருக்கும் உறவு ஆன்மிக உறவாகும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி தேசத்தோடு கொண்டுள்ள உறவு தனிப்பட்ட சொந்த உறவாகும். தேசிய சபை அதன் தனித்தனிப் பிரதிநிதிகள் மூலம் தேசிய உணர்ச்சியின் பலவிதமான அம்சங்களைப் பிரதிபலிக்கிறது என்றால், இந்த தேசிய உணர்ச்சியின் அவதாரமாக ஜனாதிபதி காட்சியளிக்கிறார். தேசிய சபையோடு ஒப்பிடுகிற பொழுது அவரிடம் ஒரு

மாதிரியான தெய்விக உரிமை இருப்பதாகச் சொல்லலாம். ஏனென்றால் அவர் மக்கள் அருளால் ஜனாதிபதியாக இருக்கிறார்.

கடல் தெய்வமாகிய தேடிஸ் அகிலேசிடம் நீ இளமையிலேயே செத்துவிடுவாய் என்று ஆரூடம் கூறியதாம். அகிலேசுக்கு பலவீனமான இடம் இருந்ததைப் போல அரசியலமைப்புச் சட்டத்துக்கும் பலவீனமான இடம் இருந்தது. அகிலேசைப் போலவே தனக்கு சீக்கிரமாக முடிவு வந்துவிடும் என்ற வருந்தீங்குணர்வும் அதற்கு இருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்த பரிசுத்தமான குடியரசுவாதிகள் தங்களுடைய இலட்சியக் குடியரசின் உன்னதமான சொர்க்கத்திலிருந்து வெளியே இருக்கும் ஆசாரமற்ற உலகத்தைச் சற்றுப் பார்த்தாலும், தங்களின் மகத்தான சட்ட அமைப்பு என்னும் கலைப்படைப்பைச் செய்து முடிக்கும் கட்டத்தை நெருங்கும் பொழுது அரசவம்சவாதிகள், போனபார்ட்டிஸ்டுகள், ஜனநாயகவாதிகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் அகம்பாவம் அதிகரிப்பதையும், தாங்கள் தினந்தோறும் அதிகமான அபகீர்த்தி அடைவதையும் தெரிந்து கொண்டிருப்பார்கள். தேடிஸ் கடலிலிருந்து புறப்பட்டு வந்து இவர்களிடம் இந்த ரகசியத்தைத் தெரிவிக்க வேண்டியதில்லை. அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு தந்திரத்தைச் செய்து விதியை ஏமாற்றிவிட நினைத்தார்கள். அதாவது ஷரத்து 111ன்படி அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு ஆதரவாக நான்கில் மூன்று பங்கு வாக்குகள் குறைந்தபட்சம் கிடைக்க வேண்டும்; இப்படித் தொடர்ச்சியாக மூன்று வாக்கெடுப்புகளில் ஆதரவாக வாக்குகள் கிடைக்க வேண்டும்; ஒவ்வொரு வாக்கெடுப்புக்கும் முழுமையாக ஒருமாத இடைவெளி இருக்க வேண்டும்; இவை தவிர தேசிய சபையின் உறுப்பினர்களில் ஐந்நூறு பேர்களுக்குக் குறையாமல் வாக்களித்திருக்க வேண்டும் என்றும் இது மேலும் கூறியது. இப்பொழுது அவர்களுக்குச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் பொழுதே, அரசாங்க அதிகாரத்தின் எல்லா சாதனங்களை

யும் பயன்படுத்தும் பொழுதே அந்த அதிகாரம் மென் மேலும் தங்களுடைய பலவீனமான கரங்களிலிருந்து நழுவிக் கொண்டிருப்பதையும் எதிர்காலத்தில் சட்டமன்றத்தில் தாங்கள் சிறுபான்மையாகிவிடும் காட்சியையும் தொலை நோக்கோடு மனக்கண்ணில் பார்த்தார்கள். அந்த சமயத்தி லும் தாங்களே தொடர்ந்து அதிகாரத்தை வகிக்க வேண்டு மென்று பேடித்தனமான முயற்சியைச் செய்தார்கள்.

கடைசியில், நாடகபாணியான ஒரு பாராவில் அரசி யலமைப்புச் சட்டம் ''பிரெஞ்சு நாட்டு மக்கள் அனை வருடைய, ஒவ்வொரு பிரெஞ்சுக் குடிமகனுடைய விழிப் புணர்ச்சிக்கும் தேசபக்திக்கும்'' தன்னை ஒப்படைப்பதாகத் தெரிவித்தது. இதற்கு முந்திய ஒரு பாராவில் ''விழிப்புணர்ச்சி யும் தேசபக்தியும்'' மிக்க பிரெஞ்சுக் குடிமக்களை விசாரணை செய்யவும் அன்போடு கடுங்காவல் தண்டனை கொடுப்பதற் கும் ஒரு தலைமை நீதி மன்றத்தை (haute cour) முதன் முறையாக ஏற்படுத்தியது.

இதுதான் 1848ம் வருடத்திய அரசியலமைப்புச் சட்டம். 1851ம் வருடம் டிசம்பர் மாதம் இரண்டாந் தேதியன்று யாரும் தலையை அசைக்காமல், ஒரு தொப்பியை அசைத்த மாத்திரத்தில் இந்த அரசியலமைப்புச் சட்டம் கீழே விழுந்துவிட்டது. உண்மை என்னவென்றால் அந்தத் தொப்பி மும்முனைகளையுடைய நெப்போலியன் தொப்பியா கும்.

தேசிய சபையில் முதலாளித்துவ வர்க்கக் குடியரசு வாதிகள் இந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிப் பதிலும் விவாதிப்பதிலும் வாக்கெடுப்பு நடத்துவதிலும் ஈடு பட்டிருந்த பொழுது சபைக்கு வெளியே கவெஞாக் பாரிஸ் நகரத்தில் முற்றுகை நிலையை நீடித்துக் கொண்டிருந்தார். குடியரசைப் பிரசவிப்பதற்காக அரசியல் நிர்ணய சபைக்கு இடுப்புவலி ஏற்பட்ட காலத்தில் அதற்கு மருத்துவம் செய்த தாதியாகப் பாரிஸ் நகர முற்றுகை நிலை இருந்தது. அரசியலமைப்புச் சட்டம் பிறகு துப்பாக்கி ஈட்டிகளால் ஒழிக்கப்படுகிறது என்றால் முன்காலத்தில் அப்படிப்பட்ட துப்பாக்கி ஈட்டிகளைக் கொண்டுதான் தாயாரின் கருப்பை

யிலே அதைப் பாதுகாக்க முடிந்தது, அதை உயிரோடு வெளியே கொண்டுவருவதற்கும் அதே துப்பாக்கி ஈட்டிகள் தேவைப்பட்டன என்பதை மறந்து விடக் கூடாது. இப் பொழுது இந்தத் துப்பாக்கி ஈட்டிகள் மக்களுக்கு விரோத மாகத் திரும்பின. ''கண்ணியமிக்கக் குடியரசுவாதிகளின்'' முன்னோர்கள் தங்களுடைய சின்னமாகிய மூவர்ணக் கொடியை ஐரோப்பா முழுவதிலும் எடுத்துக் கொண்டு போய்க் காட்டினர்கள். முற்றுகை நிலைமை என்பது இவர் கள் காலத்தில் செய்த புதிய கண்டுபிடிப்பு. இதுவும் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் சுற்றிய பிறகு பன்மடங்கு பெருகிய அன்போடு பிரான்சுக்கே திரும்பி வந்து இப் பொழுது அநேகமாகப் பாதி பிராந்தியங்களில் குடியிருந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு பிரமாதமான கண்டுபிடிப்பு! பிரெஞ்சுப் புரட்சியின் நிகழ்வுப் போக்கில் இனி வரப் போகும் ஒவ்வொரு நெருக்கடியின் போதும் இதை அவ்வப் பொழுது உபயோகிப்பதைப் பார்க்கலாம். படைவீரர் குடியிருப்புக்களும் முகாம்களும்—இவை அவ்வப்பொழுது பிரெஞ்சு சமூகத்தின் தலை மீது உட்கார்ந்து கொண்டு மூளையை நசுக்கி, அதை அமைதிப்படுத்தின; வாளும் துப்பாக்கியும்—இவை அவ்வப்பொழுது நீதிபதிகளாகவும் நிர்வாகிகளாகவும் பாதுகாவலர்களாகவும் தணிக்கை செய் பவர்களாகவும் போலீஸ்காரனுகவும் இரவு நேரத்தில் காவ லராகவும் சேவை செய்ய அனுமதிக்கப்பட்டன; மீசையும் இராணுவ உடையும்—இவை அவ்வப்பொழுது சமூகத்தின் மிக மேன்மையான அறிவுக் களஞ்சியமாகவும் அதன் ஆசானுகவும் அறிவிக்கப்பட்டன,—படைவீரர் குடியிருப்புக் களும் முகாம்களும், வாளும் துப்பாக்கியும், மீசையும் இராணுவ உடையும் இவை எல்லாம், தங்களுடைய ஆட்சி யைத் தலைமை மிக்கதாக அறிவித்து சமூகத்தை ஒரேயடி யாகக் காப்பாற்றி விடலாம், சிவில் சமூகம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தொல்லை யிலிருந்து அதை முழுமையாகக் காப்பாற்றி விடலாம் என்ற முடிவுக்குக் கடைசியில் வரத்தானே வேண்டும்! படைவீரர் குடியிருப்புக்களும் முகாம்களும், வாளும் துப்பாக்கியும்,

மீசையும் இராணுவ உடையும் இந்த முடிவுக்கு நிச்சயமாக வந்துவிடும். ஏனென்றால் அப்பொழுதுதான் அவற்றின் மேன்மையான சேவைகளுக்கு ரொக்கப் பணத்தைக் கூலியாகப் பெற முடியும். இதுவரை முதலாளித்துவ வர்க்கப் பிரிவுகளில் ஏதாவது ஒரு பிரிவின் ஆணையின் பேரில் அவ்வப் பொழுது முற்றுகையிடுவதனாலும், சமூகத்தைத் தற்காலிகமாகக் காப்பாற்றுவதனாலும் அவைகளுக்குக் கணிசமாக எதுவும் கிடைக்கவில்லை. ஏதோ சிலர் செத்துப் போவதும், வேறு சிலர் காயமடைவதும், முதலாளித்துவ வர்க்கத்தின் சில நண்பர்கள் பல்லை இளித்துப் பாராட்டுவதையும் தவிர வேறு எந்தப் பலனும் கிடைக்கவில்லை. இனி இராணுவம் ஒரு நாளாவது தன்னுடைய நலனுக்காகவும் நன்மைக்காகவும் இந்த முற்றுகை விளையாட்டில் ஈடுபட வேண்டாமா? முதலாளித்துவப் பணப்பைகளை முற்றுகையிட்டுக் கைப்பற்ற வேண்டாமா? மேலும் கவெஞாக்கின் கீழ் இராணுவக் கமிஷனின் தலைவராக இருந்து 15,000 கலகக்காரர்களை விசாரணையில்லாமல் சுடுங்காவல் தண்டனை செய்த கர்னல் பெர்னர் இந்தத் தருணத்தில் பாரிஸ் நகரத்தில் மீண்டும் இராணுவக் கமிஷன்களின் தலைவராக இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காக இங்கே குறிப்பிடுகிறோம்.

பாரிஸ் நகரத்தில் முற்றுகை நிலையைப் புகுத்திய ''கண்ணியமிக்க'' பரிசுத்தமான குடியரசுவாதிகள் ஊன்றிய விதைகளிலிருந்துதான் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதிய பிரிட்டோரியன்கள்[29] பிற்காலத்தில் வளர்ந்தார்கள். இவர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்களே. ஏனென்றால் பிற்காலத்தில் லுயி பிலிப்பின் கீழ் தேசிய உணர்ச்சியை மிகைப்படுத்திய மாதிரி இல்லாமல், இவர்கள் இப்பொழுது, தேசிய ஆட்சியைக் கையிலே கொண்டிருந்த பொழுது, அந்நிய தேசங்களுக்கு முன்பு மண்டியிட்டார்கள்; இத்தாலிக்கு சுதந்திரம் கொடுக்கத் தவறியதால் ஆஸ்திரியர்களும் நேப்பிள்ஸ்காரர்களும் அதை மீண்டும் கைப்பற்ற வழி செய்தார்கள்.[30] இதற்காக இவர்களைப் பாராட்டலாம். 1848ம் வருடம் டிசம்பர் மாதம் பத்தாந்

தேதி லுயீ போனபார்ட் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் கவெஞாக்கின் சர்வாதிகாரத்துக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் முடிவு ஏற்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 44வது ஷரத்து பின் வருமாறு தெரிவிக்கிறது: ''பிரெஞ்சுக் குடியரசின் ஜனதி பதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் பிரெஞ்சுக் குடிமகன் என்ற அந்தஸ்தை இதற்கு முன்பு ஒருபோதும் இழந் திருக்கக் கூடாது.'' பிரெஞ்சுக் குடியரசின் முதல் ஜனதிபதி யான எல். என். போனபார்ட்டே பிரெஞ்சுக் குடிமகன் என்ற அந்தஸ்தை இழந்தது மட்டுமல்ல; அவர் இங்கிலாந் தில் போலீஸ் கான்ஸ்டபிளாகப் பணியாற்றியது மட்டு மல்லாமல் ஸ்விட்சர்லாந்தின் குடியுரிமையையும் பெற்றிருக் கிறார்.[31]

டிசம்பர் 10ந் தேதி நடைபெற்ற தேர்தலின் முக்கி யத்துவத்தைப் பற்றி வேறொரு நூலில் நான் எழுதியிருக் கிறேன்.* அதை இங்கே மீண்டும் எழுதப் போவதில்லை. அது பிப்ரவரி புரட்சியின் செலவுகளைக் கொடுக்குமாறு செய்யப்பட்ட, தேசத்தின் மற்ற வர்க்கங்களை எதிர்த்துக் கிளம்பிய விவசாயிகளின் பதில், நகரத்துக்கு எதிராக கிராமப் புறத்தின் பதில் என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவது போதுமானதாகும். இராணுவத்தில் அது அதிகமான வர வேற்பைப் பெற்றது. ஏனென்றால் National பத்திரிகையைச் சார்ந்த குடியரசுவாதிகள் இராணுவத்தினரின் ஊதியத்தை உயர்த்தவில்லை; அவர்களுக்குப் பெருமை கிடைக்கு மாறும் செய்யவில்லை. முடியாட்சியை ஏற்படுத்த போன பார்ட் ஒரு பாலமாக இருப்பார் என்ற கருத்தில் பெரிய முதலாளிகளும் வரவேற்றார்கள். அவரே கவெஞாக்குக்கு சவுக்கடி என்ற முறையில் குட்டி முதலாளிகளும் பாட்டாளி வர்க்கமும் கூட போனபார்ட்டை வரவேற்றது. பிரெஞ்சுப் புரட்சியுடன் விவசாயிகளுக்கு இருந்த உறவைப் பற்றி மேலும் நுணுக்கமாகப் பின்னர் வேறொரு சந்தர்ப்பத்தில் எழுதுகிறேன்.

* இப்பதிப்பின் தொகுதி 2, பக்கங்கள் 192—195 பார்க்க.—ப-ர்.

1848ம் வருடம் டிசம்பர் மாதம் 20ந் தேதி முதல் 1849ம் வருடம் மே மாதத்தில் அரசியல் நிர்ணய சபை கூலைக்கப்படுகின்ற வரை உள்ள காலம் முதலாளித்துவக் குடியரசுவாதிகளின் வீழ்ச்சியின் வரலாறுகும். முதலாளித்துவ வர்க்கத்துக்காக ஒரு குடியரசை ஏற்படுத்தி, புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை அரசியல் அரங்கத்திலிருந்து வெளியேற்றி, ஜனநாயகப் போக்குள்ள குட்டி முதலாளிகள் தற்காலிகமாக மௌனமாக இருக்கும்படிச் செய்த பிறகு, அவர்களே பெருந் திரளான முதலாளிகளால் ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். ஏனென்றால் அந்தத் திரளான முதலாளிகள் இந்தக் குடியரசையே தங்களுடைய சொத்து என்பதாக நியாயமாக நினைக்கிறார்கள். எனினும் இந்த முதலாளித்துவப் பகுதியினர் அரசவம்சத்தின் ஆதரவாளர்கள். அதில் ஒரு பகுதியினரான பெரும் நிலச்சுவான்தார்கள் மறுவருகைக் காலத்தில்[32] ஆட்சி செய்தவர்கள். அதன் காரணமாகவே அவர்கள் முறைமைவாதிகளாக [legitimist] இருந்தார்கள். அடுத்த பகுதியான நிதி அதிபர்களும் பெரிய தொழிலதிபர்களும் ஜூலை மாத முடியாட்சியின் போது ஆட்சியில் இருந்தவர்கள். எனவே அவர்கள் ஆர்லேயானிஸ்டுகளாக[33] இருந்தார்கள். இராணுவம், பல்கலைக்கழகம், திருச்சபை, வழக்குரைஞர்கள், விஞ்ஞானப் பேரவை, பத்திரிகைகள் ஆகியவற்றில் உயர் பதவிகளை வகித்தவர்கள் இரண்டு தரப்புகளிலும் வெவ்வேறான விகிதங்களில் இருந்தார்கள். இங்கே, புர்போன்கள் என்ற பெயரையோ ஆர்லேயான்கள் என்ற பெயரையோ தாங்கியிராமல் மூலதனம் என்ற பெயரைக் கொண்டிருந்த இந்தக் குடியரசில் தாங்கள் ஒருங்கிணைந்து ஆட்சி செய்யக் கூடிய அரசின் வடிவத்தை அவர்கள் கண்டு கொண்டார்கள். ஜூன் மாத எழுச்சி ''ஒழுங்குமுறைக் கட்சி'' என்ற பெயரில் முன்பே அவர்களை ஒன்றுசேர்த்துவிட்டது. இப்பொழுது முதலாவதாக தேசிய சபையில் இன்னும் இடம் பெற்றிருந்த முதலாளித்துவக் குடியரசுவாதிகள் கும்பலை வெளியேற்றுவது அவசியமாக இருந்தது. இந்தப் பரிசுத்தமான குடியரசுவாதிகள் மக்களுக்கு எதிராக அடக்குமுறையைப் பிரயோகிப்பதில்

எந்த அளவுக்கு அதிகக் கொடூரமாக நடந்து கொண்டார் களோ அந்த அளவுக்கு நிர்வாக அதிகாரத்துக்கும் அரசவம்ச வாதிகளுக்கும் எதிராகத் தங்களுடைய குடியரசுக் கோட் பாடுகளையும் சட்டமியற்றும் உரிமைகளையும் நிலைநாட்ட வேண்டிய நேரத்தில் கோழைத்தனத்தோடு, தளுக்குப் பேச்சோடு, தீவிரமில்லாமல் சிதறிப் போய், சண்டை போடவும் இயலாதவர்களாகப் பின்வாங்கினர்கள். அவர் கள் கலைந்து போன வெட்கக்கேடான கதையை நான் இங்கே சொல்லத் தேவையில்லை. அவர்கள் முறியடிக்கப்படவில்லை; அவர்களே சிதறிப் போனார்கள். அவர்களுடைய வரலாறு என்றென்றைக்கும் முடிந்துவிட்டது. இனி வரப்போகின்ற காலகட்டத்தில், தேசிய சபைக்கு உள்ளேயும் வெளியே யும் வெறும் நினைவுகள் என்ற அளவிலேதான் அவர்களுக்குப் பாத்திரமுண்டு. குடியரசு என்ற பெயர் மட்டுமே மறுபடி யும் பிரச்சினையாக ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த நினைவுகளுக்குத் திடீரென்று புத்துயிர் வந்துவிட்டது போலத் தோன்றும், புரட்சிகரமான மோதல் மிகக் கீழான நிலையை எட்டிவிடும் என்று பயமுறுத்தக் கூடிய சந் தர்ப்பங்களில் இந்த நினைவுகளுக்குத் திடீரென்று புத்துயிர் வந்துவிட்டது போலத் தோன்றும். இந்தக் கட்சிக்குத் தன்னுடைய பெயரைக் கொடுத்த National என்ற பத்திரிகை வரப்போகிற காலகட்டத்தில் சோஷலிசத்தின் பக்கம் வந்து சேர்ந்தது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தக் காலகட்டத்தைப் பற்றி எழுதி முடிப்பதற்கு முன்னர் நாம் இரண்டு சக்திகளைப் பின்னேக்கிப் பார்ப்பது அவசியமாகிறது. 1848ம் வருடம் டிசம்பர் மாதம் 20ந் தேதி முதல் அரசியல் நிர்ணய சபையை முடிவுக்குக் கொண்டுவருகிற காலம் வரை இந்த இரண்டு சக்திகளும் தாம்பத்திய உறவைக் கொண்டிருந்தன. ஆனல் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி ஒன்று மற்றொன்றை நசுக்கியது. ஒரு பக்கத்தில் லுயீ போனபார்ட்டையும் மறு பக்கத்தில் கூட்டணியிலிருந்த அரசவம்சக் கட்சி, ஒழுங்கு முறைக் கட்சி, பெரும் முதலாளிகள் ஆகியோரையே நாம் இரண்டு சக்திகள் என்று இங்கே குறிப்பிடுகிறோம். குடியர

சின் ஜனாதிபதியானவுடன் போனபார்ட் உடனே ஒழுங்கு முறைக் கட்சியைக் கொண்ட மந்திரி சபையை அமைத்தார். நாடாளுமன்ற முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகமிதவாதப் பிரிவின் பழைய தலைவரான ஒடிலோன் பரோவை மந்திரி சபையின் தலைமைப் பொறுப்புக்கு நியமித்தார். 1830ம் வருடத்திலிருந்தே மந்திரி பதவியின் நிழல் அவர் மீது விழுந்து கொண்டிருந்த போதிலும் கடைசியில் அவருக்கு இப்பொழுதுதான் அது கிடைத்தது. அதிலும் பிரதமர் பதவியே கிடைத்து விட்டது. ஆனால் லுயி பிலிப் காலத்தின் பொழுது அவர் நினைத்தது போல நாடாளுமன்ற எதிர்க் கட்சியின் மிகவும் முற்போக்கான தலைவர் என்ற முறையில் அந்தப் பதவி அவருக்குக் கிடைக்கவில்லை. அவருடைய நெடுங்கால எதிரிகளான ஜெசுயிட்டுகள், முறைமைவாதிகளின் கூட்டாளியாக அவர் மந்திரி சபையில் இருந்தார். அதிலும் நாடாளுமன்றத்தை ஒழித்துக் கட்டும் பொறுப்புடன் கூடவே அந்தப் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடைசியில் அவர் எப்படியோ மணப்பெண்ணை வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டார்—ஆனால் அதற்கு முன்பே அந்தப் பெண் மானபங்கப்படுத்தப்பட்டு விட்டாள். போனபார்ட் முழுமையாக மறைந்து விட்டது போலத் தோன்றியது, அவருக்குப் பதிலாக ஒழுங்குமுறைக் கட்சியே செயலாற்றியது.

மந்திரி சபையின் முதல் கூட்டத்திலேயே ரோம் மீது படையெடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இதை தேசிய சபைக்குத் தெரியாமலேயே செய்வதென்றும் அதற்குத் தேவைப்படும் செலவுத் தொகைக்கு தேசிய சபையில் போலியான தகவலைக் கொடுத்து அங்கீகாரம் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இப்படி தேசிய சபையை ஆரம்பத்திலேயே மோசடி செய்துவிட்டு புரட்சிகரமான ரோமானியக் குடியரசுக்கு எதிராக வெளிநாடுகளிலுள்ள சர்வாதிகார முடியாட்சிகளோடு சேர்ந்து இரகசியமான சதித்திட்டங்களை முதற்படியாகச் செய்தது. 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி போனபார்ட் இதே விதமாக இதே போன்ற வழிகளில் அரசவம்சத்துக்கு ஆதரவாக

இருந்த தேசிய சட்டமன்றத்தையும் அரசியலமைப்புச்சட்டக் குடியரசையும் எதிர்த்துச் சதிசெய்தார். 1848ம் வருடம் டிசம்பர் மாதம் 20ந் தேதி போனபார்ட் மந்திரி சபையை அமைத்த அதே கட்சிதான் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதியில் தேசிய சட்டமன்றத்தில் பெரும்பான்மையை வகித்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அரசியல் நிர்ணய சபை அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தொடர்ச்சியாகப் பல அமைப்புக்குரிய சட்டங்களைத் [organic laws] தயாரித்து நிறைவேற்றிய பிறகுதான் கலைந்து போவதென்று ஆகஸ்ட் மாதத்தில் முடிவு செய்திருந்தது. 1849ம் வருடம் ஜனவரி மாதம் 6ந் தேதியன்று ஒழுங்குமுறைக் கட்சியின் சார்பில் ரட்டோ என்ற உறுப்பினர் இந்த அமைப்புக்குரிய சட்டங்களை ஒத்திவைத்துவிட்டு அரசியல் நிர்ணய சபை தன்னைக் கலைப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஒடிலோன் பரோவின் தலைமையிலிருந்த மந்திரி சபை மட்டுமல்லாமல் தேசிய சபையில் அரசவம்சவாதிகளான உறுப்பினர்கள் அனைவரும் சபையை நெருக்கினர்கள். கடன் வாங்குவதற்கும் நாட்டில் ஒழுங்கை ஏற்படுத்துவதற்கும் தற்காலிகமான உறுதியற்ற நிலைக்கு முடிவு கட்டுவதற்கும் நிரந்தரமான நிலையை ஏற்படுத்துவதற்கும் தேசிய சபையைக் கலைக்க வேண்டும் என்றார்கள். புதிய அரசாங்கம் திறமையாக வேலை செய்வதற்கு தேசிய சபை தடையாக இருப்பதாகவும் ஆத்திரத்தின் காரணமாகவே அது தனது ஆயுளை நீடித்துக்கொண்டு போவதாகவும் அதைப் பற்றி நாட்டில் எல்லோரும் சலிப்படைந்து விட்டார்கள் என்றும் வாதாடினர்கள். சட்டமியற்றும் அதிகாரத்தை எதிர்த்துச் சொல்லப்பட்ட வசைமாரியை போனபார்ட் குறித்துக் கொண்டார். அதை அப்படியே மனப்பாடம் செய்தார். 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதியன்று நாடாளுமன்றத்திலிருந்த அரசவம்சவாதிகளிடம் நான் உங்களிடமிருந்து பாடம் கற்றுக் கொண்டிருக்கிறேன் என்று நிரூபித்துக் காட்டினர். அவர்கள் எழுப்பிய கோஷங்களையே அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தினர்.

ஒடிலோன் பரோவின் மந்திரிசபையும் ஒழுங்குமுறைக் கட்சியினரும் இன்னும் ஒரு படி மேலே சென்றார்கள். தேசிய சபை தயவு செய்து தானாகவே கலைந்துவிட வேண்டும் என்று தேசிய சபையைக் கேட்டுக் கொள்கின்ற மனுக்களில் பிரான்ஸ் முழுவதிலும் கையெழுத்துக்களைச் சேகரித்தார்கள். அரசியலமைப்புச் சட்டம் என்ற வடிவத்தில் அமைந்த பொது மக்களினுடைய விருப்பாற்றலை வெளியிடும் தேசிய சபைக்கு எதிரான போரில் ஒழுங்கமைக்கப்படாத பொது மக்களையும் இவர்கள் இப்படி ஈடுபடுத்தினர்கள். நாடாளுமன்றக் கூட்டங்களுக்குப் பதிலாக மக்களுக்கு நேரடியாக வேண்டுகோள் விடுக்க போனபார்ட்டுக்குச் சொல்லிக் கொடுத்தது அவர்களே. கடைசியில் 1849ம் வருடம் னவரி மாதம் 29ந் தேதியன்று அரசியல் நிர்ணய சபை ன்னைக் கலைப்பது பற்றித் தானே முடிவு செய்ய வேண்டிய ளும் வந்தது. அன்று அரசியல் நிர்ணய சபைக் கூட்டங் ள் நடைபெற்றுவந்த கட்டிடத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்த ஜெனரல் ஷன்கர்னியே தேசியக் காவலர் படைக்கும் இராணுவத்துக்கும் தலைமைப் பொறுப்பை வகித்து வந்தார். அவர் அன்றைய தினத்தில் யுத்தம் நடக்கப் போவதைப் போல பாரிஸ் நகரத்தில் மாபெரும் இராணுவ அணிவகுப்பை நடத்திக் கொண்டிருந்தார். கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகள் அரசியல் நிர்ணய சபை கலைவதற்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் பலாத்காரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். அது ஒத்துக் கொள்ளத் தயாராக இருந்தது. ஆனால் சிறிதளவு அவகாசம் மட்டும் கொடுக்குமாறு பேரம் பேசிக் கொண்டிருந்தது. ஜனவரி மாதம் 29ந் தேதியன்று என்ன நடந்தது? 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி நடைபெற்றதைப் போன்ற திடீர்ப்புரட்சிதான் இப்பொழுதும் நடைபெற்றது. அரசவம்சவாதிகள் போனபார்ட்டின் ஆதரவோடு குடியரசுக் கருத்துடைய தேசிய சபைக்கே எதிராக இதை நடத்தினர்கள். 1849 ஜனவரி மாதம் 29ந் தேதிய சம்பவங்களைப் பயன்படுத்திக் கொண்டு போனபார்ட் இராணுவத்தின் ஒரு

பகுதியை டியுல்லரீ மாளிகைக்கு எதிரில் தனக்கு முன்பாக அணிவகுத்துச் செல்லச் செய்தார் என்பதை அந்த கனவான்கள் பார்க்கவில்லை; அல்லது பார்க்க விரும்பவில்லை. நாடாளுமன்றத்தின் பலத்துக்குப் போட்டியாக இராணுவ பலத்தைப் பகிரங்கமாகத் திரட்டிக் காட்டுவதற்குச் செய்யப் பட்ட இந்த முதல் முயற்சியை போனபார்ட் அதிகமான ஆர்வத்தோடு பயன்படுத்திக் கொண்டார். இது கலிகூலாவை நினைவுபடுத்தியிருக்க வேண்டும்.[34] ஆனால் அவர்கள் தங்களுடைய ஷன்கர்னியேயை மட்டுமே பார்த்தார்கள் என்பது உண்மை.

அரசியல் நிர்ணய சபையின் ஆயுளை பலவந்தமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒழுங்குமுறைக் கட்சி விரும்பியதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தொடர்ச்சியாகக் கல்விச் சட்டம், மத வழிபாடு பற்றிய சட்டம் முதலிய அமைப்புக்குரிய சட்டங்களே இதற்குக் காரணம். கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகள் அவநம்பிக்கை அடைந்துள்ள குடியரசுவாதிகளைக் காட்டிலும் தாங்களே இந்தச் சட்டங்களை இயற்றுவது மிக முக்கியமானதென்று கருதினர்கள். இந்த அமைப்புக்குரிய சட்டங்களில் குடியரசின் ஜனாதிபதியின் பொறுப்புகளை வரையறுக்கின்ற சட்டமும் இருந்தது. 1851ம் வருடத்திலும் சட்டமன்றம் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் போனபார்ட் தன்னுடைய டிசம்பர் 2ந் தேதிய தாக்குதலின் (coup) மூலம் அந்தத் தாக்குதலை ஒழித்துக் கட்டினார். இப்படிப்பட்ட பொறுப்புச் சட்டம் கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகளின் அவநம்பிக்கையைப் பெற்ற, பகை உணர்ச்சி கொண்ட குடியரசுவாத தேசிய சபையினால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்குமானால், 1851ம் வருடத்தில் குளிர்காலத்தின் போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் இயக்கத்தின் போது அவர்களுக்கே எவ்வளவு பயனுள்ளதாக இருந்திருக்கும். அதற்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் கொடுத்திருப்பார்கள்.

1849ம் வருடம் ஜனவரி மாதம் 29ந் தேதி அரசியல்

நிர்ணய சபை தன்னுடைய கடைசி ஆயுதத்தையும் உடைத்து விட்ட பிறகு, ஒடிலோன் பரோவின் மந்திரி சபையும் ஒழுங்குமுறையின் நண்பர்களும் அதை விரட்டி விரட்டிக் கொன்றார்கள். எல்லா வகைகளிலும் அந்த சபையை அவமானப்படுத்தினர்கள். ஆண்மையில்லாது, என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்துப் போயிருந்த தேசிய சபை யைப் பயமுறுத்தி புதுப்புதுச் சட்டங்களை இயற்ற வைத் தார்கள். இந்த சட்டங்களின் விளைவாகப் பொது மக்களிடம் தனக்கிருந்த கடைசி மரியாதையையும் அந்த சபை இழந்து விட்டது. நெப்போலியன் கருத்துக்களில் ஊறிப்போயிருந்த போனபார்ட் நாடாளுமன்ற அதிகாரத்துக்கு ஏற்பட்ட பரிதாபமான சீர்குலைவை பகிரங்கமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு மானங்கெட்டுப் போயிருந்தார். ஏனென்றால் தேசிய சபை, 1849ம் வருடம் மே மாதம் 8ந் தேதியன்று ஜெனரல் உடினே சிவிட்டவெக்கியாவைக் கைப் பற்றியதற்காக மந்திரி சபையின் மீது கண்டனத் தீர் மானத்தை நிறைவேற்றி, ரோம் நகரத்துக்கு அனுப்பப்பட்ட தூருப்புக்களை அவை அனுப்பப்பட்ட காரியங்களை கவனிக்க வேண்டுமென்று ஆணையிட்டது.[35] அன்றைய மாலை நேரத் தில் வெளிவந்த Moniteur[36] பத்திரிகையில் போனபார்ட் உடினேவை, அவருடைய வீரம் நிறைந்த வெற்றிகளுக்காகப் பாராட்டி ஒரு கடிதத்தை வெளியிட்டார். பேனாப்பிடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்; ஆனால் நான் இராணுவத்தைப் பெருந்தன்மையோடு பாதுகாப்பேன் என்று அவர் தன்னைக் காட்டிக் கொண்டார். இதைப் பார்த்து அரசவம்சவாதிகள் சிரித்தார்கள். போனபார்ட் தங்களுடைய மோசடிகளைப் புரிந்து கொள்ளாத மடையன் என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். கடைசியில் அரசியல் நிர்ணய சபையின் தலைவரான மராஸ்ட் தேசிய சபைக்கு ஆபத்து வந்து விட்டது என்று திடீரென்று நினைத்துக் கொண்டு, அரசி யலமைப்புச் சட்டத்திலுள்ள ஒரு பகுதியை அமுல் நடத்த முடிவு செய்தார். சபையின் பாதுகாப்புக்காக ஒரு ரெஜி மென்டைக் கொண்டுவருமாறு ஒரு கர்னலுக்கு உத்தர

விட்டார். அந்தக் கர்னல் இராணுவக் கட்டுப்பாட்டைக் காரணம் காட்டி உத்தரவை நிறைவேற்ற மறுத்தார். ஷன்கர்னியேயிடம் போகுமாறு மராஸ்டுக்குத் தெரிவித்தார். ஷன்கர்னியே இறுமாப்போடு ஆணையைப் பெற மறுத்தார்; சிந்திக்கக் கூடிய துப்பாக்கி ஈட்டிகளே (baïonnettes intelligentes) எனக்குப் பிடிக்காதென்றும் தெரிவித்தார். 1851ம் வருடம் நவம்பர் மாதத்தில் கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகள் போனபார்ட்டுக்கு எதிராகத் தீர்மானமான போராட்டத்தைத் தொடுக்க விரும்பிய பொழுது, தங்களுடைய அவப்பெயர் மிக்க குவெஸ்டர் நகல் அரசாணை[37] என்பதில் தேசிய சபையின் தலைவர் நேரடியாகத் துருப்புக்களை உதவிக்கு அழைப்பதற்கு உரிமை கொடுப்பதற்கு முயற்சித்தார்கள். அவர்களுடைய ஜெனரல்களில் ஒருவரான லெப்லோ இந்த சட்டத்துக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டிருந்தார். ஷன்கர்னியே அதற்கு ஆதரவாக வாக்களித்ததும், தியேர் செத்துப்போன அரசியல் நிர்ணய சபையின் தொலைநோக்குடைய மதிநுட்பத்தைப் பாராட்டியதும் விணுகியது. இராணுவ அமைச்சர் சென் அர்னே மராஸ்டுக்கு ஷன்கர்னியே பதில் சொன்ன பாணியிலேயே பதிலளித்தார். மலைக் கட்சி அதை ஆரவாரத்தோடு பாராட்டியது!

எனவே ஒழுங்குமுறைக் கட்சி தேசிய சபையாக ஆகாமல் இன்னும் மந்திரி சபையாக மட்டுமே இருந்த பொழுது நாடாளுமன்ற அமைப்பு முறையைக் கண்டித்து விட்டது. ஆனால் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி இந்த ஆட்சியை பிரான்சிலிருந்து துரத்திய பொழுதான் அது கூக்குரல் எழுப்புகிறது!

அதன் பிரயாணம் இன்பமானதாக இருக்கட்டும் என்று நாம் வாழ்த்துவோம்!

III

1849ம் வருடம் மே மாதம் 28ந் தேதியன்று தேசிய சட்டமன்றக் கூட்டம் ஆரம்பமாயிற்று. 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதியன்று அது கலைக்கப்பட்டது.

இந்தக் காலகட்டம் அரசியலமைப்புச் சட்ட அல்லது நாடாளு மன்றக் குடியரசின் வாழ்க்கைக் காலமாகும்.

முதலாவது பிரெஞ்சுப் புரட்சியின் போது அரசி யலமைப்புச் சட்டவாதிகளின் ஆட்சிக்குப் பிறகு ஜிரோண் டிஸ்டுகளின் ஆட்சியும் அவர்களுக்குப் பிறகு ஜக்கோபின் களின் ஆட்சியும் நடைபெற்றது.[38] இந்தக் கட்சிகளில் ஒவ்வொன்றும் தங்களைக் காட்டிலும் அதிக முற்போக்கான கட்சியின் ஆதரவை நம்பியிருந்தது. புரட்சியை அது மேலும் பின்பற்றிச் செல்ல முடியாத அளவுக்குக் (அதற்கு முன்னே செல்வது என்பது முடியாத காரியம்) கொண்டு வந்த உடனே அதன் பின்னல் நின்று கொண்டிருக்கும் துணிச்சல் நிறைந்த கூட்டாளிக் கட்சி, அதை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தூக்கு மேடைக்கு அனுப்பிவைக்கிறது. இவ் வாறு புரட்சி மேல் நோக்கித் தொடர்ந்து வளர்ச்சியடை கிறது.

1848ம் வருடப் புரட்சி இதற்கு எதிரிடையாக நடை பெற்றது. பாட்டாளி வர்க்கக் கட்சி குட்டி முதலாளித் துவ ஜனநாயகக் கட்சியின் ஒட்டுப் பொருளாக வருகிறது. ஏப்ரல் 16ந் தேதி[39], மே 15ந் தேதி, ஜூன் மாதத்திய நாட்களின் போது குட்டி முதலாளித்துவ ஜனநாயகக் கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியைக் காட்டிக் கொடுப்பதோடு அது வீழ்ச்சியடைய வகை செய்கிறது. ஜனநாயகக் கட்சி முதலாளித்துவக் குடியரசுக் கட்சியின் தோள் மீது உட்கார்ந்திருக்கிறது. முதலாளித்துவக் குடியரசுவாதிகள் தங்களுக்கு பலம் வந்து விட்டதென்று நினைத்தவுடன் தங் களுடைய தொந்தரவு மிகுந்த தோழனை உதறித் தள்ளி விடுகிறார்கள்; ஒழுங்குமுறைக் கட்சியின் தோள்களில் ஏறி உட்கார்ந்து கொள்கிறார்கள். ஒழுங்குமுறைக் கட்சி தோள் களைச் சுருக்கிக் குனிகிறபொழுது முதலாளித்துவக் குடியரசு வாதிகள் தலைகீழாக விழுகிறார்கள். பிறகு ஒழுங்குமுறைக் கட்சி இராணுவத்தின் தோள்களில் உட்கார்ந்து கொள் கிறது. அது இன்னும் அந்தத் தோள்களின் மீது உட்கார்ந் திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு நாள் காலையில் தோள்கள் துப்பாக்கி ஈட்டிகளாக மாறி

விட்டன என்று தெரிய வருகிறது. ஒவ்வொரு கட்சியும் தனக்குப் பின்னலிருக்கும் கட்சியை உதைக்கிறது; தனக்கு முன்னலிருக்கும் கட்சி மீது சாய்ந்து நிற்கிறது; அது இதைப் பின்னுக்குத் தள்ளுகிறது. இத்தகைய கேலிக்கூத்தான நிலையில் இது தன்னுடைய சமநிலையை இழந்து, வழக்கமான முகச் சுளிப்புக்களோடு பல்டியடித்துக் கீழே விழுகிறது. புரட்சி இப்படிக் கீழ்நோக்கித் தேய்வடைகிறது. பிப்ரவரி மாதத்தில் எழுப்பப்பட்ட தெருத் தடையரண்கள் இன்னும் முழுமையாக அகற்றப்படவில்லை; புரட்சிகரமான நிர்வாகம் முதலில் அமைக்கப்படவில்லை. ஆனல் புரட்சி இப்படிப்பட்ட பின்னேக்கிச் செல்லும் இயக்கத்தில் சிக்கி விட்டது.

நமக்கு முன்புள்ள காலகட்டத்தில் மிகவும் கதம்பமான முரண்பாடுகளை நாம் காணலாம். அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாகப் பகிரங்கமாகச் சதி செய்கிற அரசியலமைப்புச்சட்டவாதிகள்; நாங்கள் அரசியலமைப்புச் சட்டவாதிகளே என்று ஒத்துக்கொள்கின்ற புரட்சியாளர்கள்; சர்வ வல்லமை படைத்ததாக இருக்க வேண்டுமென்று விரும்பினலும் வெறும் நாடாளுமன்ற அமைப்பாக மட்டுமே இருக்கின்ற தேசிய சபை; பொறுமையைக் கடைப்பிடியுங்கள் என்று உபதேசித்து, இன்று தோல்வியடைந்தாலும் வருங்காலத்தில் வெற்றி பெறுவோம் என்று ஆரூடம் சொல்லுகின்ற மலைக் கட்சி; குடியரசின் செனெட்டர்களான (patres conscripti) அரசவம்சவாதிகள் — இவர்கள் விரும்பி ஆதரிக்கின்ற, தீராப் பகைமை கொண்ட வெவ்வேறு அரச குடும்பங்களை நாட்டுக்கு வெளியேயும் வெறுக்கின்ற குடியரசை உள்நாட்டிலும் வைத்திருந்தது சூழ்நிலை காரணமாகவே; தன்னுடைய பலவீனத்திலே பலத்தையும் அவமதிப்பில் மரியாதையையும் காணுகின்ற நிர்வாக அதிகாரம்; பேரரசு என்ற சீட்டு ஒட்டப்பட்டு, இரண்டு முடியாட்சிகளின்—மறுவருகையும் ஜூலை மாதத்திய முடியாட்சியும்—அழியாக் கறைகளின் கலவையான குடியரசு; பிரிந்து போவதை முதல் ஷரத்தாகக் கொண்டிருக்கும் கூட்டணிகள்; ஊசலாட்டத்தை முக்கியமான விதியாகக் கொண்ட

போராட்டங்கள்; அமைதி என்று சொல்லிக் கொண்டு வெறித்தனமாக நடத்தப்படும் கிளர்ச்சிப் பிரச்சாரம்; புரட்சி என்று சொல்லிக் கொண்டு அமைதியைப் பரப்புதல்; உண்மையில்லாத உணர்ச்சிகள்; உணர்ச்சி இல்லாத உண்மைகள்; வீரம் இல்லாத வீர புருஷர்கள்; சம்பவங்கள் இல்லாத சரித்திரம்; வருடாந்தரக் கணக்குக்காகவே முயன்று செய்யப்படும் வளர்ச்சி—ஒரே விதமான பரபரப்பும் அதைத் தொடர்ந்து பதட்டநிலைத் தணிவும் திரும்பத் திரும்ப வருவதால் ஏற்படுகின்ற சலிப்புத் தரும் வளர்ச்சி; தங்களுடைய கூர்முனையை இழந்து தாமே தீர்வு காண முடியாத நிலையில் விழுந்து விடுவதற்காக மட்டுமே அவ்வப்பொழுது உச்சகட்டத்துக்குப் போவது போலத் தோன்றும் முரணியல்புகள்; உலகம் அழியப் போகிறது என்று ஆரவாரத்தோடு காட்டுகின்ற போலி முயற்சிகளும் ஹிஸ்டைன் பயப்பிராந்தியும், அதே சமயத்தில் உலகத்தைக் காப்பாற்றப் புறப்பட்டவர்கள் அற்பத்தனமான சூழ்ச்சிகளைச் செய்வதும் அரசவை இன்பக் கேளிக்கைகளில் ஈடுபடுவதும்—நடப்பது நடக்கட்டும் என்ற கொள்கையைப் பின்பற்றிய இவர்களை நினைக்கும் பொழுது நமக்கு ஆண்டவனின் இறுதித்தீர்ப்பு நாளைக் காட்டிலும் பிரோண்டா[10] காலம்தான் கவனத்துக்கு வருகிறது; பிரான்சின் அதிகாரபூர்வமான கூட்டு மேதாவிலாசம்—இது ஒரு தனிநபர் தன்னுடைய சாமர்த்தியமான அசட்டுத்தனத்தால் சீரழிப்பது; தேசத்தின் ஒன்றுபட்ட விருப்பாற்றல்—இது திரும்பத் திரும்பப் பொதுவான வாக்குரிமையின் மூலமாக வெளிவருகின்ற பொழுது பொதுமக்களுடைய நலன்களின் மிக மோசமான எதிரிகளினுல் பொருத்தமான வழியில் வர்ணிக்கப்பட்டு கடைசியில் ஒரு கொள்ளைக்காரனின் தான்தோன்றித்தனத்தில் முடிவடைகிறது. இவையெல்லாம் இத்தகைய முரண்பாடுகள் ஆகும். வரலாற்றின் எந்தப் பகுதியாவது கறுப்பு நிறத்தில், மென்மேலும் கறுப்பு நிறத்தில் சித்திரிக்கப்படுமென்றுல் அது இப்பகுதிதான். மனிதர்களும் சம்பவங்களும் தலைகீழான ஷ்லெமீல்களாக, உடல் இல்லாத நிழலுருவங்களாகத் தோன்றுகிறார்கள். புரட்சியும்கூட தன்

ஊழியர்களை முடமாக்குகிறது; தன்னுடைய எதிரிகளுக்கு மட்டும் உணர்ச்சிமயமான வேகத்தைத் தருகிறது. எதிர்ப் புரட்சிக்காரர்களால் திரும்பத் திரும்ப ஆவி எழுப்பப்பட்டு ஓட்டப்படுகின்ற ''சிகப்புப் பேய்'' கடைசியில் அராஜகத் தின் பிரிஜியன் தொப்பியைத்[41] தலையில் அணிந்து கொள்ளா விட்டாலும் ஒழுங்குமுறையின் உடையில் சிகப்புக் காற் சட்டை அணிந்து கொண்டு தோன்றிவிடுகிறது.

போனபார்ட் தன்னுடைய மந்திரி சபையை 1848ம் வருடம் டிசம்பர் மாதம் 20ந் தேதியன்று அது போனபார்ட் டின் விண்ணேற்ற நாள் [Ascension Day] — அமைத்ததைப் பார்த்தோம். அந்த மந்திரி சபை ஒழுங்குமுறைக் கட்சி, முறைமைவாதிகள், ஆர்லேயானிஸ்டுகளின் கூட்டணி மந்திரி சபையாகும். பரோ-பல்லூ மந்திரி சபை குடியரசு அரசியல் நிர்ணய சபையின் ஆயுளை அநேகமாக வன்முறை யால் முடிவுக்குக் கொண்டுவந்து விட்டு, அதற்குப் பிறகும் இன்னும் ஆட்சியை வகித்து வந்தது. கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகளின் ஜெனரலாகிய ஷன்கர்னியே முதல் இராணுவ டிவிஷனுக்கும் பாரிஸ் நகரக் தேசியக் காவலர் படைக்கும் தானே தளபதியாக நீடித்துக் கொண்டிருந்தார். கடைசியில் பொதுத் தேர்தலில் ஒழுங்குமுறைக் கட்சிக்கு தேசிய சபையில் அதிகமான பெரும் பான்மை கிடைத் திருந்தது. இங்கே லுயீ பிலிப்பின் பிரதிநிதிகளும் பிர புத்துவப் பிரதிநிதிகளும் புனிதமான முறைமைவாதிகள் பலரைச் சந்தித்தார்கள். தேசத்தின் வாக்குகள் இவர்களுக்கு அரசியல் அரங்கத்திற்குள் நுழைவதற்குரிய அனுமதிச் சீட்டு களாக உதவின. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட போன பார்டிஸ்ட் பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஒரு தனியான நாடாளுமன்றக் கட்சியை அமைப்பதற்குத் தேவையான எண்ணிக்கைக்கும் குறைவாகவே இருந்தது. ஒழுங்குமுறைக் கட்சியின் தீங்கான பிற்சேர்க்கையாகத்தான் (mauvaise queue) அவர்கள் இருந்தார்கள். இப்படி ஒழுங்குமுறைக் கட்சி அரசாங்க அதிகாரத்தையும் இராணுவத்தையும் சட்டமியற்றும் அமைப்பையும் பெற்றிருந்தது. சுருக்கமாகச் சொல்வதென்றால் அரசாட்சி முழுவதையுமே கொண்டிருந்

தது. பொதுத் தேர்தல் தார்மிக ரீதியாக அந்த ஆட்சியைப் பலப்படுத்தி அது தேச மக்கள் விருப்பாற்றல் என்றும் இதே சமயத்தில் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் எதிர்ப்புரட்சி வென்றுள்ளது என்றும் வற்புறுத்தியது.

இதுவரை இவ்வளவு அதிகமான வசதிகளோடும் இத் தகைய சாதகமான சூழ்நிலையிலும் வேறு எந்தக் கட்சியும் தன்னுடைய இயக்கத்தைத் தொடங்கவில்லை.

பரிசுத்தமான குடியரசுவாதிகளின் கப்பல் மூழ்கிவிட்டது. தேசிய சட்டமன்றத்தில் அவர்கள் சுமார் ஐம்பது பேர்கள் கொண்ட கும்பலாகக் குறைந்து விட்டார்கள். ஆப்பிரிக்க ஜெனரல்களான கவெஞாக், லமொரிசியேர், பெடோ ஆகியோர் அவர்களுக்குத் தலைமை வகித்தார்கள். மலைக்கட்சி மாபெரும் எதிர்க்கட்சியாக விளங்கியது. சமூக-ஜனநாயகக் கட்சி மலைக்கட்சி என்ற பெயரைத் தனக்கு நாடாளுமன்ற ஞானஸ்நானப் பெயராகக் கொடுத்துக் கொண்டது. தேசிய சபையின் 750 வாக்குகளில் இரு நூறுக்கும் அதிகமான வாக்குகள் அதனிடம் இருந்தன. எனவே குறைந்தபட்சம் ஒழுங்குமுறைக் கட்சியின் மூன்று கோஷ்டிகளில் எதைத் தனியாக எடுத்துக் கொண்டாலும் அதற்குள்ள பலத்துக்குச் சமமாக இதற்கும் பலம் இருந்தது. அரசவம்சவாத மொத்தக் கூட்டணியோடு ஒப்பிடும் பொழுது அதன் பலம் எண்ணிக்கையளவில் குறைவாக இருந்தாலும் வேறு விசேஷமான சூழ்நிலைமைகள் அதற்கு ஈடு செய்தன என்று தோன்றியது. பிராந்தியங்களில் நடைபெற்ற தேர்தல் கிராமப்புற மக்களிடம் அதற்குக் கணிசமான ஆதரவு இருப்பதைக் காட்டியது. அது மட்டுமல்ல. பாரிஸ் நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனேகமாக எல்லா உறுப்பினர்களுமே அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே. இராணுவத்தினர் கீழ்நிலை அதிகாரிகள் மூன்று பேர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் தங்களுடைய ஜனநாயகக் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டனர். மலைக் கட்சியின் தலைவரான லெட்ரூ-ராலேனுக்கு ஐந்து பிராந்தியங்கள் தங்களுடைய வாக்குகளை ஒன்றுகப் போட்டு அவரை நாடாளுமன்ற உறுப்

பினராக உயர்த்தின. ஒழுங்குமுறைக் கட்சியின் எல்லாப் பிரதிநிதிகள் விஷயத்திலும் இதற்கு முற்றிலும் மாறுகவே நடைபெற்றது. அரசவம்சவாதிகள் தங்களுக்குள்ளாகவே சச்சரவு செய்து கொள்வதும் ஒழுங்குமுறைக் கட்சி முழுவதுமே போனபார்ட்டோடு மோதுவதும் தவிர்க்க முடியாதது என்பதால் 1849ம் வருடம் மே மாதம் 28ந் தேதியில் மலைக் கட்சிக்கு வெற்றியின் எல்லா அம்சங்களும் கூடி நின்றன. இதற்குப் பதினேந்து நாட்களுக்குப் பிறகு அது கௌரவம் உள்பட எல்லாவற்றையும் இழந்துவிட்டது.

நாடாளுமன்ற வரலாற்றை மேலும் தொடர்வதற்கு முன்பாக, நமக்கு முன் உள்ள சகாப்தத்தின் மொத்தமான தன்மை சம்பந்தமாக சாதாரணமான தப்பபிப்பிராயங்கள் சிலவற்றைத் தவிர்ப்பதற்காகச் சில கருத்துக்களைச் சொல்வது அவசியமாகிறது. ஜனநாயகவாதிகளின் கண்கொண்டு பார்த்தோமானால், அரசியல் நிர்ணய சபை எதற்காகப் பாடுபட்டதோ அதற்காகத்தான் தேசிய சட்டமன்றமும் பாடுபட்டது. அது அரசவம்சவாதிகளுக்கும் குடியரசுக் கட்சியினருக்கும் நடைபெற்ற சாதாரணப் போராட்டமாகும். அந்த இயக்கம் முழுவதையும் அவர்கள் ஒரே ஒரு வெற்றுரவாரச் சொல்லினால் குறிக்கிறார்கள்: ''பிற்போக்கு''—இரவு நேரத்தில் எல்லாப் பூனைகளுமே கறுப்பு நிறம்தான்; எனவே அவர்கள் இரவில் காவல் காப்பவனுக்கு உரித்தான பொருளற்ற வழக்குச் சொற்களைக் கொட்டுவதை நாம் அநுமதிக்கலாம். முதல் பார்வையின் போது ஒழுங்குமுறைக் கட்சியில் அரசவம்சவாதிகள் பலவிதமான கோஷ்டிகளாகப் பிரிந்து சிக்கலான முடிச்சாகக் காட்சியளிப்பதும், இந்தக் கோஷ்டிகள் எதிரி கோஷ்டியின் அபேட்சகரை சிம்மாசனத்தில் உட்காரவிடாமல் தடுத்து தங்கள் கோஷ்டியின் அபேட்சகரைச் சிம்மாசனத்தில் உட்கார வைக்க வேண்டும் என்பதற்காக ஒன்றுக் கொன்று விரோதமாகச் சதி செய்வதும் தெரியும். பிறகு ''குடியரசு'' மீதுள்ள பொதுவான வெறுப்பாலும், எல்லோரும் சேர்ந்து அதைத் தாக்குவதற்காக ஒன்று கூடிவிடுகிறார்கள் என்பதும் உண்மையே. அந்த அரசவம்சவாதச் சதிகளுக்கு எதிராக மலைக்

கட்சி ''குடியரசின்'' பிரதிநிதியாகத் தோன்றுகிறது. ஒழுங்கு முறைக் கட்சியும் பத்திரிகைகளுக்கும் சங்கங்களுக்கும் அவை போன்றவற்றுக்கும் எதிராக நிரந்தரமான ஒரு ''பிற்போக்கான செயலில்'' ஈடுபட்டிருப்பதாகத் தோன்று கிறது. இது பிரஷ்யாவில் இருப்பதைக் காட்டிலும் அதிக மும் அல்ல, குறைவானதும் அல்ல. ஆனால் அங்கே இருப்பது மாதிரியே அதிகாரவர்க்கம், அரசியல் போலீசுக்காரர்கள், நீதிமன்றங்களின் மிருகத்தனமான போலீஸ் தலையீட்டின் மூலமாக நடத்தப்படுகிறது. அநேகமாகக் கடந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக மக்கள் கட்சி என்று சொல்லப்படு கிற ஒவ்வொரு கட்சியும் செய்து வந்திருப்பதைப் போல மலைக் கட்சியும் தன் பங்குக்கு இந்தத் தாக்குதல்களை முறி யடிக்கவும், ''மனிதனின் சாசுவதமான உரிமைகளைப்'' பாது காக்கவும் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருகிறது. இந்த மலையையும் கட்சிகளையும் ஒருவர் கூர்ந்து கவனிப் பாரானால் வர்க்கப் போராட்டத்தையும் இந்தக் காலகட்டத்தின் பிரத்யேகமான புறவியல்புகளையும் மறைக்கின்ற மேற்போக் கான வெளித்தோற்றம் போய்விடுகிறது.

முறைமைவாதிகளும் ஆர்லேயானிஸ்டுகளும் ஒழுங்கு முறைக் கட்சியிலிருந்த இரண்டு பெரும் பிரிவுகள் என்று முன்பே குறிப்பிட்டோம். இந்த இரண்டு பிரிவுகளும் தங்களுடைய வெவ்வேறான அபேட்சகர்களை உறுதியாக ஆதரித்து, ஒன்றோடொன்று விரோதமாக இருந்ததற்கு வெறும் அல்லி மலரும்[42] மூவர்ணக் கொடியும், புர்போன் அரசர் குடும்பமும் ஆர்லேயான் அரசர் குடும்பமும், அரசவம்சவாதிகளுக்கிடையே உள்ள வெவ்வேறான சாயல் கள் காரணமா? அரசவம்சவாத நம்பிக்கைதான் காரணமா? புர்போன்கள் ஆட்சியின் போது பெரிய நிலவுடமைக்காரர்கள் தங்கள் மதகுருக்கள் கையாட்கள் சகிதமாக ஆதிக்கம் செலுத்தினர்கள். ஆர்லேயானிஸ்டுகள் காலத்தில் பெரும் பணம், பெரிய தொழில், வர்த்தகம் ஆகியவை அதாவது மூலதனம் தன்னுடைய வழக்குரைஞர்கள், பேராசிரியர் கள், நாவன்மை படைத்த பேச்சாளர்கள் சகிதமாக ஆதிக் கம் செலுத்தியது. முறைமையான மரபுவழி முடியாட்சி

என்பது நாட்டின் நிலப்பிரபுக்களின் பரம்பரை ஆட்சியின் அரசியல் வெளித்தோற்றமாகும். ஜூலை முடியாட்சி என்பது முதலாளித்துவ வர்க்க அற்பர்கள் பலவந்தமாகப் பெற்ற ஆதிக்கத்தின் அரசியல் வெளித்தோற்றமாகும். இந்த இரண்டு பிரிவினர்களைப் பிரித்துவைத்திருந்தது கோட்பாடுகள் என்று சொல்லப்படுபவையல்ல; அவர்களின் பொருளாயத நிலைமைகளே, இரண்டு வெவ்வேறு வகையான சொத்துடமையே; நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இருந்த பழைய முரண்பாடே; மூலதனத்துக்கும் நிலவுடமைக்கும் இடையே உள்ள போட்டியே. அதே சமயத்தில் பழைய நினைவுகளும் தனிநபர் விரோதங்களும் அச்சங்களும் நம்பிக்கைகளும், தப்பெண்ணங்களும் வெறுங்கனவுகளும், அன்பும் வெறுப்பும், பற்றுறுதிகளும் திடநம்பிக்கைகளும் கோட்பாடுகளும் ஏதாவதொரு அரசர் குடும்பத்தோடு அவர்களைப் பிணைத்திருந்தன. இதை மறுப்பவர்கள் யாராவது உண்டா? சொத்தின் வெவ்வேறான வடிவங்களின் மீது, வாழ்க்கையின் சமூக நிலைமைகளின் மீது, வெவ்வேறான, தனித்தனி உணர்ச்சிகள், கற்பனைகள், சிந்தனைப் போக்குகள், உலகக் கண்ணோட்டங்கள் என்ற மேற்கட்டுமானம் மொத்தமாக எழுப்பப்படுகிறது. அந்த வர்க்கம் முழுவதும் தன்னுடைய பொருளாயத அடிப்படை, அதற்குரிய சமூக உறவுகளிலிருந்து அவற்றைப் படைத்துக் கொடுக்கிறது. இவற்றை மரபு, வளர்ப்பு ஆகியவை மூலமாகத் தனி மனிதனுக்கு வழங்குகின்றது. அவரே அவற்றைத் தன்னுடைய நடவடிக்கையின் தொடக்க நிலையாகவும் தன்னுடைய உண்மையான நோக்கமாகவும் கற்பனை செய்து கொள்ளலாம். இரண்டு வெவ்வேறான அரசர் குடும்பங்களிடம் தாங்கள் கொண்டிருந்த விசுவாச உணர்ச்சியே தங்களைப் பிரித்து வைப்பதாக ஆர்லேயானிஸ்டுகளும் முறைமைவாதிகளும், ஒவ்வொரு பிரிவினரும் தங்களையும் மற்றவர்களையும் நம்பச் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த பொழுது, அதற்கு மாறாக, வெவ்வேறான இரண்டு அரசர் குடும்பங்களைச் சேரவிடாமல் தடுத்தது இரண்டு பிரிவுகளின் வெவ்வேறான நலன்களே என்பதை விவரங்கள் பிற்காலத்தில் நிரூபித்தன. அன்றாட

வாழ்க்கையில் ஒருவர் தன்னைப் பற்றி நினைப்பதையும் பேசுவதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அவர் உண்மையில் எப்படிப்பட்டவர், என்ன செய்கிறார் என்று வேறுபடுத்திப் பார்க்கிறோம். அது போலவே சரித்திர ரீதியான போராட்டங்களிலும் கட்சிகளின் பேச்சையும் கற்பனையான குறிக்கோள்களையும் அவற்றின் உண்மையான தன்மை, உண்மையான நலன் ஆகியவற்றையும், தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதற்கும் யதார்த்த நிலைக்கும் இன்னும் அதிகமாகவே வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். ஆர்லேயானிஸ்டுகளும் முறைமைவாதிகளும் குடியரசில் ஒரே விதமான கோரிக்கைகளோடு ஒருவருக்கொருவர் பக்கத்தில்தான் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு தரப்பும் அரச குடும்பங்களில் தங்களுடைய சொந்தப் பிரிவின் மறுவருகைக்கும் அடுத்த பிரிவை ஒதுக்குவதற்கும் விரும்பியதென்றால், முதலாளித்துவ வர்க்கம் நிலவுடைமை, நிதி மூலதனம் என்ற இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறதே, அந்தப் பிரிவுகளில் ஒவ்வொன்றும் தன்னுடைய மேலாதிக்கத்தை ஏற்படுத்தி அடுத்த பிரிவைத் தனக்குப் பணியவைக்க விரும்பியதையே குறிக்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் இரண்டு நலன்கள் என்று நாம் பேசுவது ஏனென்றால் பெரும் நிலவுடைமைகளிடம் நிலப்பிரபுத்துவச் சரசமும் பரம்பரைப் பெருமை பேசுவதும் இருந்தாலும், நவீன சமூகத்தின் வளர்ச்சி அவற்றுக்கு முழுமையாக முதலாளித்துவத் தன்மையைக் கொடுத்துவிட்டது. இங்கிலாந்திலிருந்த டோரிகள்[43] முடியாட்சியையும் திருச்சபையையும் இங்கிலாந்தின் பழைய அரசியலமைப்புச் சட்டத்தின் பெருமைகளையும் பற்றி நினைத்து உற்சாகமடைவதாக நெடுங்காலம் கற்பனை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஆபத்து வந்த பொழுது தாங்கள் நிலவாரத்தைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருக்கிறோம் என்று ஒத்துக் கொண்டார்கள்.

கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகள் நாடாளுமன்றத்துக்கு வெளியே பத்திரிகைகளில், எம்சில், கிளெர்மோன்டில்[44] ஒருவருக்கொருவர் சூழ்ச்சி செய்தனர். அவர்கள்

திரைகளுக்கு அப்பால் தங்களுடைய ஆர்லேயானிஸ்டுகள், முறைமைவாதிகளின் சேவகன் உடைகளை மறுபடியும் அணிந்து கொண்டு பழைய காலத்திய விளையாட்டுப் போர்களில் கலந்து கொண்டனர். ஆனல் பொது மேடையில், மேலான அரசாங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது பெரிய நாடாளுமன்றக் கட்சி என்ற முறையில் தங்களுடைய இரண்டு அரச குடும்பங்களுக்கும் வெறும் தலை வணக்கம் மட்டும் காட்டிவிட்டு முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்துவதை முடிவின்றித் (in infinitum) தள்ளி வைத்தார்கள். தங்களுடைய உண்மையான தொழிலை ஒழுங்கு முறைக் கட்சி என்ற வகையில் அதாவது அரசியல் பெயரை உபயோகிக்காமல் சமூகப் பெயரை உபயோகித்துச் செய்து வந்தார்கள். அவர்கள் அரச குமாரிகளின் பெருந்தகை வீரர்களாக இதைச் செய்யவில்லை; முதலாளித்துவ உலக அமைப்பு முறையின் பிரதிநிதிகளாகவே இதைச் செய்தார்கள். குடியரசுவாதிகளுக்கு எதிராக அரசவம்சவாதிகள் என்ற முறையில் இதைச் செய்யவில்லை; மற்ற வர்க்கங்களை எதிர்த்து நிற்கும் முதலாளித்துவ வர்க்கம் என்ற முறையில்தான் இதைச் செய்தார்கள். ஒழுங்குமுறைக் கட்சி என்ற பெயரில் சமூகத்தின் மற்ற வர்க்கங்களின் மீது முன் காலத்தில் மறுவருகையின் போதோ, ஜூலை முடியாட்சியின் போதோ வகித்திராத அளவுக்கு வரம்பில்லாத உறுதியான ஆதிக்கத்தை வகித்து வந்தார்கள். பொதுவாக இந்த ஆதிக்கம் நாடாளுமன்றக் குடியரசு என்ற வடிவத்தின் மூலமாகத்தான் சாத்தியமாகும். ஏனென்றால் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் இரண்டு பெரும் பிரிவுகளையும் ஒன்றுபடுத்தி, அந்த வர்க்கத்தில் ஏதாவதொரு தனிச்சலுகையுடைய பிரிவின் ஆட்சிக்குப் பதிலாக அந்த வர்க்கத்தின் ஆட்சியை அன்றைய நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டுவருவதற்கு இந்த வடிவம்தான் ஏற்றதாகும். எனினும் ஒழுங்குமுறைக் கட்சி என்ற முறையில் அவர்களும் குடியரசை அவமதித்துத் தாங்கள் அதை வெறுப்பதை பகிரங்கமாகத் தெரிவித்தார்கள் என்றால் அரசவம்சவாத நினைவுகள் மட்டும் இதற்குக் காரணமல்ல. தங்கள் அரசி

யல் ஆதிக்கத்தைக் குடியரசு முழுமையாக்கியிருப்பது உண்மை என்றாலும் அதே சமயத்தில் அதன் சமூக அஸ்திவாரத்தை அது சீர்குலைக்கிறது என்பதை உள்ளுணர்ச்சி அவர்களுக்குக் கற்பித்தது. ஏனென்றால் இப்பொழுது அவர்கள் கீழ்ப்படுத்திய வர்க்கங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மன்னரின் பாதுகாப்பு இல்லாமல், மத்தியஸ்தம் இல்லாமல், அந்த வர்க்கங்களை எதிர்த்து அவர்கள் போராட வேண்டியிருந்தது. மேலும் தங்களுக்கிடையேயும் மன்னருக்கு எதிராகவும் அவர்கள் நடத்திய இரண்டாந்தரமான போராட்டங்களின் காரணமாக தேசிய கவனத்தைத் திசை திருப்புவதும் இப்பொழுது முடியவில்லை. பலவீனம் என்ற உணர்ச்சி காரணமாகத்தான் அவர்கள் தங்கள் வர்க்க ஆட்சியின் கலப்பற்ற நிலைமைகளைக் கண்டு பின்வாங்கினார்கள். முன்காலத்தில் தங்கள் வர்க்கத்தின் ஆட்சி இதைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு அரைகுறையாகவும் வளர்ச்சியில்லாமலும் இருந்த போதிலும் அதன் காரணமாகவே அந்த ஆபத்துக் குறைவான ஆட்சி வடிவங்களை நினைத்து அவர்கள் ஏங்கினார்கள். இதற்கு மாறாக, கூட்டணியிலிருந்த அரசவம்சவாதிகள் தங்கள் முன்பாகத் தோன்றியுள்ள அபேட்சகரை, போனபார்ட்டை எதிர்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தங்களுடைய எல்லாம் வல்ல நாடாளுமன்ற அதிகாரத்துக்கு நிர்வாக அதிகாரம் ஆபத்தேற்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எனவே ஆட்சியிலிருப்பதற்குத் தங்களுக்குள்ள தகுதியை நிரூபிக்க வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் அரசவம்சவாதிகள் என்று முன்வருவதில்லை; குடியரசுவாதிகள் என்றே முன்வருகிறார்கள். ஆர்லேயானிஸ்டு தியேர் தேசிய சபையில் பேசும் பொழுது குடியரசு எங்களைச் சிறிதும் பிரிக்கவில்லை என்று எச்சரிக்கிறார். முறைமைவாதியான பெரியே மூவர்ண நாடாவை அணிந்து கொண்டு பத்தாம் வட்டாரத்தின் உள்ளாட்சி மன்றத்துக்கு முன்பாகக் கூடியுள்ள மக்களிடையே அவர்களுடைய தொண்டனாகக் குடியரசின் பெயரால் ஆவேசமாகப் பேசுகிறார். அவருடைய பேச்சைக் கேலி செய்வது போல "ஐந்தாம் ஹென்றி! ஐந்தாம்

ஹென்றி!'' என்று ஒரு குரல் அவருடைய காதிலே நிச்சயமாக ஒலித்திருக்கும்.

முதலாளித்துவ வர்க்கத்தில் ஏற்பட்ட கூட்டணிக்குப் போட்டியாக, குட்டி முதலாளித்துவ வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் கூட்டணி ஏற்பட்டது. அதுதான் சமூக-ஜனநாயகக் கட்சி என்று சொல்லப்படும் கட்சி. 1848ம் வருடத்திய ஜூன் மாத நாட்களுக்குப் பிறகு தங்களுக்குப் போதுமான வெகுமதி கிடைக்கவில்லை என்று குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் கண்டார்கள். அவர்களுடைய பொருளாயத நலன்களுக்கு ஆபத்தேற்பட்டிருப்பதாகவும் இந்த நலன்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துகின்ற ஜனநாயகவாத உறுதி மொழிகளை எதிர்ப்புரட்சி பிரச்சினைக்குரியதாக்கிவிட்டது என்றும் அவர்கள் கண்டார்கள். இதன் விளைவாகத் தொழிலாளர்களுக்கு நெருக்கமாக வந்தார்கள். நாடாளுமன்றத்தில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய மலைக்கட்சி, முதலாளித்துவக் குடியரசுவாதிகளின் சர்வாதிகாரத்தின் போது ஒதுக்கித் தள்ளப்பட்ட போதிலும் அரசியல் நிர்ணய சபையினுடைய வாழ்க்கையின் கடைசிப் பாதியில் போனபார்ட்டுடனும் அரசவம்சவாதிகளான அமைச்சர்களோடும் நடத்திய போராட்டங்களின் விளைவாகத்தான் இழந்த செல்வாக்கை மறுபடியும் பெற்றிருந்தது. அது சோஷலிஸ்ட் தலைவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. 1849ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் இந்தச் சமரசத்தைக் கொண்டாடுவதற்காக விருந்துகள் நடைபெற்றன. இருவருக்குமிடையே கூட்டு வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. கூட்டுத் தேர்தல் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வேட்பாளர்களும் கூட்டாகவே நிறுத்தப்பட்டனர். பாட்டாளி வர்க்கத்தின் சமூகக் கோரிக்கைகளின் புரட்சிகரமான தீவிரம் நீக்கப்பட்டு அவற்றுக்கு ஜனநாயகச் சாயம் கொடுக்கப்பட்டது. குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஜனநாயகக் கோரிக்கைகளின் கலப்பற்ற அரசியல் வடிவம் நீக்கப்பட்டு அவற்றின் சோஷலிச அம்சங்கள் முன்னுக்கு கொண்டுவரப்பட்டன. இப்படித்தான் சமூக-ஜனநாயகவாதம் உருவாயிற்று. இந்த இலக்கியத்

விளைவாக ஏற்பட்ட புதிய மலைக்கட்சி தொழிலாளர் வர்க்கத் தினரில் சில அற்பமான நபர்களையும் சில சோஷலிஸ்டு சிறுக்குமுவாதிகளையும் தவிர, பழைய மலைக் கட்சியின் அதே நபர்களைத்தான் கொண்டிருந்தது. அது எண்ணிக்கை யில் மட்டும் சற்றுக் கூடியிருந்தது. எனினும் வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கில் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்துக்குத் தருந்தாற்போல அதுவும் மாற்றங்களை அடைந்தது. சமூக-ஜனநாயகவாதம் ஜனநாயக-குடியாட்சி அமைப்புக்களைக் கோருவது மூலதனம், கூலி உழைப்பு என்ற இரண்டு எதிரெதிர் நிலைகளை ஒழிப்பதற்கு அல்ல, அவற்றிடையே விரோதங்களைக் குறைத்து இணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே. இதுதான் சமூக-ஜனநாயகத்தின் பிரத்யேகமான தன்மையின் சாராம்சமாகும். இந்தக் குறிக் கோளை நிறைவேற்றப் பின்பற்றப்படும் வழிமுறைகளில் எவ்வளவு வேறுபாடுகள் இருந்த போதிலும், அநேகமாகப் புரட்சிகரமான கருத்துக்களால் அது அந்த அளவுக்கு அதிக மாக அலங்காரம் செய்யப்பட்ட போதிலும் அதன் உள்ளடக்கம் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. சமூகத்தை ஜனநாயக வழியில் புனர் நிர்மாணம் செய்வதும், அதை குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் எல்லைகளுக்கு உட்படச் செய்வதும்தான் அந்த உள்ளடக்கம். குட்டி முதலாளித் துவ வர்க்கம், கோட்பாட்டு ரீதியாகவே தன்னுடைய தன்னல வர்க்கக் குறிக்கோளை அடைய விரும்புவதாக யாரும் குறுகிய சிந்தனையோடு நினைத்துவிடக் கூடாது. அது என்ன நம்புகிறதென்றால், தன்னுடைய விடுதலைக்குத் தேவையான விசேஷமான நிலைமைகளே வர்க்கப் போராட்டத்தைத் தவிர்த்து நவீன சமூகத்தைக் காப்பாற்றுவதற்கான பொது வான நிலைமைகள் என்று கருதுகிறது. ஜனநாயகப் பிரதி நிதிகள் எல்லோருமே கடைக்காரர்கள் அல்லது கடைக் காரர்களின் உற்சாகமான ஆதரவாளர்கள் என்றும் ஒருவர் நினைத்துவிடக் கூடாது. அவர்கள் ஒவ்வொருவருடைய கல்வி, தனிப்பட்ட நிலை பூமிக்கும் வானத்துக்கும் உள்ள தூரத்தைப் போல இருக்கக் கூடும். அவர்கள் குட்டி முத லாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாவது எப்படியென்

ரூல், குட்டி முதலாளிகள் வாழ்க்கையில் எந்த அளவுக்குப் போக முடியுமோ அந்த அளவுக்கு மேல் இவர்களால் போக முடிவதில்லை; அதனால் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாயத நலன்களும் சமூக நிலையும் நடைமுறையில் எந்தப் பிரச்சினைகளையும் எத்தகைய தீர்வுகளையும் நோக்கித் துரத்துமோ அவற்றை நோக்கித் தத்துவார்த்த வழியிலே இவர்கள் துரத்தப்படுகிறார்கள் என்பதுதான். பொதுவாகவே ஒரு வர்க்கத்துக்கும் அந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல், இலக்கியப் பிரதிநிதிகளுக்கும் உள்ள உறவு இதுவே.

மலைக் கட்சி குடியரசுக்காகவும் மனிதனின் உரிமைகள் என்று சொல்லப்படுவனவற்றுக்காகவும் ஒழுங்குமுறைக் கட்சியோடு தொடர்ச்சியாகப் போராடுமானால், குடியரசோ அல்லது மனிதனின் உரிமைகளோ அதன் இறுதியான குறிக்கோள் அல்ல என்பது மேலே கூறப்பட்டுள்ள ஆய்வுரைக்குப் பிறகு தெளிவாகியிருக்கும். ஒரு இராணுவத்தின் ஆயுதங்களைப் பறிப்பதற்கு முயற்சி செய்யப்படும் பொழுது அந்த இராணுவம் களத்திலே குதித்துப் போராடும். ஆனால் அது தன்னுடைய ஆயுதங்களை வைத்துக் கொண்டிருப்பதற்காக மட்டும் போராடவில்லை. மலைக் கட்சியும் இதே நிலையில்தான் இருந்தது.

தேசிய சபை கூடியதும் ஒழுங்குமுறைக் கட்சி சிக்கிரமாகவே மலைக் கட்சிக்கு ஆத்திரமூட்டியது. முதலாளித்துவ வர்க்கம் ஒரு வருடத்துக்கு முன்னர் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டதைப் போல இப்பொழுது ஜனநாயகக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தை ஒழிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தது. எதிரியின் நிலைதான் வித்தியாசமாக இருந்தது. பாட்டாளி வர்க்கக் கட்சியின் பலம் தெருக்களிலே இருந்தது; ஆனால் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பலம் தேசிய சபையிலேயே இருந்தது. எனவே தேசிய சபையிலிருந்து அவர்களைப் பொறியிலே சிக்கவைத்துத் தெருவுக்குக் கொண்டுவர வேண்டும்; அவர்களுடைய நாடாளுமன்ற பலத்தைக் காலமும் சந்தர்ப்பங்களும் வலுப்படுத்தி

உறுதியாக்கிவிடுவதற்கு முன்பாக அவர்களே தங்களுடைய பலத்தை அழித்துக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். அவர்கள் வைத்த பொறியில் மலைக் கட்சி மிக வேகமாகச் சிக்கிக் கொண்டது.

பிரெஞ்சுத் துருப்புக்கள் ரோம் நகரத்தைக் குண்டு வீசித் தாக்கியது அவர்களைப் பொறியில் சிக்கவைக்கும் இரையாகப் பயன்பட்டது.* பிரெஞ்சுக் குடியரசு இன்னொரு நாட்டு மக்களின் சுதந்திரத்துக்கு விரோதமாகத் தன்னுடைய படைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாம் ஷரத்து கூறுவதற்கு விரோதமாக இந்தப் படையெடுப்பு நடைபெற்றது. மேலும் தேசிய சபையின் அங்கீகாரம் இல்லாமல் நிர்வாக அதிகாரம் யுத்தப் பிரகடனம் செய்வதை 54வது ஷரத்து தடை செய்கிறது. அரசியல் நிர்ணய சபை மே மாதம் 8ந் தேதியன்று ரோம் மீது படையெடுப்பதைக் கண்டனம் செய்திருக்கிறது. எனவே இக்காரணங்களுக்காக போனபார்ட் மீதும் அவருடைய மந்திரி சபை மீதும் குற்றம் சாட்டுகின்ற மசோதாவை லெட்ரூ-ராலேன் 1849ம் வருடம் ஜூன் மாதம் 11ந் தேதியன்று கொண்டுவந்தார். தியேர் குளவியைப் போலக் கொட்டியதைத் தாங்க முடியாமல் அவர் உணர்ச்சி வசப்பட்டு அரசியலமைப்புச் சட்டத்தை எவ்விதமாகவும், ஆயுதங்களை ஏந்திக் கொண்டாவது பாதுகாப்போம் என்று பயமுறுத்துகிற அளவுக்குப் போய்விட்டார். மலைக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குரலில் ஆயுதங்களை ஏந்துவோம் என்று முழங்கினர்கள். ஜூன் மாதம் 12ந் தேதியன்று தேசிய சபை குற்றஞ்சாட்டும் மசோதாவை நிராகரித்தது. மலைக் கட்சி நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியது. ஜூன் 13ந் தேதியன்று நடைபெற்ற சம்பவங்கள்—மலைக் கட்சியின் ஒரு பகுதியினர் போனபார்ட்டையும் அவர் மந்திரிகளையும் ''அரசியலமைப்புச் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்'' என்று அறிவித்தது; ஜனநாயகப் போக்குள்ள தேசிய

* இப்பதிப்பின் தொகுதி 2, பக்கங்கள் 214—217 பார்க்க.—ப-ர்.

காவலர் படையினர் அவர்களிடம் ஆயுதங்கள் இல்லாமல் தெருக்களில் ஊர்வலமாக வந்தது, ஷன்கர்னியேயின் துருப்புக்கள் தடுத்ததும் கலைந்து போனது முதலியன எல்லோருக்கும் நன்கு தெரிந்தவையே. மலைக் கட்சியின் ஒரு பகுதி வெளிநாட்டுக்கு ஓடி விட்டது; மற்றொரு பகுதியின் மீது பூர்ஷே என்ற இடத்திலுள்ள உயர்நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது.[45] மிச்சமிருந்தவர்கள் தேசிய சபையின் தலைவரின் பள்ளிக்கூட ஆசிரியரைப் போன்ற கண்காணிப்பில் இருக்கவேண்டுமென்று நாடாளுமன்றம் தீர்மானம் இயற்றியது. பாரிஸ் நகரத்தில் மறுபடியும் முற்றுகை நிலை அறிவிக்கப்பட்டது; தேசியக் காவலர் படையின் ஜனநாயகப் போக்குள்ள பகுதி கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் மலைக் கட்சியின் செல்வாக்கும் பாரிஸ் நகரத்தில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பலமும் உடைக்கப்பட்டது.

லியோனில் தொழிலாளர்கள் கலகத்துக்கு ஜூன் மாதம் 13ந் தேதி பச்சைக் கொடி காட்டியது. அந்தக் கலகத்தினுல் இரத்தக் களரி ஏற்படவே அங்கும், அதைச் சுற்றியிருந்த ஐந்து பிராந்தியங்களிலும் முற்றுகை நிலை அறிவிக்கப்பட்டது. இதை எழுதுகின்ற நேரத்திலும் இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கிறது.

மலைக் கட்சியின் பெரும்பான்மையினர் கட்சியின் முன்னணி முன்வைத்த அறிக்கையில் கையெழுத்திட மறுத்து அதன் மூலம் கட்சியின் முன்னணிப் பகுதியை நட்டாற்றில் விட்டனர். பத்திரிகைகளும் அவர்களைக் கைவிட்டன. இரண்டு பத்திரிகைகளுக்கு மட்டும்தான் அவர்களுடைய அறிக்கையை வெளியிடுகின்ற துணிச்சல் இருந்தது. குட்டி முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய பிரதிநிதிகளுக்குத் துரோகம் செய்தது. ஏனென்றால் தேசியக் காவலர் படையினர் ஒதுங்கிப் போய் விட்டார்கள் அல்லது அவர்கள் வந்த இடங்களில் தெருத் தடையரண்கள் அமைக்கும் வேலைகளைச் செய்யவிடாமல் தடுத்தார்கள். இராணுவத்திலிருந்து நேசசக்திகள் என்று சொல்லப்படுபவர்கள் உதவிக்கு வருவார்கள் என்று சொல்லப்பட்டிருந்த போதிலும் அப்படி

யாரும் வரவில்லை. எனவே பிரதிநிதிகள் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தை ஏமாற்றிவிட்டார்கள். கடைசியாக, பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டுச் சேர்ந்ததன் மூலமாக ஜனநாயகக் கட்சி புதிய பலம் பெறுவதற்குப் பதிலாக, தனது பலவீனத்தைப் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒட்டிவிட்டது. ஜனநாயகவாதிகளின் வழக்கமான அரிய சாதனைகளைப் போல இங்கும் ''மக்கள்'' பயந்து ஓடிவிட்டதாகக் குற்றம் சாட்ட முடிந்தது தலைவர்களுக்குத் திருப்தியளித்தது. தலைவர்கள் ஏமாற்றிவிட்டதாக மக்கள் குற்றம் சாட்ட முடிந்தது அவர்களுக்குத் திருப்தியளித்தது.

மலைக் கட்சி நடத்தப் போகும் போர் இயக்கத்தைக் காட்டிலும் வேறு எந்த நடவடிக்கையும் அதிகமான சத்தத்தோடு அறிவிக்கப்பட்டிருக்க முடியாது. ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாத வெற்றியைக் காட்டிலும் வேறு எந்த சம்பவமும் நெடுங்காலத்துக்கு முன்பாகவே அதிக நம்பிக்கையோடு அறிவிக்கப்பட்டிருக்க முடியாது. சங்க நாதம் முழங்கியதும் ஜெரிக்கோவின் சுவர்கள் நொறுங்கியதை[46] ஜனநாயகவாதிகள் நம்புவது மிகவும் உறுதியே. எதேச்சாதிகாரத்தின் கோட்டைச் சுவர்களுக்கு முன்பாக நிற்கும் பொழுதெல்லாம் அவர்கள் இந்த அதிசயம் மறுபடியும் நடக்கும் என்று நினைக்கிறார்கள். மலைக் கட்சி நாடாளுமன்றத்தில் வெற்றி பெறவேண்டுமென்று விரும்பியிருந்தால் ஆயுதங்களைத் தூக்குவோம் என்று அறைகூவியிருக்கக் கூடாது. நாடாளுமன்றத்தில் ஆயுதங்களைத் தூக்குவோம் என்று அறிவித்துவிட்டு, தெருக்களுக்கு வந்த பிறகு நாடாளுமன்ற முறையைப் பின்பற்றி நடந்திருக்கக் கூடாது. அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்வதை உண்மையிலேயே அவர்கள் விரும்பியிருந்தால் அதை யுத்தபாணியில் வரவேற்பார்கள் என்பதை முன்பே புரிந்து கொள்ளத் தவறியது முட்டாள்தனமே. உண்மையான போராட்டத்தை நடத்த விரும்பியிருந்தால் அந்தப் போராட்டத்தை நடத்தத் தேவையான ஆயுதங்களைக் கீழே போட்டது விசித்திரமானதே. ஆனால் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் மற்றும் அவர்களுடைய ஜனநாயகப் பிரதிநிதிகளின் புரட்சிகரமான

பயமுறுத்தல்கள் எதிரிக்குப் பயத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளே தவிர வேறில்லை. அவர்கள் ஒரு முட்டுச்சந்துக்குள் ஓடிய பிறகு, தங்களுடைய பயமுறுத்தல்களைச் செயலில் நடத்திக் காட்ட வேண்டிய பரிதாபமான நிலைமைக்குத் தங்களைக் கொண்டுவந்து சேர்த்த பிறகு, அதைத் தெளிவற்ற, உறுதியற்ற முறையிலே செய்கிறார்கள். அதிலும் குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய வழிமுறைகளை நிச்சயமாக ஒதுக்கி வைத்து விட்டு, தாங்கள் தோல்வியடைவதற்குச் சாக்குப் போக்குகளைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டே செயல்படுகிறார்கள். போராட்டம் ஆரம்பமாகப் போகிறது என்று காதுகள் செவிடாகும்படி சத்தம் போட்டு அறிவிக்கிறார்கள்; போராட்டம் ஆரம்பமாக வேண்டிய நேரத்தில் அந்தப் பெரு முழக்கம் மெல்லிய முணுமுணுப்பாக மாறிவிடுகிறது. கதாநாயகர்கள் தங்களிடமே எந்த நம்பிக்கையும் இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். நாடகம், ஊசி குத்திய குமிழியைப் போல முற்றிலும் சீர்குலைந்துவிடுகிறது.

ஜனநாயகக் கட்சியைப் போல வேறு எந்தக் கட்சியும் தன்னுடைய சக்தியை மிகைப்படுத்திப் பேசுவதில்லை; நிலைமையைப் பற்றி இவ்வளவு அலட்சியமாகத் தன்னை ஏமாற்றிக் கொள்வதும் இல்லை. இராணுவத்தில் ஒரு பகுதியினர் தனக்கு வாக்குகளைத் தந்த காரணத்தால், இப்பொழுது இராணுவம் கலகம் செய்யும் என்று மலைக் கட்சி உறுதியாக நம்பியது. அன்றிருந்த சூழ்நிலை எப்படிப்பட்டது தெரியுமா? புரட்சியாளர்கள் பிரெஞ்சுப் படையினருக்கு எதிராக ரோமன் படையினரை ஆதரிக்கிறார்கள் என்பதைத் தவிர அதற்கு வேறு எத்தகைய அர்த்தமும் இல்லையென்று இராணுவம் கருதியது. இதற்கு மாறான வகையில் 1848ம் வருடம் ஜூன் மாதத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பாட்டாளி வர்க்கம் இன்னும் மறந்துவிடவில்லை என்பதால் தேசியக் காவலர் படையைப் பற்றி அது மிகவும் ஆழமான வெறுப்புணர்ச்சியைக் கொண்டிருந்தது. இரகசியச் சங்கங்களின் தலைவர்கள் ஜனநாயகத் தலைவர்களிடம் மிகவும் கண்டிப்பான அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள். இப்படிப்

பட்ட வேறுபாடுகளைச் சரிப்படுத்துவதற்குப் பொதுவான மாபெரும் நலவுரிமைகளுக்கு ஆபத்தேற்பட்டிருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப்படையான ஒரு பாரா மீறப்பட்டதற்கு அதிகமான முக்கியத்துவம் கிடைக்கவில்லை. ஜனநாயகவாதிகளின் கூற்றுப்படியே அரசியலமைப்புச் சட்டம் அடிக்கடி மீறப்பட்டதில்லையா? மக்களால் விரும்பிப் படிக்கப்பட்ட பல பத்திரிகைகள் அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்ப்புரட்சியின் படைப்பு என்று வர்ணிக்கவில்லையா? ஆனால் ஜனநாயகவாதி, குட்டி முதலாளித்துவ வர்க்கம் என்ற இடைநிலை வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், அந்த வர்க்கத்தில் ஒரே சமயத்தில் இரண்டு வர்க்கங்களின் நல உரிமைகளும் பரஸ்பரம் முழுங்கடிக்கப்படுவதால், தான் பொதுவாக வர்க்கப் பகைமைக்கு அப்பால் போய்விட்டதாகக் கற்பனை செய்கிறார். தனிச்சலுகைகள் பெற்ற ஒரு வர்க்கம் தங்களை எதிர்ப்பதாக ஜனநாயகவாதிகள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் தேசத்தின் மற்ற வகுப்புகளோடு சேர்ந்து அவர்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அவர்கள் மக்களுடைய உரிமைகளின் பிரதிநிதிகள், மக்களுடைய நலன்களே அவர்களுடைய தலையாய அக்கறையாகும். எனவே ஒரு போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பாக வெவ்வேறு வர்க்கங்களின் நலன்களையும் நிலைகளையும் ஆராய்வது அவர்களுக்கு அவசியமல்ல. தங்களுக்கிருக்கும் பலத்தையும் ஆதரவையும் கூட அவர்கள் அதிக விமரிசனத்தோடு பார்ப்பது அவசியமல்ல. அவர்கள் கொடி காட்டினால் போதும். உடனே எல்லையற்ற பலத்தைக் கொண்ட மக்கள் கிளர்ந்தெழுந்து தங்களை ஒடுக்குபவர்களைத் தாக்குவார்கள். இப்பொழுது நடைமுறையில் அவர்களுடைய நலன்கள் சுவாரஸ்யமில்லாமற் போயிருந்தால், பலம் பலவீனமாக மாறியிருந்தால் அந்தத் தவறுக்குத் தீங்கான குதர்க்கவாதிகள் ஒரு காரணமாவர். அவர்கள்தான் பிரிக்கப்பட முடியாத மக்களை ஒன்றுக்கொன்று விரோதமான வெவ்வேறு முகாம்களாகப் பிரித்துவிடுகிறார்கள். அல்லது இராணுவப் படையினர் வெகுவாய்க் கோபமடைந்து, ஜனநாயகத்தின் பரிசுத்தமான குறிக்

கோள்களே தங்களுக்கும் மிகவும் ஏற்றவை என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் குருடாகிப் போனது தான் காரணம், அல்லது தங்கள் திட்டத்தை நிறைவேற்றும் பொழுது ஏற்பட்ட ஒரு சிறு கோளாறினால் எல்லாமே கெட்டுப் போயிருக்கலாம். அல்லது எதிர்பாராத ஒரு விபத்தினால் இந்தத் தடவை வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம். ஜனநாயகவாதிக்கு எவ்வளவு மோசமான தோல்வி ஏற்பட்டாலும் கூட சிறிதும் கறைபடாமல் எப்பொழுதும் தப்பி ஓடுகிறார். ஏனென்றால் அவர் அதில் ஈடுபட்ட பொழுதும் ஒன்றுமறியாத அப்பாவியாகத்தானே ஈடுபட்டார். அதுமட்டுமல்ல. இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு வெற்றி பெறுவோம் என்ற புதிய நம்பிக்கையோடு வருகிறார். தானே, தன்னுடைய கட்சியோ பழைய கருத்து நிலையைக் கைவிட வேண்டுமென்று அவர் நினைப்பதில்லை. அதற்கு மாறுகத் தனக்கு ஏற்ற வகையில் நிலைமைகள் பக்குவமடைய வேண்டும் என்று கூறுவார்.

மலைக் கட்சியின் அணிகள் அழிக்கப்பட்டதோடு அதன் பலம் சிதறிப்போய், புதிய நாடாளுமன்ற விதிமுறைகளின் மூலமாக அவமதிப்புக்கும் ஆளானபடியால், அது மிகவும் பரிதாபமான நிலையில் இருப்பதாக யாரும் கற்பனை செய்யக் கூடாது. ஜூன் மாதம் 13ந் தேதியன்று நடைபெற்ற சம்பவங்கள் அதன் தலைவர்களை அகற்றிவிட்டதென்றால் அவர்களுக்குப் பதிலாகக் குறைவான தகுதியுடையவர்கள் பதவிக்கு வருவதற்கு வாய்ப்புத் தந்தது. இந்தப் புதிய அந்தஸ்து அவர்களுக்குப் பெருமையாகவும் இருந்தது. நாடாளுமன்றத்தில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாதென்பதில் இனிமேல் சந்தேகம் தேவையில்லை. எனவே அவர்களும் தார்மீக ஆவேசத்தை வெளிப்படுத்துவதிலும், பகட்டாகப் பேசுவதிலும் தங்கள் நடவடிக்கையைக் குறுக்கிக் கொண்டார்கள். அவர்களால் முடிந்தது அவ்வளவு தான். புரட்சியின் அதிகார பூர்வமான கடைசிப் பிரதிநிதிகள் என்ற முறையில், அராஜகத்தின் சகலவிதமான பயங்கரங்களும் அவர்களிடம் பொதிந்திருப்பதாக ஒழுங்கு முறைக் கட்சி பாவனை செய்தது. ஆனால் எவ்வளவு கற்பனை

செய்யப்பட்டதோ அவ்வளவு அதிக அளவுக்கு மந்தமாக வும் அடக்கமாகவும் அவர்கள் யதார்த்தத்தில் நடந்து கொள்ளலாம். ஆனல் அவர்களும் ஜூன் மாதம் 13ந் தேதிய சம்பவங்களைப் பற்றி மிகவும் ஆழமான வாக்கியத் தைச் சொல்லி ஆறுதலடைந்து கொண்டார்கள்: ''அவர் கள் பொதுவான வாக்குரிமையை மட்டும் தொடுவதற்குத் துணியட்டும், பிறகு பார்த்துக் கொள்வோம்! நம் சக்தி என்ன என்பதைக் காட்டிவிடுவோம்! பார்த்துக் கொள் வோம்! (Nous verrons!)" என்று சொல்லிக் கொண்டார்கள்.

வெளிநாடுகளுக்கு ஓடிப்போன மலைக் கட்சியினரைப் பொறுத்தவரை லெட்ரூ-ராலேன், தான் தலைமை வகித்த பலம் வாய்ந்த கட்சியைப் பதினேந்து நாட்களுக்குள் மீட்க முடியாத அளவுக்கு அழித்து விட்டார் என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவது போதுமானது. இப்பொழுது அவர் பிரெஞ்சு அரசாங்கத்துக்குப் போட்டியாக பெயரளவில் partibus) ஒரு அரசாங்கத்தை வெளிநாட்டில் அமைத்துக் காண்டார், புரட்சியின் வீச்சு எந்த அளவுக்குக் குறை றதோ, பிரான்சின் அதிகாரபூர்வமான முதல்வர்கள் எந்த ளவுக்குத் தரம் குறைந்து மேலும் குள்ளமாக மாறு கின்றனரோ, அந்த அளவுக்கு அவருடைய உருவம், சம்பவங் கள் நடைபெறும் களத்துக்கு அப்பால் மிகத் தொலைவில் இருக்கின்ற அவருடைய உருவம் அதிகரிப்பது போலத் தோன்றும்; 1852ம் வருடத்தில் குடியரசுவாதிகளின் அபேட்சகராக அவர் நிற்க முடிந்தது; அவரும் அவருடைய கூட்டாளிகளும் என்ன வீரதீரமான செயல்களெல்லாம் செய்தோம் தெரியுமா என்று ஐரோப்பாக் கண்டத்தி லுள்ள கொடுங்கோலர்களைப் பயமுறுத்தி வல்லாக்கியர் களுக்கும் [Wallachians] மற்ற தேசிய மக்களுக்கும் அவ்வப்பொழுது சுற்றறிக்கைகள் அனுப்பிக் கொண்டிருந் தது—இவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுவது போது மானது. ''நீங்கள் எல்லோரும் வாய்ச்சவடால் பேர்வழிகள்!'' ("Vous n'êtes que des blaqueurs") என்று இந்தக் கனவான்களைப் பற்றி புரூதோன் குறிப்பிட்டது முற்றிலும் தவரு காது.

ஜூன் மாதம் 13ந் தேதியன்று ஒழுங்குமுறைக் கட்சி, மலைக் கட்சியை உடைத்தது மட்டுமல்லாமல் அரசியலமைப்புச் சட்டத்தையும் தேசிய சபையின் பெரும்பான்மையோர் முடிவுக்குக் கீழ்ப்படுத்தி விட்டது. இங்கே நாடாளுமன்ற வடிவங்களில் முதலாளித்துவ வர்க்கத்தினர் ஆட்சி செய்கிறார்கள்; ஆனால் முடியாட்சியைப் போன்று நிர்வாக அதிகாரத்தின் ரத்து அதிகாரம் அல்லது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான முடியாட்சி உரிமை போன்ற தடைச்சுவர்கள் அவர்களின் அதிகாரத்தில் குறுக்கிட முடியாது என்று அது குடியரசைப் புரிந்து கொண்டது. தியேர் குறிப்பிட்டது போல இதுவே நாடாளுமன்றக் குடியரசு. ஆனால் ஜூன் மாதம் 13ந் தேதியன்று நாடாளுமன்றத்தினுள் முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய முழு அதிகாரத்தை ஏற்படுத்திய போதிலும், மக்களிடையே அதிகமான செல்வாக்குப் பெற்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றிய பிறகு, நிர்வாக அதிகாரத்துக்கும் மக்களுக்கும் எதிராக அது நாடாளுமன்றத்துக்கே மாற்ற முடியாத பலவீனத்தை ஏற்படுத்தவில்லையா? நீதி மன்றங்களின் கோரிக்கையின் பேரில் எந்த மறுப்புமின்றி எண்ணற்ற உறுப்பினர்களை ஒப்படைத்ததன் மூலமாக அது தனக்கும் சேர்த்தே நாடாளுமன்றக் காப்புரிமையை ஒழித்துக் கொண்டது. மலைக் கட்சியை சட்டரீதியான அவமதிப்புக்கு உட்படுத்திய பொழுது, மக்கள் பிரதிநிதிகளின் அந்தஸ்து எந்த அளவுக்குக் குறைகிறதோ அந்த அளவுக்குக் குடியரசு ஜனாதிபதியின் அந்தஸ்து அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்காகக் கிளர்ச்சி செய்வதை சமூகத்தைச் சீர்குலைக்கும் அராஜகமான செயல் என்று அவமானப்படுத்திவிட்டதனால், அவர்களுக்கு எதிராக நிர்வாக அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் பொழுது மக்களைக் கிளர்ச்சி செய்யுமாறு கேட்டுக் கொள்ள முடியாதபடி தம்மைத் தாமே தடுத்துக் கொண்டார்கள். போனபார்ட்டின் உத்தரவுப்படி ரோம் நகரத்தைக் குண்டு வீசித் தாக்கியதன் மூலம் ஜூன் மாதம் 13ந் தேதிய அரசியலமைப்புச் சட்டக் கலகத்துக்கு எந்த ஜெனரல்

காரணமாக இருந்தாரோ, அதே உடினேவைத்தான் ஒழுங்கு முறைக் கட்சி 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி யன்று போனபார்ட்டுக்கு எதிராக அரசியலமைப்புச்சட்டத் தின் சார்பில் நிறுத்துகிறது. மக்களிடம் கெஞ்சிப் பார்க் கிறது. ஆனல் ஒரு பயனும் ஏற்படவில்லே. இது வரலாற்றின் கேலிச் செயல்தான். ஜூன் மாதம் 13ந் தேதியின் மற்றொரு வீரனை வியேரா நிதி அதிபர்களேக் கொண்ட தேசியக் காவலர் கும்பலுக்குத் தலேமை தாங்கி ஜனநாயகப் பத் திரிகைகளின் அலுவலகங்களுக்குப் போய் பல விதமான காட்டுமிராண்டித்தனமான காரியங்களேச் செய்த பொழுது தேசிய சபையின் மேடையிலிருந்து அவனேப் பாராட்டினர் கள். அதே வியேரா போனபார்ட்டின் சதியைப் பற்றித் தெரிந்துகொண்டு தேசிய சபையின் உயிருக்கு ஆபத்தேற் பட்ட நேரத்தில் தேசியக் காவலர் படை அதன் பாதுகாப் புக்கு வர முடியாது செய்ததில் மிகவும் முக்கியமான் பங்கு வகித்தான்.

ஜூன் மாதம் 13ந் தேதிக்கு வேறொரு அர்த்தமும் இருந்தது. மலேக் கட்சி போனபார்ட்டைக் குற்றம் சாட்டு வதைத் துரிதப்படுத்த விரும்பியது. எனவே அதனுடைய தோல்வி போனபார்ட்டுக்கு நேரடியான வெற்றி; தன் னுடைய ஜனநாயக எதிரிகள் மீது அவருடைய தனிப்பட்ட வெற்றியாகும். ஒழுங்குமுறைக் கட்சி வெற்றி பெற்றது. ஆனல் அதிலிருந்து லாபமடையப் போவது போனபார்ட். அவர் அப்படியே செய்தார். ஜூன் மாதம் 14ந் தேதியன்று பாரிஸ் நகரச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பை எல்லோரும் படித்தனர். அதில் ஜனுதிபதி, தனக்கு விருப்ப மில்லாத போதிலும், சம்பவங்களின் உந்துதல் காரணமாகத் தன்னுடைய ஒதுக்குப்புறமான இடத்திலிருந்து வெளியே வருகிறார். எதிரிகள் தன்னே அவதூறு செய்வதாக வருத்தப்படு கிறார். தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட புண்ணியவானேக் காட்சியளிக்கிறார். அவர் தன்னே ஒழுங்குமுறைக் குறிக் கோளோடு ஒன்றுபடுத்திக் கொள்வது போலத் தோன்றிய போதிலும் உண்மையில் ஒழுங்குமுறைக் குறிக்கோளே அவர் தன்னேடு ஒன்றுபடுத்திக் கொள்கிறார். மேலும் ரோம் படை

யெடுப்புக்கு தேசிய சபை காரியம் முடிந்த பிறகு அங்கீ காரம் கொடுத்துவிட்டது உண்மையென்றாலும், போனபார்ட் தான் அதற்கு முன்முயற்சி எடுத்துக் கொண்டார். வத்திக் கானில் உயர்ந்த மதகுருவாக ஸாமுவெலை மீண்டும் பதவி யிலமர்த்திய பிறகு அவர் டேவிட் மன்னராக டியுல்லரீ மாளிகைக்குள் நுழையக் கூடும் என்ற நம்பிக்கையைப் பெறுகிறார்.[47] அவர் மதகுருக்களைத் தமக்கு ஆதரவாகத் திரட்டி விட்டார்.

ஜூன் மாதம் 13ந் தேதி நடைபெற்ற கலகம் என்பது தெருக்களில் அமைதியாக ஊர்வலம் போன சம்பவமே என்பதை முன்பே பார்த்தோம். எனவே அதை நசுக் கியதற்காக யாருக்கும் இராணுவ வெற்றி மாலை சூட்ட முடியாது. எனினும் வீரபுருஷர்களும் வீரமான சம்பவங் களும் மிகவும் அருகிப் போயிருந்த ஒரு காலத்தில் இரத்தம் சிந்தாத இந்தச் சண்டையை இரண்டாம் ஆஸ்டர்லிட்ஸ் என்று ஒழுங்குமுறைக் கட்சி வர்ணித்தது.[48] பத்திரிகைகளி லும் சொற்பொழிவுகளிலும் இராணுவம் ஒழுங்குமுறைக் கான சக்தி என்று பாராட்டிப் பேசப்பட்டது. இதற்கு எதிரிடையாக தேச மக்களை அராஜகத்தின் பலவீனம் என்று கூறினர்கள். ஷன்கர்னியேயை ''சமூகத்தின் அரண்'' என்று உயர்வாகப் பேசினர்கள். இந்த மோசடியை அவரும் கடைசியில் நம்ப ஆரம்பித்தார். அதே பொழுதில் நம்பிக்கைக்கு உரியன அல்ல என்று சந்தேகிக்கப்பட்ட படைப் பிரிவுகள் வஞ்சகமாகப் பாரிசுக்கு வெளியே மாற்றப்பட்டன. தேர்தலின் போது அதிகமான ஜனநாயக உணர்ச்சிகளைக் காட்டிய படைப் பிரிவுகள் பிரான்சிலிருந்து அல்ஜீரியாவுக்கு அனுப்பப்பட்டன. துருப்புக்களில் கிழ்ப்படிய மறுக்கும் உணர்ச்சி கொண்ட படைவீரர்களைக் குற்றத் தண்டனைப் பிரிவில் வேலை செய்யுமாறு அனுப்பிவைத்தார் கள். கடைசியில் படைவீரர் குடியிருப்புக்குள் நுழையக் கூடாதென்று பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டார்கள்; சிவில் சமூகத்திலிருந்து படைவீரர் குடியிருப்புக்களை ஒதுக்கி வைப்பதும் முறையாக நிறைவேற்றப்பட்டது.

பிரெஞ்சுத் தேசியக் காவலர் படையின் வரலாற்றில்

தீர்மானமான திருப்புமுனைக்கு நாம் இப்பொழுது வந்து விட்டோம். 1830ம் வருடத்தின் போது மறுவருகையை ஒழிப்பதில் அது தீர்மானமான பாத்திரத்தை வகித்தது. லுயீ பிலிப்பின் ஆட்சியில் இராணுவத்தோடு தேசியக் காவலர் படை சேர்ந்து நின்ற பொழுது எந்தக் கலகமும் வெற்றி பெறவில்லை. 1848ம் வருடத்தின் பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட புரட்சியின் போது அது செயலற்ற நிலையை மேற்கொண்டது; லுயீ பிலிப்பின் பால் நிச்சயமில்லாத நிலையைக் கடைப்பிடித்தது. உடனே லுயீ பிலிப் எல்லாம் போய் விட்டதென்று பயந்தார். அது உண்மையாகவே நடை பெற்றது. எனவே தேசியக் காவலர் படையின் ஆதரவு இல்லா விட்டால் புரட்சி வெற்றி பெறுது; அதே போல தேசியக் காவலர் படை இராணுவத்துக்கு எதிராக இருந்தால் இராணுவமும் வெற்றி பெற முடியாது என்ற நம்பிக்கை வேரூன்றியது. இது சிவில் மக்களின் சர்வவல்லமையைப் பற்றி இராணுவத்தின் மூடநம்பிக்கையாகும். 1848ம் வருடத்தின் ஜூன் மாதத்தின் போது துருப்புக்களோடு தேசியக் காவலர் படை முழுமையுமே சேர்ந்து எழுச்சியை ஒடுக்கியது இந்த மூடநம்பிக்கையை பலப்படுத்தியது. போனபார்ட் பதவியேற்ற பிறகு, தேசியக் காவலர் படைக்கும் முதல் இராணுவ டிவிஷனுக்கும் ஷன்கர்னியே தலைமைப் பொறுப்பைக் கொண்டிருந்தார். இந்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான கூட்டுத் தலைமையின் காரணமாக தேசியக் காவலர் படையின் செல்வாக்கு ஓரளவுக்கு பலவீனமடைந்தது.

இராணுவத்தின் பிரதம தளபதியின் பொறுப்புகளில் தேசியக் காவலர் படையின் தலைமையும் ஒன்று என்று தோன்றியதைப் போல தேசியக் காவலர் படையே சாதாரணமானதுருப்புக்களின் ஒட்டுப்பகுதியாகத் தோன்றியது. கடைசியில் ஜூன் மாதம் 13ந் தேதி அதன் பலம் நொறுக்கப் பட்டது. பிரான்ஸ் முழுவதும் அது பகுதி பகுதியாகக் கலைக்கப்பட்டதால் மட்டும் இந்த நிலை ஏற்பட்டுவிடவில்லை. கடைசியில் காவலர் படையில் துணுக்குகள் மட்டுமே எஞ்சி நின்றன. ஜூன் மாதம் 13ந் தேதியன்று நடைபெற்ற ஆர்ப்

பாட்டம் ஜனநாயகப் போக்குள்ள தேசியக் காவலர் படையினரின் ஆர்ப்பாட்டமே ஆகும். அவர்கள் இராணுவத்துக்கு எதிராக ஆயுதங்களே ஏந்திக் கொண்டுவரவில்லையே தவிர தங்களுடைய இராணுவ உடைகளில் வந்தார்கள். ஆனால் இந்த இராணுவ உடையில்தான் இதுவரை தேசியக் காவலர் படையின் மந்திர சக்தி இருந்தது. ஆனால் இப் பொழுது இந்த உடையும் மற்ற எல்லா உடைகளையும் போல வெறும் கம்பளித் துணியே என்று இராணுவம் முடிவு செய்தது. மந்திர சக்தி மறைந்து போய்விட்டது. 1848ம் வருடத்தின் ஜூன் மாதத்தில் தேசியக் காவலர் படை என்ற முறையில் முதலாளித்துவ வர்க்கத்தினரும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக இராணுவத்தோடு ஒன்றுசேர்ந்திருந்தார்கள். 1849ம் வருடத்தின் ஜூன் மாதம் 13ந் தேதியன்று இராணுவம் குட்டி முதலாளித்துவ தேசியக் காவலர் படையைக் கலைப்பதை முதலாளித்துவ வர்க்கம் அனுமதித்தது. 1851ம் வருடத்தின் டிசம்பர் மாதம் 2ந் தேதியன்று முதலாளித்துவ தேசியக் காவலர் படையும் மறைந்துவிட்டது. அதைக் கலைப்பதற்கான ஆணையில் போனபார்ட் கையெழுத்திட்ட பொழுது இந்த உண்மையான நிலையைத்தான் அவர் பதிவு செய்தார். முதலாளித்துவ வர்க்கம் தானுகவே இராணுவத்துக்கு எதிரான தன்னுடைய கடைசி ஆயுதத்தையும் இவ்விதத்தில் உடைத்துப் போட்டது. இது வரையிலும் அதற்கு அடிமைகளாகவிருந்த குட்டி முதலாளித்துவ வர்க்கம் தன்னை எதிர்க்கும் கலகக்காரர்களாக மாறிய மறுவினுடியே முதலாளித்துவ வர்க்கம் அந்த ஆயுதத்தை உடைக்க வேண்டியிருந்தது. பொதுவாக எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அது கையாண்ட கருவிகளை அது எதேச்சாதிகாரத்தைப் பெற்றதும் தனது கையாலேயே உடைத்துப் போடத் தானே வேண்டும்.

இதற்கிடையில் ஒழுங்குமுறைக் கட்சி 1848ம் வருடத்தில் தான் இழந்துவிட்டதாகத் தோன்றிய அதிகாரத்தை, அன்றைக்கிருந்த கைவிலங்குகள் இல்லாமலேயே மறுபடியும் 1849ல் பெற்றதை, அரசியலமைப்புச் சட்டத்தையும்

குடியரசையும் வசைமாரி பொழிந்து கொண்டாடியது. தன் தலைவர்கள் நடத்திய புரட்சி உள்பட கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களைச் சேர்ந்த புரட்சிகளையும் சபித்து பத்திரிகைகள் வாயைப் பூட்டியும், சங்கங்களில் சேருவது கூடாதென்றும் முற்றுகை நிலையைச் சாதாரண ஏற்பாடு என்று அங்கீகரித்தும் கொண்டாடியது. தேசிய சபை ஆகஸ்ட் மாதத்தின் மத்தியிலிருந்து அக் டோபர் மாதத்தின் நடுப்பகுதி வரை—இந்த இடைக்காலத் தில் செயலாற்றுவதற்கென்று ஒரு நிரந்தரக் கமிஷனை நிய மித்த பிறகு—ஒத்தி வைக்கப்பட்டது. இந்த ஓய்வுக் காலத் தின் போது முறைமைவாதிகள் எம்ஸில் இருந்தவர்களோடும் ஆர்லேயானிஸ்டுகள் கிளெர்மோன்டில் இருந்தவர்களோ டும் போனபார்ட் தனது இராஜபோகச் சுற்றுப்பயணங் களிலும் சதிகளைச் செய்தார்கள். பிராந்தியங்களின் கவுன் சில்கள் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைப் பது பற்றி விவாதிப்பதாகச் சொல்லிக் கொண்டு சதிகளைச் செய்தன. தேசிய சபை ஒத்தி வைக்கப்படும் இடைக்காலங் களில் இத்தகைய சம்பவங்கள் தவறாமல் நடைபெற்றன; அவை நிகழ்ச்சிகளாக மாறுகிறபொழுதில் மட்டுமே அவற்றைப் பற்றி விவாதிக்க உத்தேசிக்கிறேன். தேசிய சபை இப்படி அதிகமான காலத்துக்கு அரசியல் அரங்கத்தி லிருந்து மறைந்து விடுவதும், ஒரு தனிநபரான லுயி போன பார்ட்டை, அவர் எவ்வளவுதான் இரங்கத்தக்க நபராக இருந்த போதிலும், குடியரசின் சார்பில் பிரதிநிதியாக விட்டுவிடுவதும் பொருத்தமான செயலல்ல என்பதை மட்டும் இங்கே கூடுதலாகச் சொல்ல விரும்புகிறேன். ஒழுங்கு முறைக் கட்சி மறுவருகைக்கு வெவ்வேறான ஆசைகள் உள்ள தனித்தனியான அரசவம்சக் கோஷ்டிகளாகப் பிரிந் தது. அதனால் பொது மக்களிடம் அருவருப்பு ஏற்பட்டது. இந்த ஓய்வுக் காலங்களின் போது, எத்தனை தடவை நாடாளுமன்றத்திலிருந்து வருகிற குழப்பமான சத்தங்கள் அமைதியாக மாறி அதன் உறுப்பினர்கள் தேசத்தினுள் கரைந்தார்களோ அவ்வளவு தெளிவாக இந்தக் குடியரசின் உண்மையான வடிவத்தை முழுமையாக்குவதற்கு ஒன்று

மட்டும் இன்னும் தேவை என்பது புலனுயிற்று. அது நாடாளு மன்றத்தின் ஓய்வுக்காலத்தை நிரந்தரமாக்கிவிடும்; குடியரசின் கல்வெட்டில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் (Liberté, Égalité, Fraternité) ஆகிய சொற்களுக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட சந்தேகத்துக்கிடமில்லாத சொற்களை உபயோகிக்கும்: காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப் படை (Infanterie, Cavalerie, Artillerie)!

IV

1849ம் வருடம் அக்டோபர் மாதத்தின் மத்தியில் தேசிய சபை மறுபடியும் கூடியது. நவம்பர் மாதம் முதல் தேதியன்று பரோ-பல்லூ மந்திரிசபையை விலக்கிவிட்டு, வேறொரு மந்திரிசபையை அமைத்திருப்பதாக போனபார்ட் அனுப்பிய செய்தி தேசிய சபைக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. போனபார்ட் இப்படி முறைகேடாக மந்திரிகளை விலக்கியது போல வேறு யாரும் தம்முடைய வேலைக்காரர்களைக்கூட விலக்கியிருக்கப் போவதில்லை. தேசிய சபைக்கு அவர் தர விரும்பிய உதைகள் இப்பொழுது பரோ குழுவினருக்குக் கொடுக்கப்பட்டன.

முறைமைவாதிகளையும் ஆர்லேயானிஸ்டுகளையும் சேர்த்து அமைக்கப்பட்ட பரோவின் மந்திரிசபை ஒழுங்குமுறைக் கட்சியின் மந்திரிசபையாகும். குடியாட்சி அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதற்கும், ரோமுக்கு எதிராகப் படைகளை அனுப்புவதற்கும், ஜனநாயகக் கட்சியை உடைப்பதற்கும் போனபார்ட்டுக்கு அந்த மந்திரிசபையின் உதவி தேவைப்பட்டது. இந்த மந்திரிசபைக்குப் பின்னால் அவர் தன்னையே மறைத்துக் கொண்டுவிட்டதாகக்கூடப் பார்வைக்குத் தோன்றியது. அரசாங்க அதிகாரத்தை ஒழுங்குமுறைக் கட்சியிடம் ஒப்படைத்துவிட்டு, லுயீ பிலிப் பின் காலத்தில் ஒரு பத்திரிகையின் பொறுப்பு மிக்க ஆசிரியர் அணிந்து கொண்ட ஆடம்பரமற்ற வைக்கோற் பொம்மை (homme de paille) முகமூடியை இவரும் அணிந்து கொண்டார். அந்த முகமூடி அவருடைய தோற்றத்தை மறைக்கக்

கூடிய லேசான துணியாக இல்லாமல் இரும்புக் கவச மாக இருந்தபடியால் தனது உண்மையான முகத்தை வெளியே காட்ட விரும்பிய போனபார்ட் முகமூடியைக் கழற்றி எறிந்தார். ஒழுங்குமுறைக் கட்சியின் பெயரால் குடியரசு தேசிய சபையைக் கலைப்பதற்காகவே அவர் பரோ மந்திரிசபையை நியமித்தார். இப்பொழுது தேசிய சபையையோ ஒழுங்குமுறைக் கட்சியையோ சாராமல் நான் சுயேச்சையாக நிற்கிறேன் என்று அறிவிப்பதற்காக பரோ மந்திரிசபையை விலக்கினர்.

மந்திரிசபையை விலக்கியதற்குப் பொருத்தமான சாக்குகளும் பல இருந்தன. தேசிய சபையின் பக்கத்தில் குடியரசின் ஜனாதிபதியும் ஒரு அதிகார சக்தியாகத் தோன் றும் சாதாரண நாகரிக முறையைக் கூட பரோ மந்திரி சபை புறக்கணித்து விட்டது. தேசிய சபையின் ஓய்வுக் காலத்தின் போது போனபார்ட் போப்பின்* மிதவாதப் போக்கைக் குறை சொல்லுவது மாதிரியாகத் தோன்றக் கூடிய கடிதத்தை எட்கார் நேய் என்பவருக்கு எழுதி யிருந்தார். பிறகு அந்தக் கடிதம் பத்திரிகைகளில் வெளி யிடப்பட்டது. முன்பு ரோம் குடியரசின் மீது குண்டு வீசித் தாக்கிய உடனேவைப் பாராட்டி அரசியல் நிர்ணய சபைக்கு எதிர்ப்பாகக் கடிதம் எழுதி அதைப் பத்திரிகை களிலும் வெளியிட்டதைப் போல இப்பொழுதும் செய்தார்.** தேசிய சபையில் ரோம் படையெடுப்புக்கான செலவுகளை அனுமதிப்பது பற்றி வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண் டிருந்த பொழுது விக்டோர் ஹியூகோ தமது பகட்டான மிதவாதத்தின் காரணமாக, அந்தக் கடிதத்தை விவாதத் துக்குக் கொண்டுவந்தார். போனபார்ட்டின் கருத்துக்களுக்கு அரசியல் முக்கியத்துவம் இருக்கக்கூடும் என்ற எண்ணத் தையே ஏளனம் செய்து ஒழுங்குமுறைக் கட்சியினர் அதைப் புறக்கணித்தார்கள். இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு போன பார்ட்டுக்கு ஆதரவாக ஒரு மந்திரி கூடப் பேசவில்லை.

---

* —ஒன்பதாவது பியஸின்.—ப-ர்.

** இப்பதிப்பின் தொகுதி 2, பக்கங்கள் 217—218 பார்க்க.—ப-ர்.

வேறொரு சந்தர்ப்பத்தில் பரோ, அவருக்கு வழக்கமான பொருளற்ற ஆரவாரப் பேச்சு பாணியில், ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான வட்டாரங்களில் ''அருவருக்கத்தக்க சூழ்ச்சிகள்'' நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறி, தம் முடைய ஆத்திரத்தைப் பகிரங்கமாக மேடையிலே வெளியிட்டார். கடைசியாக, மந்திரிசபை ஆர்லேயான் டச்சசுக்கு விதவைக்குரிய உதவித் தொகையை தேசிய சபையிலிருந்து பெற்றுக் கொடுத்த போதிலும் ஜனாதிபதியின் ஊதியத்தை அதிகப்படுத்துமாறு செய்யப்பட்ட பிரேரணைகளை நிராகரித்து விட்டது. அரசமகுடத்துக்கு அபேட்சகர், அதிர்ஷ்டமில்லாத சாகஸக்காரன் என்ற இரண்டு தன்மைகளும் போனபார்ட்டிடம் நெருக்கமாக இணைந்திருந்த காரணத்தால் மீண்டும் பிரெஞ்சுப் பேரரசை நிறுவ வேண்டும் என்ற மாபெரும் கருத்தோடு, என்னுடைய கடன்களைத் தீர்ப்பது பிரெஞ்சு மக்களின் கடமை என்னும் கருத்தும் அவரிடம் தொடர்ந்தே வந்தது.

போனபார்ட்டால் ஏற்படுத்தப்பட்ட முதலாவதும் கடைசியுமான நாடாளுமன்ற மந்திரிசபை பரோ-பல்லா மந்திரிசபையே. எனவே அந்த மந்திரிசபை விலக்கப்பட்டது ஒரு தீர்மானமான திருப்பு முனையாகும். அதிலிருந்து ஒழுங்குமுறைக் கட்சி நாடாளுமன்ற ஆட்சி அமைப்பு முறைக்குத் தேவைப்படும் அத்தியாவசியமான அடித்தளத்தை—நிர்வாக அதிகாரத்தின் மீதான தலைமையைத் திரும்பப் பெற முடியாத வகையில் இழந்துவிட்டது. பிரான்ஸ் மாதிரியான தேசத்தில் நிர்வாக அதிகாரத்திடம் ஐந்து லட்சம் பேர்களுக்கு அதிகமான மாபெரும் அதிகாரிகள் பட்டாளம் இருப்பதால், அதன் காரணமாக மிக ஏராளமான பேர்களின் வாழ்க்கைகளையும் நலன்களையும் தன்னையே முழுவதும் நம்பியிருக்கக்கூடிய நிலையில் எப்பொழுதும் வைத்திருப்பதால், சிவில் சமூக வாழ்க்கையின் மிக விரிவான வெளிப்பாடுகளிலிருந்து மிகவும் சாதாரணமான முயற்சிகள் வரை, அதிகப் பொதுவான வாழ்க்கை முறையிலிருந்து தனிநபர்களின் தனியான வாழ்க்கை முடிய

அரசே நிர்வகித்தும் ஒழுங்குபடுத்தியும் கண்காணித்தும் கற்பித்தும் வருவதால், மற்றவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்ற இந்த உடல் மிகவும் அசாதாரண மான வகையில் மத்தியத்துவமடைந்திருப்பதால் எங்கும் நிறைந்ததாக, எல்லாம் அறிந்ததாக, வேகமும் நெகிழ்ச்சியும் கொண்டதாக வளர்வதால்—உண்மையான அரசியல் சமுதா யம் விறைப்பில்லாமல், சரியான உருவமில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது எதையாவது சார்ந்திருப்பதில் இதற்குச் சரியான எதிர் உருவத்தைக் காணலாம்—இப்படிப்பட்ட ஒரு நாட்டில் தேசிய சபை அரசாங்க நிர்வாகத்தை எளிமையான முறையில் திருத்தியமைக்காவிட்டால், இயன்ற வரை அதிகாரிகள் பட்டாளத்தைக் குறைக்காவிட்டால், இறுதியாக, சிவில் சமூகமும், பொதுமக்கள் கருத்தும் அரசாங்க அமைப்போடு சம்பந்தமில்லாத, தனியான ஸ்தாபனங்களை உருவாக்கிக் கொள்ளுமாறு செய்யாவிட் டால், அப்படிப்பட்ட நாட்டில் மந்திரிப் பதவிகளின் மீது ஆதிக்கம் வகிப்பதை இழந்தவுடனேயே தேசிய சபை எல்லாவிதமான உண்மையான செல்வாக்கையும் இழந்துவிடு கிறது. ஆனால் இந்த பிரம்மாண்டமான அரசு இயந்திரத்தை அதன் எல்லாவிதமான கிளைகளையும் துறைகளையும் சேர்த்து நிர்வகிப்பதில்தான் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாயத நலன்கள் மிகவும் நெருக்கமான அளவுக்குப் பின்னிக் கிடக்கின்றன. இங்கேதான் அது தன்னுடைய மிகை எண்ணிக்கையினருக்கு வேலைகளை ஏற்பாடு செய் கிறது. லாபம், வட்டி, வாரம், கௌரவ ஊதியம் என்ற வடிவங்களில் பணத்தைச் சேர்க்க முடியாத பொழுது அரசாங்க ஊதியம் வாங்கி அதை ஈடு செய்து கொள் கிறது. மறுபக்கத்தில் அதன் அரசியல் நலன்கள் அதன் அடக்குமுறை நடவடிக்கைகளைத் தினந்தோறும் அதிகரிக்கச் செய்து அதன் காரணமாக அரசாட்சிக்கான வளங்களையும் அதன் ஊழியர்களையும் பெருக்கியது. அதே சமயத்தில் அது பொதுஜன அபிப்பிராயத்தை எதிர்த்து இடை விடாது போர் தொடுத்து, சமூக இயக்கத்தின் சுயேச்சை யான ஸ்தாபனங்களின் மீது அவநம்பிக்கை கொண்டு

அவற்றை முழுமையாக வெட்டிப் போடமுடியாவிட்டால், அவற்றை முடமாக்கிச் சிதைத்துவிட்டது. இப்படி பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினர் தங்களுடைய வர்க்க நிலைமையினுல் ஒரு பக்கத்தில் எல்லா வகை நாடாளுமன்ற ஆட்சிக்கான ஜீவாதாரமான நிலைமைகளையும் அதனல் தங்களுடைய சொந்த ஆட்சிக்கான ஜீவாதாரமான நிலைமைகளையும் ஒழிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்; மறுபக்கத்தில் தங்களுக்குப் பகைமையான நிர்வாக அதிகாரத்தை எதிர்க்க முடியாததாக ஆக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

புதிய மந்திரிசபை ட ஆப்பூல் மந்திரிசபை என்று அழைக்கப்பட்டது. ஜெனரல் ட ஆப்பூல் பிரதம மந்திரி அந்தஸ்தைப் பெற்றதாக நினைக்க வேண்டாம். பரோவைப் பதவி நீக்கம் செய்த அதே நேரத்தில் போனபார்ட் பிரதம மந்திரி பதவியையும் ஒழித்துவிட்டார். அந்தப் பதவி நீடிக்கும் வரை குடியரசின் ஜனதிபதிக்கு அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட அரசர், அதாவது சட்டபூர்வமான அனுமதேயம் என்ற அந்தஸ்துதான் உண்டு என்பது உண்மை. அதிலும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட இந்த அரசருக்கு சிம்மாசனமும் மகுடமும், செங்கோலும் வாளும் கிடையாது; சட்டப் பாதுகாப்பு இல்லாமல், அரசின் மிக உயர்ந்த பதவியை மரபுரிமையாகப் பெற முடியாமல், கேவலம் ஒரு சம்பளப் பட்டியல் கூட இல்லாமலிருந்தது. ட ஆப்பூல் மந்திரி சபையில் நாடாளுமன்ற அனுபவம் அதிகமுள்ள மந்திரி ஒரே ஒருவர்தான் இருந்தார். அவர்தான் வட்டிக்கடைக்காரரான புல்ட். மேல்தட்டு லேவாதேவிக்காரர்களில் மிகவும் மோசமான பெயரெடுத்தவர்களில் அவரும் ஒருவர். அவரிடம் நிதி இலாகா ஒப்படைக்கப்பட்டது. பாரிஸ் பங்கு மார்க்கெட்டின் விலைப் புள்ளிகளை எடுத்துப் பாருங்கள். 1849ம் வருடம் நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து போனபார்ட்டிஸ்டுகளின் செல்வாக்கு கூடும் பொழுதும் குறைகிற பொழுதும் பிரெஞ்சு அரசாங்கப் பத்திரங்களின் மதிப்பும் கூடுவதும் குறைவதும் நடைபெறுவதைப் பார்க்கலாம். இப்படி போனபார்ட் பங்கு மார்க்கெட்டில் தனக்குக் கூட்டாளியைத்

தேடிக் கொண்டதோடு அதே சமயத்தில் கர்லியேயைப் பாரிஸ் நகரத்தின் தலைமைப் போலீஸ் அதிகாரியாக நியமித்து போலீஸ் இலாகாவையும் தன்வசப்படுத்திக் கொண்டார்.

எனினும் வளர்ச்சியின் போக்கிலேதான் மந்திரிகள் மாற்றத்தின் விளைவுகள் வெளியே தெரிய ஆரம்பித்தன. முதலாவதாக போனபார்ட் ஒரு அடி முன்னே எடுத்து வைத்ததும் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் அவர் உடனே பின்னுக்குத் தள்ளப்பட்டார். தேசிய சபைக்குத் தனது செய்தியை நயமற்ற வகையிலே முதலில் அனுப்பி விட்டு உடனே அதைத் தொடர்ந்து சபைக்குத் தனது விசுவாசத்தை மிகவும் அடிமைத்தனமான முறையில் தெரிவித்துக் கொள்ளும் கடிதத்தை அனுப்பிவைக்கிறார். அவருடைய சொந்த விருப்பங்களைச் சட்டமாக்குவதற்கு அமைச்சர்கள் பல சந்தர்ப்பங்களில் தயக்கத்தோடு முயற்சிக்கிறார்கள். ஆனால் எங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக, நாங்கள் வகிக்கும் பதவிகளின் நிர்ப்பந்தத்தினால்தான் இப்படிப்பட்ட வேடிக்கையான சட்டங்களைக் கொண்டுவருகிறோம்; இவற்றால் எந்தப் பயனும் ஏற்படாது என்பது எங்களுக்கு முன்பே தெரியும் என்பது போல ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். போனபார்ட் மந்திரிகளின் முதுகுகளுக்குப் பின்பாகத் தன்னுடைய எண்ணங்களைக் கொட்டி, தன்னுடைய ''நெப்போலியன் கருத்துக்களோடு'' ("idées napoléoniennes")[49] விளையாடுவதும் பல தடவைகள் நடந்தன. ஆனால் ஒவ்வொரு தடவையிலும் அவருடைய அமைச்சர்கள் தேசிய சபையின் மேடையிலிருந்து அவர் பேச்சுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று அறிவித்தார்கள். தன்னுடைய எதிரிகள் ஏளனமாகக் கேலி செய்து சிரிப்பது நின்றுவிடக் கூடாதென்பதற்காகவே அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற அவருடைய ஏக்கம் வெளிப்படுவது போலத் தோன்றியது. உலகத்தால் அங்கீகரிக்கப்படாத மேதையைப் போல அவர் நடந்து கொண்ட போதிலும் உலகம் அவரை ஏமாளியாகத்தான் கருதியது. இந்தக் கட்டத்தைப் போல

வேறு எந்தக் காலத்திலும் அவர் எல்லா வர்க்கங்களின் ஏளனத்தையும் பரிபூரணமாக அடையவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தினர் இப்படித் தங்குதடையில்லாமல் வேறு எந்தக் காலத்திலும் ஆட்சி செய்யவில்லை; அவர்களுடைய ஆதிக்கத்தின் சின்னங்களை இவ்வளவு பகட்டாக வேறு எந்தக் காலத்திலும் காட்டிக் கொள்ளவில்லை.

அவர்கள் இயற்றிய சட்டங்களின் வரலாற்றை நான் இங்கே எழுதப் போவதில்லை. எனினும் இந்தக் கட்டத்தில் இயற்றிய இரண்டு சட்டங்களில் அவற்றின் சாராம்சத்தைப் பார்க்கிறோம். மதுபான வரியை மறுபடியும் ஏற்படுத்தும் சட்டமும், சமய நம்பிக்கையின்மையை ஒழிப்பதற்காக இயற்றப்பட்ட கல்விச் சட்டமுமே முன்கூறிய இரு சட்டங்களாகும். பிரெஞ்சுக்காரர்கள் ஒயின் குடிப்பதைக் கஷ்டமாக்கிய போதிலும், அவர்களுக்கு தண்ணீர் அதிகமாக வழங்கப்பட்டது. மதுபான வரியின் மூலமாகப் பழைய, வெறுப்புத் தருகின்ற பிரெஞ்சு வரிவிதிப்பு முறை மாற்றப்பட முடியாதது என்று முதலாளித்துவ வர்க்கத்தினர் அறிவித்தார்கள் என்றால் கல்விச் சட்டத்தின் மூலமாக இந்த வரி விதிப்பு முறையைச் சகித்துக் கொள்ளக் கூடிய பழைய மனோபாவத்தைப் பொது மக்களிடம் ஏற்படுத்துவதற்கு அவர்கள் முயற்சித்தார்கள். வால்டேர் கொள்கைகள், கதம்பவாதம் ஆகியவற்றை முன்னர் ஆதரித்தவர்களான ஆர்லேயானிஸ்டுகளும் மிதவாத முதலாளித்துவ வர்க்கமும் பிரெஞ்சு அறிவைக் கண்காணிக்கும் வேலையைத் தங்களுடைய பாரம்பரிய எதிரிகளான ஜெசுயிட்டுகளிடம் ஒப்படைத்தது ஆச்சரியமானதே. ஆனால் சிம்மாசனத்தில் உட்காருவதற்காகப் போட்டியிடுகிற அபேட்சகர்கள் விஷயத்தில் ஆர்லேயானிஸ்டுகளும் முறைமைவாதிகளும் பிரிந்து நின்ற போதிலும் தங்களுடைய ஒன்றுபட்ட ஆட்சிக்கு இரண்டு சகாப்தங்களின் ஒடுக்குமுறைக் கருவிகளை ஒன்றுபடுத்துவது அவசியமென்பதையும், ஜூலை மாத முடியாட்சிக்குரிய அடக்குமுறைச் சாதனங்களை, மறுவருகைக் கட்டத்திற்குரிய அடக்குமுறைச் சாதனங்களைக் கொண்டு

குறை நிரப்பி பலப்படுத்துவது அவசியம் என்பதையும் உணர்ந்தார்கள்.

விவசாயிகள் தங்களுடைய எல்லா நம்பிக்கைகளிலும் ஏமாற்றமடைந்து, ஒரு பக்கத்தில் குறைவான தானிய விலைகளினாலும், மறு பக்கத்தில் வரிகள், கடன், அடமானம் ஆகிய சுமைகளினாலும் தமது பிராந்தியங்களில் சுறுசுறுப்படைய ஆரம்பித்தார்கள். இதற்குப் பதிலளிப்பதற்காகப் பள்ளி ஆசிரியர்கள் மதகுருவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டனர். நகர மேயர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் போலீஸ் அதிகாரியின் கீழ் கொண்டு வரப்பட்டார்கள். கடைசியில் எல்லோருமே வேவு பார்க்கும் அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டார்கள். பாரிசிலும் மற்ற பெரிய நகரங்களிலும் பிற்போக்குவாதம் இந்த சகாப்தத்தின் உடற்பண்புகளைக் கொண்டிருக்கிறது. அது அதிகமாகச் சவால் விட்ட போதிலும் குறைவாகத்தான் வீழ்த்துகிறது. கிராமப் புறங்களில் அது மந்தமாக, அற்பமாக, சின்னத்தனமாக, தொல்லை கொடுப்பதாக, சலிப்புத் தருவதாக நடந்து கொள்கிறது. ஒரு வார்த்தையில் சொல்வதென்றால் போலீஸ்காரனைக நடந்து கொள்கிறது. மூன்று வருட காலம் இந்தப் போலீஸ் ஆட்சி, மதகுருக்களின் ஆட்சியின் ஆசீர்வாதத்தோடு நடைபெற்றதென்றால் முதிர்ச்சியில்லாத பொதுமக்கள் எவ்வளவு மனச் சோர்வடைந்திருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தேசிய சபையின் மேடையிலிருந்து ஒழுங்குமுறைக் கட்சி சிறுபான்மையினரைக் கண்டிக்க எவ்வளவு உக்கிரத்துடன் பேசிய போதிலும் கிறிஸ்தவர்கள் ''ஆம், ஆம்; இல்லை, இல்லை'' என்று சொல்வதைப் போலவே, அதன் பேச்சு மேடையிலும் ஒரசைச் சொல்லாகவே இருந்தது. பத்திரிகையில் இருப்பதைப் போலவே மேடையிலும் ஒரசைச் சொல்லாகவே இருந்தது. முன்பே பதிலைச் சொல்லிவிட்டால் விடுகதையில் சுவை உண்டா? அப்படியே இவர்களுடைய பேச்சு இருந்தது. மனுக் கொடுக்கும் உரிமையோ, மதுபான வரியோ, பத்திரிகைச் சுதந்திரமோ,

சுதந்திரமான வர்த்தகமோ, விவாத மன்றங்களோ அல்லது ஊராட்சிச் சட்டமோ, தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதோ அல்லது அரசாங்க வரவு செலவுத் திட்டமோ— எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவர்களுடைய அனுமதிச் சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் பேசுவது எப்பொழுதும் ஒரே விஷயமே. அவர்களுடைய தீர்ப்பும் எப்பொழுதும் தயாராக இருக்கும். அது ''சோஷலிசம்'' என்பதே. முதலாளித்துவ மிதவாதம் கூட சோஷலிசத்தன்மை கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. முதலாளித்துவக் கல்வி முறை சோஷலிசமே. முதலாளித்துவ நிதிச் சீர்திருத்தம் சோஷலிசமே. கால்வாய் இருக்கிற இடத்தில் இரயில் பாதை போட்டால் அது சோஷலிசம். வாளினால் தாக்கப்படும் பொழுது கம்பைக் கொண்டு தடுத்தால் அது சோஷலிசம்.

இது வெறும் பேச்சு அணியலங்காரமோ, நாகரிக முறையோ அல்லது சுட்சித் தந்திரமோ அல்ல. முதலாளித்துவ வர்க்கம் ஒரு விஷயத்தை உண்மையான தெளிவோடு புரிந்து கொண்டிருந்தது. நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக அது தயாரித்த ஆயுதங்களின் கூர்முனைகள் இப்பொழுது அதை நோக்கியே திரும்பி விட்டன; அது ஏற்படுத்திய கல்விமுறைகள் எல்லாம் அதன் சொந்த நாகரிகத்துக்கு எதிராகவே கலகம் செய்கின்றன; அது படைத்த கடவுள்கள் எல்லாம் அதை விட்டு விலகிப்போய்விட்டன. குடிமக்கள் சுதந்திரங்கள், முன்னேற்றத்தின் உறுப்புக்கள் என்று சொல்லப்பட்டவை அனைத்தும் அதனுடைய வர்க்க ஆட்சியை அதன் சமூக அஸ்திவாரத்திலும் அதன் அரசியலின் உச்சியிலும் ஒரே சமயத்தில் தாக்கி ஆபத்தான நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன, எனவே அவை ''சோஷலிசத்தன்மை'' கொண்டிருக்கின்றன என்பதை அது புரிந்து கொண்டது. இந்த ஆபத்திலும் ஆக்கிரமிப்பிலும் அது சோஷலிசத்தின் இரகசியத்தைச் சரியாகக் கண்டு கொண்டது. சோஷலிசம் என்று சொல்லப்படுவது தன்னைப் புரிந்து கொண்டதைக் காட்டிலும் அதன் போக்கையும் முக்கியத்துவத்தையும் இது மிகவும் சரியாகப் புரிந்து வைத்திருக்

கிறது. சோஷலிசம் என்று சொல்லப்படுவது மனிதகுலத் தின் துன்பங்களுக்காக உள்ளம் உருக வருந்தினாலும், அல்லது புதுயுகம் தோன்றப் போகிறது உலகம் சகோதர அன்பில் திளைக்கப் போகிறது என்று கிறிஸ்தவ உணர்ச்சி யில் ஆரூடம் கூறினாலும், அல்லது அறிவு, கல்வி, சுதந் திரம் ஆகியவற்றைப் பற்றி மனிதாபிமான பாணியில் பிதற்றினாலும், அல்லது எல்லா வர்க்கங்களுக்கிடையேயும் சமரசத்தை ஏற்படுத்தி நல்வாழ்க்கையை உருவாக்கக்கூடிய அமைப்பு முறையை வறட்டுக் கோட்பாட்டு ரீதியில் தயாரித்து வெளியிட்டாலும், முதலாளிகள் ஏன் ஈவிரக்க மின்றித் தங்கள் இதயங்களைக் கல்லாக்கிக் கொள்கிறார்கள் என்பதை அதனால் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனினும் சோஷலிசத் தன்மையுடையது என்ற பொதுவான கண்டனத் தீர்ப்பு தன்னுடைய சொந்த நாடாளுமன்ற அமைப்புக்கும் தன்னுடைய பொதுவான அரசியல் ஆட்சிக்கும் தர்க்க ரீதியாகப் பொருந்தக் கூடிய முடிவுதான் என்பதை முத லாளித்துவ வர்க்கம் புரிந்து கொள்ளவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கம் முழுமையாக அமைக்கப்படாதிருக் கும் வரையிலும், அது தன்னுடைய கலப்பற்ற அரசியல் தன்மையைப் பெறுதிருக்கும் வரையிலும், அதற்கும் மற்ற வர்க்கங்களுக்குமிடையிலான பகைமை கலப்பற்ற வடிவத்தில் வெளிப்பட முடியாது. எங்காவது அப்படி வெளிப்பட்டா லும் அரசு ஆட்சிக்கு எதிரான ஒவ்வொரு போராட்டத்தை யும் மூலதனத்துக்கு எதிரான போராட்டமாக மாற்றக் கூடிய ஆபத்தான திருப்பத்தை அது அடைய முடியாது. சமூகத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் ''அமைதிக்கு'' ஆபத்து ஏற்படுவதாகக் கருதிய பொழுது, அந்த சமூகத்தின் தலை மீது ''அமைதியின்மையின் ஆட்சி'' நீடிப்பதை அது எப்படி விரும்ப முடியும்? அதன் ஆட்சியை, நாடாளுமன்ற அமைப்பு முறையை, அதன் பேச்சாளர்களில் ஒருவர் ''போராட்டத்தினூடே வாழ்கிறது; போராட்டத்தில் வாழ்கிறது'' என்று வர்ணித்தாரே, அந்த ஆட்சியையே, அது எப்படி விரும்ப முடியும்? நாடாளுமன்ற ஆட்சி முறை விவாதங்களில்தான் வாழ்கிறது. எனவே அது எப்படி

விவாதத்துக்குத் தடைபோட முடியும்? ஒவ்வொரு நலனும், ஒவ்வொரு சமூக ஏற்பாடும் இங்கே பொதுக் கருத்தாக மாற்றப்படுகின்றது; அது கருத்து என்ற அளவிலேதான் விவாதிக்கப்படுகிறது. எனவே எந்த நலனும், ஏற்பாடும் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முடியுமா? நம்பிக்கையின் சின்னமாகத் தன்னைத் திணிக்க முடியுமா? மேடைகளில் பேச்சாளர்கள் நடத்தும் போராட்டம் பத்திரிகைகளிலே கூலி எழுத்தாளர்கள் நடத்தும் போராட்டத்தைத் தூண்டிவிடுகிறது. நாடாளுமன்றம் என்ற விவாத மன்றத்துக்கு வரவேற்புக் கூடங்களிலும் [salons], மதுக்கடைகளிலும் உள்ள விவாத மன்றங்கள் உதவி செய்கின்றன. பொதுமக்களின் கருத்துக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கும் பிரதிநிதிகள், அந்தப் பொதுமக்கள் மனுக்களின் மூலமாகத் தங்கள் உண்மையான கருத்தைத் தெரிவிப்பதற்கு உரிமை கொடுக்கிறார்கள். நாடாளுமன்ற ஆட்சி முறை எல்லாவற்றையும் பெரும்பான்மையோர் முடிவுக்கு விட்டுவிடுகிறது. அப்படியானால் நாடாளுமன்றத்துக்கு வெளியே இருக்கின்ற மாபெரும் பெரும்பான்மையினர் மட்டும் முடிவு செய்ய விரும்பாமலிருப்பார்களா? அரசின் உச்சியில் நின்று கொண்டு பிடிலே வாசித்தால் கீழே இருப்பவர்கள் நடனமாடுவதைத் தவிர வேறு என்ன எதிர் பார்க்க முடியும்?

முன்பு ''மிதவாதம்'' என்று முதலாளித்துவ வர்க்கம் உயர்த்திப் பேசியதை இப்பொழுது ''சோஷலிசம்'' என்று கண்டனம் செய்கிற பொழுது அது சில விஷயங்களைத் தானாகவே ஒத்துக் கொள்கிறது. தன்னுடைய சொந்த ஆட்சியின் அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று அதனுடைய நலன்கள் வற்புறுத்துகின்றன; தேசத்தில் அமைதியை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமானால், முதலில் அதனுடைய முதலாளித்துவ நாடாளுமன்றத்தைச் சாந்தப் படுத்த வேண்டும்; அதனுடைய சமூக ஆட்சிக்குச் சிதைவு ஏற்படாதபடி பாதுகாக்க வேண்டுமென்றால் அதனுடைய அரசியல் ஆட்சி உடைக்கப்பட வேண்டும்; முதலாளிகளில் தனிப்பட்டவர்கள் மற்ற வர்க்கங்களைத் தொடர்ந்து சுரண்டு

வதும், சொத்து, குடும்பம், மதம், ஒழுங்குமுறை ஆகிய வற்றை யாரும் குறுக்கிடாதபடி அனுபவிப்பதும் மற்ற வர்க்கங்களைப் போலவே அதுவும் அரசியலில் ஒன்றுமில் லாத நிலைமைக்குத் தள்ளப்படட்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் சாத்தியம்; தன்னுடைய பணமூட்டையைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அது தன்னுடைய மகுடத்தை இழக்க வேண்டும்; அதைப் பாதுகாக்கின்ற வாள் டேமாக்ளி சின் வாளைப்* போல அதன் தலைக்கு மேலாகவே கட்டித் தொங்கவிடப்பட வேண்டும் என்பவை அந்த விஷயங்களா கும்.

தேசிய சபை முதலாளிகளின் பொது நலன்களைப் பொறுத்தவரை எந்த முயற்சியும் செய்யவில்லை. உதாரண மாக பாரிசிலிருந்து அவினியோன் முடிய இரயில் பாதை போடுவதைப் பற்றிய விவாதம் 1850ம் வருடத்திய குளிர் காலத்தின் போது ஆரம்பமாயிற்று. ஆனால் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் இரண்டாந் தேதி கூட அந்த விவாதம் முடிவடையவில்லை. அது அடக்குகிறது அல்லது பிற்போக்குத் தனமான பாதையைப் பின்பற்றுகிறது; இல்லையென்றால் குணப்படுத்த முடியாத மலட்டுத்தனம் அதைப் பீடித்து விடுகிறது.

ஒழுங்குமுறைக் கட்சியின் உணர்ச்சிக்கு ஏற்ற சட்டங் களைத் தயாரிப்பதில் போனபார்ட் மந்திரிசபை ஓரளவு முன்முயற்சி எடுத்தது. அந்தச் சட்டங்களைக் கொடூரமாக நிறைவேற்றுவதிலும் அமுல் நடத்துவதிலும் அந்தக் கட்சியையும் ஓரளவுக்கு மிஞ்சிவிட்டது. அதே சமயத்தில் போனபார்ட், தன்னுடைய சிறுபிள்ளைத்தனமான ஆலோ சனைகளின் மூலமாக செல்வாக்குப் பெறுவதற்கும் தேசிய சபைக்குத் தன்னுடைய எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கும் முயற்சி செய்தார். தன்னிடம் பல அரிய திட்டங்கள் இருப் பதாகவும், சில நிலைமைகளினால் அந்தப் பொக்கிஷத்தை பிரெஞ்சு மக்களுக்கு வாரிவழங்கத் தற்காலிகமாக முடிய

* ஒரு விருந்தின் போது டேமாக்ளிசின் தலைக்கு மேலே மயிரிழையினால் கட்டப்பட்ட வாள் தொங்கிக் கொண் டிருந்ததாகக் கிரேக்கப் பழங்கதை கூறுகிறது.—ப-ர்.

வில்லையென்றும் சூசகமாகத் தெரிவித்தார். இராணுவத்தில் கீழ்நிலை அதிகாரிகளின் ஊதியத்தில் நாளொன்றுக்கு நான்கு ஸூக்கள் அதிகரிப்பது, தொழிலாளர்களுக்குச் சொந்த கௌரவத்தின் அடிப்படையில் கடன் கொடுக்கும் வங்கியை ஏற்படுத்துவது போன்ற ஆலோசனைகளைத் தெரிவித்தார். கேட்டவுடன் பணம் கிடைக்கும்: அதிலும் நன்கொடையாகக் கிடைக்கும். இப்படிப்பட்ட ஆலோசனைகளைக் கொண்டு மக்களைக் கவர்ந்துவிடலாம் என்று போனபார்ட் நம்பினார். நன்கொடைகளும் கடன்களும்—உயர்ந்த மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் லும்பன் பாட்டாளி வர்க்கத்தினரின் நிதி இயல் இதோடு நின்றுவிடுகிறது. இவையே போனபார்ட்டுக்குத் தெரிந்த விசைகள். இவற்றைத்தான் அவரால் இயக்க முடியும். பொதுமக்களின் முட்டாள்தனத்தை ஆதாரமாகக் கொண்டு எந்த அபேட்சகரும் இவ்வளவு முட்டாள்தனமாகச் சூதாடவில்லை.

தேசிய சபையின் செல்வாக்கைக் குறைத்துத் தன்னுடைய செல்வாக்கை அதிகப்படுத்துவதற்காகச் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி போனபார்ட் செய்த முயற்சிகளைக் கண்டு தேசிய சபை பல தடவைகளில் ஆத்திரப்பட்டது. அவருடைய கடன்கள் அவரை உந்தித் தள்ளின. அவருக்கு நிலையான புகழ் எதுவும் இல்லை. மேலும் இந்த சாகஸக்காரன் வெறித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய ஆபத்தும் அதிகரித்துக் கொண்டிருந்தது. ஒழுங்குமுறைக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவு மிகவும் ஆபத்தான நிலையை அடைந்த பொழுது எதிர்பாராத ஒரு சம்பவம் ஒழுங்குமுறைக் கட்சியின் கரங்களில் அவர் கழிவிரக்கத்தோடு விழும்படிச் செய்தது. 1850ம் வருடம் மார்ச் மாதம் 10ந் தேதி நடைபெற்ற இடைத் தேர்தல்களை நாம் குறிப்பிடுகிறோம். ஜூன் மாதம் 13ந் தேதிக்குப் பிறகு உறுப்பினர்கள் சிறையிலடைக்கப்பட்டதால் அல்லது நாடுகடத்தப்பட்டதால் ஏற்பட்ட காலி இடங்களைப் பூர்த்தி செய்வதற்காக இடைத்தேர்தல் நடைபெற்றது. பாரிஸ் நகரம் சமூக-ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுத்தது. அதிலும் 1848ம் வருடம்

ஜூன் மாதக் கிளர்ச்சியில் பங்கு கொண்ட டெபிலோத் என்பவருக்குத் தன்னுடைய வாக்குகளை அள்ளித் தந்தது. பாரிஸ் நகரத்தின் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் பாட்டாளி வர்க்கத்தோடு ஒன்றுசேர்ந்து 1849ம் வருடம் ஜூன் மாதம் 13ந் தேதியன்று தங்களுக்கு ஏற்பட்ட தோல்விக்கு இவ்விதம் பழி வாங்கிக் கொண்டார்கள். ஆபத்தான நேரத்தில் அவர்கள் போர்க் களத்திலிருந்தே மறைந்து போய்விட்டார்கள் போலத் தோன்றியது. ஆனால் இன்னும் சாதகமான சந்தர்ப்பத்தில் அதிகமான போரிடும் சக்திகளைத் திரட்டிக் கொண்டு, இன்னும் துணிச்சலான போர் முழக்கத்தோடு மறுபடியும் முன்னணிக்கு வந்துவிட்டார்கள். இந்தத் தேர்தல் வெற்றியிலிருந்த ஆபத்தை ஓர் அம்சம் மிகைப்படுத்திக் காட்டியது. பாரிஸ் நகரத்தில் இராணுவத்தினர் போனபார்ட் மந்திரி சபையில் அங்கம் வகித்த லயிட் ரன்பவருக்கு வாக்களிக்கவில்லை. அவரை எதிர்த்து நின்ற, ஜூன் மாதக் கலகக்காரருக்கு வாக்களித்திருந்தார்கள். பிராந்தியங்களிலும் இராணுவம் மலைக் கட்சியினருக்கே பெரும்பாலும் வாக்களித்தது. அந்தக் கட்சியினர் இங்கேயும், பாரிஸ் நகரத்தைப் போன்ற அளவுக்குத் தீர்மானமாக இல்லாவிட்டாலும், தங்கள் எதிரிகளைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமான ஆதரவு உண்டு என்பதைக் காட்டினர்கள்.

போனபார்ட் மறுபடியும் புரட்சி தன்னைத் திடீரென்று எதிர்ப்பதைக் கண்டார். 1849ம் வருடம் ஜனவரி மாதம் 29ந் தேதியைப் போல, 1849ம் வருடம் ஜூன் மாதம் 13ந் தேதியைப் போல, 1850ம் வருடம் மார்ச் மாதம் 10ந் தேதியன்றும் அவர் ஒழுங்குமுறைக் கட்சிக்குப் பின்னல் மறைந்து கொண்டார். அவர் குனிந்து வணக்கம் செலுத்தினர். கோழைத்தனமாக மன்னிப்புக் கோரினர். நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையின் உத்தரவுக்குப் பணிந்து அது விரும்பிய எந்த மந்திரி சபையையும் நியமிப்பதாகத் தெரிவித்தார். ஆர்லேயானிஸ்டுகள், முறைமைவாதிகளின் தலைவர்களான தியேர்களையும் பெரியேக்களையும் புரொலிகளையும் மாலேக்களையும், சுருக்கமாகச் சொல்வதென்றால் பூர்கிராவ்கள்[50] என்று சொல்லப்

பட்டவர்களை, அரசை வழிநடத்தும் பொறுப்பைத் தாங்களே எடுத்துக் கொள்ளுமாறு கெஞ்சினர். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் மறுபடியும் ஏற்படப் போவதில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தன்னால் இயலாதென்பதை ஒழுங்குமுறைக் கட்சி நிரூபித்தது. போனபார்ட் அதிகாரத்தைத் தூக்கிக் கொடுத்த பொழுது அதைத் துணிச்சலோடு கைப்பற்றத் தெரியாததோடு, நவம்பர் மாதம் முதல் தேதியன்று அவரால் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மந்திரிசபையை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதற்கும் தவறியது. அவருக்கு மன்னிப்பளிப்பதாகக் கூறியதன் மூலம் அவரை அவமானப்படுத்தியதும் ட ஆப்பூல் மந்திரி சபையில் பரோஷ் என்பவரைச் சேர்த்துவிட்டதும் அதற்குப் போதுமானதாகத் தோன்றியது. பரோஷ் என்ற இந்த நபர் அரசாங்க வழக்குரைஞர் என்ற முறையில் புர்ஷே என்ற இடத்திலுள்ள உயர் நீதிமன்றத்தில் முதல் தடவை மே மாதம் 15ந் தேதிய புரட்சியாளர்களை எதிர்த்தும், இரண்டாம் தடவை ஜூன் மாதம் 13ந் தேதிய ஜனநாயகவாதிகளை எதிர்த்தும்—இரண்டு தடவைகளிலும் அவர்கள் தேசிய சபையை ஒழிக்க முயற்சி செய்தார்கள்—புயலின் சீற்றத்தோடு வாதாடியவர். பிற்காலத்தில் தேசிய சபையின் கண்ணியத்தைக் குறைத்து அதைச் சிறுமைப்படுத்தியதில் அவருடைய பங்கு மிகவும் அதிகம். போனபார்ட்டின் மற்ற அமைச்சர்கள் யாரும் அந்த அளவுக்குப் போகவில்லை. 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதிக்குப் பிறகு செனெட் சபையின் உதவித் தலைவராக, வசதியான பதவியில் மிகவும் அதிகமான சம்பளத்தில் நாம் அவரை மறுபடியும் சந்திக்கலாம். அவர் புரட்சிக்காரர்களின் உணவுத் தட்டில் காறி உமிழ்ந்தார்; போனபார்ட் இதைச் சாப்பிட வேண்டும்.

சமூக-ஜனநாயகக் கட்சி மறுபடியும் தன்னுடைய வெற்றியை சந்தேகத்துக்குள்ளாக்குவதற்கும் அதன் கூர் முனையை மழுங்க வைப்பதற்கும் சாக்குகளைத் தேடுவதற்குத் தன்னாலான முயற்சிகளைச் செய்வதில் மட்டுமே ஈடுபட்டது

மாதிரித் தோன்றுகிறது. பாரிசிலிருந்து புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரான விடேல் அதே சமயத்தில் வேறொரு தொகுதியான ஸ்ட்ராஸ்பர்கிலிருந் தும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஸ்ட்ராஸ்பர்கில் தேர்ந் தெடுக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டு பாரிஸ் நகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டதை அவர் ராஜினமா செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார். எனவே தேர்தலில் கிடைத்த வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டு நாடாளுமன்றத்தில் தன்னெடு போராடுமாறு ஒழுங்குமுறைக் கட்சியை நிர்ப் பந்திப்பதற்குப் பதிலாக, அதாவது பொதுமக்களின் ஆதர வும் உற்சாகமும் உயர்ந்த மட்டத்திலிருக்கும் பொழுது இராணுவத்திலும் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் பொழுது எதிரியைத் தன்னெடு சண்டை போடுமாறு நிர்ப் பந்திப்பதற்குப் பதிலாக, ஜனநாயகக் கட்சி மார்ச், ஏப்ரல் மாதங்களின் போது ஒரு புதிய தேர்தல் இயக்கத்தை நடத்தி பாரிஸ் நகரத்தைக் கலைப்படையச் செய்தது; திரும்பத் திரும்ப நடைபெறுகின்ற இந்தத் தற்காலிகமான தேர்தல் விளையாட்டில் பொது மக்களிடம் ஏற்பட்ட எழுச்சியும் ஆவேசமும் கலைப்படைந்து போகுமாறு செய்தது; புரட்சி கரமான ஆற்றல் அரசியலமைப்புச்சட்ட மாதிரியான வெற்றிகளில் திருப்தியடைந்து விடுமாறும் அற்பத்தனமான சூழ்ச்சிகளில், ஆர்ப்பாட்டமான பேச்சுக்களில், போலித் தனமான இயக்கங்களில் தன்னைச் சீர்குலைத்துக் கொள்ளு மாறும் செய்தது; முதலாளித்துவ வர்க்கம் அணி திரள் வதற்கும் தன்னுடைய தயாரிப்புகளைச் செய்வதற்கும் அனு மதித்தது; கடைசியாக ஏப்ரல் மாத இடைத்தேர்தலில் எஜேன் சூ வெற்றி பெற்றது மார்ச் மாதத் தேர்தலின் முக்கியத்துவத்தைக் குறைத்து அதற்கு உணர்ச்சிப் பசப் பான உரை எழுதியது. சுருக்கமாகச் சொல்வதென்றால் மார்ச் மாதம் 10ந் தேதியை ஏப்ரல் முட்டாளாக்கியது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்தவர் கள் தங்களுடைய எதிரிகளின் பலவீனத்தைப் புரிந்து கொண் டார்கள். அவர்களுடைய பதினேழு புர்கிராவ்களும்— போனபார்ட் தாக்குதலை நடத்துவதற்கும் பொறுப்பேற்றுக்

கொள்ளவும் இவர்களே ஒதுக்கியிருந்தார்—ஒரு புதிய தேர்தல் சட்டத்தைத் தயாரித்தார்கள். அதை நாடாளு மன்றத்தில் கொண்டுவரும் பொறுப்பு பொஷே என்பவருக்குத் தரப்பட்டது. அவரும் இந்த கௌரவத்தைத் தனக்குத் தருமாறு விரும்பிக் கேட்டுக் கொண்டார். பொதுவான வாக்குரிமை என்ற சட்டத்தை ரத்துச் செய்கின்ற இந்த மசோதாவை அவர் மே மாதம் 8ந் தேதியன்று பிரேரே பித்தார். அதன்படி தேர்தல் நடைபெறும் வட்டாரத்தில் வாக்காளர் மூன்று வருடங்கள் குடியிருந்திருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. கடைசியாக இத்தகைய குடியிருப்புச் சான்றிதழைத் தங்களுடைய முதலாளிகளிட மிருந்து தொழிலாளர்கள் பெற வேண்டுமென்றும் விதிக்கப் பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடைபெற்ற தேர்தல் போட்டியில் ஜனநாயகவாதிகள் புரட்சிகரமான பாணியில் ஆவேசமாகப் பேசிக் கிளர்ச்சி செய்தார்கள். இப்பொழுது அந்தத் தேர்தல் வெற்றிகளின் தீவிரமான தன்மையை நிரூபிப்பதற்கு ஆயுதங்களை ஏந்த வேண்டிய நேரத்தில் அவர்கள் அரசியலமைப்புச் சட்டப் பாணியில் ஒழுங்கு, மேன்மையான அமைதி (calme majestueux), சட்ட பூர்வமான நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பிரச்சாரம் செய்தார்கள். அதாவது எதிர்ப்புரட்சி தான் சொன்னதே சட்டம் என்று விதித்த நேரத்தில் கண்ணை மூடிக் கொண்டு அதற்குக் கீழ்ப் படிய வேண்டும் என்றூர்கள். விவாதத்தின் போது ஒழுங்கு முறைக் கட்சியின் புரட்சிகரமான உணர்ச்சிக்கு எதிராக, மலைக் கட்சி சட்ட பூர்வமான வகையில் மட்டுமே நடக்கின்ற பிலிஸ்டைனின் விருப்பு வெறுப்பற்ற போக்கை வலியுறுத்தி அந்தக் கட்சியை அவமானப்படுத்தியது; ஒழுங்குமுறைக் கட்சி புரட்சிகரமான வழியில் போய்க் கொண்டிருக் கிறது என்ற பயன் நிறைந்த குற்றச்சாட்டைச் சொல்லி, அந்தக் கட்சியைக் கீழே வீழ்த்தியது. புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்கூடத் தங்களுடைய கண்ணி யத்தையும் கவனமாகச் செயலாற்றும் தன்மையையும் எடுத்துக் கூறி தங்களை அராஜகவாதிகள் என்று கண்டிப்

பதும் தங்களுடைய தேர்தல் வெற்றி புரட்சியின் வெற்றி என்று முடிவு செய்வதும் எவ்வளவு தப்பான அபிப்பிராயங்கள் என்பதை மிகவும் சிரமப்பட்டு நிரூபித்துக் கொண்டிருந்தார்கள். மே மாதம் 31ந் தேதியன்று புதிய தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மலைக் கட்சி, தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் கடிதத்தை ஜனாதிபதியின் சட்டைப் பையில் கள்ளத்தனமாக வைத்ததோடு திருப்தியடைந்து விட்டது. தேர்தல் சட்டத்தைத் தொடர்ந்து நிறை வேற்றப்பட்ட பத்திரிகைச் சட்டத்தின் மூலம் புரட்சிகரமான பத்திரிகைகள் பூரணமாக நசுக்கப்பட்டன.[51] ஒரு வேளை அந்தப் பத்திரிகைகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது பொருத்தமானதே. இந்தப் பெருவெள்ளத்துக்குப் பிறகு *National*, *La Presse* என்ற இரண்டு முதலாளித்துவப் பத்திரிகைகள்[52] மட்டுமே புரட்சியின் முன்னணிக் காவல் தளங்களாக எஞ்சியிருந்தன.

மார்ச், ஏப்ரல் மாதங்களின் போது, பாரிஸ் நகர மக்களை ஒரு போலிச் சண்டையில் ஈடுபடுத்துவதற்கு ஜனநாயகத் தலைவர்கள் எல்லாவற்றையும் செய்தார்கள் என்பதையும், அது போலவே மே மாதம் 8ந் தேதிக்குப் பிறகு அவர்களை உண்மையான சண்டையில் ஈடுபடாமல் தடுப்பதற்கும் எல்லாவற்றையும் செய்தார்கள் என்பதையும் பார்த்தோம். இது தவிர, 1850ம் வருடத்தில் தொழில் வளமும் வர்த்தகப் பெருக்கமும் மிகவும் சிறப்பான நிலையில் இருந்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு முழு வேலை கிடைத்து வந்தது. ஆனால் 1850ம் வருடம் மே மாதம் 31ந் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தேர்தல் சட்டத்தின்படி அரசியல் ஆட்சியில் பங்கெடுப்பதிலிருந்து அது முற்றிலும் ஒதுக்கி வைக்கப்பட்டது. அந்தப் போராட்டக் களத்திலிருந்தும் கூட அது துண்டிக்கப்பட்டுவிட்டது. பிப்ரவரி புரட்சிக்கு முன்பு தொழிலாளர்கள் பறையர்களைப் போல ஒதுக்கி வைக்கப்பட்ட பழைய நிலைமையை இப்பொழுது மறுபடியும் ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட நிலைமையில் ஜனநாயகவாதிகள் தங்களுக்குத் தலைமை தாங்கு

வதை அனுமதித்தும், தங்களுக்குக் குறைந்த நேரத்துக்குக் கிடைத்த வசதி, சுகபோகங்களுக்காகத் தங்களுடைய வர்க்கத்தின் புரட்சிகரமான நலன்களை மறந்தும் தாங்கள் வெற்றி பெறும் சக்தியாக இருக்கும் கௌரவத்தை அவர்கள் கைவிட்டு, விதியின் முன்னால் சரணடைந்தனர். 1848ம் வருடத்தில் ஜூன் மாதத்தில் ஏற்பட்ட தோல்வி தங்களைப் போராட்டத்திலிருந்து பல வருடங்களுக்கு ஒதுக்கிவிட்டதோடு இனி நிகழ் காலத்தில் வரலாற்றின் நிகழ்வுப்போக்கு தங்கள் தலைகளுக்கு மேலே தொடர்ந்து நடைபெற வேண்டியிருக்கும் என்பதை நிரூபித்தார்கள். ''பொதுவான வாக்குரிமையை மட்டும் அவர்கள் தொட்டால் பிறகு நாம் யார் என்பதைக் காட்டுவோம்!'' என்று ஜூன் மாதம் 13ந் தேதியன்று எச்சரித்த குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதத்தைப் பொறுத்தவரை, எதிர்ப்புரட்சி தங்களுக்குக் கொடுத்த அடி உண்மையான அடியல்ல, மே மாதம் 31ந் தேதியன்று நிறைவேற்றப்பட்ட சட்டம் உண்மையான சட்டமல்ல என்று சொல்லி ஆறுதலடைந்தது. 1852ம் வருடம் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்று, வாக்குச் சாவடிக்கு முன்பாக ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனும் ஒரு கையில் வாக்குச் சீட்டு மறு கையில் வாளோடு நிற்கப் போகிறான் என்று ஆரூடம் சொல்லிக் கொண்டு திருப்தியடைந்தது. கடைசியாக, 1849ம் வருடம் மே மாதம் 28ந் தேதி நடைபெற்ற தேர்தலுக்காக இராணுவத்திற்குத் தண்டனையளிக்கப்பட்டதைப் போல, 1850ம் வருடம் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற தேர்தல்களுக்காக இது மேலதிகாரிகளால் தண்டிக்கப்பட்டது. ஆனால் இந்தத் தடவை ''புரட்சி மூன்றுவது தடவையாக எங்களை ஏமாற்ற முடியாது'' என்று இராணுவம் திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

1850ம் வருடம் மே மாதம் 31ந் தேதியன்று இயற்றப்பட்ட சட்டம் முதலாளித்துவ வர்க்கத்தின் திடீர்ப் புரட்சியாகும். இது வரை புரட்சியை எதிர்த்து அவர்கள் பெற்ற வெற்றிகள் அனைத்துமே தற்காலிகத் தன்மை உடையவையே. அப்போதிருந்த தேசிய சபை அரங்கத்திலிருந்து

பின்னல் போனவுடன் அந்த வெற்றிகளுக்கு ஆபத்தேற்பட்டு விடும். ஒரு புதிய பொதுத் தேர்தல் எத்தகைய ஆபத்தை ஏற்படுத்துமோ என்று அவர்கள் கவலைப்பட்டார்கள். முதலாளித்துவ வர்க்கத்தின் உண்மையான ஆதிக்கம் வளர்ச்சியடைகிற பொழுது, அதே அளவுக்குப் பொது மக்கள் மீது அதன் தார்மிக செல்வாக்கு குறைந்து போய்விடும் என்பதை 1848க்கு பிறகு நடைபெற்ற தேர்தல்கள் மறுக்க முடியாதபடி நிரூபித்திருக்கின்றன. மார்ச் மாதம் 10ந் தேதியன்று பொதுவான வாக்குரிமை முதலாளித்துவ வர்க்க ஆதிக்கத்தை நேரடியாக எதிர்த்தது. இதற்குப் பதில் என்ற முறையில் பொதுவான வாக்குரிமையை முதலாளித்துவ வர்க்கம் ஒழித்தது. எனவே மே மாதம் 31ந் தேதிய சட்டம் வர்க்கப் போராட்டத்தின் தேவைகளில் ஒன்றாகும். ஆனால், குடியரசின் ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளர் குறைந்தபட்சம் இருபது லட்சம் வாக்குகள் பெற்றால்தான் அவருடைய தேர்தல் செல்லும் என்று அரசியலமைப்புச் சட்டம் விதித்திருக்கிறது. தேர்தலில் பங்கு கொள்கின்ற எந்த வேட்பாளரும் இந்தக் குறைந்தபட்ச எண்ணிக்கையைப் பெறவில்லை என்றால் அதிகமான வாக்குகளைப் பெற்ற முதல் ஐந்து வேட்பாளர்களில் ஒருவரை ஜனாதிபதியாக தேசிய சபை தேர்ந்தெடுக்கும். அரசியல் நிர்ணய சபை இந்தச் சட்டத்தைத் தயாரித்த பொழுது ஒரு கோடி வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எனவே வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதியினரின் வாக்குகளைப் பெற்றால்தான் ஜனாதிபதி தேர்தல் செல்லத்தக்கதாகும் என்று விதிக்கப்பட்டிருந்தது. மே மாதம் 31ந் தேதி இயற்றப்பட்ட சட்டத்தின் விளைவாக குறைந்தபட்சம் முப்பது லட்சம் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர்; வாக்களிப்பதற்குத் தகுதி உடையவர்களின் எண்ணிக்கை எழுபது லட்சமாகக் குறைந்துவிட்டது. எனினும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் குறைந்தபட்சம் இருபது லட்சம் வாக்குகள் பெற்றிருக்க வேண்டும் என்ற விதியும் நீடித்தது. முன்பு சட்ட பூர்வமாகத் தேவைப்படுகின்ற குறைந்தபட்ச வாக்குகள் வாக்காளர் எண்ணிக்கையில்

ஐந்தில் ஒரு பங்கு என்றுல், அது இப்பொழுது சுமாராக மூன்றில் ஒரு பங்கு என மாறிவிட்டது. அதாவது ஜனநாயகப் பதியைத் தேர்ந்தெடுப்பதை மக்களிடமிருந்து எடுத்துவிட்டு கள்ளத்தனமாக தேசிய சபையிடம் ஒப்படைக்க அது எல்லாவற்றையும் செய்தது. எனவே மே மாதம் 31ந் தேதிய தேர்தல் சட்டத்தின் மூலம் ஒழுங்குமுறைக் கட்சி தேசிய சபை தேர்தலையும் ஜனநாயகத் தேர்தலையும் சமூகத்தின் பழமைவாதிகளான இந்தப் பகுதியினரிடம் ஒப்படைத்து விட்டுத் தன்னுடைய ஆட்சியை இரு மடங்கு உறுதியாக்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

V

புரட்சிகரமான நெருக்கடி சமாளிக்கப்பட்டு பொதுவான வாக்குரிமை ஒழிக்கப்பட்டு விட்டதும் தேசிய சபைக்கும் போனபார்ட்டுக்குமிடையே மீண்டும் போராட்டம் வெடித்தது.

அரசியலமைப்புச் சட்டம் போனபார்ட்டின் ஊதியத்தை ஆறு லட்சம் பிராங்குகள் என்று முடிவு செய்திருந்தது. அவர் பதவியிலமர்ந்த ஆறு மாதங்களுக்குள் இந்தத் தொகையை இரண்டு மடங்காகப் பெருக்குவதில் வெற்றியடைந்தார். போனபார்ட்டின் பிரதிநிதித்துவச் செலவுகளுக்கு என்பதாகச் சொல்லி வருடத்துக்கு ஆறு லட்சம் பிராங்குகளை ஒடிலோன் பரோ தேசிய சபையைக் கசக்கிப் பிழிந்து வாங்கிக் கொடுத்தார். ஜூன் மாதம் 13ந் தேதிக்குப் பிறகு போனபார்ட் இதே போன்ற வேண்டுகோள்களை அனுப்பினர். ஆனல் இந்தத் தடவை ஒடிலோன் பரோவிடமிருந்து மறு மொழி இல்லை. மே மாதம் 31ந் தேதிக்குப் பிறகு ஏற்பட்ட சாதகமான சூழ்நிலையை உடனே பயன்படுத்திக் கொண்டு தனக்கு முப்பது லட்சம் பிராங்குகள் ஊதியத்துக்கு தேசிய சபையின் அங்கீகாரத்தைக் கோரும் மசோதாவைத் தன்னுடைய அமைச்சர்கள் கொண்டு வருமாறு செய்தார். நெடுங்காலமாக அவர் நடத்திய சாகஸங்கள் நிறைந்த ஊர்சுற்றி வாழ்க்கையின் விளைவாக,

முதலாளித்துவ வர்க்கத்திடம் எப்பொழுது பணத்தைக் கறக்க முடியும், அவர்களுடைய பலவீனமான நேரம் எது என்பதை உணரக்கூடிய, நன்கு வளர்ச்சியடைந்த உணர்வுப் புலன்கள் அவரிடம் ஏற்பட்டிருந்தன. அவர் பயமுறுத்திப் பணம் பறிப்பதைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தார். தேசிய சபை, அவருடைய உதவியோடும் அனுமதியோடும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு துரோகம் செய்துவிட்டது. எனக்கு வருடத்துக்கு முப்பது லட்சம் கொடுத்தால் மௌன மாக இருப்பேன்; இல்லாவிட்டால் உங்கள் குற்றத்தை மக்கள் தீர்ப்புக்குக் கொண்டுவருவேன் என்று பயமுறுத் தினர். முப்பது லட்சம் பிரெஞ்சுக்காரர்களின் வாக்குரி மையை அது அபகரித்துவிட்டது. எனவே வாக்குரிமையை இழந்த ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனுக்கும் ஒரு பிராங்க் வீதம், அதாவது முப்பது இலட்சம் பிராங்குகள் எனக்குத் தர வேண்டுமென்று கோரினர். அறுபது லட்சம் வாக்காளர் கள் எனக்கு வாக்களித்தனர். அதில் என்னை ஏமாற்றி நீங்கள் எவ்வளவு வாக்குகளை ரத்துச் செய்து விட்டீர்களோ அந்த எண்ணிக்கைக்கு எனக்கு நஷ்ட ஈடு தர வேண்டும் என்று கோரினர். தேசிய சபையின் கமிஷன் இந்த விடாக் கண்டனின் கோரிக்கையை மறுத்தது. போனபார்ட்டுக்கு ஆதரவு தரும் பத்திரிகைகள் பயமுறுத்தின. தேசிய சபை நாட்டின் வெகுஜனங்களோடு அடிப்படையாகவும் திட்டவட்டமாகவும் முறித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் குடியரசின் ஜனாதிபதியோடும் முறித்துக் கொள்வது சரியா னதா? தேசிய சபை வருடாந்தர சம்பள மசோதாவை நிராகரித்ததென்னவோ உண்மைதான். ஆனால் அவருக்கு உபரிப்படியாக 21,60,000 பிராங்குகள் ஒரே சமயத்தில் அனுமதித்தது. அதன் மூலம் பணத்தைக் கொடுத்ததற்கும் தன்னுடைய தயக்கத்தின் மூலம் விருப்பமில்லாமல்தான் கொடுத்திருக்கிறது என்ற இரண்டு பலவீனங்களுக்கும் அது ஆளாயிற்று. எந்தக் காரியத்துக்காக போனபார்ட்டுக்குப் பணம் தேவைப்பட்டது என்பதைப் பின்னர் கவனிப்போம். பொதுவான வாக்குரிமையை ஒழித்ததை நேரடியாகத் தொடர்ந்து ஏற்பட்ட இந்த வருந்தத்தக்க பின்விளை

வுக்குப் பிறகு—போனபார்ட் மார்ச், ஏப்ரல் மாதங்களின் போது தான் கடைப்பிடித்த அடக்கமான போக்கைக் கைவிட்டு ஆட்சியதிகாரத்தை அபகரிக்கும் தன்மையுடைய நாடாளுமன்றத்துக்குத் துணிச்சலாகச் சவால் விடுகிறார்—தேசிய சபை ஆகஸ்ட் மாதம் 11ந் தேதி முதல் நவம்பர் மாதம் 11ந் தேதி முடிய, மூன்று மாதங்களுக்குத் தள்ளிப் போடப்படுகிறது. தனக்குப் பதிலாக இருபத்தெட்டு உறுப்பினர்களடங்கிய நிரந்தரக் கமிஷனை நியமித்தது. இந்தக் கமிஷனில் போனபார்ட்டின் ஆதரவாளர்கள் ஒருவரும் இடம் பெறவில்லை; ஆனால் மிதவாதக் குடியரசுவாதிகள் சிலர் இடம் பெற்றிருந்தார்கள். 1849ம் வருடத்தில் ஏற்பட்ட நிரந்தரக் கமிஷனில் ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் போனபார்ட் ஆதரவாளர்களும் மட்டுமே இடம் பெற்றிருந்தார்கள். ஆனால் அந்த நேரத்தில் புரட்சியை நான் நிரந்தரமாக எதிர்ப்பேன் என்று ஒழுங்குமுறைக் கட்சி அறிவித்திருந்தது. இந்தத் தடவை ஜனாதிபதியை நான் நிரந்தரமாக எதிர்ப்பேன என்று நாடாளுமன்றக் குடியரசு அறிவித்தது. மே மாதம் 31ந் தேதிச் சட்டத்துக்குப் பிறகு ஒழுங்குமுறைக் கட்சியின் ஒரே எதிரி ஜனாதிபதியே.

1850ம் வருடம் நவம்பர் மாதத்தில் தேசிய சபை மறுபடியும் கூடிய பொழுது, இதுவரை ஜனாதிபதியோடு அது சில்லறைச் சச்சரவுகளில் ஈடுபட்டதற்குப் பதிலாக, இரண்டு சக்திகளுக்கும் இடையே ஈவிரக்கமற்ற வகையில் ஒரு மாபெரும் போராட்டம், ஜீவமரணப் போராட்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று தோன்றியது.

1849ம் வருடத்தைப் போல இப்பொழுதும், நாடாளுமன்ற ஓய்வுக் காலத்தின் போது, ஒழுங்குமுறைக் கட்சி தனித்தனி பிரிவுகளாகப் பிரிந்துவிட்டது. அவை ஒவ்வொன்றும் மறுவருகைக்காகத் தத்தம் சூழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. லுயீ பிலிப்பின் மரணம் இத்தகைய சூழ்ச்சிகளுக்குப் புதிய பலத்தைக் கொடுத்தது. முறைமை வாதிகள் ஆதரித்த மன்னரான ஐந்தாம் ஹென்ரி பாரிஸ் நகரத்தில் ஒரு மந்திரி சபையைக் கூட ஏற்படுத்தியிருந்தார்.

அந்த மந்திரிசபையில் தேசிய சபையின் நிரந்தரக் கமிஷன் உறுப்பினர்கள் சிலரும் இடம் பெற்றிருந்தார்கள். எனவே போனபார்ட் பிரான்சின் பிராந்தியங்களில் சுற்றுப்பயணம் போக, தான் எந்த நகரத்துக்கு மனமுவந்து வருகை தருகிறாரோ அந்த நகரத்தின் மனோபாவத்துக்குத் தகுந்தாற் போல தன்னை மன்னராக அறிவிப்பதற்குச் செய்யப் போகிற முயற்சிகளைச் சில சமயங்களில் இரகசியமாகவும் வேறு சமயங்களில் பகிரங்கமாகவும் தெரியப்படுத்தி, தனக்கு ஆதரவு திரட்டும் உரிமையைக் கொண்டிருந்தார். இந்தச் சுற்றுப்பயண ஊர்வலங்களை அதிகாரபூர்வமான பெரும் பத்திரிகையான *Moniteur*, போனப்பார்ட்டின் தனிப்பட்ட, சிறிய தூதன்கள் ஆகியவை வெற்றிப் பயணங்கள் என்று பாராட்டியது இயற்கையே. இந்தச் சுற்றுப்பயணங்களின் போது போனபார்ட்டோடு டிசம்பர் 10ந் தேதி சங்கத் தோடு சம்பந்தமுள்ள நபர்கள் எப்பொழுதும் உடன் போனார்கள். இந்த சங்கம் 1849ம் வருடத்தில் ஆரம்பிக்கப் பட்டது. ஒரு உதவிச் சங்கம் அமைக்கப் போவதாகச் சொல்லி, பாரிஸ் நகரத்தின் லும்பன் பாட்டாளி வர்க்கத் தினரை இரகசியக் குழுக்களாகத் திரட்டியிருந்தார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு போனபார்ட் கையாள் தலைமை தாங்க, எல்லாக் குழுக்களுக்கும் மொத்தமாக போனபார்ட் ஆதரவாளரான ஒரு ஜெனரல் தலைமை வகித்தார். சந்தேக மான பிறப்போடு சந்தேகமான வழிகளில் வாழ்க்கை நடத்திவந்த குடிகாரர்களும், உல்லாசங்களில் ஈடுபட்டு நொடித்துப் போன முதலாளித்துவ வர்க்கக் கொழுந்து களும், காலிகளும், வேலை நீக்கம் செய்யப்பட்ட படைவீரர் களும், விடுதலையான சிறைப் பறவைகளும் கப்பலில் வேலை செய்யுமாறு தண்டிக்கப்பட்டுத் தப்பி வந்த குற்றவாளி களும், போக்கிரிகளும், போலிப் பண்டிதர்களும் லஸ்ஸரோனி களும்,[53] ஜேப்படித்திருடர்களும், ஏமாற்றிப் பிழைப் பவர்களும், சூதாட்டக்காரர்களும், விபச்சாரத் தரகர் களும், விபச்சார விடுதிகளை நடத்துபவர்களும், மூட்டை தூக்குபவர்களும், கூலி எழுத்தாளர்களும், தெருக்களில் வாத்தியங்களை வாசித்துப் பிழைப்பவர்களும், கந்தல்

பொறுக்கிகளும், கத்தி தீட்டுபவர்களும், ஓட்டை உடைசல் அடைப்பவர்களும், பிச்சைக்காரர்களும் — சுருக்கமாகச் சொல்வதென்றால் பிரெஞ்சுக்காரர்கள் la bohème* என்று சொல்கிறார்களே அந்தக் குறியில்லாத, சிதறிப் போய் இங்குமங்கும் ஓடித்திரியும் கூட்டம் முழுமையுமே இதில் இருந்தது. இந்த நேச சக்திகளைக் கருவாகக் கொண்டுதான் போனபார்ட் தனது டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தை ஏற்படுத்துகிறார். ''உதவிச் சங்கம்''—ஆம். போனபார்ட்டைப் போலவே அந்தச் சங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் உழைத்துப் பாடுபடும் தேசம் தங்களுக்கு மட்டும் எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள். லும்பன் பாட்டாளி வர்க்கத்தினரின் தலைவராகத் தன்னை நியமித்துக் கொண்டுள்ள போனபார்ட், தான் முயன்று பெறக் கூடிய ஆதாயங்களை இங்கேதான் மொத்த வடிவத்தில் மீண்டும் கண்டுகொள்கிறார்; இந்தக் குப்பை கூளத்தில், கழிவுப் பொருளில், எல்லா வர்க்கங்களாலும் ஒதுக்கப்பட்ட ஒன்றில் தன்னை எந்த நிபந்தனையுமில்லாமல் ஆதரிக்கக் கூடிய ஒரே வர்க்கத்தை இனம் காணும் போனபார்ட்தான் உண்மையான போனபார்ட், சொல்லலங்காரம் இல்லாத (sans phrase) போனபார்ட் என்று கூறலாம். தந்திரங்களில் ஊறிப்போன கிழட்டுப் போக்கிரியான போனபார்ட் தேசங்களின் வரலாற்று ரீதியான வாழ்க்கையையும் அவற்றின் நாடகங்களையும் மிகவும் கொச்சைத்தனமான அர்த்தத்தில் இன்ப நாடகம் என்று நினைக்கிறார். அதன் படாடோபமான ஆடை அணிமணிகளும் உரையாடல்களும் பாவனைகளும் மிகவும் கீழ்த்தரமான போக்கிரித்தனத்தை மறைக்கின்ற முகமூடி நடனம் என்று நினைக்கிறார். உதாரணமாக ஸ்ட்ராஸ்பர்குக்கு ஆர்ப்பாட்டமாகப் புறப்படும் பொழுது ஒரு ஸ்விஸ் பருந்தை நன்கு பழக்கி வைத்து நெப்போலியனின் கழுகுச் சின்னத்தைப் போலப் பயன் படுத்துகிறார். பூலோன் [Boulogne] நகருக்குள் நுழைகிற

* —சமூக ஒழுங்குமுறைக்கு மாறுபட்ட வாழ்க்கையை நடத்தும் கலைஞர்கள் அல்லது எழுத்தாளர்கள் பிரிவினர். —ப-ர்.

பொழுது லண்டனிலிருந்து வந்திருக்கும் கையாட்களுக்கு பிரெஞ்சு இராணுவ உடையை அணியச் செய்து நிறுத்தி வைக்கிறார். அவர்கள் இராணுவத்தின் பிரதிநிதிகளாம்.[54] தன்னுடைய டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தில் பத்தாயிரம் போக்கிரிகளைத் திரட்டி, நிக் பாட்டம் சிங்கமாக நடித்ததைப் போல், இவர்களை மக்களாக நடிக்குமாறு செய்கிறார். முதலாளித்துவ வர்க்கத்தினர் ஒரு கலப்பற்ற இன்பியல் நாடகத்தை, பிரெஞ்சு நாடகக் கலையின் கண்டிப்பான சம்பிரதாயங்களில் ஒன்றைக்கூட மீறுமல் உலகத்திலேயே மிக அதிகமான உணர்ச்சியோடு நடித்துக் கொண்டிருந்த பொழுது, அரசர் என்ற பாத்திரத்தில் தன்னுடைய நடிப்பின் கம்பீரத்தைப் பற்றி பாதியளவுக்கு நம்பிக்கொண்டும் பாதியளவுக்கு ஏமாந்து கொண்டுமிருந்த பொழுது, அந்த இன்பியல் நாடகத்தை வெறும் கேலிக் கூத்தாகக் கருதிய சாகஸக்காரனுடைய வெற்றி நிச்சயம்தானே. அந்த சாகஸக்காரன் தன்னுடைய ஆணவமான எதிரியை ஒழித்து விட்ட பிறகு தன்னுடைய ராஜ நடிப்பில் தானே மயங்கிய பொழுது, நெப்போலியனுடைய முகமூடியை அணிந்து கொண்டவுடன் தானே உண்மையான நெப்போலியன் என்று கற்பனை செய்து கொண்ட பொழுது தன்னுடைய உலகக் கருத்தோட்டத்துக்குத் தானே பலியாகிறான்; உலக வரலாற்றை இன்பியல் நாடகமாகக் கருதாமல் தன்னுடைய இன்பியல் நாடகத்தை உலக வரலாறாகக் கருதுகின்ற கருத்தார்வக் கோமாளியாக மாறிவிடுகிறான். சோஷலிஸ்ட் தொழிலாளர்களுக்கு தேசியப் பட்டறைகளும் முதலாளித்துவக் குடியரசுவாதிகளுக்கு ரோந்துக் காவலர் படையும் எப்படியோ அந்த மாதிரி போனபார்ட்டுக்கு டிசம்பர் 10ந் தேதிச் சங்கம் இருக்கிறது. அது அவருக்குப் பொருத்தமான வகையில் ஏற்பட்டிருக்கும் கட்சியின் போராடும் படை. போனபார்ட்டின் சுற்றுப் பயணங்களின் போது, இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் ரயில் நிலையங்களில் திரண்டு நின்று அவர் பேச்சைக் கேட்க வேண்டும்; ''சக்கரவர்த்தி வாழ்க'' (Vive l'Empereur) என்று பொது மக்கள் சொல்வது போல உற்சாகமாகக் குரல் கொடுக்க வேண்டும்; அங்கங்கே

குடியரசுவாதிகளை அவமதிப்பதோடு அடித்துத் துன்புறுத்த வேண்டும்—போலீஸ்காரர்கள் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புத் தருவார்கள். பாரிஸ் நகரத்துக்கு அவர் திரும்பும் பொழுது அவருடைய முன்னணிப் படையாக அவர்கள் வந்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தடுக்க வேண்டும்; அல்லது கலைக்க வேண்டும். டிசம்பர் 10ந் தேதிச் சங்கம் அவருக்கே சொந்தமானது. அது அவருடைய படைப்பு, அவருடைய சொந்தக் கருத்து. அவர் வேறு எதையாவது எடுத்துக் கொண்டால், அது சந்தர்ப்பம் அவர் கைகளில் ஒப்படைத்ததாக இருக்கும்; அவர் வேறு எதைச் செய்தாலும் சந்தர்ப்பம் அவருக்காகச் செய்ததாகவே இருக்கும்; அல்லது வேறு யாராவது செய்த ஒன்றைப் பின்பற்றுவதோடு அவர் திருப்தி அடைந்திருப்பார். அவர் பொது மேடைகளில் முதலாளிகளுக்கு முன்பாக ஒழுங்கு, மதம், குடும்பம், சொத்து என்ற அதிகாரபூர்வமான சொற்களை முழங்கினாலும் அவருக்குப் பின்னல் ஷூப்டர்லேகள், ஷ்பிகெல்பர்குகளின் இரகசியச் சங்கம், குழப்பம், விபசாரம், திருட்டு ஆகியவற்றின் இரகசியச் சங்கம் நின்று கொண்டிருக்கிறது. அதுதான் போனபார்ட்டின் உண்மையான சொரூபம்; டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் வரலாறு அவருடைய சொந்த வரலாறுதான். இந்தத் தடவை விதிவிலக்காக, ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளைத் தாக்குவதென்று, டிசம்பர்வாதிகள் முடிவு செய்தனர். அது மட்டுமல்ல. போலீஸ் கமிஷனர் யோன் தேசிய சபையின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்தார். அவர் அலே என்ற நபரின் வாக்குமூலத்தின் பேரில், டிசம்பர் வாதிகளில் ஒரு பிரிவினர் ஜெனரல் ஷன்கர்னியேயையும் தேசிய சபையின் தலைவரான துப்பேனையும் கொலை செய்ய முடிவு செய்திருக்கிறார்களென்று தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களிடம் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் நிரந்தரக் கமிஷனுக்குத் தகவல் கொடுத்தார். திருவாளர் துப்பேனுக்கு ஏற்பட்ட பயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். டிசம்பர் 10ந் தேதி சங்கத்தைப் பற்றி ஒரு நாடாளுமன்ற விசாரணை, அதாவது போனபார்ட்டின்

ரகசிய அமைப்பு அம்பலமாவது நிச்சயம் எனத் தோன்றியது. தேசிய சபைக் கூட்டத்துக்குச் சற்று முன்பாக போனபார்ட் முன்யோசனையோடு இந்தச் சங்கத்தைக் கலைத்து விட்டார். பெயரளவுக்குத்தான் அந்தச் சங்கம் கலைக்கப்பட்டது. ஏனென்றால் 1851ம் வருடத்தின் இறுதியில் கூட, தலைமைப் போலீஸ் அதிகாரியான கர்லியே டிசம்பர்வாதிகளை உண்மையிலேயே கலைத்துவிட வேண்டும் என்று ஒரு நீண்ட குறிப்பை அவரிடம் சமர்ப்பித்து இன்னும் வீணை முயற்சியைச் செய்து கொண்டிருந்தார்.

டிசம்பர் 10ந் தேதிச் சங்கம் போனபார்ட்டின் சொந்த இராணுவமாக, அவர் அரசாங்க இராணுவத்தை டிசம்பர் 10ந் தேதிச் சங்கமாக மாற்றுகிற வரையிலும் இருந்து வந்தது. தேசிய சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டவுடன் அவர் இதற்கு முதல் முயற்சியைச் செய்தார்; தேசிய சபையைக் கசக்கிப் பிழிந்து வாங்கிக் கொண்ட பணத்தைக் கொண்டே இதைச் செய்தார். அவர் விதியில் நம்பிக்கை கொண்டவர் என்ற முறையில் மனிதன், குறிப்பாகப் படையினர் எதிர்த்து நிற்க முடியாத மேலான சக்திகள் இருக்கின்றன என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த சக்திகளில் சுருட்டும், ஷாம்பேன் மதுவும், கோழிக்கறியும், வெள்ளைப் பூண்டு கலந்த கொத்திறைச்சியும் முதலாவதாகவும் முக்கியமானவையாகவும் இருக்கின்றன என்று கருதுகிறார். எனவே ஒரு ஆரம்பமாக, இராணுவ மேலதிகாரிகளையும் கீழ் நிலை அதிகாரிகளையும் தன்னுடைய எலிசேய் மாளிகைக்கு வரவழைத்து கோழிக்கறியும், வெள்ளைப் பூண்டு கலந்த கொத்திறைச்சியும், சுருட்டும், ஷாம்பேன் மதுவும் கொடுத்து உபசரிக்கிறார். அக்டோபர் மாதம் 3ந் தேதியன்று சென் மோரில் நடைபெற்ற அணிவகுப்பைப் பார்வையிடும் பொழுது, இதே தந்திரத்தைக் கடைப்பிடித்து துருப்புக்கள் அனைவருக்கும் விருந்தளிக்கிறார். அக்டோபர் மாதம் 10ந் தேதியன்று சட்டோரியில் இராணுவ அணிவகுப்பின் போது இதே முறையைப் பின்பற்றி துருப்புக்களுக்கு இன்னும் விரிவான முறையில் விருந்தளிக்கிறார். மாமா ஆசியாவில் அலெக்சாண்டரின் வீரப் போர்களை

நினைவு கூர்ந்தார். மருமகன் அதே நாட்டில் பாக்கசின்* வெற்றிப் பயணங்களை நினைவு கூர்கிறார். உண்மையைச் சொல்வதென்றால் அலெக்சாண்டர் அரைக் கடவுள்தான். ஆனால் பாக்கஸ் முழுக் கடவுள். அது மட்டுமல்ல. டிசம்பர் 10ந் தேதி சங்கத்தின் காப்புக் கடவுளும்கூட.

அக்டோபர் 3ந் தேதி நடைபெற்ற அணிவகுப்புக்குப் பிறகு, நிரந்தரக் கமிஷன் யுத்த அமைச்சர் ட ஆப்பூலை விசாரணை செய்தது. இராணுவத்தின் ஒழுங்கை மீறிய இத் தகைய சம்பவங்கள் இனிமேல் நடைபெற மாட்டா என்று அவர் உறுதியளிக்கிறார். அக்டோபர் 10ந் தேதியன்று நடை பெற்ற அணிவகுப்பின் போது ட ஆப்பூல் கொடுத்த உறுதி மொழியை போனபார்ட் எப்படிக் காப்பாற்றினர் என் பதை முன்பு பார்த்தோம். பாரிஸ் படைப்பிரிவின் பிரதம தளகர்த்தர் என்ற முறையில் ஷன்கர்னியே இரண்டு அணி வகுப்புகளையும் நடத்தினர். அவர் ஒரே சமயத்தில் நிரந்தரக் கமிஷனின் உறுப்பினராகவும், தேசியக் காவலர் படை யின் தளபதியாகவும், ஜனவரி மாதம் 29ந் தேதி ஜூன் மாதம் 13ந் தேதி ஆகியவற்றின் ''இரட்சகராகவும்'', ''சமூகத்தின் அரணாகவும்'', ஜனாதிபதி பதவிக்கு ஒழுங்கு முறைக் கட்சியின் வேட்பாளராகவும், இரண்டு முடியாட்சி களின் போதும் சந்தேகிக்கப்பட்ட மான்க் ஆகவும் இருந்த வர். மேலும் அவர் இதுவரை யுத்த அமைச்சரின் கீழ்தான் பணியாற்றுவதாக ஒருபோதும் ஒத்துக் கொள்ளாதவர். குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பகிரங்கமாக ஏளனம் செய்தவர். போனபார்ட்டுக்குப் பிரபுக்களைப் போலப் பாதுகாப்புக் கொடுத்து சந்தேகமளிக்கும் விதத் தில் அவரைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தவர். இப்பொழுது அவர் யுத்த அமைச்சருக்கு எதிராகக் கட்டுப்பாட்டை வலியுறுத்தியும் போனபார்ட்டுக்கு எதிராக அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்தும் தீவிரமாகப் பாடுபட்டார். அக்டோபர் மாதம் 10ந் தேதியன்று குதி ரைப் படையில் ஒரு பகுதியினர் ''நெப்போலியன் வாழ்க!

* Bacchus—கிரேக்கத் தொல்கதை மரபின்படி மது மற்றும் உல்லாச வாழ்க்கையின் கடவுள்.—ப-ர்.

கொத்திறைச்சி வாழ்க!'' (Vive Napoléon! Vivent les saucissons!) என்று முழங்கினர்கள். ஆனால் தமது நண்பர் ஜெனரல் நெய்மெயர் தலைமையில் அணிவகுத்துச் செல்கின்ற காலாட்படையாவது அமைதியாக அணிவகுத்துச் செல்லுமாறு ஷன்கர்னியே ஏற்பாடு செய்தார். இதற்குத் தண்டனையாக ஜெனரல் நெய்மெயரைப் பதினென்காவது பதினேந்தாவது இராணுவ டிவிஷங்களுக்குத் தளபதியாக நியமிப்பது என்ற சாக்கில் அவரை பாரிஸ் பொறுப்பிலிருந்து யுத்த அமைச்சர் விலக்கினர். இதற்கு போனபார்ட்டின் தூண்டுதல் காரணமாகும். நெய்மெயர் பதவி மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து இராணுவத்திலிருந்து விலகிக் கொண்டார். ஷன்கர்னியே நவம்பர் மாதம் 2ந் தேதியன்று தன் பங்குக்கு ஒரு ஆணையைப் பிறப்பித்தார். துருப்புக்கள் ஆயுதங்களோத் தாங்கியிருக்கும் பொழுது அரசியல் கோஷங்களே முழங்குவதோ, ஆர்ப்பாட்டங்கள் செய்வதோ எவ்வகையிலும் கூடாதென்று தடை விதித்தார். எலிசேய்ப் பத்திரிகைகள்[55] ஷன்கர்னியேயைத் தாக்கின. ஒழுங்கு முறைக் கட்சியின் பத்திரிகைகள் போனபார்ட்டைத் தாக்கின. நிரந்தரக் கமிஷன் மீண்டும் மீண்டும் இரகசியமாகக் கூடியது. இக்கூட்டங்களில் நாட்டுக்கு ஆபத்தேற்பட்டிருப்பதாக அறிவிப்பது என்ற பிரேரேபணை அதைப் போலவே மீண்டும் மீண்டும் பேசப்பட்டது. இராணுவம் பகைமையான இரண்டு முகாம்களாகப் பிரிந்து விட்டது போலவும் பகைமையுள்ள இரண்டு தலைமைக் குழுக்கள்—போனபார்ட்டின் இருப்பிடமான எலிசேய் மாளிகையில் ஒன்றும், ஷன்கர்னியேயின் இருப்பிடமான டியுல்லரீ மாளிகையில் மற்றொன்றும்—இயங்கிக் கொண்டிருப்பது போலவும் தோன்றியது. தேசிய சபை கூடியதும் யுத்தத்துக்கு அறிவிப்புக் கொடுக்கப்படும் என்றும் கருதப்பட்டது. போனபார்ட்டுக்கும் ஷன்கர்னியேயுக்கும் ஏற்பட்ட சச்சரவைப் பற்றி ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் கீழ்க்கண்டவாறு வர்ணித்ததைப் போன்றுதான் பிரெஞ்சு மக்களும் முடிவு செய்தார்கள்.

''பிரான்சின் அரசியல் வீட்டுப் பணிப்பெண்கள் புரட்சி என்னும் எரியும் குழம்பை மிகவும் பழைய துடப்பங்களைக்

கொண்டு கூட்டித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேலையைச் செய்யும் பொழுது அவர்கள் ஒருவரோடொருவர் வாய்ச்சண்டை போட்டுக் கொள்கிறார்கள்.''

இதற்கிடையில் போனபார்ட் யுத்த அமைச்சர் டஆப்பூலை அவசரமாகப் பதவியிலிருந்து விலக்கி, மிக வேகமாக அவரை அல்ஜியர்சுக்கு அனுப்பி வைத்தார். அவருடைய இடத்தில் ஜெனரெல் ஷ்ராம் யுத்த அமைச்சராக நியமிக்கப்பட்டார். நவம்பர் 12ந் தேதியன்று தேசிய சபைக்கு போனபார்ட் ஒரு செய்தி அனுப்பினர். அந்தச் செய்தி அமெரிக்க பாணியில் அதிக நீளமாக, அதிகமான விவரங்களைத் தாங்கி, ஒழுங்கை நினைவுபடுத்தி, சமரசம் செய்துகொள்ளும் ஆர்வத்தோடு, அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணக்கம் தெரிவித்து எழுதப்பட்டிருந்தது. அந்தச் செய்தி முக்கியத்துவம் இல்லாத பல விஷயங்களைப் பேசியது; ஆனால் அந்த சமயத்தில் ஏற்பட்டிருந்த ஜீவாதாரப் பிரச்சினைகளைப் (questions brûlantes) பற்றி அதில் எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் சரியான ஷரத்துக்களின்படி ஜனாதிபதி மட்டுமே இராணுவத்தைப் பற்றி இறுதி முடிவு செய்ய முடியும் என்பதும் போகிற போக்கில் சொல்லப்பட்டிருந்தது. அந்தச் செய்தி கீழ்க்கண்ட படாடோபமான பகுதியோடு முடிவு பெற்றது:

''எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோருகிறது.... ஆனால் நான் விசுவாசப் பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டிருப்பதால், அது எனக்கு விதித்திருக்கிற குறுகலான வரையறைக்கு உள்ளேயே நிற்பேன்.... என்னைப் பொறுத்தவரை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து மட்டுமே என்னுடைய அதிகாரத்தைப் பெற்றவன் என்ற முறையில், மக்கள் சட்டபூர்வமாகத் தெரிவிக்கும் விருப்பாற்றலுக்கு எப்பொழுதும் தலைவணங்குவேன். இந்தக் கூட்டத் தொடரில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது என்று நீங்கள் முடிவு செய்தால், அரசியல் நிர்ணய சபை நிர்வாக அதிகாரத்தின் நிலையை ஒழுங்குபடுத்தும். இல்லையென்றால், 1852ம் வருடத்தில் மக்கள் தங்களுடைய முடிவைப் பெருமிதத்தோடு அறிவிப்பார்கள். எதிர்காலத்துக்கான தீர்வுகள் எப்படியிருந்த போதிலும் நாம்

ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். அப்பொழுதுதான் இந்த மாபெரும் தேசத்தின் எதிர்காலத்தை, ஆர்வமோ, திடீர்த் திருப்பங்களோ, வன்முறையோ ஒருபோதும் முடிவு செய்யாதபடி நாம் தடுக்க முடியும்.... எல்லாவற்றுக்கும் மேலாக, என்னுடைய கவனத்தைப் பெற்றிருப்பது 1852ம் வருடத்தில் பிரான்சை யார் ஆட்சி செய்யப் போகிறார்கள் என்பதல்ல; என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இந்த இடைக் காலத்தில் எத்தகைய கிளர்ச்சியோ கலவரமோ ஏற்படாதபடி எவ்வாறு பார்த்துக் கொள்வது என்பதைத் தான் நான் சிந்திக்கிறேன். என்னுடைய இதயத்தைத் திறந்து மனப்பூர்வமான வகையில் உங்களிடம் பேசிவிட்டேன். என்னுடைய திறந்த உள்ளத்தை ஏற்று உங்களுடைய நம்பிக்கையை வழங்குங்கள். என்னுடைய நல்ல முயற்சிகளுக்கு உங்களுடைய ஒத்துழைப்பைக் கொடுங்கள். கடவுள் மற்றவற்றை கவனித்துக் கொள்வார்.''

இதில் முதலாளித்துவ வர்க்கத்தின் போலித்தனமான கண்ணியத்தையும் நிதானத்தையும், நல்லது மாதிரியாகத் தோன்றும் வாய்ச் சவடாலையும் பார்க்கிறோம். டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் எதேச்சாதிகாரியும், சென் மோர், சட்டோரியில் நடைபெற்ற விருந்துகளின் கதாநாயகருமான போனபார்ட்டின் வாயால் இந்த வார்த்தைகள் பேசப்படுகிற பொழுது அவற்றின் மிக ஆழமான அர்த்தம் வெளிவந்து விடுகிறது.

இப்படி இதயத்தைத் திறந்து பேசி என்னை நம்புங்கள் என்று சொன்னதைப் பற்றி ஒழுங்குமுறைக் கட்சியின் புர்கிராவ்கள் சிறிதும் ஏமாந்துவிடவில்லை. விசுவாசப் பிரமாணங்களைப் பற்றி அவர்கள் எப்பொழுதோ வெறுப்புத் தட்டிப் போனவர்கள். அரசியலில் பொய்ச் சத்தியம் செய்த அனுபவசாலிகளும் திறமைசாலிகளும் அவர்கள் மத்தியிலேயே நிறைய இருந்தார்கள். இராணுவத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட பகுதியையும் அவர்கள் கவனிக்கத் தவறவில்லை. புதிதாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்ட பகுதியில் மிகவும் முக்கியமான சட்டமாகிய தேர்தல் சட்டத்தைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை என்பதையும், மேலும், அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படாது போகுமேயானால், 1852ம் வருடத்தில்

பொது மக்கள் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று தெரிவித்ததையும் அவர்கள் எரிச்சலோடு கவனித்தார்கள். ஒழுங்குமுறைக் கட்சியின் காலில் கட்டப்பட்டிருந்த ஈயக் குண்டுதான் தேர்தல் சட்டம். அது அந்தக் கட்சியை நடக்க முடியாமல் தடுத்தது; அந்தக் கட்சி புயல் வேகத்தில் முன்னேறுவதைப் பற்றிய பேச்சே இல்லை. மேலும் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தைக் கலைத்து விட்டதாக அறிவிப்புச் செய்ததாலும் இராணுவ அமைச்சர் டஆப் புலைப் பதவியிலிருந்து விலக்கியதனாலும் போனபார்ட் தேசத்தின் பலிபீடத்துக்கு முன்னால் தன் கையாலேயே பலியாடுகளைக் காவு கொடுத்துவிட்டார். எதிர்பார்க்கப்பட்ட மோதலின் கூர்மையை அவர் மழுங்கடித்து விட்டார். கடைசியாக, ஒழுங்குமுறைக் கட்சியே நிர்வாக அதிகாரத்தோடு தீர்மானமான மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் குறைப்பதற்கும் தீமையைக் குறைத்துத் தப்பிப்பதற்கும் கவலையோடு விரும்பியது. புரட்சிக்கு எதிராகத் தான் பெற்றிருக்கிற வெற்றிகளை இழந்துவிடக்கூடாது என்ற பயத்தால், தன்னுடைய எதிரி அந்த வெற்றியின் கனிகளைக் கவர்ந்து கொண்டு போக அனுமதித்தது. ''எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோருகிறது.'' பிப்ரவரி மாதத்திலிருந்து* ஒழுங்குமுறைக் கட்சி புரட்சிக்கு எதிராக இதைத்தானே சொல்லி வந்திருக்கிறது. இன்று போனபார்ட்டின் செய்தி ஒழுங்குமுறைக் கட்சியிடம் அதையே பேசிற்று. ''எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோருகிறது.'' போனபார்ட் ஆட்சியை அபகரிப்பதற்குச் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம்; ஆனால் ஒழுங்குமுறைக் கட்சி இவற்றைப் பற்றி வம்பு செய்தால், நிம்மதியில்லாமல் தவித்தால் அது ''அமைதிக்குப் பங்கம்'' விளைவிப்பதாகும். சட்டோரியின் கொத்திறைச்சியைப் பற்றி யாருமே பேசாத பொழுது அது எலிக் குஞ்சுகளைப் போல பேச்சில்லாமல் இருந்தது. ''எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோரு

---

* —1848ம் வருடம்.—ப-ர்.

கிறது.'' எனவே நான் விரும்பிய காரியங்களைச் செய்ய எனக்கு அமைதியைக் கொடுங்கள் என்று போனபார்ட் கோரினர். நாடாளுமன்றக் கட்சிக்கு முதலில் புரட்சிகர மான கொந்தளிப்பை மறுபடியும் தூண்டிவிட்டு விடுமோ என்றும் அடுத்தபடியாக அந்தக் கொந்தளிப்பைத் தான் தூண்டிவிட்டதாகத் தன்னுடைய வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம் நினைத்துவிட்டால் என்னாகுமோ என்றும் இரண்டு வகையான பயம் ஏற்பட்டு அது செயலற்றுப் போய்விட்டது. எனவே எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோரிய காரணத்தால், போனபார்ட் தன்னுடைய செய்தி யில் ''சமாதானம்'' என்று சொன்ன பிறகு அதற்கு ''யுத்தம்'' என்று பதில் சொல்லக் கூடிய துணிச்சல் ஒழுங்கு முறைக் கட்சிக்கு இல்லை. தேசிய சபைக் கூட்டம் ஆரம்ப மாகும் பொழுது அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நடை பெறும் என்று எதிர்பார்த்த பொது மக்கள் ஏமாற்றமடைந் தார்கள். அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சம்பவங் களைப் பற்றி நிரந்தரக் கமிஷனின் நடவடிக்கைக் குறிப்பு களை வெளியிட வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கை பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிக்கப் பட்டது. கொள்கையளவில் பரபரப்பான விஷயங்களைப் பற்றிய விவாதங்கள் தவிர்க்கப்பட்டன. 1850ம் வருடத் தின் நவம்பர், டிசம்பர் மாதங்களில் தேசிய சபையின் நடவடிக்கைகள் ஆர்வத்தைத் தூண்டவில்லை.

கடைசியாக, டிசம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தின் தனியான அதிகாரங்களைப் பற்றி கொரில்லாப் போர் ஆரம்பமாயிற்று. முதலாளித்துவ வர்க்கத்தினர் பொதுவான வாக்குரிமையை ஒழித்து வர்க்கப் போராட்டத்தை அந்தக் கட்டத்தில் இல்லாமற் செய்துவிட்டபடியால் இந்த இயக்கம் இரண்டு சக்திகளின் தனியான அதிகாரங்களைப் பற்றிய அற்பத்தனமான சச்சரவுகளில் சிக்கிக் கொண்டது.

நீதிமன்றம் மாகேன் என்ற பிரதிநிதி மீது கடன் பாக்கிக்காகத் தண்டனை விதித்திருந்தது. நீதி இலாகா அமைச்சரான ருயே நீதிமன்றத் தலைவருக்குப் பதிலளிக்கும் பொழுது, கடன் பாக்கிக்காக அந்த உறுப்பினரைக் கைது

செய்யுமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும்; வேறு விவாதங்கள் தேவையில்லை என்று பதிலளித்தார். மாகேன் கைது செய்யப் பட்டுக் கடன்காரர்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இதைப் பற்றி அறிந்தவுடன் தேசிய சபை வெகுண்டெழுந் தது. அது உடனே அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தது மட்டுமல்ல, தன்னுடைய அதிகாரியை அனுப்பி அன்று மாலைக்குள் அவரைக் கிளிஷீ சிறையிலிருந்து பல வந்தமாக விடுவித்துக் கொண்டு வந்தது. எனினும் தனிச் சொத்துரிமையின் புனிதத்தில் தனக்கு நம்பிக்கை உண்டு என்பதைக் காட்டுவதற்காகவும் பின்னர் தேவைப்பட்டால் தொல்லை தருகின்ற மலைக் கட்சி உறுப்பினர்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குத் தக்க ஒரு இடம் வேண்டும் என்ற எண்ணத்தையும் மனதிலே வைத்துக் கொண்டு, தேசிய சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்ட பிறகு மக்கள் பிரதிநிதிகளைக் கடன் பாக்கிக்காகக் கைது செய்வது அனுமதிக்கப்படும் என்று அறிவித்தது. கடன்பாக்கிக்காக ஜனாதிபதியையும் சிறையில் தள்ளலாம் என்று அரசாணை விதிப்பதற்கு சபை மறந்து விட்டது. தன்னுடைய உறுப் பினர்கள் அனுபவித்து வந்த காப்புரிமையின் கடைசிச் சுவட்டையும் அது அழித்துவிட்டது.

அலே என்ற நபர் கொடுத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு டிசம்பர்வாதிகளில் ஒரு பகுதியினர் துப்பேன், ஷன்கர்னியே ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தயாரித்திருப்பதாகப் போலீஸ் கமிஷனர் யோன் குற்றம் சாட்டியது நினைவிருக்கும். இது தொடர்பாக, தேசிய சபையின் முதல் கூட்டத்திலேயே நாடாளுமன்றத்திற் கென்று தனியாகப் போலீஸ் படை வேண்டுமென்றும், அதற் காக ஏற்படுகின்ற செலவுகளுக்கு தேசிய சபையின் வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும், அந்தப் போலீஸ் படை பிரதம போலீஸ் அதிகாரிக்குச் சம்பந்தமில்லாத வகையில் சுயேச்சையானதாக இருக்க வேண்டுமென்றும் குவெஸ்டார்கள் பிரேரணை செய்தார்கள். உள்துறை அமைச்சரான பரோஷ் இது தன்னுடைய இலா காவுக்குள் தலையிடுவதாகும் என்று சொல்லி ஆட்சேபித்

தார். இந்தப் பிரச்சினையில் ஒரு பரிதாபகரமான சமரசம் ஏற்பட்டது. அதன்படி சபையின் போலீஸ் கமிஷனருக்கு நாடாளுமன்றத்தின் சொந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து சம்பளம் கொடுப்பதென்றும், அவரை நியமிப்பதற்கும் நீக்குவதற்கும் குவெஸ்டர்களுக்கு அதிகாரமுண்டு என்றும், ஆனால் உள்துறை அமைச்சரைக் கலந்து கொண்டுதான் அந்த அதிகாரம் பயன்படுத்தப்படும் என்றும் சமரசம் ஏற்பட்டது. இதற்கிடையில் அரசாங்கம் அலே மீது குற்றம் சாட்டி நடவடிக்கை எடுத்திருந்தது. அலே கொடுத்த தகவல் மோசடியானதென்று காட்டுவதும் அரசாங்க வழக்குரைஞர் மூலமாக துப்பேன், ஷன்கர்னியே, யோன் ஆகியோரையும் தேசிய சபை முழுவதையும் ஏளனம் செய்வதும் சுலபமானதாயிற்று. எனவே டிசம்பர் மாதம் 9ந் தேதியன்று அமைச்சர் பரோஷ் துப்பேனுக்கு எழுதிய டிதத்தில், யோனைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று காருகிறார். தேசிய சபையின் தலைமைக் குழு யோனைப் பதவியில் நீடிப்பதென்று முடிவு செய்கிறது. ஆனால் மாகேன் விவகாரத்தில் பலவந்தத்தைக் கையாண்டது பற்றி தேசிய சபைக்கு பயம் ஏற்பட்டுவிட்டதாலும், நிர்வாக அதிகாரத்துக்கு ஒரு அடி கொடுத்த பொழுதெல்லாம் அதற்குப் பதிலாக இரண்டு அடி வாங்கியே பழக்கப்பட்டு விட்டதாலும், அது இந்த முடிவை அங்கீகரிக்கவில்லை. யோன் தன்னுடைய கடமையில் காட்டிய ஆர்வத்துக்கு வெகுமதியாக அவரைப் பதவியிலிருந்து நீக்குகிறது. இரவிலே முடிவு செய்து பகலிலே அமுல் நடத்துவதற்கு மாறுகப், பகலிலே முடிவு செய்து இரவிலே அமுல் நடத்துகின்ற ஒரு மனிதருக்கு எதிராக மிகவும் அத்தியாவசியமான விசேஷ நாடாளுமன்ற உரிமையைத் தானே இழந்துவிட்டது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில், மிக முக்கியமான, அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் தேசிய சபை எப்படி நிர்வாக அதிகாரத்தோடு போராட்டத்தைத் தவிர்த்துக் கொண்டது அல்லது இல்லாமற் செய்து கொண்டது என்பதைப் பார்த்தோம். இப்பொழுது அது மிகவும் அற்பமான சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட போராட்டத்துக்கு நிர்ப்

பந்திக்கப்படுவதைப் பார்க்கிறோம். மாகேன் விவகாரத்தில், மக்கள் பிரதிநிதிகளைக் கடன் பாக்கிக்காகச் சிறையிலடைக்கலாம் என்று கொள்கையளவில் அது அனுமதித்தது; ஆனால் தனக்குப் பிடிக்காத உறுப்பினர்கள் விஷயத்தில் மட்டுமே இதைக் கையாள்வதற்கென்று தனி உரிமையைக் கோருகிறது; இந்த அருவருக்கத்தக்க உரிமை சபைக்கு உண்டா இல்லையா என்று நீதித்துறையின் அமைச்சரோடு வாதம் புரிகிறது. கொலை செய்வதற்கான சதி பற்றிய தகவலைப் பயன்படுத்தி, டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தைப் பற்றி விசாரணை நடத்தி, அதன் மூலம் பாரிஸ் நகர லும்பன் பாட்டாளி வர்க்கத்தினரின் தலைவன் போனபார்ட்டே என்ற உண்மையை பிரான்சிலும் ஐரோப்பா முழுவதுமே அவர் தப்பித்துக் கொள்ள வழியில்லாதபடி அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக இந்த மோதலை, போலீஸ் கமிஷனரை நியமிப்பதற்கும் நீக்குவதற்கும் யாருக்கு அதிகாரமுண்டு என்ற அற்பமான விஷயமாகவே உள்துறை அமைச்சருக்கும் தனக்கும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பது மாதிரியாகக் காட்டிக் கொள்கிறது. இப்படி இந்தக் காலகட்டம் முழுவதிலும் ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய உறுதியற்ற நிலையின் காரணமாக, நிர்வாக அதிகாரத்துக்கு எதிராகத் தன்னுடைய போராட்டத்தை, அதிகார எல்லை பற்றிய அற்பமான சச்சரவுகளிலும் சொற்புரட்டுகளிலும் சட்டத்தின் பொருளைப் பற்றி மிகவும் நுணுக்கமான விவாதங்களிலும் மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதிலும் வீணாக்கிக் கொண்டதோடு அதன் சக்தியையும் சிதறடித்துக் கொண்டது, மிக ஏளனமான வடிவங்களைப் பற்றிய பிரச்சினையையே தன்னுடைய நடவடிக்கைகளின் மையமாகக் கொண்டது என்பதைக் காணலாம். கொள்கை நிலையில் பார்க்கும் பொழுது போராட்டம் முக்கியத்துவம் அடைந்திருக்கும் கட்டத்தில், நிர்வாக அதிகாரம் உண்மையிலேயே தன்னை அம்பலப்படுத்திக் கொண்ட நேரத்தில், தேசிய சபையின் குறிக்கோள் தேசத்தின் குறிக்கோளாக மாறியிருக்கக் கூடிய கட்டத்தில் இந்தப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு அது துணியவில்லை. அப்படிச் செய்திருந்தால் தேசத்தை நோக்கி

''முன்னேறிச் செல்'' என்று ஒழுங்குமுறைக் கட்சி உத்தர விட்டிருக்க முடியும். ஆனல் மற்றவற்றைக் காட்டிலும், தேசம் முன்னேறிச் சென்றுவிடுமோ என்பதுதானே அதற்குப் பயத்தை ஏற்படுத்துகிறது. அம்மாதிரியான சந்தர்ப்பங் களில் அது மலைக் கட்சியின் தீர்மானங்களை நிராகரித்துவிட்டு, அன்றுட அலுவலுக்குப் போய்விடுகிறது. இப்படி முக்கிய மான பிரச்சினைகளுக்காகப் போராடுவதைக் கைவிட்ட பிறகு, நிர்வாக அதிகாரம் மறுபடியும் இதை அற்பமான, சாதாரணமான பிரச்சினைகளுக்காக, அதாவது ஸ்தல நாடாளுமன்ற அக்கறை மட்டுமே ஏற்படக் கூடிய அளவில் கொண்டுவருவதற்கு உரிய சந்தர்ப்பத்தை அமைதியாக எதிர் பார்த்துக் காத்திருக்கிறது. அப்பொழுது ஒழுங்குமுறைக் கட்சி இது வரை அடக்கி வைத்திருக்கும் கோபம் ஆவேசமாகப் பாறிடுகிறது. நாடக அரங்கத்திலிருந்து திரையைக் கிழிக்கிறது. ஜனதிபதியைக் கண்டனம் செய்வதோடு குடியரசுக்கு ஆபத்தேற்பட்டு விட்டதாக அறிவிக்கிறது. ஆனல் அந்த நேரத்தில் அதனுடைய ஆவேசம் பொருளற்றதாகத் தெரி கிறது; போலித்தனமான சாக்கை அல்லது போராட்டத் துக்குத் தகுதியில்லாத ஒரு பிரச்சினையைப் பயன்படுத்தி போராட்டச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதாகத் தோன்று கிறது. நாடாளுமன்றப் புயல் புழுதிக் காற்றுக, போராட் டம் ஒரு சூழ்ச்சியாக, மோதல் என்பது ஒரு புரளியாக மாறி விடுகிறது. தேசிய சபைக்கு ஏற்பட்ட அவமரியாதையைப் பற்றிப் புரட்சிகரமான வர்க்கங்கள் அட்டகாசமாகச் சிரித்து ஆனந்தமடைகின்றன. ஏனென்றுல் பொது மக்களின் உரிமைகளைப் பற்றி தேசிய சபைக்கு என்ன அக்கறை யுண்டோ அவ்வளவுதான் அவற்றுக்கு நாடாளுமன்றத்தின் தனியான உரிமைகளைப் பற்றி உண்டு, நாடாளுமன்றத்துக்கு உள்ளே இருக்கிற முதலாளித்துவ வர்க்கம் இப்படிப்பட்ட அற்பமான சச்சரவுகளில் நேரத்தை வீணுக்குவதைப் பற்றியும், ஜனதிபதியோடு ஏளனத்துக்குரிய போட்டிகளில் ஈடுபட்டு தேசத்தின் அமைதிக்கு ஆபத்தேற்படுத்துவதைப் பற்றியும் நாடாளுமன்றத்துக்கு வெளியே இருக்கிற முத லாளித்துவ வர்க்கம் புரிந்து கொள்ள முடியாமல் திகைக்

கிறது. உலகமே சண்டையை எதிர்பார்க்கக் கூடிய நேரத்தில் சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டும், சமாதானம் ஏற்பட்டு விட்டது என்று உலகம் நம்பும் நேரத்தில் சண்டையை ஆரம்பிக்கின்ற போர்த்தந்திரம் அதற்குக் குழப்பத்தைத் தருகிறது.

டிசம்பர் மாதம் 20ந் தேதியன்று தங்கக் கட்டிகள் லாட்டரி சம்பந்தமான கேள்வியை உள்துறை அமைச்சரிடம் பஸ்கால் துப்ரா கேட்டார். இந்த லாட்டரித் திட்டம் ''எலிசியம் என்பவரின் மகள்'' ஆகும்.[56] போனபார்ட் தன்னுடைய நம்பிக்கைக்குரிய ஆதரவாளர்களோடு சேர்ந்து அதைப் பெற்றெடுத்தார். பிரெஞ்சு சட்டம் அறச்சிந்தனையுள்ள குலுக்குச் சீட்டுகளைத் தவிர மற்ற எல்லா லாட்டரிகளையும் தடை செய்த போதிலும், பிரதம போலீஸ் அதிகாரியான கர்லியே இதைத் தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக் கொண்டார். ஒரு சீட்டுக்கு ஒரு பிராங்க் வீதம் எழுபது லட்சம் லாட்டரிச் சீட்டுகள் வெளியிடப்பட்டன. இதன் மூலமாகக் கிடைக்கிற லாபம் பாரிஸ் நகரத்தின் நாடோடிப் போக்கிரிகளைக் கலிபோர்னியாவுக்கு அனுப்புவதற்கு உபயோகிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஒரு பக்கத்தில் பாரிஸ் பாட்டாளி வர்க்கம் சோஷலிசக் கனவுகளுக்குப் பதிலாகத் தங்கக் கட்டிகளைப் பற்றிக் கனவு காணலாம்; கோட்பாட்டு ரீதியில் வேலைக்கு உரிமை கொடு என்று போராடுவதற்குப் பதிலாகக் கவர்ச்சி மிக்க முதல் பரிசு பெறும் வாய்ப்புக்காகப் போட்டி போடலாம். கலிபோர்னியாவின் தங்கக் கட்டிகளின் பளபளப்பில் பாரிஸ் தொழிலாளிகள் தங்களுடைய பைகளிலிருந்து எடுக்கப்படுகின்ற அற்பமான பிராங்க் காசுகளைப் பற்றி கவனிக்கவில்லை என்பது இயற்கையே. எனினும் அது ஒரு மாபெரும் மோசடியாகும். பாரிசை விட்டுப் போகாமலேயே கலிபோர்னியாவின் தங்கச் சுரங்கங்களை அடைய விரும்பிய போக்கிரிகள் போனபார்ட்டும் கடன் நெருக்கடிகளில் மூழ்கித் தவித்த அவருடைய பரிவாரமுமே. தேசிய சபை அனுமதித்த முப்பது லட்சமும் ஊதாரித்தனமான செலவுகளில் வீணாகிவிட்டது; எனவே எப்படியாவது ஒரு வழியில் பணத்தைத் திரட்டி

பொக்கிஷத்தை நிரப்ப வேண்டும். போனபார்ட் தொழிலாளர் குடியிருப்புக்களைக் (cités ouvrières) கட்டுவதற்காக நாடு முழுவதிலும் நன்கொடைகள் சேகரிப்பதற்கு வீண் முயற்சியைச் செய்தார். அந்தப் பட்டியலில் பெரிய தொகை ஒன்றை அவரே முதலில் எழுதியிருந்தார். கடின உள்ளம் படைத்தமுதலாளிகள் போனபார்ட் மீது நம்பிக்கையில்லாமல் அவர் நன்கொடையைக் கொடுக்கட்டும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். அவரிடமிருந்து பணம் வரவில்லை என்பது இயற்கையானதுதான். எனவே ஆகாயத்தில் சோஷலிஸ்ட் கோட்டை கட்டுகிற கற்பனையான திட்டம் பூமியிலே விழுந்து நொறுங்கியது. தங்கக் கட்டிகள் திட்டம் இதைக் காட்டிலும் அதிகமாக வெற்றியடைந்தது. போனபார்ட்டும் அவரது கோஷ்டியினரும் பரிசுகளுக்குத் தேவையான எழுபது லட்சத்துக்கு மேற்பட்ட தொகைகளைத் திருடியதோடு திருப்தியடையவில்லை. அவர்கள் கள்ள லாட்டரி டிக்கெட்டுகளை அச்சடித்தனர். அவர்கள் ஒரே வரிசை எண் அச்சிடப்பட்ட பத்து, பதினைந்து, ஏன் இருபது டிக்கெட்டுகளைக்கூட வெளியிட்டனர்—நிதித் துறையில் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்துக்குப் பொருத்தமான வேலைதான்! இதில் தேசிய சபைக்கு எதிராக நின்றது குடியரசின் ஜனாதிபதி என்ற உருவமற்ற நபரல்ல; போனபார்ட் என்ற அசல் நபர்தான். அவர் செய்த காரியம்—அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றிப் பேச வேண்டியதில்லை—பிரான்சின் குற்றத்தண்டனை விதிகளுக்கு (Code pénal) விரோதமானதாகும். எனவே அந்தக் குற்றத்தைச் செய்த நேரத்தில் சபை அவரைக் கையும் களவுமாகப் பிடித்திருக்க வேண்டும். பஸ்கால் துப்ராவின் கேள்விக்குப் பிறகு சபை அன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டிருந்த மற்ற விஷயங்களை எடுத்துக் கொண்டதென்றால், சபை ''திருப்தியடைந்து விட்டதாக'' அறிவிக்க வேண்டும் என்று ஜிரார்டேன் முன்வைத்த பிரேரணை ஒழுங்குமுறைக் கட்சிக்குள்ளேயிருந்த வழக்கமான ஊழல்களை அதற்கு நினைவூட்டியது மட்டும் இதற்குக் காரணம் அல்ல. முதலாளி, அதிலும்

தேசத் தலைவராக வீங்கிப் போன முதலாளி, தன்னுடைய செயல் ரீதியான கருமித்தனத்தைத் தத்துவ ரீதியான தாராளத்தால் சரி செய்து கொள்கிறார். தேசத் தலைவர் என்ற முறையில் அவர் தனக்கு எதிரே இருக்கின்ற அரசு அதிகாரத்தைப் போல ஒரு உயர்ந்த பிறவியாக மாறிவிடுகிறார். அவரைக் காட்டிலும் உயர்ந்த மேன்மையான வழியில்தான் அவரை எதிர்க்க முடியும்.

போனபார்ட் ஒரு உல்லாசப் பிரியர், அரசர் பதவியிலிருக்கும் லும்பன் பாட்டாளி என்ற காரணத்தாலேயே, போக்கிரித்தனமான முதலாளித்துவ வர்க்கத்தினரைக் காட்டிலும் கீழ்த்தரமாகச் சண்டை போட முடியும் என்ற ஒரு சாதகமான அம்சம் அவரிடம் இருக்கிறது. இராணுவத்தினருக்கு விருந்தளித்தது, அணிவகுப்புகளைப் பார்வையிட்டது, டிசம்பர் 10ந் தேதிச் சங்கம், கடைசியாக குற்றத் தண்டனை விதிகள் (Code pénal) என்ற வழுக்கு நிலத்திலிருந்து சபையே அவரைத் தன் கையால் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்த பிறகு, இப்பொழுது அவர் பார்வைக்குத் தற்காப்பு நிலையிலிருப்பதைக் கைவிட்டு வலிந்து சென்று தாக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்பதைக் கண்டார். நீதி, யுத்தம், கடற்படை, நிதி ஆகிய இலாகாக்களின் அமைச்சர்கள் இதற்கிடையில் தேசிய சபையில் சிறுதரமான தோல்விகளை அடைந்ததும், அவற்றின் மூலமாக சபை தன்னுடைய முகத்தைச் சுளித்து அதிருப்தியைக் காட்டியதும் அவருக்குக் கவலையைத் தரவில்லை. அந்த அமைச்சர்கள், நிர்வாக அதிகாரத்தின் மீது நாடாளுமன்றத்தின் மேன்மையான அதிகாரத்தை அங்கீகரித்து, ராஜினாமாச் செய்வதைத் தடுத்ததோடு, தேசிய சபையின் ஓய்வுக் காலத்தின் போது தான் தொடங்கிய காரியத்தை இப்பொழுது முடிவுக்குக் கொண்டுவந்தார். அது நாடாளுமன்றத்திலிருந்து இராணுவ அதிகாரத்தைப் பிரிப்பது, ஷங்கர்னியேயைப் பதவியிலிருந்து நீக்குவது என்பதே.

ஒரு எலிசேய் பத்திரிகை, மே மாதத்தின் போது முதல் இராணுவ டிவிஷனுக்குத் தரப்பட்ட உத்தரவை, அதாவது ஷங்கர்னியே பிறப்பித்த உத்தரவை வெளியிட்டது. அந்த

உத்தரவில், கலகம் ஏற்படும் காலத்தில், அதிகாரிகள் தங்களுடைய அணிகளில் எந்தத் துரோகியும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுமாறும், அவர்களை உடனடியாகச் சுட்டுக் கொல்லுமாறும், தேசிய சபை தன்னுடைய பாதுகாப்புக்காகத் துருப்புக்களைக் கோருமாறும் அதை மறுக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1851ம் வருடம் ஜனவரி மாதம் 3ந் தேதியன்று இந்த உத்தரவைப் பற்றி மந்திரி சபையிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதைப் பற்றி விசாரிப்பதற்கு மந்திரி சபை அவகாசம் வேண்டுமென்று கேட்டது; முதலில் மூன்று மாதங்களும், பிறகு ஒரு வாரமும், கடைசியில் இருபத்து நான்கு மணி நேரமும் கேட்டது. உடனடியாக விளக்கம் கொடுக்க வேண்டுமென்று தேசிய சபை வற்புறுத்தியது. ஷன்கர்னியே எழுந்து அப்படிப்பட்ட உத்தரவு ஒருபோதும் பிறப்பிக்கப்படவில்லை என்று அறிவித்தார். தேசிய சபையின் கோரிக்கைகளை நான் எப்பொழுதும் உடனடியாக நிறைவேற்றுவேன்; மோதல் ஏற்படுமானால் என்னுடைய உதவி தேசிய சபைக்குக் கிடைக்கும் என்றும் கூறினார். இந்த அறிவிப்பைத் தேசிய சபை ஆரவாரமாகக் கைதட்டி வரவேற்றது. அவரிடம் தனக்கு நம்பிக்கையிருப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றியது. ஒரு ஜெனரலின் சொந்த முறையிலான பாதுகாப்புக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டதன் மூலம் தேசிய சபை தன்னுடைய அதிகாரத்தைத் துறந்தது; தன்னுடைய கையாலாகாத்தனத்தையும் இராணுவத்தின் சர்வவல்லமையையும் பறைசாற்றியது. போனபார்ட்டுக்கு எதிராக தேசிய சபையைப் பாதுகாப்பேன் என்று அறிவித்த பொழுது, அந்த ஜெனரல் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார். ஏனென்றால் அதே போனபார்ட் தற்காலிகமாகக் கொடுத்த மான்யமே அவருடைய அதிகாரம். அது மட்டுமல்ல. நாடாளுமன்றம் தன்னைப் பாதுகாக்கும் என்று எதிர்பார்க்கிறார். உண்மையில் அவருடைய பாதுகாப்பை எதிர்பார்க்கும் நிலைமையில்தான் அது இருக்கிறது. 1849ம் வருடம் ஜனவரி மாதம் 29ந் தேதி முதலாளித்துவ வர்க்கம் அவருக்குக் கொடுத்த மர்மமான சக்தியில் ஷன்கர்னியேயுக்கு முழு

நம்பிக்கை உண்டு. மற்ற இரண்டு அரசு ஆட்சிகளோடும் சேர்ந்து பக்கத்திலேயே நின்று கொண்டிருக்கும் மூன்றுவது ஆட்சி என்று அவர் தம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார். இந்த சகாப்தத்தின் வீர புருஷர்களுக்கு அல்லது ஞானிகளுக்கு ஏற்பட்ட கதியே அவருக்கும் ஏற்படுகிறது. அவர்களுடைய கட்சி தன்னுடைய சொந்த நலன்களுக்காக அவர்களைப் பற்றி உருவாக்கியிருக்கும் மாபெரும் அபிப்பிராயத்தில் தான் அவர்களுடைய மேதா விலாசமே அடங்கியிருக் கிறது. அவர்களை அதிசயங்களைச் சிருஷ்டிக்குமாறு சூழ்நிலை வற்புறுத்திய உடனே அவர்கள் சாமானியர்களாக சுருங்கிப் போய்விடுகிறார்கள். பொதுவாகவே அந்தப் போலியான மாவீ ரர்களின், உண்மையான ஞானிகளின் ஆபத்தான விரோதி நம்பிக்கையின்மைதான். எனவேதான் குத்தலான பேச்சா ளர்களும் ஏளனம் செய்பவர்களும் தங்களைப் பற்றி ஆர்வ மில்லாதிருப்பது அவர்களுக்கு ஆத்திரமேற்படுத்துகிறது.

அன்று மாலையிலேயே அமைச்சர்கள் எலிசேய் மாளி கைக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். போனபார்ட் ஷன்கர் னியேயைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென வற்புறுத்து கிறார்; ஐந்து அமைச்சர்கள் உத்தரவில் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். *Moniteur* பத்திரிகை மந்திரிசபை யில் நெருக்கடி என்று அறிவிக்கிறது; ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகள் ஷன்கர்னியேயின் தலை மையில் நாடாளுமன்ற இராணுவம் அமைக்கப்படுமென்று பயமுறுத்துகின்றன. ஒழுங்குமுறைக் கட்சி இந்த நட வடிக்கை எடுப்பதற்கு அரசியலமைப்புச் சட்டம் அதிகார மளிக்கிறது. ஷன்கர்னியேயை தேசிய சபையின் தலைவராக நியமித்து விட்டு நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு வரு மாறு தனக்கு விருப்பமான எண்ணிக்கையில் துருப்புக்களைக் கூப்பிட்டால் போதும். ஷன்கர்னியே இன்னும் இராணுவத் துக்கும் பாரிசிலுள்ள தேசியக் காவலர் படைக்கும் தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதால் இதை இன்னும் சுலபமாகவே செய்ய முடியும்; இராணுவத்தோடு வருமாறு எப்பொழுது தன்னைக் கூப்பிடு வார்களென்று காத்துக் கொண்டிருக்கிறார். நேரடியாகத்

துருப்புக்களைக் கூப்பிடுவதற்கு தேசிய சபைக்குள்ள உரிமையைக் கேள்வி கேட்பதற்கு போனபார்ட்டின் பத்திரிகைகளுக்கு இன்னும் துணிச்சல் ஏற்படவில்லை. எந்தச் சட்டப் பிரச்சினை பற்றிக் கேள்வியை எழுப்பினாலும் அன்று நிலவிய சூழ்நிலையில் வெற்றியடையும் என்று நம்ப முடியாது. போனபார்ட் பாரிஸ் நகரம் முழுவதிலும் எட்டு நாட்கள் தேடிப்பார்த்த பிறகு இரண்டு ஜெனரல்கள் மட்டுமே—பரகே ட இல், சென் ஜான் ட அன்ஜெலீ, ஆகியோர்—ஷன்கர்னியேயின் பதவி நீக்க உத்தரவில் மேற்கையெழுத்திடுவதற்கு நாங்கள் தயார் என்று வருகிறார்கள். இதை மனதிலே கொண்டு பார்க்கும் பொழுது தேசிய சபை உத்தரவு கொடுத்திருக்குமானால் இராணுவம் அதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். எட்டு நாட்களுக்குப் பிறகு ஒழுங்குமுறைக் கட்சியிலிருந்து 286 வாக்குகள் கொண்ட பிரதிநிதிகள் பிரிந்து விட்டதையும், 1851ம் வருடம் டிசம்பர் மாதத்திலும், அதாவது முடிவு செய்ய வேண்டிய கடைசி நேரத்திலும் கூட, இப்படிப்பட்ட ஒரு ஆலோசனையை மலைக்கட்சி நிராகரித்ததையும் நினைத்துப் பார்க்கும் பொழுது அப்படிப்பட்டதொரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய அணிகளிலும் நாடாளுமன்றத்திலும் போதுமான வாக்குகளைப் பெற்றிருக்குமா என்பது பெருமளவு சந்தேகமே. எனினும் புர்கிராவ்கள் தங்கள் கட்சியின் பெரும் பகுதியையாவது ஒரு வீரச் செயலைப் புரியுமாறு—அது தங்கள் முகாமுக்கு வந்து சேரும் இராணுவத்தின் ஆதரவை ஏற்றுக் கொள்வதும் கூடு போலத் துப்பாக்கி ஈட்டிகளை நிறுத்தினால் தமக்குப் பாதுகாப்பு என்று நினைப்பதும் மட்டுமே அந்த வீரச் செயல்—வற்புறுத்தியிருந்தால் ஒருவேளை வெற்றியடைந்திருக்கலாம். இதற்குப் பதிலாக ஜனவரி மாதம் 6ந் தேதியன்று புர்கிராவ்கள் எலிசேய் மாளிகைக்குத் தாங்களாகப் போகிறார்கள். அரசு நன்மையை முன்னிட்டாவது ஷன்கர்னியேயைப் பதவியிலிருந்து நீக்க வேண்டாமென்று போனபார்ட்டைக் கேட்டுக் கொள்வதென்றும் விவாதத்தில் இராஜதந்திரிகளின் சாமர்த்தியத்தைக் கையாள வேண்டு

மென்றும் போகிறார்கள். யாரையாவது இணங்க வைக்க வேண்டுமென்று போனால் அவரே சூழ்நிலை மீது ஆட்சி செலுத்துகிறார் என்பது வெளிப்படை. இந்த முயற்சியினால் ஊக்கம் பெற்ற போனபார்ட், ஜனவரி 12ல் ஒரு புதிய மந்திரிசபையை நியமிக்கிறார். பழைய மந்திரிசபையின் தலைவரான புல்ட், பரோஷ் ஆகியோர் புதிய மந்திரிசபையில் இடம்பெறுகிறார்கள். சென் ஜான் ட அன்ஜெலி யுத்த அமைச்சராகிறார். Moniteur பத்திரிகை ஷன்கார்னியேயைப் பதவி நீக்கும் உத்தரவை வெளியிடுகிறது. அவர் வகித்து வந்த பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டு பரகே ட இலியிடம் முதல் இராணுவ டிவிஷனும் பெரோவிடம் தேசியக் காவலர் படையும் கொடுக்கப்படுகின்றன. ''சமூகத்தின் அரண்'' பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். அதனால் கூரையிலிருந்து ஓடுகள் சரிந்து விழுந்து விடவில்லை. ஆனால் இதற்கு மாறுகப் பங்கு மார்க்கெட்டில் விலைப் புள்ளிகள் மேலே ஏறுகின்றன.

என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஷன் கார்னியே உருவத்தில் வந்த இராணுவத்தை ஒதுக்கி, அதன் மூலம் இராணுவத்தை ஜனாதிபதியிடம் மாற்ற முடியாத படி சரணடையச் செய்துவிட்டபடியால், முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி செய்வதற்குரிய தகுதியை இழந்துவிட்டது என்பதை ஒழுங்குமுறைக் கட்சி அறிவித்துக் கொண்டது. ஒரு நாடாளுமன்ற மந்திரிசபை இனிமேல் இருக்காது. இராணுவத்தின் மீதும் தேசியக் காவலர் படை மீதும் தன்னுடைய பிடியை இப்பொழுது உண்மையிலேயே இழந்த பிறகு, நாடாளுமன்றம் தனது அபகரிக்கப்பட்ட அதிகாரத்தை மக்கள் மீதும் அரசியலமைப்புச் சட்ட அதிகாரத்தை ஜனாதிபதி மீதும் ஒரே சமயத்தில் தொடர்ந்து செலுத்துவதற்குப் பலாத்காரமான வழிகள் அதற்கு இனியும் உண்டா? ஒன்றுமில்லை. வலுவில்லாத கோட்பாடுகளின் பெயரில் அறைகூவிக் கொண்டிருக்கலாம். இந்தக் கோட்பாடுகளையும் கூட அது எப்பொழுதுமே பொதுப்படையான விதிகள்—தான் அதிகச் சுலபமாகச் செயல்படுவதற்காக மற்றவர்களுக்கு விதிப்பவை—என்று தானே அது விளக்கி

வந்திருக்கிறது. ஷன்கர்னியேயின் பதவி நீக்கமும் போன பார்ட்டிடம் இராணுவ அதிகாரம் மாறுவதும் நாம் ஆராய் கின்ற காலகட்டத்தின் முதற் பகுதியை, ஒழுங்குமுறைக் கட்சிக்கும் நிர்வாக அதிகாரத்துக்கும் போராட்டம் நடை பெற்ற காலத்தை முடிவுக்குக் கொண்டுவருகிறது. இந்த இரண்டு ஆட்சியதிகாரங்களும் இப்பொழுது பகிரங்க மாகப் போர் அறிவிப்புச் செய்துவிட்டன; எல்லோருடைய கண்களுக்கும் முன்பாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனல் ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய ஆயுதங்களையும் துருப்புக்களையும் இழந்த பிறகுதான் இது நடந்தது. தேசிய சபை மந்திரிசபை இல்லாமல், இராணுவம் இல்லாமல், மக்கள் இல்லாமல், பொது மக்கள் கருத்தின் ஆதரவு இல்லா மல், மே 31ந் தேதிய தேர்தல் சட்டத்துக்குப் பிறகு சுயவுரிமை கொண்ட தேசத்தின் பிரதிநிதியாக இருக்க முடி பாமல், கண்கள், காதுகள், பற்கள் இல்லாமல், எதுவுமே இல்லாமல், அது அரசாங்கத்திடம் செயல் சுதந்திரத்தை ஒப்படைத்துவிட்டு காலம் முடிந்த பிறகு (post festum*) கண்டனம் செய்வதோடு திருப்தியடைந்த பழங்காலத்து பிரெஞ்சு பாராளுமன்றத்தைப்[57] போல அது படிப்படி யாக மாறிவிட்டது.

ஒழுங்குமுறைக் கட்சி புதிய மந்திரிசபையைக் கோபா வேசத்தோடு வரவேற்கிறது. நாடாளுமன்றத்தின் ஓய்வுக் காலத்தின் போது நிரந்தரக் கமிஷன் எவ்வளவு பணிவுடன் நடந்து கொண்டது, தன்னுடைய கூட்டக் குறிப்புகளை வெளி யிடுவதையும் விட்டுக் கொடுத்து மிகவும் அதிகமான மரி யாதை காட்டியது என்று ஜெனரல் பெடோ நினைவுகூர்ந் தார். உள்துறை அமைச்சரே அந்தக் கூட்டக் குறிப்புகளை வெளியிடுமாறு வற்புறுத்துகிறார். ஆனல் இவ்வளவு காலம் கழிந்த பிறகு அது பழங்கஞ்சியைப் போல ஆறிப்போய் விட்டது. அதில் புதிய விவரங்கள் ஏதுமில்லை. வெறுப்புத் தட்டிப் போன பொது மக்கள் மீது மிகவும் குறைவான பாதிப்பைக்கூட அது ஏற்படுத்தவில்லை. ரெமூஸாவின்

---

* —விருந்து முடிவடைந்த பிறகு.—ப-ர்.

பிரேரணையின்படி தேசிய சபை தன்னுடைய குழுக்களில் விவாதித்து, ''அசாதாரணமான நடவடிக்கைகளுக்கான கமிட்டி'' ஒன்றை நியமிக்கிறது. பாரிஸ் நகரம் தன்னுடைய அன்றாட வாழ்க்கைத் தடத்திலிருந்து சிறிதளவு கூட விலக வில்லை. ஏனென்றால் இந்த நேரத்தில் வர்த்தகம் சுபிட்சமாக இருக்கிறது; தொழிற்சாலைகள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கின்றன; தானிய விலைகள் குறைவாக இருக் கின்றன; உணவுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன; சேமிப்பு வங்கிகளில் நாள்தோறும் புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுப் பணம் போட்டு வைக்கப்படுகிறது. நாடாளுமன்றம் மிகவும் ஆரவாரமாக அறிவித்த ''அசா தாரண நடவடிக்கைகள்'' ஜனவரி மாதம் 18ந் தேதியன்று மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவந்த தோடு புஸ்ஸென்று போய்விடுகின்றன. அந்தத் தீர்மானத் தில் ஷன்கர்னியேயின் பெயரைக் கூட விட்டுவிட்டார் கள். குடியரசுவாதிகளின் வாக்குகளைப் பெற வேண்டு மென்பதற்காகவே ஒழுங்குமுறைக் கட்சி தீர்மானத்தின் வாசகத்தை இப்படி அமைத்திருந்தது. ஏனென்றால் மந்திரி சபையின் எல்லா நடவடிக்கைகளிலும், ஷன்கர்னியேயின் பதவி நீக்கம் ஒன்றை மட்டும்தான் குடியரசுவாதிகள் ஆதரித்தனர். மந்திரி சபையின் மற்ற நடவடிக்கைகளைக் கண்டனம் செய்யக் கூடிய நிலையில் ஒழுங்குமுறைக் கட்சி இல்லை. ஏனென்றால் அந்தக் கட்சி சொல்லித்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஜனவரி மாதம் 18ந் தேதிய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 415 வாக்குகளும் எதிர்ப்பாக 286 வாக்குகளும் கிடைத்தன. நம்பிக்கை இல்லாத் தீர்மா னம் நிறைவேறியது. தீவிர முறைமைவாதிகள், ஆர்லேயா னிஸ்டுகள் ஆகியோர் பரிசுத்தமான குடியரசுவாதிகளோ டும் மலைக் கட்சியினரோடும் கூட்டுச் சேர்ந்ததனால்தான் அது நிறைவேறியது. ஒழுங்குமுறைக் கட்சி போனபார்ட்டுடன் மோதிக் கொண்டதன் விளைவாக, அது மந்திரி சபை யையும் இராணுவத்தையும் இழந்தது மட்டுமல்லாமல், தன்னுடைய சுயேச்சையான நாடாளுமன்றப் பெரும்பான்

மையையும் இழந்துவிட்டது என்பது நிரூபிக்கப்பட்டது. அதன் முகாமிலிருந்து ஒரு கோஷ்டியே வெளியேறிவிட்டது. இவர்கள் சமரசம் வேண்டும் என்ற வெறியினால், போராட்டத்தைக் கண்டு பயந்ததனால், பலவீனமான உணர்ச்சிக்கு உட்பட்டிருந்தபடியால், அவர்களுக்கு மிகவும் அவசியமான அரசாங்க சம்பளத்தை இழந்துவிடக் கூடாது என்ற குடும்ப ஆசையினால், மந்திரி பதவிகள் காலியாவதனால் ஏற்படும் ஊகங்களினால் (ஒடிலோன் பரோ), சாதாரண முதலாளிகளை ஏதாவதொரு தனிப்பட்ட நோக்கத்துக் காகத் தன்னுடைய வர்க்கத்தின் பொது நன்மையைப் பலியிடுவதற்கு உடன்படச் செய்கின்ற வெறும் அகந்தை யினால் கட்சியிலிருந்து வெளியேறினார்கள். ஆரம்பத்தி லிருந்தே போனபார்ட் பிரதிநிதிகள் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில் மட்டுமே ஒழுங்குமுறைக் கட்சியோடு சேர்ந்திருந்தார்கள். கத்தோலிக்கக் கட்சியின் தலைவரான மான்டலம்பேர், நாடாளுமன்றக் கட்சியின் ஆயுளைப் பற்றி அவநம்பிக்கை கொண்டு அன்றைக்கே போனபார்ட் பக்க மாகத் தன்னுடைய செல்வாக்கைத் திருப்பியிருந்தார். கடைசியில் இந்தக் கட்சியின் தலைவர்களான தியேரும் பெரியேயும், ஆர்லேயானிஸ்டும் முறைமைவாதியும், தாங் கள் குடியரசுவாதிகள் என்று பகிரங்கமாக அறிவிக்க வேண் டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களுடைய இதயங்கள் அரசபரம்பரைக்கு ஆதரவாக இருந்த போதிலும் தலைகள் குடியரசை ஆதரிப்பதாக, முதலாளித்துவ வர்க்கத்தினர் ஒரு மொத்தமாக ஆட்சி புரிவதற்குச் சாத்தியமான அரசு வடிவம் நாடாளுமன்றக் குடியரசு ஒன்றுதான் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படி அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் கண்களுக்கு முன் பாகவே மறுவருகைத் திட்டங்களைக் கண்டனம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் இந்தத் திட்டங்களை நாடாளுமன்றத்தின் முதுகுக்குப் பின்னால் சிறிது கூடச் சோர்வடையாமல் செய்து கொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்ச்சி எவ்வளவு முட்டாள்தனமானதோ அவ்வளவு ஆபத் தானதாகவும் இருந்தது.

ஜனவரி 18ந் தேதிய நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மந்திரிகளைத் தாக்கியதே தவிர, ஜனாதிபதியைத் தொட வில்லை. ஆனால் ஷங்கர்னியேயைப் பதவியிலிருந்து நீக்கி யது மந்திரிசபை அல்ல ஜனாதிபதியே. ஒழுங்குமுறைக் கட்சி போனபார்ட் மீதே குற்றஞ் சாட்டலாமா? அவர் முடியாட்சி முறையை மறுபடியும் ஏற்படுத்த விரும்பியதற்காகவா? ஆனால் அவருக்கிருக்கும் ஆசையைத்தானே அதுவும் கொண் டிருக்கிறது. இராணுவ அணிவகுப்புகளைப் பற்றியும் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தைப் பற்றியும் அவர் செய் திருக்கும் சதிகளைச் சொல்லலாமா? ஆனால் இந்த விஷயங் களைத்தான் ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய சாதாரண அன்றாட நடவடிக்கைகளின் குவியலில் புதைத்து எவ் வளவோ காலமாகி விட்டதே. ஜனவரி 29, ஜூன் 13 ஆகிய தினங்களின் விரோ, 1850ம் வருடம் மே மாதத்தில் பாரிஸ் நகரத்தில் கலகம் ஏற்படுமானால், அதன் நான்கு பகுதிகளை யும் தீ வைத்துக் கொளுத்துவேன் என்று பயமுறுத்திய மனி தனைப் பதவியிலிருந்து நீக்கியதற்காகவா? கீழே விழுந்து கிடந்த ''சமூகத்தின் அரணுக்கு'' அதிகார பூர்வமாக அனுதா பம் தெரிவித்து அவரை மேலே தூக்கி நிறுத்துவதற்குக் கூட அந்தக் கட்சியின் நேச சக்திகளான மலைக் கட்சியும் கவெனாக்கும் அதனை அனுமதிக்கவில்லை. ஒரு ஜெனரலைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு அரசியல மைப்புச் சட்டம் அதிகாரம் கொடுத்திருப்பதை அதனாலும் மறுக்க முடியவில்லை. அரசியலமைப்புச் சட்டம் கொடுத் திருக்கும் உரிமையை ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு விரோதமான வகையில் பயன்படுத்தியதுதான் அதற்கு ஆவேசத்தைக் கொடுத்தது. அது தனது நாடாளுமன்ற தனி உரிமைகளைத் தொடர்ச்சியாக அரசியலமைப்புச் சட்டத் துக்கு விரோதமாகப் பயன்படுத்தவில்லையா? குறிப்பாக, பொதுவான வாக்குரிமையை ஒழித்த விவகாரத்தை மறக்க முடியுமா? எனவே அது திட்டவட்டமான நாடாளுமன்ற எல்லைகளுக்குள்ளாக மட்டுமே செயலாற்ற வேண்டிய நிலையில் இருந்தது. 1848ம் வருடத்திலிருந்து ஐரோப்பாக் கண்டம் முழுவதும் நாடாளுமன்ற அறிவு மந்தம் [parliamen-

tary cretinism] என்ற தனிவகையான நோய் வேக மாகப் பரவி விட்டது. இந்த நோய் தொற்றிக் கொள்பவர் கள் மிக வேகமாக அறிவை இழந்து, நினைவாற்றலை இழந்து, முரட்டுத்தனம் நிறைந்த வெளியுலகத்தைப் பற்றி எல்லா விதமான தெளிவையும் பறிகொடுத்துவிட்டு ஒரு கற்பனையான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அறிவு மந்த நோய் இவர்களைப் பற்றிக் கொண்டது. ஒழுங்கு முறைக் கட்சி தனது கைகளாலேயே நாடாளுமன்ற பலம் ஓங்கக் கூடிய நிலைமைகளை ஒழித்தது, மற்ற வர்க்கங் களோடு அது நடத்துகின்ற போராட்டத்தின் காரணமாக இந்த நிலைமைகளை ஒழிக்கக் கடமைப்பட்டது; அது தனது நாடாளுமன்ற வெற்றிகளை வெற்றிகள் என்று கருதுவதும் மந்திரிகளைக் குத்தியதன் மூலம் ஜனாதிபதியைத் தாக்கிவிட்ட தாக நம்புவதும் இந்த நோயினால் ஏற்பட்ட விளைவாகும். அது செய்ததெல்லாம் தேசத்தின் கண்களுக்கு முன்பாக ஜனாதிபதி தேசிய சபையை அவமதிப்பதற்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியதுதான். ஜனவரி மாதம் 20ந் தேதியன்று Moniteur பத்திரிகை மொத்த மந்திரி சபையின் பதவி விலகலும் அங்கீகரிக்கப்பட்டு விட்டதென்று அறிவித்தது. நாடாளுமன்றத்திலுள்ள எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை தற்சமயம் இல்லையென்றும்—அரசவம்ச வாதிகளுக்கும் மலைக் கட்சிக்கும் ஏற்பட்ட கூட்டணியின் கனியான ஜனவரி 18ந் தேதி வாக்கெடுப்பு இதை நிரூபித் தது—ஆகவே புதிய பெரும்பான்மை ஏற்படுகிற வரை காத் திருக்க வேண்டும் என்றும் சாக்கு சொல்லி, போனபார்ட் இடைக்கால மந்திரிசபை என்று சொல்லப்பட்ட ஒன்றை நியமித்தார். அந்த மந்திரிசபையில் ஒருவர் கூட நாடா ளுமன்ற உறுப்பினரல்லர். அவர்கள் அனைவருமே முற்றி லும் அறிமுகம் இல்லாதவர்கள்; எந்த விதமான முக்கியத்துவமும் இல்லாதவர்கள். அது குமாஸ்தாக்களையும் அற்பமானவர்களையும் கொண்ட மந்திரிசபையாகும். இப் பொழுது ஒழுங்குமுறைக் கட்சி இந்தப் பொம்மைகளை வைத்துக் கொண்டு கூத்தாடுகிற வரை விளையாடலாம். தேசிய சபையில் தனக்கு முக்கியமான பிரதிநிதித்துவம்

இருப்பது இனியும் அவசியமானதாக நிர்வாக அதிகாரம் கருதவில்லை. போனபார்ட்டின் மந்திரிகள் எந்த அளவுக்கு உண்மையான பொம்மைகளாக இருந்தார்களோ அந்த அளவுக்கு போனபார்ட் நிர்வாக அதிகாரம் முழுவதையும் தன்னிடம் வெளிப்படையாகவே குவித்துக் கொண்டார்; தன்னுடைய சொந்த நலன்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிற வாய்ப்பும் அவருக்கு அதிகமாயிற்று.

டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர் தன்னுடைய மந்திரி சபையாகிய குமாஸ்தாக்களை நிர்ப்பந்தித்துத் தனக்குப் 18,00,000 பிராங்குகள் மானியம் கொடுப்பதற்காக ஒரு பிரேரேபணையைக் கொண்டுவருமாறு செய்திருந்தார். ஒழுங்குமுறைக் கட்சி மலைக் கட்சியோடு சேர்ந்து இந்தப் பிரேரேபணையைத் தோற்கடித்துப் பழிவாங்கியது. இந்தத் தடவை 102 வாக்குகள் பெரும்பான்மை மட்டுமே விஷயத்தை முடிவு செய்தது. எனவே ஜனவரி 18ந் தேதி கிடைத்த வாக்குகளில் 27 புதிய வாக்குகள் இப்பொழுது கிடைக்காமற் போய்விட்டன. ஒழுங்குமுறைக் கட்சி தன்னைக் கலைத்துக் கொள்ளும் நாளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் தனக்கும் மலைக் கட்சிக்கும் உள்ள கூட்டணியின் தன்மையைப் பற்றி எத்தகைய தப்பான அபிப்பிராயமும் கண நேரத்துக்குக்கூட ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக, அரசியல் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பளிக்க வேண்டுமென்று மலைக் கட்சியின் 189 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுத் தந்த பிரேரேபணையை அலட்சியப்படுத்தி கவனிக்க மறுத்தது. உள்துறை அமைச்சர், வயீஸ் என்ற பெயர் கொண்ட ஒருவர் தேசம் பார்ப்பதற்குத்தான் அமைதியாக இருக்கிறது, இரகசியமாகப் பெரும் கிளர்ச்சி வளர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இரகசியச் சங்கங்கள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன, ஜனநாயகப் போக்குள்ள பத்திரிகைகளை மறுபடியும் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன, பிராந்தியங்களிலிருந்து வந்திருக்கும் தகவல்கள் சாதகமாக இல்லை, ஜினீவாவில் உள்ள அகதிகள் லியோன் வழியாகப் பிரான்சின் தென் பகுதி

முழுவதும் ஒரு சதியைத் திட்டமிட்டு நடத்திக் கொண்டிருக் கிறார்கள், பிரான்ஸ் தொழில், வர்த்தக நெருக்கடியின் தருவாயிலிருக்கிறது, ரூபே நகரத்து உற்பத்தியாளர்கள் வேலை நேரத்தைக் குறைத்து விட்டார்கள், பெல் தீவில்[58] கைதிகள் கலகம் செய்கிறார்கள் என்றார். கேவலம் ஒரு வயீஸ் கூட இம்மாதிரியாக சிகப்புப் பேயைப் பூச்சாண்டி காட்டுவது போதுமானதாகும். உடனே தேசிய சபைக்கு மிகவும் அதிகமான செல்வாக்கைத் திரட்டித் தரக்கூடிய, போனபார்ட் மறுபடியும் சபையின் அரவணைப்பில் வரு மாறு செய்யக் கூடிய தீர்மானத்தை ஒழுங்குமுறைக் கட்சி விவாதம் கூட இல்லாமல் நிராகரித்தது. புதிதாகக் கலவரங்கள் ஏற்படக் கூடும் என்பதைச் சுட்டிக் காட்டிய நிர்வாக அதிகாரத்தைக் கண்டு அது பயந்து போனதற்குப் பதிலாக, வர்க்கப் போராட்டம் நடைபெறுவதற்குச் சிறிதளவு கூடுதலான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண் டும். அப்படிச் செய்திருந்தால் நிர்வாக அதிகாரம் அதனைச் சார்ந்தே இருந்திருக்கும். ஆனால் நெருப்போடு விளையாடு கின்ற அளவுக்கு அதற்குச் சக்தி இல்லை.

இதற்கிடையில் இடைக்கால மந்திரிசபை என்று சொல்லப்பட்டதானது ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதி வரைக்கும் சோம்பேறி வாழ்க்கை நடத்தியது. போனபார்ட் தொடர்ச்சியாகப் புதுப்புது வகைகளில் மந்திரிசபைக் கூட்டு களை ஏற்படுத்தி தேசிய சபைக்குக் களைப்பை உண்டாக்கி அதற்கு முட்டாள் பட்டம் சூட்டினார். அவர் ஒரு சமயத் தில் லமார்ட்டீன், பியோ ஆகியோரைக் கொண்டு குடி யரசுவாதிகளின் மந்திரிசபையை அமைக்க விரும்புவது போலத் தோன்றும். அடுத்த சமயத்தில், தவிர்க்க முடி யாத ஒடிலோன் பரோவைக் கொண்டு—ஒரு ஏமாளி வேண்டுமென்றால் இவர் பெயரை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது—நாடாளுமன்ற மந்திரிசபையும், வட்டிமேனில், பெனுவா ட அசி ஆகியோரைக் கொண்ட முறைமைவாதி களின் மந்திரிசபையும், மால்வீல் இடம் பெறும் ஆர்லேயா னிஸ்டு மந்திரிசபையும்—இப்படி வெவ்வேறு விதங்களில் மந்திரிசபை அமைக்க விரும்புவது போலத் தோன்றும்.

போனபார்ட் இப்படி ஒழுங்குமுறைக் கட்சியின் வெவ்வேறு கோஷ்டிகளை ஒன்றுக்கொன்று எதிர்ப்பதற்குத் தயாரான நிலையில் பரபரப்போடு வைத்திருந்தார்; குடியரசு மந்திரி சபை ஏற்பட்டுவிடுமோ, அதன் மூலம் பொதுவான வாக்குரிமை தவிர்க்க முடியாத வகையில் மறுபடியும் கொடுக்கப் படுமோ என்ற பீதியில் அவர்களை வைத்திருந்தார். அதே சமயத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் மத்தியில் ஒரு நாடாளுமன்ற மந்திரிசபையை ஏற்படுத்துவதற்காக அவர் செய்கின்ற நேர்மையான முயற்சிகள் அரசவம்ச வாதக் கோஷ்டிகளின் தீர்க்க முடியாத வேறுபாடுகளினால் நிறைவேறாமல் போகின்றன என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தினர். எனினும் முதலாளித்துவ வர்க்கம் ''பலமான அரசாங்கம்'' வேண்டுமென்று மேலும் உரத்த குரலில் சத்தமிட்டது. ஒரு பொதுவான வர்த்தக நெருக்கடி நெருங்கி வந்து கொண்டிருப்பது மாதிரித் தோன்றியதனால் நகரங்களில் சோஷலிசத்துக்கு ஆதரவாகப் பலர் சேர்ந்தார்கள்; தானிய விலை அழிவை உண்டாக்கக் கூடிய அளவுக்கு வீழ்ச்சியடைந்ததும் கிராமப்புறங்களில் இதே மாதிரியான விளைவை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட நேரத்தில் பிரான்சில் ''நிர்வாகம் இல்லாத'' ஒரு நிலைமை ஏற்படுவதை மிகவும் மன்னிக்க முடியாததாக முதலாளித்துவ வர்க்கம் கருதியது. நாளுக்கு நாள் வர்த்தகத்தில் மந்தமான நிலைமை ஏற்பட்டது; வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகரிப்பதை சாதாரணமாகப் பார்க்க முடிந்தது. பாரிஸ் நகரத்தில் மட்டும் குறைந்த பட்சம் பத்தாயிரம் தொழிலாளர்கள் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல் இருந்தார்கள். ரூவான், முலூஸ், லியோன், ரூபே, துர்க்குவேன், சென்ட் எட்டியேன், எல்பாபே ஆகிய நகரங்களிலும் மற்ற இடங்களிலும் எண்ணற்ற தொழிற்சாலைகள் மூடியிருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையினால் ஜனவரி 18ந் தேதி மந்திரிசபையை ஏப்ரல் 11ந் தேதியன்று மீண்டும் பதவியிலமர்த்துவதற்கு போனபார்ட் துணிந்தார். திருவாளர்கள் ரூயே, புல்ட், பரோஷ் முதலியோருடன் லியோன் பொஷேயையும் கூடுதலாகச் சேர்த்துப் பதவியிலமர்த்தினர். அரசியல்

நிர்ணய சபை தன்னுடைய கடைசி நாட்களில் பொய்யான தந்திகளை அனுப்பியதற்காக இந்த பொஷே மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை—அமைச்சர்களின் ஐந்து வாக்குகளைத் தவிர — ஏகமனதாக நிறைவேற்றிக் கண்டனம் செய்தது. எனவே ஜனவரி 18ந் தேதியன்று தேசிய சபை மந்திரிசபைக்கு எதிராக வெற்றியடைந்தது; போனபார்ட்டோடு மூன்று மாத காலம் சண்டையிட்டுக் கடைசியில் என்ன பலன் ஏற்பட்டதென்றால், புல்டும் பரோஷும் ஏப்ரல் 11ந் தேதியன்று பரிசுத்தவாதியான பொஷேயைத் தங்களுடைய மந்திரிசபைக் கூட்டணியில் மூன்றுவது நபராகச் சேர்த்துக் கொண்டார்கள்.

1849ம் வருடம் நவம்பர் மாதத்தில் போனபார்ட் நாடாளுமன்றத்தைச் சேராத மந்திரிசபையை அமைப்பதோடு திருப்தியடைந்தார். 1851ம் வருடம் ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்துக்குப் புறம்பான மந்திரிசபையை அமைத்தார். ஏப்ரல் மாதம் 11ந் தேதியன்று நாடாளுமன்றத்துக்கு விரோதமான மந்திரிசபையை அமைக்கிற அளவுக்குத் தமக்கு பலமிருப்பதாகக் கருதினார். இந்த மந்திரிசபை அரசியல் நிர்ணய சபை, சட்டமன்றம்—முன்னது குடியரசுவாதிகளுக்கும் பின்னது அரசவம்சவாதிகளுக்கும் ஆதரவானது—ஆகிய இரண்டின் நம்பிக்கை இல்லா வாக்குகளையும் பொருத்தமாகத் தன்னிடம் சேர்த்துக் கொண்டிருந்தது. மந்திரிசபைகளின் இந்தக் கீழ்நிலை இறக்கம் நாடாளுமன்றத்தின் ஜீவாதாரமான உடல் வெப்பத்தை அளந்து காட்டுகின்ற வெப்பமானியாகும். ஏப்ரல் மாதக் கடைசியில் பெர்சினியீ ஒரு தனிப் பேட்டியில் ஷன்கர்னியேயை ஜனாதிபதியின் முகாமுக்குப் போய்விடுமாறு ஆலோசனை சொல்லுகிற அளவுக்கு வெப்பம் கீழே போய்விட்டது. தேசிய சபையின் செல்வாக்கை முழுமையாக ஒழித்துவிட்டதாக போனபார்ட் கருதுவதாகவும் திடீர்ப் புரட்சிக்குப் பிறகு வெளியிடுவதற்காக ஒரு பிரகடனம் முன்பே தயாரிக்கப் பட்டுவிட்டதாகவும், அவர் ஷன்கர்னியேயிடம் உறுதியளித்தார். எப்பொழுதும் ஜனாதிபதி திடீர்ப் புரட்சியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதாகவும், ஏதோ சில

காரணங்களால் அது மறுபடியும் ஒத்திவைக்கப்பட்டிருப் பதாகவும் தெரிவித்தார். இந்த மரண அறிவிப்பைப் பற்றி ஒழுங்குமுறைக் கட்சியின் தலைவர்களுக்கு ஷன்கர்னியே தகவல் கொடுத்தார். ஆனல் மூட்டைப் பூச்சி கடித்தால் உயிருக்கு ஆபத்து என்று யாரும் நினைப்பதில்லையே. நாடா ளுமன்றம் நோய்வாய்ப்பட்டு, சின்னபின்னமாகச் சிதறிப் போய், அழுகிப் போன நிலையில் இருந்தபடியால், டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் கோமாளித் தலைவரோடு தான் நடத்தும் சண்டை, ஒரு மூட்டைப் பூச்சியோடு நடத்தும் சண்டை என்பதைத் தவிர வேறு விதமாக நினைக்கவில்லை. ஆனல் அகீஸ் மன்னனிடம் அகெசிலஸ் சொன்ன பதிலை போனபார்ட் ஒழுங்குமுறைக் கட்சியிடம் சொன்னர்:

"என்னை எறும்புதானே என்று நீ நினைக்கலாம்; ஆனல் ஒரு நாள் நான் சிங்கமாக மாறுவேன்."[59]

VI

ஒழுங்குமுறைக் கட்சி தனது இராணுவ ஆதிக்கத்தை நீடிக்கச் செய்யவும் நிர்வாக அதிகாரத்தில் தலைமையான நிலையை மறுபடியும் கைப்பற்றுவதற்கும் மேற்கொண்ட பலனில்லாத முயற்சிகளினுல் அந்தக் கட்சி மலைக் கட்சி யோடும் பரிசுத்தக் குடியரசுவாதிகளோடும் கூட்டணி வகுக்க வேண்டியிருந்தது. அந்தக் கட்சி தன்னுடைய சுயேச்சையான நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்து விட்டது என்பதை மறுக்க முடியாதபடி நிரூபித்தது. மே மாதம் 28ந் தேதி, வெறும் காலத்தின், கடிகார முள்ளின் அதிகாரம் அது முற்றிலும் சிதறிப்போவதற்கு அறிவிப்புச் செய்தது. மே மாதம் 28ந் தேதியன்று தேசிய சபையின் வாழ்க்கையின் கடைசி வருடம் ஆரம்பமாயிற்று. அரசியல மைப்புச் சட்டத்தை எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து வைத்துக் கொள்வதா அல்லது திருத்தியமைத்துக் கொள் வதா என்பதைப் பற்றி அது இப்பொழுது முடிவு செய்ய வேண்டும். அரசியலமைப்பு சட்டத் திருத்த விவகாரத்தில் ஆட்சி செய்வது முதலாளித்துவ வர்க்கமா அல்லது குட்டி முதலாளித்துவ ஜனநாயகமா, ஜனநாயகமா அல்லது பாட்

டாளி வர்க்க அராஜகமா, நாடாளுமன்றக் குடியரசா அல்லது போனபார்ட்டா என்பவை பொதிந்திருந்ததோடு, ஆர்லேயானு அல்லது பூர்போனு என்பதும் சேர்ந்திருந்தது. ஒழுங்கு முறைக் கட்சியிலிருந்த பல கோஷ்டிகளின் வெவ் வேறான நலன்களே அவற்றை விரோதமான கோஷ்டிகளாகப் பிரித்துவைத்திருந்தன. அந்த வெவ்வேறான நலன்களை பகிரங்கமாகத் தூண்டிவிடக் கூடிய வகையில் நாடாளு மன்றத்தின் நடுவே வேற்றுமைக் கனி விழுந்தது. ஒழுங்கு முறைக் கட்சி என்பது பல்வேறான சமூக சக்திகளின் சேர்க் கையாகும். அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் பற்றிய பிரச்சினை ஏற்படுத்திய அரசியல் வெப்பத்தில் அந்தச் சேர்க்கை தனித்தனி மூலப் பகுதிகளாக மறுபடியும் பிரிந்து விட்டது.

போனபார்ட் ஆதரவாளர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த விரும்பிய காரணம் மிக எளிமையான தாகும். அதன் 45வது ஷரத்து போனபார்ட் மீண்டும் ஜனாதி பதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதையும் அவருடைய ஆட்சி தொடர்வதையும் தடை செய்தபடியால் அந்த ஷரத்தை ரத்துச் செய்வதை வேறு எல்லாவற்றையும் காட்டிலும் மிக முக்கியமானதாக அவர்கள் கருதினர்கள். குடியரசு வாதிகளின் நிலையும் இதைப் போலவே எளிமையாக இருந் தது. அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்து வதை எத்தகைய நிபந்தனைகளுமின்றி நிராகரித்தார்கள்; அப்படிப்பட்ட முயற்சி குடியரசுக்கு எதிரான சர்வ வியா பகமான சதி என்பது அவர்களின் கருத்தாகும். தேசிய சபையில் கால்பங்குக்கு அதிகமான வாக்குகள் அவர்களிட மிருந்தன. அரசியலமைப்புச் சட்டத்தின்படி அதைத் திருத்து வதற்கும் அவ்வாறு செய்வதற்காக சபையைக் கூட்டு வதற்கும் கொண்டுவரப்படும் தீர்மானம் நான்கில் மூன்று பங்கு வாக்குகளைப் பெற்றுல்தான் அது சட்டபூர்வமாகச் செல்லும். அவர்கள் தங்களுடைய வாக்குகளை எண்ணி வெற்றி நிச்சயம் என்று முடிவு செய்துவிடலாம். தங்கள் வெற்றி நிச்சயமானது என்று அவர்கள் உறுதியோடிருந் தார்கள்,

இப்படிப்பட்ட தெளிவான நிலைகளுக்கு எதிராக ஒழுங்குமுறைக் கட்சி தீர்க்கப்பட முடியாத முரண்பாடுகளில் சிக்கியிருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதை நிராகரித்தால், இதுகாறும் இருந்த நிலைக்கு ஆபத்தை ஏற் படுத்தும். ஏனென்றால் போனபார்ட்டுக்கு ஒரே வழி, அதா வது வன்முறை மட்டுமே மிஞ்சும். 1852ம் வருடம் மே மாதத்தில் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையன்று, தீர்மான மான தருணத்தில், தன்னுடைய அதிகாரத்தை ஜனாதிபதி இழந்துவிட்ட நிலையில், நெடுங்காலமாகவே அதிகாரத்தை வகிக்காத நாடாளுமன்றம் இருந்த நிலையில், மக்கள் தாங் கள் இழந்த அதிகாரத்தை மறுபடியும் பெற விரும்பும் சூழ்நிலையில் அது பிரான்சைப் புரட்சிகரமான அராஜகத் திடம் ஒப்படைக்க வேண்டியிருக்கும். அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் அந்த முயற்சி வீணாகிவிடும் என்பது அதற்குத் தெரியும். குடியரசு வாதிகளின் ரத்து அதிகாரத்தினால் அது சட்டப்படி தோல் வியடையும். அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான வகையில் சாதாரணமான பெரும்பான்மையே செல்லக் கூடியதுதான் என்று அது அறிவிக்குமானால், நிர்வாக அதி காரத்தின் ஆதிக்கத்துக்கு அது நிபந்தனையில்லாத வகையில் தன்னைக் கீழ்ப்படுத்திக் கொண்டால்தான் புரட்சியின் மீது வெற்றி பெற முடியும்; அவ்வாறு செய்தால் அரசியலமைப்புச் சட்டத்தையும் அதைத் திருத்துவதையும் கடைசியாகத் தனது தலைவிதியையும் அக்கட்சி போனபார்ட்டின் அருளுக்கு விட்டுவிட வேண்டியதுதான். ஜனாதிபதியின் அதிகாரத்தை நீடிக்கக் கூடிய வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை அரைகுறையாகத் திருத்தினால், அது போனபார்ட் வரம் பில்லா ஆதிக்கத்தைப் பெறுவதற்கு வழி வகுக்கும். குடியரசின் ஆயுளைக் குறைக்கும் வகையில் பொதுப்படை யாக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தினால் அரச குடும்பங்களின் கோரிக்கைகளுக்காக வெவ்வேறு கோஷ்டி கள் மோதிக் கொள்வது தடுக்க முடியாததாகிவிடும். ஏனென்றால் பூர்போன் மறுவருகைக்கான நிலைமைகளும் ஆர்லேயான் மறுவருகைக்கான நிலைமைகளும் வெவ்வேறாக

இருந்தது மட்டுமல்ல, ஒன்று மற்றொன்றைப் பரஸ்பரம் விலக்கி வைப்பதாகவும் இருந்தது.

பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் இரண்டு பிரிவுகளான முறைமைவாதிகளும் ஆர்லேயானிஸ்டுகளும், பெரும் நிலவுடைமையும் தொழிலும், சமத்துவமான உரிமைகளோடு ஒருவருக்குப் பக்கத்தில் மற்றொருவர் வசிப்பதற்கும் செயல்படுவதற்கும் வாய்ப்பு தருகின்ற நடுநிலைப் பிரதேசத்துக்கும் மேலானது நாடாளுமன்றக் குடியரசு. அவர்களுடைய பொதுவான ஆதிக்கத்தின் தடுக்கமுடியாத நிலைமை அது; தங்களது தனிப்பட்ட கோஷ்டிகளின் கோரிக்கைகளையும் சமூகத்தின் மற்ற வர்க்கங்களையும் தங்களுக்குக் கீழ்ப்படிய வைத்த அவர்களுடைய பொதுப்படையான வர்க்க நலனின் ஒரே அரசு வடிவம் அது. அரசவம்சவாதிகள் என்ற முறையில் அவர்கள் தங்களுடைய பழைய முரண்பாடுகளில், தலைமை வகிப்பது நிலவுடைமையா அல்லது பணமா என்ற போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய தனித்தனியான அரசர்களும், அவர்களுடைய அரச குடும்பங்களும் இந்த முரண்பாட்டின் உயர்ந்த வெளிப்பாடாக, அதன் உருவகமாக இருந்தார்கள். எனவேதான் பூர்போன்கள் திரும்ப வருவதை ஒழுங்குமுறைக் கட்சி எதிர்த்தது.

அரச குடும்பங்களை நாடுகடத்திய அரசாணையை ரத்துச் செய்ய வேண்டுமென்று கோரும் தீர்மானத்தை ஆர்லேயானிஸ்டும் மக்களின் பிரதிநிதியுமான கிரெட்டோன் 1849, 1850, 1851ம் வருடங்களில் திரும்பத் திரும்பக் கொண்டுவந்தார். அரசவம்சவாதிகளைக் கொண்ட சபை நாடுகடத்தப்பட்ட அரசர்கள் வீட்டுக்குத் திரும்பக்கூடிய கதவை விடாப்பிடியாகச் சாத்தி வைத்திருக்கும் நாடகம் நாடாளுமன்றத்தில் திரும்பத் திரும்ப நடைபெற்றது. மூன்றாம் ரிச்சர்ட் ஆறாவது ஹென்ரியைக் கொலை செய்த பொழுது, அவர் இந்த உலகத்தில் வாழ முடியாத அளவுக்கு நல்லவர்; எனவே அவர் விண்ணுலகத்துக்குப் போவதே சரியானது என்றாராம். அரசவம்சவாதிகளும், தங்கள் அரசர்களை மீண்டும் ஏற்றுக்கொள்வதற்கு பிரான்ஸ் தகுந்த

நாடு அல்ல என்று அறிவித்தார்கள். அவர்கள் சூழ்நிலை நிர்ப்பந்தத்தால் குடியரசுவாதிகளானார்கள். பிரான்சிலிருந்து அரசர்களை நாடுகடத்திய பொதுமக்களின் முடிவைத் திரும்பத் திரும்ப அங்கீகரித்தார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது என்ற பிரச்சினை—அதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று சந்தர்ப்பங்கள் வற்புறுத்தின—குடியரசோடு சேர்த்து இரண்டு முதலாளித்துவக் கோஷ்டிகளின் பொது ஆட்சியையும் பற்றிக் கேள்வியை எழுப்பியது. அதோடு, முடியாட்சி மறுபடியும் ஏற்படக்கூடிய சாத்தியத்தையும் இந்தக் கோஷ்டிகளின் நலன்களுக்கிடையே எழுகிற போட்டிக்கும் — இதுவரை மாறி மாறி வாய்ப்புக் கொடுத்ததன் மூலமாக இந்த இரு கோஷ்டிகளின் போட்டி நலன்களும் பெரும்பாலான பிரதிநிதித்துவம் செய்யப்பட்டன—எந்த கோஷ்டி தலைமைப் பாத்திரத்தை வகிப்பது என்ற சச்சரவுக்கும் சேர்த்து அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தும் பிரச்சினை மறுபடியும் உயிர் கொடுத்தது. இரண்டு அரச குடும்பங்களையும் ஒன்றுசேர்ப்பதன் மூலம் அரசவம்சவாதக் கட்சிகளையும் அவைகள் ஆதரிக்கும் அரச குடும்பங்களையும் கூட்டிணைத்தல் என்று சொல்லப்படுவதன் மூலம் இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று ஒழுங்குமுறைக் கட்சியின் அரசியல் தூதர்கள் நம்பினர்கள். மறுவருகை, ஜூலை மாத முடியாட்சி ஆகிய இவ்விரண்டின் உண்மையான கூட்டிணைப்புத்தான் நாடாளுமன்றக் குடியரசு. இதில் ஆர்லேயானிஸ்டுகள், முறைமைவாதிகள் ஆகியோரின் தனித்தனிக் கொடிகளும் துடைத்தழிக்கப்பட்டன. முதலாளித்துவ வர்க்கம் என்ற பொது இனத்தில், முதலாளித்துவ வர்க்கம் என்ற பிரிவில் அதன் வெவ்வேறான ரகங்கள் மறைந்தன. எனினும் இப்பொழுது ஆர்லேயானிஸ்டுகள் முறைமைவாதிகளாகவும் முறைமைவாதிகள் ஆர்லேயானிஸ்டுகளாகவும் மாற வேண்டியிருந்தது. அவர்களுடைய பகைமையின் உருவகமான முடியாட்சி என்பது இனி அவர்களுடைய ஒற்றுமையின் சின்னமாக வேண்டும்; அவர்களுடைய பிரிவுகளுக்குரிய வெவ்வேறான நலன்களின்

வெளியீடு இனி அவர்களுடைய பொதுவான வர்க்க நலனின் வெளியீடாக மாற வேண்டும். இரண்டு முடியாட்சிகளையும் ஒழித்தால் மட்டுமே ஏற்படக் கூடியதை, குடியரசு செய்யக் கூடியதை, இதுவரை செய்து வந்திருப்பதை, முடியாட்சி செய்ய வேண்டும். இந்த சித்து வேலையை எப்படிச் செய்வ தென்று ஒழுங்குமுறைக் கட்சியின் இராஜதந்திரிகள் தங்கள் மூளையைக் கசக்கிப் பிழிந்தார்கள். முறைமைவாதிகளின் முடியாட்சி தொழில்துறை முதலாளிகளின் முடியாட்சியாக மாற முடியுமா அல்லது முதலாளித்துவ முடியாட்சி என் றைக்காவது மரபு வழியான மேல்தட்டு நிலப்பிரபுக்களின் முடியாட்சியாக மாறக் கூடுமா? நிலவுடைமையும் தொழி லும் ஒரே மகுடத்தின் கீழ் உடன்பிறப்பைப் போல் கூடி அளவளாவ முடியுமா? அதிலும் அந்த மகுடம் ஒருவர் தலையில் மட்டுமே, மூத்த சகோதரன் அல்லது இளைய சகோதரனின் தலையில் மட்டுமே இருக்க முடியும் என்ற சூழ்நிலையில் இப்படி அளவளாவுதல் சாத்தியமா? நில வுடைமை தன்னைத் தொழில்மயமாக்கிக் கொள்வது என்று முடிவு செய்யாத வரையிலும், தொழில் நிலவுடைமை யோடு உடன்பாடு செய்து கொள்ள முடியுமா? ஐந் தாம் ஹென்ரி நாளைக்கே மரணமடைந்தாலும் அந்தக் காரணத்தினால் பாரிஸ் கவுன்ட் முறைமைவாதிகளின் அரசராகிவிடமாட்டார். அவர் ஆர்லேயானிஸ்டுகளின் அரசர் என்ற நிலை மறையாமல் அது நடக்காது. எனினும் கூட் டிணைப்பின் தத்துவஞானிகள் அரசியலமைப்புச் சட்டத் திருத்தப் பிரச்சினை எவ்வளவு நெருங்கி வந்ததோ அவ் வளவு பலமாகக் கூச்சலிட்டனர். அவர்களிடம் இப்பொழுது *Assemblée nationale*[60] என்ற அதிகாரபூர்வமான தினசரிப் பத் திரிகையும் இருந்தது. இந்த நேரத்திலும் கூட (1852 பிப்ரவரி மாதம்) அவர்கள் மறுபடியும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லா சிக்கல்களுக்கும் இரண்டு அரச குடும்பங்களுக்கிடையேயும் உள்ள எதிர்ப்பும் போட்டியும்தான் காரணம் என்று நினைத்தார்கள். லுயி பிலிப்பின் மரணத்துக்குப் பிறகு ஐந்தாம் ஹென்ரிக்கும் ஆர்லேயான் குடும்பத்துக்குமிடையே சமரசம் ஏற்படுத்துவ

தற்கு ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள், பொதுவாக அரச வம்சவாதச் சூழ்ச்சிகள் எல்லாவற்றையும் போல இடை வேளையில், திரைகளுக்குப் பின்னல், தேசிய சபையின் ஓய்வுக் காலத்தில் நடைபெற்றன. முதலில் இது தீவிரமான வேலையாகக் கருதப்படாமல் பழைய மூடநம்பிக்கையோடு உணர்ச்சிக் கனிவான சல்லாபமாகத்தான் இருந்தது. ஆனல் இது வரை அமெச்சூர் நாடகக் குழுக்களின் முயற்சியாக இருந்து வந்தது; இப்பொழுது பொது மேடையில் ஒழுங்குமுறைக் கட்சியினர் நடித்த மாபெரும் நாடகமாகக் காட்சியளித்தது. பலர் பாரிசிலிருந்து வெனிசுக்கு[61], வெனிசிலிருந்து கிளெர்மோன்டுக்கு, கிளெர்மோன்டிலிருந்து பாரிசுக்குக் கடிதங்களை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்றார்கள். ஷம்போர் கவுன்ட் வெளியிட்ட அறிக்கையில், ''தன்னுடைய குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களின் உதவியோடும்'' (தன்னுடைய மறுவருகையை அறிவிக்காதபடி) ''தேசிய'' மறுவருகையை அறிவிக்கிறார். ஆர்லேயானிஸ்டான சல்வாண்டீ ஐந்தாம் ஹென்ரியின் கால்களில் விழுகிறார். முறைமைவாதிகளின் தலைவர்களான பெரியே, பெனுவா ட அசி, சென் பிரீஸ்ட் ஆகியோர் ஆர்லேயானிஸ்டுகளின் மனதை மாற்றுவதற்காகக் கிளெர்மோன்டுக்குப் புறப்பட்டுப் போகிறார்கள்; எனினும் பயனில்லை. இரண்டு முதலாளித்துவக் கோஷ்டிகளின் நலன்களும், குடும்ப நலன்களாக, இரண்டு அரச குடும்பங்களின் நலன்களாகத் தீவிரமடையும் பொழுது தங்களுடைய வேற்றுமையை இழக்கப் போவதில்லை; புதிய நெகிழ்ச்சியைப் அடையப் போவதுமில்லை என்பதைக் கூட்டிணைப்புவாதிகள் காலங் கடந்த பிறகுதான் புரிந்து கொள்கிறார்கள். ஐந்தாம் ஹென்ரி பாரிஸ் கவுன்டைத் தன்னுடைய வாரிசாக அங்கீகரித்தால் (இணைப்பின் உச்ச கட்டத்தில் கிடைக்கக் கூடிய ஒரே வெற்றி இதுவே) ஐந்தாம் ஹென்ரிக்குக் குழந்தை இல்லாததால் ஆர்லேயான் அரச குடும்பத்துக்கு ஏற்கெனவே கிடைத்திருக்கும் உரிமைகளைக் காட்டிலும் புதிதாக எதையும் பெறப் போவதில்லை. ஜூலை புரட்சியின் மூலமாக அதற்குக் கிடைத்த எல்லா உரிமைகளையும் அது இழந்துவிடும்.

அதனுடைய ஆரம்பக் கோரிக்கைகளையும் பூர்போன்களின் மூத்த கிளையோடு சுமார் நூறு வருட காலமாகப் போராடிப் பெற்றுள்ள எல்லா உரிமைகளையும் அது கைவிட நேரும். அதற்கு வரலாற்று ரீதியாகக் கிடைத்திருக்கும் தனி உரிமையை, நவீன முடியரசு என்ற தனி உரிமையை, அதனுடைய மரபு வழி என்ற தனி உரிமைக்குப் பண்டமாற்றுச் செய்ய நேரிடும். எனவே இந்தக் கூட்டிணைப்பு என்பது ஆர்லேயான் அரச குடும்பத்தின் விருப்பபூர்வமான பதவிதுறத்தல், முறைமைவாதத்துக்குச் சாதகமாகத் தன்னுடைய உரிமைக் கோரிக்கையைக் கைவிடுதல், புரோட்டஸ்டெண்ட் என்ற அரசு திருச்சபையிலிருந்து விலகி கத்தோலிக்கத் திருச்சபையில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சேருவது என்பதைத் தவிர வேறெதுவுமில்லை. மேலும் இந்தப் பின்வாங்கல் அது ஏற்கெனவே இழந்த சிம்மாசனத்தின் அருகே அதைக் கொண்டுவரப் போவதில்லை. ஆனால் அது பிறந்த இடத்துக்கு, அதாவது சிம்மாசனத்தின் படிகளுக்குத்தான் அதைக் கொண்டு போய்ச் சேர்க்கும். ஆர்லேயானிஸ்டுகளின் பழைய அமைச்சர்களான கிஸோவும் டுஷட்டேலும் மற்றவர்களும் கூட்டிணைப்பிற்கு ஏற்பாடு செய்வதற்காகக் கிளெர்மோன்டுக்கு விரைந்து சென்றனர். இவர்கள் ஜூலை புரட்சி என்னும் ஆட்டபாட்டத்தின் களிமயக்கமே; முதலாளித்துவ முடியரசைப் பற்றியும் முதலாளிகளின் முடியாட்சி குறித்தும் ஏற்பட்ட நம்பிக்கை இழப்பின் பிரதிநிதிகள்; அராஜகவாதத்தை எதிர்க்க முறைமைவாதமே சரியான மந்திரம் என்ற மூடநம்பிக்கையின் பிரதிநிதிகளே. ஆர்லேயான் குடும்பத்துக்கும் பூர்போன் குடும்பத்துக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தும் தூதர்களாகத் தங்களைக் கற்பனை செய்துகொண்டபோதிலும் இவர்கள் உண்மையிலேயே ஆர்லேயான் கட்சியிலிருந்து ஓடிவந்தவர்கள். ஷுவன்வீல் இளவரசரும் அவர்களை அதே மாதிரியாகவே வரவேற்றார். இதற்கு மாறாக ஆர்லேயானிஸ்டுகளில் மிகுந்த உயிராற்றலுடைய போர்வெறி கொண்ட தியேரும் பாசும் மற்றவர்களும், இரண்டு அரச குடும்பங்களும் கூட்டிணைந்தால்தான் முடியாட்சி

ரீதியான நேரடி மறுவருகை சாத்தியமென்று கருதப்பட்டால், அப்படி இணைகிற பொழுது ஆர்லேயான் அரச குடும்பம் உரிமையைத் துறந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றும் கருதப்பட்டால், அவர்களுடைய முன்னோர்களின் மரபைப் பின்பற்றி, அந்த நேரத்துக்கு மட்டும் குடியரசை அங்கீகரித்து விட்டு, ஜனாதிபதி ஆசனத்தை சிம்மாசனமாக மாற்றுவதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம் என்று லுயீ பிலிப்பின் குடும்பத்தை மிகச் சுலபமாக நம்பவைத்தார்கள். ஷுவன்வீல் தேர்தலுக்கு நிற்பார் என்ற வதந்திகள் பரப்பப்பட்டன. பொது மக்கள் ஆர்வப் பெருக்க நிலையில் வைக்கப் பட்டிருந்தார்கள். சில மாதங்களுக்குப் பிறகு, செப்டெம்பர் மாதத்தில், அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் நிராகரிக்கப்பட்ட பிறகு, அவர் தேர்தலில் போட்டியிடுவார் என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

ஆர்லேயானிஸ்டுகளையும் முறைமைவாதிகளையும் அரச வம்சவாத வகையில் கூட்டிணைக்கும் முயற்சி தோல்வியடைந்தது மட்டுமல்லாமல், அவர்களுடைய நாடாளுமன்றக் கூட்டிணைப்பையும், கூட்டிணைப்பிற்கான அவர்களுடைய குடியரசு வடிவத்தையும் ஒழித்துவிட்டது. ஒழுங்குமுறைக் கட்சி அதனுடைய ஆரம்ப மூலப் பகுதிகளாகத் தனித் தனியே பிரிந்துவிட்டது. கிளெர்மோன்டுக்கும் வெளிசுக்கும் இடையே முறிவு எந்த அளவுக்கு அதிகரித்ததோ, எந்த அளவுக்கு அவர்களுடைய உடன்பாடு உடைந்ததோ, எந்த அளவுக்கு ஜுவன்வீலுக்கு ஆதரவான பிரச்சாரம் வலுப்பட்டதோ, போனபார்ட்டின் அமைச்சரான பொஷேவுக்கும் முறைமைவாதிகளுக்கும் அந்த அளவுக்கு ஆர்வத்தோடும் தீவிரமான வகையிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஒழுங்குமுறைக் கட்சியின் சிதைவு அதன் மூலப் பகுதிகளாகப் பிரிந்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதன் இரு பெரும் பிரிவுகளும் மேலும் புதிய சிதறலுக்கு ஆளாயின. முறைமைவாதம், ஆர்லேயானிசம் என்ற இரண்டு வட்டங்களுக்குள், முன்காலத்தில் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டுமிருந்த

பழைய திரிபுகள் எல்லாமே, உலர்ந்து போன உயிரணுக்கள் தண்ணீர் பட்டதும் உயிர் பெற்றுவிடுவதைப் போல, மறுபடியும் உயிர் பெற்று விட்டன என்று தோன்றியது. அவை தங்களுடைய சொந்தக் குழுக்களை அமைத்துக் கொண்டு தனிப்பட்ட விரோதங்களில் ஈடுபடுவதற்குப் போதுமான ஜீவ சக்தியை மறுபடியும் பெற்றுக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. டியுல்லரீ மாளிகைக்கும் மார்சான் மாளிகைக்கும், விலேலுக்கும் பொலிஞாக்குக்கும் வாதப் பிரதிவாதங்கள்[62] நடைபெற்ற பழைய காலத்துக்குத் தாங்கள் போய்விட்டதைப் போல முறைமைவாதிகள் கனவு கண்டார்கள். கிஸோ, மாலே, புரொலீ, தியேர், ஒடிலோன் பரோ ஆகியோருக்கிடையே விளையாட்டுப் போர்கள் நடைபெற்ற பொற்காலத்தில் மறுபடியும் வாழ்ந்து கொண்டிருப்பது போல ஆர்லேயானிஸ்டுகள் நினைத்தார்கள்.

ஒழுங்குமுறைக் கட்சியில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டினாலும் அந்தத் திருத்தத்தின் எல்லைகளைப் பற்றி அபிப்பிராயப் பேதங்களுக்கு உட்பட்டிருந்த ஒரு பகுதி, ஒரு பக்கத்தில் பெரியேயும் பல்லூவும், மறுபக்கத்தில் லரோஷ்ஜக்லேனும் தலைமை தாங்கப்பட்ட முறைமைவாதிகள் இருந்த ஒரு குழுவும் மாலே, புரொலீ, மொன்டலம்பேர், ஒடிலோன் பரோ ஆகியோர் தலைமையிலிருந்த போராட்டங்களில் களைத்துப் போன ஒரு குழுவும் போனபார்ட் பிரதிநிதிகளோடு பேசி கீழ்க்கண்ட விரிவான அடிப்படை கொண்ட தெளிவில்லாத தீர்மானத்தைக் கொண்டுவர ஒத்துக் கொண்டன:

''சுயவுரிமையைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை தேசத்துக்குத் திரும்பவும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அடியிற் கையெழுத்திட்ட பிரதிநிதிகள் பிரேரேபிக்கிறார்கள்.''

அதே சமயத்தில் அவர்கள் தங்களுடைய பிரதிநிதிடாக்வில் மூலமாக, தேசிய சபைக்குக் குடியரசை ஒழிப்பதைப்

பிரேரேபிக்க உரிமை இல்லையென்றும் அந்த உரிமை அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கூட்டப் படுகின்ற சபையை [Revising Chamber] மட்டுமே சேர்ந்தது என்றும் ஏகமனதாகக் கூறினார்கள். மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை, ''சட்டரீதியான வழியில்'' அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தலாம், அதாவது அரசியலமைப்புச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி திருத்தத்துக்கு ஆதரவாக நான்கில் மூன்று பங்கு வாக்குகள் கிடைத்தால் மட்டுமே அவ்விதமாகத் திருத்தலாம். ஜூலை மாதம் 19ந் தேதியன்று, ஆறு நாட்களாக நடைபெற்ற காரசாரமான விவாதத்துக்குப் பிறகு, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது நிராகரிக்கப்பட்டது. இது எதிர்பார்க்கப்பட்ட முடிவுதான். தீர்மானத்துக்கு ஆதரவாக 446 வாக்குகளும், எதிர்ப்பாக 278 வாக்குகளும் கிடைத்தன. அதிதீவிர ஆர்லேயானிஸ்டுகளான தியேர், ஷன்கர்னியே முதலியோர் குடியரசுவாதிகளோடும் மலைக் கட்சியோடும் சேர்ந்து வாக்களித்தனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இவ்விதமாக அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தங்களுடைய எதிர்ப்பை அறிவித்தனர். ஆனால் அந்த அரசியலமைப்புச் சட்டமே தன்னைச் சிறுபான்மையினருக்குச் சாதகமானதாகவும் அந்தச் சிறுபான்மையினருடைய வாக்குகளே முடிவானதாகவும் இருந்தது என்று அறிவித்தது. ஆனால், இதற்கு முன்பு 1850ம் வருடம் மே மாதம் 31ந் தேதியன்றும், 1849ம் வருடம் ஜூன் மாதம் 13ந் தேதியன்றும் ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய நாடாளுமன்றப் பெரும்பான்மைக்கு அரசியலமைப்புச் சட்டத்தைக் கீழ்ப்படுத்தவில்லையா? தற்சமயம் வரை அதனுடைய மொத்தக் கொள்கையுமே அரசியலமைப்புச் சட்ட ஷரத்துக்களை நாடாளுமன்றப் பெரும்பான்மையினரின் முடிவுகளுக்குக் கீழ்ப்படுத்துவதாக இருந்ததில்லையா? பழைய ஏற்பாட்டு வேத நூலுக்குரிய பாணியில் சட்டத்தின் வாசகத்தில் மூடத்தனமாக நம்பிக்கை வைப்பதை ஜனநாயகவாதிகளிடம் விட்டுவிடவில்லையா? அதற்காக அவர்களைத் தண்டிக்கவில்லையா? இந்த

நேரத்தில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது என் பதற்கு ஜனாதிபதியின் அதிகாரத்தை நீடிக்கச் செய்வது என்பதைத் தவிர வேறு அர்த்தம் கிடையாது. அது போல அரசியலமைப்புச் சட்டம் நீடிக்க வேண்டும் என்றாலும் போனபார்ட்டின் பதவி நீக்கத்தைத் தவிர வேறு அர்த்த மில்லை. நாடாளுமன்றம் அவருக்கு ஆதரவைத் தெரிவித்து விட்டது. ஆனால் அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத் துக்கு எதிர்ப்பை அறிவித்துவிட்டது. எனவே போனபார்ட் அரசியலமைப்புச் சட்டத்தைக் கிழித்துப் போட்ட பொழுது நாடாளுமன்றத்தின் உணர்ச்சியில் நடந்து கொண்டார்; நாடாளுமன்றத்தைக் கலைத்த பொழுது அரசியலமைப்புச் சட்டத்தை ஒட்டி நடந்து கொண்டார்.

நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தையும் அதோடு சேர்த்துத் தன்னுடைய ஆட்சியையும் ''பெரும் பான்மைக்கு அப்பாற்பட்டதாக'' அறிவித்துவிட்டது. தன் னுடைய வாக்கெடுப்பின் மூலம் அரசியலமைப்புச் சட்டத்தை ஒழித்து, ஜனாதிபதியின் அதிகாரத்தை நீடிக்கச் செய்து விட்டது. அதே சமயத்தில் நாடாளுமன்றம் உயிரோடிக் கும் வரையிலும் அரசியலமைப்புச் சட்டம் சாக முடியாது, ஜனாதிபதியின் அதிகாரமும் வாழ முடியாது என்பதை அறி வித்தது. நாடாளுமன்றத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற் காக வந்தவர்கள் கதவுக்கு வெளியே நின்றுகொண்டிருந் தார்கள். அது அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்து வதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த பொழுது போனபார்ட் முதலாவது இராணுவ டிவிஷனின் தலைமைப் பொறுப்பிலிருந்த பரகே ட இல் மன உறுதி இல்லாமல் நடந்துகொண்டபடியால் அவரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டு அவருடைய இடத்தில் லியோன் வெற்றியாளரான ஜெனரல் மஞானே நியமித்தார். டிசம்பர் நாட்களின் வீர ரான மஞான் போனபார்ட்டின் கையாளாக இருந்தார். லுயீ பிலிப் காலத்திலேயே பூலோன் படையெடுப்பின் போது அவர் அநேகமாக போனபார்ட்டின் ஆதரவாளராகத் தம்மைக் காட்டிக் கொண்டு கெட்ட பெயரெடுத்தவர்.

திருத்தம் பற்றிய விவகாரத்தில் தன்னுடைய முடி

வின் மூலம் ஒழுங்குமுறைக் கட்சி தனக்கு ஆட்சி செய்வதற்கும் தெரியாது, ஆட்சிக்கு அடிபணிவதற்கும் தெரியாது; வாழவும் தெரியாது, சாகவும் தெரியாது; குடியரசை சகித்துக் கொள்ளவும் தெரியாது, அதை ஒழிப்பதற்கும் தெரியாது; அரசியலமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடிக்கவும் தெரியாது, அதை வெளியே தூக்கி எறியவும் தெரியாது; ஜனாதிபதியோடு ஒத்துழைக்கவும் தெரியாது, அவரோடு முறித்துக் கொள்ளவும் தெரியாது என்பதை நிரூபித்தது. அப்படியானால் அது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு யாரை எதிர்பார்த்தது? வருடாந்தரக் கால அட்டவணையை, சம்பவங்களின் போக்கை எதிர்நோக்கியது. சம்பவங்களின் மீது ஆட்சி செய்ய முடியும் என்ற கற்பனையையும் அது இழந்துவிட்டது. எனவே அந்தக் கட்சி சம்பவங்களின் முன்னால் சரணடைந்துவிட்டது. அதாவது மக்களுக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் எந்த சக்தியிடம் அது தன்னுடைய அதிகாரக்கூறுகளை ஒவ்வொன்றாக விட்டுக் கொடுத்துக் கடைசியில் தன்னிடம் எந்த அதிகாரமுமில்லாமல் நின்றதோ அந்த சக்தியிடம் சரணடைந்தது. தனக்கு எதிரான போர்த் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நிர்வாக அதிகாரத்தின் தலைவருக்கு வாய்ப்புக் கொடுப்பதற்காக, தன்னுடைய தாக்குதல் சாதனங்களை அவர் பலப்படுத்திக் கொள்வதற்காக, தன்னுடைய ஆயுதங்களைத் தேர்ந்தெடுத்து தன்னுடைய நிலைகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக இந்த நெருக்கடி மிகுந்த நேரத்தில் அரசியல் களத்திலிருந்து மூன்று மாத காலம் ஒதுங்கிக் கொள்ள முடிவு செய்தது. ஆகஸ்ட் மாதம் 10ந் தேதி முதல் நவம்பர் மாதம் 4ந் தேதி முடிய நாடாளுமன்றம் தள்ளி வைக்கப் பட்டது.

நாடாளுமன்ற ஒழுங்குமுறைக் கட்சி இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிந்திருந்தது மட்டுமல்லாமல்—இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் பல விதமான உட்பிரிவுகள் இருந்தன—நாடாளுமன்றத்திற்கு வெளியே இருந்த ஒழுங்குமுறைக் கட்சியையும் அது விரோதித்துக் கொண்டது. முதலாளித்துவப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும், அத

னுடைய பிரசங்க மேடையும் பத்திரிகைகளும், சுருக்கமாகச் சொல்வதென்றால் முதலாளித்துவத் தத்துவாசிரியர்களும் முதலாளித்துவ வர்க்கத்தினருமே, பிரதிநிதிகளும் பிரதிநிதிக்கப்பட்டவர்களும் ஒருவரிடமிருந்து மற்றவர் அந்நியமாகியிருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு இனிமேல் முடியவில்லை.

குறுகலான நோக்கும் எல்லையில்லாத உற்சாகமும் கொண்ட பிராந்தியங்களிலிருந்த முறைமைவாதிகள் தங்களுடைய நாடாளுமன்றத் தலைவர்களான பெரியேயையும் பல்லூவையும் ஐந்தாம் ஹென்ரியின் கட்சியிலிருந்து தாவி போனபார்ட் முகாமுக்குப் போய் விட்டதாகக் குற்றம் சாட்டினார்கள். புர்போன் அரச மரபின் சின்னமான அல்லி மலரைப் போலத் தூய்மையான அவர்களுடைய மனங்கள் மனிதனின் பாவத்தில் நம்பிக்கை வைத்தனவே தவிர, இராஜதந்திரத்தில் நம்பிக்கை வைக்கவில்லை.

வர்த்தகத் துறை முதலாளித்துவ வர்க்கத்தினர் அரசியல்வாதிகளுடன் முறிவு செய்வது இதைக் காட்டிலும் கேடு விளைவிப்பதாகவும் தீர்மானமானதாகவும் இருந்தது. முறைமைவாதிகள் தங்களுடைய அரசியல்வாதிகளைக் கோட்பாடுகளைக் கைவிட்டதாகக் குறை சொன்னது போல இவர்கள் தங்கள் அரசியல்வாதிகளைக் குறை சொல்லவில்லை. அதற்கு மாறாக, பயனில்லாது போய்விட்ட கோட்பாடுகளைப் பிடித்துக் கொண்டு இன்னும் தொங்குவதற்காகக் குறை சொன்னார்கள்.

மந்திரிசபையில் புல்ட் சேர்க்கப்பட்டதிலிருந்து, லுயி பிலிப்பின் காலத்தில் ஆட்சியில் பெரும்பங்கு வகித்த வர்த்தக முதலாளித்துவம், அதாவது மேல் தட்டு நிதி முதலாளித்துவம் போனபார்ட் ஆதரவாளராக மாறிவிட்டது என்பதை முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறேன். புல்ட் பங்கு மார்க்கெட்டில் போனபார்ட்டின் நலன்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்தது மட்டுமல்லாமல், அதே சமயத்தில் போனபார்ட்டுக்கு முன்னால் பங்கு மார்க்கெட் நலன்களின் பிரதிநிதியாகவும் இருந்தார். மேல் தட்டு நிதி முதலாளித்துவத்தின் நிலையைப் பற்றி ஐரோப்பாக்

கண்டத்தில் அதன் சஞ்சிகையான, லண்டனிலிருந்து வெளி வருகிற *Economist* பத்திரிகை[63] குறிப்பிடத்தக்க முறை யில் எழுதியது. 1851ம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வெளிவந்த அதன் இதழில் அதனுடைய பாரிஸ் நிருபர் பின்வருமாறு எழுதினர்:

''எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்ஸ் அமைதியைக் கோருகிறது என்று எண்ணற்ற வட்டாரங்களில் சொல்லப் பட்டிருப்பது நமக்குத் தெரிந்ததே. 'சட்டமன்றத்துக்கு ஜனாதிபதி அனுப்பிய செய்தியில் இதைச் சொல்கிறார். தேசிய மேடையில் இது எதிரொலிக்கப்படுகிறது. பத்திரிகைகளில் இது வலியுறுத்தப்படுகிறது. திருச்சபை மேடைகளிலும் இது பிரகடனம் செய்யப்படுகிறது. கலவரம் ஏற்படக் கூடும் என்று மிகச் சிறிய வாய்ப்பு இருக்கும் பொழுது நிதி இனங்கள் காட்டும் கூருணர்ச்சியிலும் நிர்வாக அதிகாரம் வெற்றியடைந்து விட்டதாக வெளியே தெரிந்த மறு விஞ்டியே அது உறுதிப் படுவதிலும் இது எடுத்துக்காட்டப்படுகிறது.''

1851ம் வருடம் நவம்பர் மாதம் 29ந் தேதிய இத ழில், *Economist* சஞ்சிகை அதன் கருத்தைப் பின்வருமாறு எழுதுகிறது:

''ஜனாதிபதியே ஒழுங்குமுறையின் பாதுகாவலர். இப்பொழுது ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு பங்கு மார்க்கெட்டும் இவ்விதமே அவரை அங்கீகரித்திருக்கிறது.''

எனவே மேல்தட்டு நிதி முதலாளித்துவம் ஒழுங்கு முறைக் கட்சி நிர்வாக அதிகாரத்தோடு செய்த நாடாளு மன்றப் போராட்டத்தை ஒழுங்கைச் சீர்குலைக்கும் கலவரம் என்று கண்டித்ததோடு, தன்னுடைய சொந்தப் பிரதி நிதிகள் மீது ஜனாதிபதியின் ஒவ்வொரு வெற்றியையும் ஒழுங்கு நிலையின் வெற்றி என்று கொண்டாடியது. மேல் தட்டு நிதி முதலாளித்துவம் என்று சொல்லும் பொழுது இங்கே பெருங்கடன்களை ஏற்பாடு செய்கின்ற தரகர்களையும் பொது நிதிகளை வைத்துச் சூதாடுபவர்களையும் மட்டுமே குறிக்கவில்லை. இவர்களுடைய நலன்கள் அரசு அதிகாரத் தின் நலன்களோடு பொருந்தியிருப்பது உடனே தெரியக்

கூடியதாகும். நவீன நிதி அமைப்பு அனைத்தும், வங்கித் தொழில் முழுவதுமே, பொதுக் கடனுடன் மிக நெருக்கமான வகையில் பின்னிப்பிணைந்திருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் அவர்களுடைய நிதி மூலதனத்தில் ஒரு பகுதி சீக்கிரமாக மாற்றப்படக்கூடிய, வட்டி கிடைக்கக் கூடிய அரசாங்கப் பொது நிதிகளில் முதலீடு செய்யப்படுகிறது. அவர்களுடைய பணமும், அவர்களிடம் மற்றவர்கள் கொடுத்துள்ள மூல தனமும்—இது வியாபாரிகளிடமும் தொழிலதிபர்களிடமும் விநியோகிக்கப்பட்டிருக்கும் — அரசாங்கப் பத்திரங்களி லிருந்து கிடைக்கும் லாபத்திலிருந்துதான் ஒரு பகுதியாவது கிடைப்பதாகும். ஒவ்வொரு சகாப்தத்திலும் அரசு அதி காரத்தின் ஸ்திரமான நிலைமை பண மார்க்கெட் முழுமைக் கும் இந்தப் பணமார்க்கெட்டின் பூசாரிகளுக்கும் மோசஸை யும் அவருடைய தீர்க்கதரிசிகளையும் போல இருக்குமானால், ஒவ்வொரு ஊழி வெள்ளமும் பழைய அரசுகளையும் அவற் றுடு சேர்த்து பழைய அரசுகளின் கடன்களையும் வேகமாக அழிக்கப்போவதாகப் பயமுறுத்தும் பொழுது இன்று ஏன் இன்னும் அதிகமாக இருக்கக்கூடாது?

தொழில் முதலாளித்துவ வர்க்கம் ஒழுங்கு நிலைக்கு ஆதரவாக வெறி கொண்டிருந்ததனால், நிர்வாக அதிகாரத் தோடு நாடாளுமன்ற ஒழுங்குமுறைக் கட்சியின் சச்சரவு களைப் பற்றிக் கோபமடைந்தது. ஷன்கர்னியேயின் பதவி நீக்கத்தைப் பற்றி வாக்கெடுப்பு நடைபெற்ற ஜனவரி மாதம் 18ந் தேதிக்குப் பிறகு, தியேர், அன்கிலேஸ், சென் பியோவ் முதலியோர் தங்களுடைய தொகுதிகளிலுள்ள வாக்காளர்களால், குறிப்பாகத் தொழில்கள் நிறைந்த பகுதிகளில், பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்டனர். அவர்கள் மலைக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்ததைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி., அது ஒழுங்கு நிலைமைக்குச் செய்த மாபெரும் துரோகம் என்று இடித்துரைக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு எதிராக ஒழுங்குமுறைக் கட்சி நடத்திய போராட்டத்தில் கையாளப்பட்ட அகம்பாவமான பழிச்சொற்களும் அற்பத் தனமான சூழ்ச்சிகளும் இதைத் தவிர வேறு சிறப்பான முறையில் வரவேற்கப்படத் தகுதியுடையவை அல்ல

என்றாலும் அதே சமயத்தில் இந்த முதலாளித்துவக் கட்சி, இராணுவ அதிகாரத்தைத் தனக்குச் சொந்தமான நாடாளுமன்றத்திலிருந்து எத்தகைய எதிர்ப்புமில்லாமல் ஒரு சாகஸம் நிறைந்த அபேட்சகனிடம் தன்னுடைய பிரதிநிதிகள் ஒப்படைத்திருக்க வேண்டும் என்று நினைக்குமானால், அந்தக் கட்சியின் நலனுக்காக விரயமாக்கப்பட்ட சூழ்ச்சிகளுக்குக்கூட அது தகுதியற்றதாகிறது. அதனுடைய சமூக நலன்களை, அதனுடைய வர்க்க நலன்களை, அதன் அரசியல் அதிகாரத்தைக் காப்பாற்றுவதற்காக நடைபெற்ற போராட்டம் தனியார் தொழிலில் குழப்பமான நிலைமையை ஏற்படுத்தியபடியால், அதற்குக் கவலை ஏற்பட்டு நிலை குலைந்தது.

பிராந்தியங்களில் உள்ள நகரங்களின் முதலாளித்துவ முக்கியஸ்தர்கள், ஊராட்சி அதிகாரிகள், வர்த்தக நீதிமன்றங்களின் உறுப்பினர்கள் முதலியோர் போனபார்ட் சுற்றுப்பயணம் வந்தபொழுது ஒரு விதிவிலக்குக்கூட இல்லாத முறையில் எல்லா இடங்களிலுமே அவருக்கு மிகவும் அடிமைத்தனமான முறையில் வரவேற்பளித்தனர். டிஷோன் என்ற இடத்தில் அவர் தேசிய சபையையும் குறிப்பாக ஒழுங்குமுறைக் கட்சியையும் வரம்பு மீறித் தாக்கிய பொழுதும்கூட இத்தகைய வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

வர்த்தகம் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தபடியால்—1851ம் வருடத்தின் ஆரம்பத்தில் அப்படித்தானிருந்தது—வர்த்தகம் கெட்டுப் போய்விடுமோ என்ற பயத்தில் நாடாளுமன்றப் போராட்டங்களை எதிர்த்து வர்த்தக முதலாளிகள் ஆவேசப்பட்டார்கள். வர்த்தகம் மந்தமான பொழுது—1851ம் வருடம் பிப்ரவரி மாதக் கடைசியிலிருந்து தொடர்ச்சியாக இந்த நிலைமை நீடித்தது—நாடாளுமன்றப் போராட்டங்கள்தான் தேக்க நிலைமைக்குக் காரணம் என்று வர்த்தக முதலாளிகள் குற்றம் சாட்டினர்கள். வர்த்தகம் மறுபடியும் ஓங்க வேண்டுமானால், இந்தப் போராட்டங்களை உடனடியாக நிறுத்துங்கள் என்று கூக்குரலிட்டார்கள். இப்படிப்பட்ட மோசமான சமயத்தில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தைப் பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. அன்றைக்கிருந்த அரசு வடிவம் இருப்பதா,

போவதா என்ற கேள்வி எழுந்தபடியால் இந்த வளவு நெளிவான தற்காலிக நிலைக்கு முடிவு கட்ட அதே சமயத்தில் அன்றைக்கிருந்த நிலைமைகள் அப்படியே நீடிக்க வேண்டுமென்று தங்கள் பிரதிநிதிகளிடம் கோருவது நியாயமானதுதான் என்று முதலாளிகள் கருதினர்கள். இதில் எந்த முரண்பாடும் இல்லை. இந்தத் தற்காலிகமான நிலைமை முடித்துவிட வேண்டுமென்று கூறிய பொழுது அதையே நீடிக்கச் செய்ய வேண்டுமென்பதைத்தான் அவர்கள் விரும்பினர்கள். அதாவது முடிவு செய்யவேண்டிய சந்தர்ப்பத்தை வெகு தொலைவிலுள்ள எதிர்காலத்துக்குத் தள்ளிப்போட வேண்டுமென்று விரும்பினர்கள். அன்றைக்கு இருந்த நிலைமைகளை அப்படியே வைத்துக் கொள்வதற்கு இரண்டு வழிகள் மட்டுமே இருந்தன: போனபார்ட்டின் அதிகாரத்தை நீடிப்பது அல்லது அவர் அரசியலமைப்புச் சட்டத்தில் விதித்துள்ளபடி விலகிக்கொண்டு, சுவெளாக்கைத் தேர்ந்தெடுப்பது. முதலாளித்துவ வர்க்கத்தில் ஒரு பகுதியினர் இரண்டாவது வழியை ஆதரித்தனர். ஆனால் இந்தச் சூடான பிரச்சினையைப் பற்றி எதுவும் பேசாமல் மௌனமாக இருப்பதைத் தவிர தங்கள் பிரதிநிதிகளுக்கு வேறு நல்ல ஆலோசனை சொல்லக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை. தங்கள் பிரதிநிதிகள் பேசாமலிருந்துவிட்டால் போனபார்ட்டும் ஒன்றும் செய்யமாட்டார் என்று அவர்கள் நினைத்தார்கள். தன்னை மற்றவர்கள் பார்க்கக் கூடாது என்று தலையைப் புதைத்துக் கொள்கிற நெருப்புக் கோழிகளடங்கிய நாடாளுமன்றத்தைத்தான் அவர்கள் விரும்பினர்கள். போனபார்ட் ஏற்கெனவே ஜனாதிபதி ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதால், எல்லாம் அதே பழைய தடத்திலேயே போய்க் கொண்டிருக்க வேண்டுமானால், அவரை அந்த ஆசனத்தில் தொடர்ந்து உட்கார அனுமதிக்க வேண்டும் என்று முதலாளித்துவ வர்க்கத்தில் மற்றொரு பகுதியினர் விரும்பினர்கள். தங்களுடைய நாடாளுமன்றம் பகிரங்கமாக அரசியலமைப்புச் சட்டத்தை மீறவில்லையே, எந்த சம்பிரதாயமுமில்லாமல் விலகிக் கொள்ளவில்லையே என்று அவர்கள் ஆத்திரப்பட்டார்கள்,

தேசிய சபையின் ஒய்வுக் காலத்தின் போது, ஆகஸ்ட் மாதம் 25ந் தேதியிலிருந்து, பிராந்தியங்களின் பெரிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிராந்திய ஜெனரல் கவுன்சில்கள் கூடி அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று, அதாவது நாடாளுமன்றத்துக்கு எதிராகவும் போனபார்ட்டுக்கு ஆதரவாகவும் அநேகமாக ஏகமனதாக முடிவு செய்தன.

முதலாளித்துவ வர்க்கம் தங்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதிகளை விரோதித்துக் கொண்டதைக் காட்டிலும் இன்னும் தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமளிக்காத வகையிலும் தங்களுடைய இலக்கியத் துறைப் பிரதிநிதிகளிடம், பத்திரிகைகளிடம் தங்களுடைய முழு ஆத்திரத்தையும் காட்டியது. போனபார்ட் பதவியைத் தகாத முறையில் அபகரிக்கக் கொண்டிருக்கும் ஆசைகளைத் தாக்கி முதலாளித்துவப் பத்திரிகையாளர்கள் எழுதிய ஒவ்வொரு தடவையும், நிர்வாக அதிகாரத்துக்கு எதிராக முதலாளித்துவ அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து பத்திரிகைகள் எழுதிய ஒவ்வொரு தடவையும், நீதிமன்றங்களின் முதலாளித்துவ ஜூரிகள் அவர்களைச் சீரழிக்கக் கூடிய வகையில் அதிகமான அபராதம் விதித்தனர்; மானங்கெட்ட வகையில் சிறைத் தண்டனையும் விதித்தனர். இது பிரான்சில் மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதுமே வியப்பை ஏற்படுத்தியது.

நாடாளுமன்ற ஒழுங்குமுறைக் கட்சி நாட்டில் அமைதியைக் கோரியபடியால் அடங்கிக் கிடக்க முடிவு செய்தது என்பதை முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறேன். முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் ஆட்சி என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் பிழைப்புக்கும் பாதுகாப்புக்கும் ஒத்துவராது என்று அது அறிவித்த பொழுது, சமூகத்தின் மற்ற வர்க்கங்களை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில், நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு, தன்னுடைய ஆட்சி முறைக்குத் தேவையான எல்லா நிலைமைகளையும் தன் கைகளாலேயே ஒழித்த பிறகு, மறு பக்கத்தில் நாடாளுமன்றத்துக்கு வெளியே இருந்த முதலாளித்துவ வர்க்கப் பகுதியினர் ஜனாதிபதியிடம் அடிமைகளைப் போல நடந்து கொண்டும்,

நாடாளுமன்றத்தை அவதூறு செய்தும், தங்களுடைய பத்திரிகைகளிடமே காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டும், தங்களுடைய பேச்சு, எழுத்துப் பகுதியை, தங்களுடைய அரசியல்வாதிகளையும் எழுத்தாளர்களையும், தங்களுடைய பேச்சு மேடையையும் பத்திரிகைகளையும் நசுக்குமாறு போனபார்ட்டுக்கு அழைப்புக் கொடுத்தனர். அவ்வாறு செய்வதன் மூலம் ஒரு வலுவான, கட்டுப்பாடுகள் இல்லாத அரசாங்கத்தின் பாதுகாப்பில் தங்களுடைய சொந்தக் காரியங்களை முழு சுதந்திரத்தோடு செய்ய முடியும் என்று கருதினர்கள். ஆட்சி செய்வதிலுள்ள சிக்கல்களையும் ஆபத்துக்களையும் ஒழிப்பதற்காகத் தங்களுடைய அரசியல் ஆட்சிக்கு முடிவு கட்ட விரும்புவதை அவர்கள் எத்தகைய ஐயத்துக்கும் இடமின்றி அறிவித்தார்கள்.

நாடாளுமன்றத்துக்கு வெளியிலே இருந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் தங்களுடைய வர்க்கத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதற்காக கலப்பற்ற நாடாளுமன்ற, இலக்கியப் போராட்டத்தை எதிர்த்து முன்பே கலகம் செய்ததோடு அந்தப் போராட்டத்தின் தலைவர்களையும் காட்டிக் கொடுத்து விட்டு, சம்பவங்கள் நடந்து முடிந்த பிறகு பாட்டாளி வர்க்கம் தங்களுக்காகக் கிளர்ந்தெழுந்து ஒரு இரத்தக் களரியான போராட்டத்தை, ஜீவமரணப் போராட்டத்தை நடத்தவில்லை என்பதற்காக அதைக் குற்றம் சாட்டத் துணிகின்றனர். ஒவ்வொரு தருணத்திலும் மிகக் குறுகிய, மிகக் கீழ்த்தரமான தனிப்பட்ட நலன்களுக்குத் தனது பொதுவான வர்க்க நலன்களை, அதாவது தனது அரசியல் நலன்களைப் பலி கொடுத்திருக்கும் இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் தம்முடைய பிரதிநிதிகளும் அதே மாதிரி பலி கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர்கள், இப்பொழுது பாட்டாளி வர்க்கம் அவர்களின் (முதலாளித்துவ) இலட்சிய அரசியல் நலன்களைத் தன்னுடைய (பாட்டாளி வர்க்கத்தின்) பொருளாயத நலன்களுக்குப் பலியிட்டு விட்டதாகப் புலம்பினர்கள். அவர்கள் அழகான பிறவிகளைப் போலவும், பாட்டாளி வர்க்கம் தங்களைத் தவறுகப் புரிந்து கொண்டிருப்பதாகவும், நிர்மானமான நேரத்தில் சோஷ

லிஸ்டுகளின் தவருன வழிகாட்டுதலைப் பின்பற்றி தங்களைக் கைவிட்டுவிட்டதாகவும் நடிக்கிறார்கள். இது முதலாளித்துவ உலகத்தில் பொதுப்படையாக எதிரொலிக்கப்படுகிறது. நான் இங்கே இயற்கையாகவே, ஜெர்மனியின் அற்பமான அரசியல்வாதிகளையும் எல்லாம் தெரிந்த மூடர்களையும் பற்றிச் சொல்லவில்லை. முன்பு மேற்கோள் காட்டிய *Economist* சஞ்சிகையைத்தான் உதாரணமாகக் கூறுகிறேன். இது 1851ம் வருடம் நவம்பர் மாதம் 29ந் தேதியில் கூட—அதாவது திடீர்ப்புரட்சிக்கு நான்கு நாட்களுக்கு முன்பு—போனபார்ட் ''ஒழுங்கு நிலைமையின் பாதுகாவலர்'' என்றும், தியேர்களும் பெரியேக்களும் ''அராஜகவாதிகள்'' என்றும் அறிவிக்கிறது. 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 27ந் தேதியன்று, போனபார்ட் அந்த அராஜகவாதிகளை சமாதானப்படுத்திய பிறகு ''அறிவில்லாத, பயிற்சியில்லாத, மந்தமான பாட்டாளிகள் சமுதாயத்தின் மத்திய நிலையிலும் மேல் நிலையிலும் உள்ளவர்களின் திறமை, அறிவு, கட்டுப்பாடு, ஆன்மீகச் செல்வாக்கு, அறிவுச் செல்வம், தார்மிக பலம்'' ஆகியவற்றுக்குத் துரோகம் செய்து விட்டதாகப் பெருங் கூச்சலிடுகிறது. மந்தமான, அறிவில்லாத, இழிவான மக்கள் முதலாளித்துவ வர்க்கப் பகுதியினரே தவிர வேறு யாரும் அல்ல.

1851ம் வருடத்தில் பிரான்சில் சிறு வகையான வர்த்தக நெருக்கடி ஏற்பட்டது என்று எல்லோருக்கும் தெரியும். பிப்ரவரி மாத இறுதியை 1850ம் வருடத்தோடு ஒப்பிடும் பொழுது ஏற்றுமதி குறைந்திருப்பதைக் காட்டியது. மார்ச் மாதத்தில் வர்த்தகம் குறைந்ததால் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் தொழிற்சாலைகளில் பிப்ரவரி நாட்களில் இருந்தது போன்ற நெருக்கடியான நிலை ஏற்பட்டது. மே மாதத்தில் தொழில் இன்னும் புத்துயிர் பெறவில்லை. இன்னும் கடைசியாக ஜூன் மாதம் 28ந் தேதி வரையிலும் கூட பிரான்ஸ் வங்கியின் பங்குகள் எடுத்துக் காட்டியது போல, இட்டு வைப்புத் தொகைகளின் [deposits] ஏராளமான அதிகரிப்பும் மாற்று முறிகளின் [bills of exchange] பேரில் கொடுக்கப்படும் முன்பணம் அதே அளவுக்குக்

குறைந்து போனதையும் வைத்து, உற்பத்தி நின்று விட்டது. அக்டோபர் மாதத்தின் நடுப்பகுதிக்குப் பிறகு தான் தொழிலின் படிப்படியான முன்னேற்றம் மறுபடியும் ஆரம்பமாயிற்று. பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் இந்த வர்த்தகத் தேக்கம் கலப்பற்ற அரசியல் காரணங்களினால், நாடாளுமன்றத்துக்கும் நிர்வாக அதிகாரத்துக்குமிடையே ஏற்பட்ட போராட்டத்தினால், வெறும் தற்காலிகமான ஆட்சி வடிவத்துக்குரிய உறுதியற்ற தன்மையினால், 1852ம் வருடம் மே மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையைப் பற்றிய பயங்கரமான எதிர்பார்ப்புக்களால் ஏற்பட்டதென்று கூறியது. பாரிஸ் நகரத்திலும் அதற்கு வெளியேயுள்ள பகுதிகளிலும் தொழிலின் சில துறைகளில் பின்னுக்குத் தள்ளும் விளைவை மேலே கூறிய எல்லா சந்தர்ப்பங்களும் சேர்ந்து ஏற்படுத்தின என்பதை நான் மறுக்கப் போவதில்லை. ஆனால் அரசியல் நிலைமைகளின் பாதிப்பு முற்றிலுமாக, ஸ்தல அளவிலே மட்டுமேதான் இருந்தது. அக்டோபர் மாத மத்தியில் அரசியல் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அரசியல் வானத்தை இருண்ட மேகங்கள் மூடிக் கொண்டு எலிசேய் மாளிகையிலிருந்து எப்பொழுது இடி இடிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்ட நேரத்தில், வர்த்தகம் அபிவிருத்தியடையத் தொடங்கியது. மேலே கூறியதை நிரூபிக்க இந்த ஒரு உண்மையே போதுமானது. மற்ற விஷயங்களைப் பொறுத்த வரை, பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினர்—''அவர்களுடைய திறமை, அறிவு, ஆன்மீக நுண்ணறிவு, அறிவுச் செல்வம்'' ஆகிய அனைத்துமே அவர்களுடைய மூக்கு வரையிலேதான் எட்டும்—லண்டனிலே தொழிற்துறைக் கண்காட்சி [Industrial exhibition][64] நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் முழுவதிலும், தன்னுடைய வர்த்தக நெருக்கடிக்கான காரணத்தைத் தன்னுடைய மூக்கின் கீழேயே பார்த்திருக்க முடியும். பிரான்சில் தொழிற்சாலைகள் மூடப்பட்ட நேரத்தில் இங்கிலாந்தில் வர்த்தக முறிவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பிரான்சில் ஏப்ரல், மே மாதங்களில் தொழில் நெருக்கடியினால் ஏற்பட்ட பயம் உச்ச

கட்டத்தை எட்டிய பொழுது, இங்கிலாந்தில் வர்த்தக நெருக்கடியினுல் ஏற்பட்ட பயம் உச்ச கட்டத்தை எட்டியது. பிரான்சில் கம்பளித் தொழில் இங்கிலாந்தின் கம்பளித் தொழிலோடு சேர்ந்து கஷ்டங்களை அனுபவித்தது. அது மாதிரியே பிரான்சில் பட்டு உற்பத்தியும் இங்கிலாந்தின் பட்டு உற்பத்தியோடு சேர்ந்து நெருக்கடிக்கு உள்ளானது. இங்கிலாந்தில் பஞ்சாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன என்பது உண்மையானலும் 1849—1850ம் வருடங்களில் கிடைத்த அதே லாபம் இப்பொழுது கிடைக்கவில்லை. இரு நாடுகளுக்குமிடையே உள்ள வேறுபாடு என்னவென்றுல், பிரான்சில் ஏற்பட்டது தொழில் நெருக்கடி; இங்கிலாந்தில் ஏற்பட்டது வர்த்தக நெருக்கடி. பிரான்சில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்த பொழுது, இங்கிலாந்தில் அவை உற்பத்தியை அதிகரித்துக் கொண்டிருந்தன. எனினும் இங்கும் முந்திய வருடங்களிலிருந்த சாதகமான நிலைமைகள் குறைந்திருந்தன. பிரான்சில் ஏற்றுமதி அதிகமாகப் பாதிக்கப் பட்டது; இங்கிலாந்தில் இறக்குமதி அதிகமாகப் பாதிக்கப் பட்டது. இதற்கான பொதுக் காரணம் தெரிந்ததுதான். பிரான்சின் அரசியல் களத்துக்குள் அதைத் தேடுவதில் பயனில்லை என்பது இயற்கையே. 1849—1850ம் வருடங்கள் மிகவும் அதிகமான பொருள்வளமும் மிகை உற்பத்தியும் ஏற்பட்ட வருடங்களாகும். அந்த மிகை உற்பத்தியானது 1851ம் வருடத்தில்தான் தெரிய வந்தது. அந்த வருடத்தின் தொடக்கத்தில் தொழிற்துறைக் கண்காட்சி நடைபெறப் போகும் சந்தர்ப்பம் மிகை உற்பத்திக்கு இன்னும் விசேஷமான ஊக்கத்தைக் கொடுத்தது. இதைத் தவிர, கீழே தரப்பட்டுள்ள விசேஷ நிலைமைகளும் இருந்தன. முதலாவதாக, 1849—1850ம் வருடங்களில் பருத்தி விவசாயத்தில் ஏற்பட்ட பகுதியளவு பாதிப்பு; இதனையடுத்து எதிர் பார்த்ததற்கும் அதிகமான பருத்தி விளைச்சல் இருக்கும் என்ற உறுதி—பருத்தி விலை முதலில் ஏறி, பின்னர் இறங்கியது. சுருக்கமாக, பருத்தி விலையின் ஏற்ற இறக்கம். கச்சாப் பட்டின் உற்பத்தி பிரான்சில் மட்டுமாவது சராசரியளவுக்கும் குறைவாகவே இருந்தது. 1848ம் வருடத்திலிருந்து கம்பளி உற்பத்தித் தொழில் அதிகமாக வளர்ச்சியடைந்து

விட்டதனால், மூலப் பொருளான உரோம உற்பத்தி அதனை யொட்டி வளர்ச்சி அடைய முடியவில்லை; கம்பளித் துணி களின் விலையோடு ஒப்பிடுகிற பொழுது, கச்சாக் கம்பளியின் விலை எந்தப் பொருத்தமும் இல்லாதபடி அதிகரித்துவிட்டது. இங்கே உலக மார்க்கெட்டுக்காக உற்பத்தி செய்யப்படு கின்ற மூன்று தொழில்களின் மூலப் பொருள்களில் வர்த்தகத் தேக்கத்துக்கான மும்மடங்கு காரணங்கள் இருக்கின்றன. இத்தகைய விசேஷ நிலைமைகளைத் தவிர, 1851ம் வருடத்தில் வெளிப்பார்வைக்கு நெருக்கடி என்று தோன்றி யது தொழில் சுற்றுவட்டத்தில் ஏற்படும் மிகை உற்பத்தி யும் அதிகமான சூதாட்ட பேரமும் தங்களுடைய எல்லா சக்திகளையும் திரட்டிக் கொண்டு இந்தச் சுற்றுவட்டத்தின் இறுதிக் கட்டத்தை நோக்கிப் பரபரப்போடு முன்னேறிச் சென்று, தங்களுடைய தொடக்க நிலைக்கு, அதாவது பொதுவான வர்த்தக நெருக்கடிக்கு மறுபடியும் வருவதற்கு முன்பு நிச்சயமாக ஏற்படுத்துகின்ற தங்குமிடம் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. வர்த்தக வரலாற்றில் இப்படிப் பட்ட இடைக்காலங்களில் இங்கிலாந்தில் வர்த்தக முறிவு கள் ஏற்படுவது வழக்கமாகும். பிரான்சில் தொழில்துறை செயலற்றுப் போய்விடுகின்றது. ஒரு புறத்தில் எல்லா மார்க்கெட்டுகளிலும் ஆங்கிலேயர்களின் சமாளிக்க முடி யாத போட்டியின் காரணமாக அது பின்வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதும்; மறுபுறத்தில் ஒவ்வொரு வர்த் தகத் தேக்கத்தின் போதும் இன்ப வாழ்க்கைப் பொருள் என்று அது குறிப்பாகத் தாக்கப்பட்டதும் இதற்குக் கார ணங்களாகும். இவ்விதமான பொது நெருக்கடிகள் தவிர, பிரான்சில் அந்த நாட்டுக்கே உரிய தேசிய வர்த்தக நெருக் கடிகளும் உண்டு. ஆனால் அவையும் பிரான்சின் ஸ்தல நிலைமை களைக் காட்டிலும் அதிக அளவுக்கு உலக மார்க்கெட்டின் பொது நிலைமையினால் தூண்டப்பட்டு ஏற்படுத்தப்படுகின்றன. பிரெஞ்சு முதலாளியின் தப்பெண்ணங்களுக்கு எதிராக ஆங்கில முதலாளியின் கருத்துக்களை இங்கே வேறுபடுத்திக் காட்டுவது பயனளிக்கும். லிவர்புல் நகரத்திலிருக்கும் ஒரு பெரிய தொழில் நிறுவனம் 1851ம் வருடத்துக்கான தனது வர்த்தக அறிக்கையில் பின்வருமாறு எழுதுகிறது:

''வருட ஆரம்பத்தில் ஏற்படுகிற நம்பிக்கைகள் சிறிதும் விட்டுக்கொடுக்க முடியாதபடி அப்படியே பொய்ப்பிக்கப் படுவது அண்மையில் முடிவடைந்த வருடத்தைப் போல வேறு எந்த வருடத்திலும் நடந்திருக்கப் போவதில்லை. மாபெரும் சுபிட்சத்தை அனேகமாக எல்லோருமே ஏகமன தாக எதிர்பார்த்தார்கள்; ஆனால் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் இந்த அளவுக்கு அதிகமான ஏமாற்றத்தை யாரும் கண்டிருக்கப் போவதில்லை என அது காட்டிவிட்டது. ஆனால் இது வர்த்தக சமூகத்தினரைப் பற்றிச் சொல்லப் படுவதே தவிர, உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் வர்க்கத் தினரைப் பற்றியல்ல. எனினும் வருடத்தின் ஆரம்பத்தில் இந்தத் தலைகீழான விளைவை எதிர்பார்க்கக் கூடிய வலுவான காரணங்கள் நிச்சயமாக இருந்தன. உற்பத்திக் கையிருப்பு அதிகமில்லை; அபரிமிதமான பணப்புழக்கம் இருந்தது; உணவுப் பொருள்களின் விலை குறைவாகவே இருந்தது; நல்ல அறுவடை எதிர்பார்க்கப்பட்டது; ஐரோப்பாக் கண்டத்தில் தொடர்ச்சியாக சமாதானம் நிலவியது; உள்நாட்டில் அரசியல் குழப்பங்களோ, நிதித்துறைக் குளறு படிகளோ ஏற்படவில்லை. வர்த்தகத்துக்கு எந்தக் காலத்தி லும் இந்த அளவுக்கு விலங்குகள் மாட்டப்படாமல் இருந்ததில்லை... அப்படியானால் இந்தக் கேடான விளைவுக்குக் காரணமாக எதைச் சொல்ல வேண்டும்? ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் அபரிமிதமான வர்த்தகம் நடைபெற்றது தான் காரணம் என்று நாங்கள் கருதுகிறோம். நம்முடைய வர்த்தகர்கள் தங்களுடைய சுதந்திரமான செயலூக்கத்துக்கு இன்னும் அதிகக் கண்டிப்பான கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டால் ஒழிய, மூன்று வருடத்துக்கு ஒரு முறை ஏற்படுகின்ற கலவரம்தான் நம்மைத் தடுத்து நிறுத்துமே தவிர வேறு எதுவுமல்ல.''

பிரெஞ்சு முதலாளிகள் தொழில் நசித்து விடுமோ என்ற பீதியில் தங்களுடைய வியாபாரப் பைத்தியம் பிடித்த மூளையைக் கசக்கிக் கொள்வதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள். திடீர்ப்புரட்சி பற்றிய வதந்திகள்; பொது வான வாக்குறுதி மறுபடியும் ஏற்படப் போகிறது; நாடாளுமன்றத்துக்கும் நிர்வாக அதிகாரத்துக்கும் இடை யிலான போராட்டம்; ஆர்லேயானிஸ்டுகளுக்கும் முறைமை வாதிகளுக்கும் இடையே தீவிரமான எதிர்ப்பு; பிரான்சின் தென் பகுதியில் ஏற்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் சதிகள்;

நியேவ்ராவிலும் ஷெரிலும் ஏற்பட்ட விவசாயிகளின் ஜக்கேரியா[65] என்று சொல்லப்பட்டவை, ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடப் போகிற வெவ்வேறு வேட்பாளர்களின் விளம்பரங்கள்; பத்திரிகைகளின் பொதுப்படையான கோஷங்கள்; அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பதற்கும் பொதுவான வாக்குரிமையை மறுபடியும் ஏற்படுத்துவதற்கும் ஆயுதந் தாங்குவோம் என்ற குடியரசுவாதிகளின் பயமுறுத்தல்கள்; 1852ம் வருடம் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையன்று உலகம் அழியப் போகிறது என்று வெளிநாடுகளுக்கு ஓடிப்போன வீரர்கள் செய்த நற்செய்திப் பிரசாரம்—இவைகளினூல் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்க மூளை குழம்பிப் போய் உணர்விழந்து கிடந்ததை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள். மேலே கூறப்பட்டது எல்லாவற்றையும் நீங்கள் நினைத்துப் பார்த்தால் கூட்டிணைப்பு, திருத்தம், தள்ளி வைத்தல், அரசியலமைப்புச் சட்டம், இரகசிய நடவடிக்கைகள், கூட்டணி, நாட்டிலிருந்து ஓடுதல், அதிகாரத்தை அபகரித்தல், புரட்சி என்ற இந்தச் சொல்ல முடியாத, காது செவிடாகி விடக்கூடிய குழப்பத்தைக் கேட்கும் பொழுது, முதலாளித்துவ வர்க்கத்தினர் "முடிவில்லாத பயங்கரம் நீடிப்பதற்குப் பதிலாக, பயங்கரத்தோடு முடிவு செய்து கொள்வோம்!" என்று நாடாளுமன்றக் குடியரசை நோக்கி வெறி பிடித்தவர்களைப் போல ஏன் உறுமினர்கள் என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

போனபார்ட் இந்தக் கூக்குரலின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டார். அவருக்குக் கடன் கொடுத்தவர்களிடம் ஏற்பட்ட கொந்தளிப்பு அவருடைய உணர்வாற்றலைக் கூர்மைப்படுத்தியது. 1852ம் வருட மே மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமை அவர்களுடைய கடனைத் தீர்த்து விட வேண்டிய கடைசி நாளாகும்; ஒவ்வொரு நாளும் சூரியன் மறைகிற பொழுது அந்த நாள் நெருங்கிவந்து கொண்டிருந்தது; உங்களுடைய நிலவுலகக் கடன் பத்திரங்கள் செல்லாது போய் விடும் என்று வானத்து நட்சத்திரங்கள் பயமுறுத்தின. அவர்கள் உண்மையிலேயே ஆடுடக்காரர்

களாகி விட்டார்கள். அரசியலமைப்புச் சட்ட ரீதியாகவே பதவியில் நீடிக்க முடியும் என்ற போனபார்ட்டின் நம்பிக்கைகளை தேசிய சபை அழித்து விட்டது; தேர்தலில் ஜூவன்வீல் இளவரசரின் போட்டி அவர் இனி மேலும் தயங்க முடியாதபடிச் செய்தது.

எந்த ஒரு சம்பவமாவது நடைபெறுவதற்கு மிக முன்பாகவே தன்னுடைய நிழலை நீட்டுமென்றால், அது போனபார்ட்டின் திடீர்ப்புரட்சியே. 1849ம் வருடம் ஜனவரி மாதம் 29ந் தேதி, தான் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாதம் முடிந்தவுடனேயே அவர் ஷன்கர்னியேயிடம் அதைப் பற்றி ஆலோசனை கேட்டிருக்கிறார். 1849ம் வருடக் கோடை காலத்தின் போது, அவருடைய பிரதம மந்திரியான ஒடிலோன் பரோ திடீர்ப்புரட்சிக் கொள்கையைப் பற்றி சூசகமாகப் பேசினார்; 1850ம் வருடக் குளிர்காலத்தின் போது தியேர் இதைப் பற்றி பகிரங்கமாகப் பேசினார். 1851ம் வருடம் மே மாதத்தில் பெர்சினியீ திடீர்ப்புரட்சிக்கு ஷன்கர்னியேயின் ஆதரவைப் பெறுவதற்கு மறுபடியும் முயற்சி செய்தார். *Messager de l'Assemblée* என்ற பத்திரிகை[66] இந்தப் பேச்சுவார்த்தைகளின் விவரங்களை வெளியிட்டது. நாடாளுமன்றத்தில் புயல் வீசுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போனபார்ட் ஆதரவுப் பத்திரிகைகள் திடீர்ப்புரட்சி செய்வோம் என்று பயமுறுத்துவது வழக்கமாகும். அந்த நெருக்கடி எவ்வளவு அண்மையிலிருக்கிறதோ அவ்வளவு உரத்த குரலில் அவை கூக்குரலிடும். போனபார்ட் ஒவ்வொரு இரவிலும் பகட்டான வட்டாரங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்களுடன் கேளிக்கை விருந்துகள் நடத்தினர். நள்ளிரவு நேரம் நெருங்கும் பொழுது, உயர்ந்த மதுபானங்கள் அவர்களுடைய கற்பனைகளைத் தூண்டிவிட்டு, சுலபமாகப் பேச வைக்கும் பொழுது மறு நாள் காலையில் திடீர்ப்புரட்சியை ஆரம்பிப்பதென்று நேரம் குறிக்கப்படும். வாள்கள் உறைகளிலிருந்து உருவப்படும்; மதுக்கோப்பைகள் 'கண்கண்' என்ற ஒலியை ஏற்படுத்தும்; சன்னல் வழியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூக்கியெறியப்படுவார்கள்; போனபார்ட்டின் தலையில்

இராஜ மகுடம் சூட்டப்படும். மறு நாள் பொழுது விடிந்த தும் பேய் ஓடிவிடும். பேச்சைக் குறைக்காத வெஸ்டல்கள்[67], முன்யோசனையில்லாத பலாதீன்கள்* ஆகியோரிடமிருந்து பாரிஸ் நகரம் மறுபடியும் தனக்கு ஏற்படவிருந்த ஆபத்தி லிருந்து தப்பியதைத் தெரிந்து கொள்ளும். செப்டெம்பர் அக்டோபர் மாதங்களில் திடீர்ப்புரட்சியைப் பற்றிய வதந்திகள் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன. அதே சமயத்தில் நிழல் நிஜமாக மாறியது. ஐரோப்பாவிலிருந்து வெளிவருகிற தினசரிப் பத்திரிகைகளின் செப்டெம்பர், அக்டோபர் மாதப் பிரதிகளில் எதை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். வார்த்தைக்கு வார்த்தை பின்கண்ட தகவல்களைக் காணலாம். ''பாரிஸ் நகரம் முழுவதும் திடீர்ப் புரட்சி வதந்திகள் நிலவுகின்றன. இரவு நேரத்தில் தலை நகரத்தில் எல்லா இடங்களிலும் துருப்புக்களைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, மறு நாள் காலையில் தேசிய சபையைக் கலைத்து விட்டதாகவும் சேன் மாவட்டத்தை முற்றுகை நிலையில் வைத்தும், பொதுவான வாக்குரிமையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்தும், மக்களுடைய ஆதரவைக் கேட்டுக் கொண்டும் ஆணைகள் வெளியிடப்படும் என்றும், இத்தகைய சட்ட விரோதமான ஆணைகளை நிறை வேற்றுவதற்கு போனபார்ட் மந்திரிகளைத் தேடிக் கொண் டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.'' இப்படிப்பட்ட தகவல்களைத் தருகின்ற அறிக்கைகள் எப்பொழுதும் ''தள்ளி வைக்கப்பட்டது'' என்ற முக்கியமான வார்த்தையுடன் முடி வடைகின்றன. போனபார்ட்டிடமிருந்த ஒரே நிலையான கருத்து திடீர்ப்புரட்சியே. இந்த எண்ணத்தோடுதான் அவர் பிரெஞ்சு மண்ணில் மறுபடியும் காலடி வைத்தார். அவர் அதே பித்தாக இருந்த காரணத்தால், எப்பொழுதும் அதைப் பற்றி உளறிக் கொண்டு தன்னுடைய உள்நோக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டுமிருந்தார். ஆனால் அவரிடம்

---

* —மத்திய காலத்தைச் சேர்ந்த மன்னரின் விசுவாச மான ஊழியர்; எப்பொழுதும் அவருக்குப் பக்கத்திலேயே இருப்பவர்.—ப-ர்.

மனோபலம் இல்லாதபடியால், அந்த யோசனையை எப் போதும் கைவிட்டுக் கொண்டுமிருந்தார். பாரிஸ் நகர மக்கள் திடீர்ப்புரட்சி என்ற பேயைப் பற்றிக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருந்தார்கள். கடைசியில் அது சதையோடும் இரத்தத்தோடும் தோன்றிய பொழுது அது உண்மையானதே என்று நம்புவதற்கு அவர்களால் முடிய வில்லை. திடீர்ப்புரட்சி வெற்றியடைந்ததற்குக் காரணம் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவரின் முன்ஜாக் கிரதையோ, தேசிய சபை எதிர்பாராத நேரத்தில் அது நடைபெற்றதோ அல்ல. திடீர்ப்புரட்சி வெற்றியடைந்த தென்றால் அது அவருடைய அஜாக்கிரதையையும் மீறி வெற்றியடைந்தது; தேசிய சபைக்கு முன்பே தெரிந்திருந் தும் கூட வெற்றியடைந்தது. இதற்கு முன்னர் நடை பெற்ற நிகழ்ச்சிகளின் தேவையான வளர்ச்சியாக, தவிர்க்க முடியாத வளர்ச்சியாக அது வெற்றியடைந்தது.

போனபார்ட் அக்டோபர் மாதம் 10ந் தேதியன்று பொதுவான வாக்குரிமையை மறுபடியும் ஏற்படுத்துவ தென்று தாம் முடிவு செய்திருப்பதாகத் தன்னுடைய மந்திரிகளிடம் தெரிவித்தார். அவர்கள் 16ந் தேதியன்று தங்களுடைய பதவி விலகல் கடிதத்தை அவரிடம் கொடுத் தனர். தாரினியி மந்திரிசபை பதவியேற்ற தகவல் 26ந் தேதி பாரிஸ் நகர மக்களுக்குத் தெரிய வந்தது. அதே சமயத்தில் பிரதம போலீஸ் அதிகாரி பதவியில் கர்லியே வுக்குப் பதிலாக மொப்பா நியமிக்கப்பட்டார். முதலாவது இராணுவ டிவிஷனின் தளகர்த்தரான மஞான் மிகவும் நம்பிக்கையான படைகளைப் பாரிஸ் நகரத்தில் குவித்து வைத்துக் கொண்டார். நவம்பர் மாதம் 4ந் தேதியன்று தேசிய சபைக் கூட்டம் மறுபடியும் ஆரம்பமானது. இது வரை தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சுருக்கமாக, செறிவான வடிவத்தில் மறுபடியும் செய்வதைத் தவிர வேறு எந்த நல்ல வேலையும் அதற்கு இல்லை. அந்த சபை செத்துப் போன பிறகுதான் புதைக்கப்பட்டது என்பதை அது இப்படி நிரூபித்தது.

நிர்வாக அதிகாரத்தோடு நடைபெற்ற போராட்டத்

தில் அது முதன் முதலாக இழந்த தளம் மந்திரிசபையே. தாரினியி மந்திரிசபை என்ற போலி அமைப்பை முழு மதிப் போடு ஏற்றுக் கொண்டதன் மூலம் தன்னுடைய இழப்பை சபை கண்ணியமாக ஒத்துக் கொண்டது. நிரந்தரக் கமிஷ னுக்கு முன்பாக மந்திரிசபையின் சார்பில் ஜிரோ நின்ற பொழுது அவரை ஏளனம் செய்து சிரித்தது. பொதுவான வாக்குரிமையை மீண்டும் ஏற்படுத்துவது போன்ற பலமான நடவடிக்கைகளை எடுக்க எவ்வளவு பலவீனமான மந்திரி சபை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் நாடாளுமன்றத் தின் உள்ளே எதையும் செய்வதில்லை; நாடாளுமன்றத் திற்கு எதிர்ப்பாகவே எல்லாவற்றையும் செய்வதென்பது தான் உண்மையான நோக்கமாகும்.

தேசிய சபை கூடிய முதல் தினத்தன்றே, போனபார்ட் டிடமிருந்து பொதுவான வாக்குரிமையை மறுபடியும் ஏற் படுத்த வேண்டும், 1850ம் வருடம் மே மாதம் 31ந் தேதிய தேர்தல் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரும் கடிதம் அதற்கு வந்தது. அவருடைய மந்திரிசபை அன்றைய தினமே அப்படிப்பட்ட அரசு மசோ தாவையும் சபையில் முன்மொழிந்தது. அரசாணை அவச ரமானது என்ற மந்திரிசபையின் தீர்மானத்தை தேசிய சபை உடனடியாக நிராகரித்தது. நவம்பர் 13ந் தேதியன்று மசோதாவையும் நிராகரித்தது; வாக்கெடுப்பில் மசோதா வுக்கு ஆதரவாக 348 வாக்குகளும் எதிர்ப்பாக 355 வாக்கு களும் கிடைத்தன. மக்கள் தனக்குக் கொடுத்த உரிமைப் பத்திரத்தை சபை மறுபடியும் கிழித்துப் போட்டது. சுதந் திரமான வாக்கெடுப்பின் மூலமாக மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அமைப்பு என்பதற்குப் பதிலாக உரிமையை அபகரித்துக் கொண்ட ஒரே வர்க்கத் தின் நாடாளுமன்றமாக மாறிவிட்டது என்ற உண்மையை அது மறுபடியும் நிரூபித்தது. தேசம் என்ற உடம்போடு நாடாளுமன்றம் என்ற தலையை ஒட்டவைத்த தசைநார் களை அது தானுகவே வெட்டிக் கொண்டிருப்பதை அது மறுபடியும் அங்கீகரித்துக் கொண்டது.

பொதுவான வாக்குரிமையை மறுபடியும் ஏற்படுத்து

கிற மசோதாவின் மூலம் நிர்வாக அதிகாரம் தேசிய சபையை ஒதுக்கி மக்களிடம் முன்சென்றது என்றால் சட்ட மன்ற அதிகாரமே குவெஸ்டர் மசோதா [Questors' Bill]வின் மூலம் மக்களை ஒதுக்கி இராணுவத்திடம் முன்சென்றது. நேரடியாகத் துருப்புக்களை வரவழைப்பதற்கான உரிமையைப் பெறுவது, நாடாளுமன்ற இராணுவத்தை அமைப்பது இந்த மசோதாவின் நோக்கமாகும். தேசிய சபைக்கும் மக்களுக்குமிடையே, அதற்கும் போனபார்ட்டுக்குமிடையே தீர்ப்பு வழங்கும் நிலையில் இராணுவத்தை நியமித்தது; தீர்மானமான அரசு சக்தியாக இராணுவத்தை அங்கீகரித்தது. ஆனால் அதே சமயத்தில் இந்த சக்தியின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குத் தன்னுடைய கோரிக்கையை எப் பொழுதோ கைவிட்டுவிட்டதையும் அது ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தது. துருப்புக்களை உடனே வரவழைத்துக் கொள்வதற்குப் பதிலாக, துருப்புக்களை வரவழைக்கத் தனக்கு உரிமையுண்டா என்று விவாதம் நடத்தி அதனுடைய அதிகாரங்களைப் பற்றி அதற்குள்ள சந்தேகங்களை வெளியே காட்டிக் கொண்டது. குவெஸ்டர் மசோதாவை நிராகரித்ததன் மூலமாக சபை தன்னுடைய கையாலாகாத் தனத்தைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டது. பெரும்பான்மைக்கு 108 வாக்குகள் குறைவாக இருந்தபடியால், இந்த மசோதா தோல்வியடைந்தது. இதற்கு மலைக் கட்சி காரணமாக இருந்தது. புரிடானின் கழுதைக்கு ஏற்பட்ட கதி இதற்கும் ஏற்பட்டது. அந்தக் கழுதை கூட இரண்டு புல் கட்டுகளில் எதைத் தின்றால் நல்லது என்ற பிரச்சினையைத்தான் முடிவு செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கட்சியோ இரண்டு பக்கமிருந்தும் விழுகிற அடிகளில் யாருடைய அடி அதிக பலமானது என்ற பிரச்சினையை முடிவு செய்ய வேண்டியிருந்தது. ஒரு பக்கத்தில் ஷன்கர்னியேயைக் கண்டு பயந்தது; மறு பக்கத்தில் போனபார்ட்டைக் கண்டு பயந்தது. இந்த நிலை பரிதாபமானது என்பதை ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும்.

நவம்பர் 18ந் தேதியன்று, ஒழுங்குமுறைக் கட்சி ஊராட்சி மன்றத் தேர்தல் சட்டத்துக்கு ஒரு திருத்தத்தைக்

கொண்டுவந்தது. ஊராட்சித் தேர்தல்களில் வாக்களிக்க மூன்று வருட காலக் குடியுரிமை வேண்டும் என்றிருந்ததற்குப் பதிலாக, ஒரு வருடக் குடியுரிமை போதுமானது என்பது அந்தத் திருத்தமாகும். இந்தத் திருத்தம் ஒரே ஒரு வாக்கில் தோற்கடிக்கப்பட்டது. இது கூடக் கணக்கிடுவதில் ஏற்பட்ட தவறுதான் என்பது உடனே நிரூபிக்கப்பட்டது. ஒழுங்குமுறைக் கட்சி விரோதமான பிரிவுகளாகப் பிரிந்து விட்ட பிறகு, அது தன்னுடைய சுயேச்சையான நாடாளுமன்றப் பெரும்பான்மையை எப்பொழுதோ இழந்துவிட்டது. நாடாளுமன்றத்தில் இப்பொழுது யாருக்கும் பெரும் பான்மை கிடையாது என்பதை இது எடுத்துக் காட்டியது. தேசிய சபை தன்னுடைய அலுவல்களை நடத்துவதற்கு இயலாததாகி விட்டது. அதனுடைய சிதறிப் போன அங்கங்களை எந்த இணைப்புச் சக்தியும் இனிமேல் சேர்த்து வைக்க முடியாது. அதற்குக் கடைசி மூச்சு வாங்கி விட்டது; அது செத்துப் போய்விட்டது.

கடைசியாக, அந்த அழிவுக்குச் சில தினங்களுக்கு முன்பு, நாடாளுமன்றத்துக்கு வெளியே இருந்த முதலாளித்துவ வர்க்கம், நாடாளுமன்றத்துக்கு உள்ளே இருந்த முதலாளித்துவ வர்க்கத்தோடு முறிவு ஏற்பட்டிருப்பதை மறுபடியும் மிகவும் கம்பீரமாக எடுத்துக் காட்டியது. நாடாளுமன்றத்தில் வீரனுக விளங்கிய தியேர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவே நாடாளுமன்ற அறிவுமந்தம் என்ற தீர்க்க முடியாத நோய்க்கு ஆளாகியிருந்தார். நாடாளுமன்றத்தின் மரணத்துக்குப் பிறகு, அரசு கவுன்சிலோடு அவர் பொறுப்புச் சட்டம் என்ற பெயரில் ஒரு புதிய நாடாளுமன்றச் சூழ்ச்சியை ஆரம்பித்தார். ஜனாதிபதியை அரசியலமைப்புச் சட்டத்தின் எல்லைகளுக்குள் உறுதியாக நிறுத்தி வைப்பது அந்தச் சட்டத்தின் நோக்கமாகும். செப்டெம்பர் 15ம் தேதியன்று பாரிஸ் நகரத்தில் புதிய சந்தைக் கட்டிடத்துக்கு அடித்தளக் கல் நாட்டும் பொழுது போனபார்ட், மஸனியேலோவைப் போல, சந்தைப் பெண்களை, மீன் வியாபாரம் செய்யும் பெண்களைக் கவர்ந்தார்—உண்மையான பலத்தைப் பொறுத்தவரை,

மீன் வியாபாரம் செய்யும் ஒரு பெண் பதினேழு புர்கிராவ்களைக் காட்டிலும் கூடுதலான பலம் உடையவள் என்பது நியாயம்தானே. குவெஸ்டர் மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிறகு அவர் தமது எலிசேய் மாளிகையில் லெப்டினென்டுகளுக்கு சுவையான விருந்தளித்து அவர்களுக்குக் களிப்பூட்டியதைப் போல, லண்டனில் நடைபெற்ற தொழிற் கண்காட்சியில் கிடைத்த பரிசுப் பதக்கங்களை ஜனாதிபதியின் கையிலிருந்து பெறுவதற்காக சர்க்கஸ் மைதானத்தில் கூடியிருந்த தொழில் முதலாளிகளை இப்பொழுது அவர் உணர்ச்சிப் பரவசமாக்கி விட்டார். *Journal des Débats* என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்ட அவருடைய சொற்பொழிவின் முக்கியமான பகுதியை இங்கே தருகிறேன்:

''இத்தகைய நம்ப முடியாத சாதனைகளை நினைக்கும் பொழுது, இங்கே ஒரு பக்கத்தில் மேடைப் பிரசங்கிகளும் மறு பக்கத்தில் முடியாட்சி மயக்கங்களும் தொடர்ச்சியாகக் குழப்பமேற்படுத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, பிரெஞ்சுக் குடியரசு தன்னுடைய உண்மையான நலன்களுக்காகப் பாடுபட அனுமதித்தால், தன்னுடைய ஸ்தாபனங்களில் சீர்திருத்தங்களைச் செய்ய அனுமதித்தால், நம் குடியரசு எவ்வளவு சிறப்போடு விளங்கும் என்பதை நான் வலியுறுத்துவது மிக நியாயமானதாகும். (அரங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பலத்த கைதட்டலும் திரும்பத் திரும்பப் புயல் போன்ற கைதட்டலும் கேட்கிறது.) முடியாட்சி மயக்கங்கள் தொழிலின் முக்கியமான அனைத்துத் துறைகளின் முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கின்றன. இங்கே முன்னேற்றத்துக்குப் பதிலாகப் போராட்டம் நடைபெறுகிறது. ஒரு காலத்தில் அரசர் ஆட்சியையும் தனி உரிமைகளையும் மிகத் தீவிரமாக ஆதரித்தவர்கள், இன்றைய தினம் பொதுவான வாக்குரிமையின் மூலமாக உருவாகியிருக்கும் ஆட்சியை பலவீனப்படுத்துகின்ற ஒரே நோக்கத்தோடு சட்ட சபையின் ஆதரவாளர்களாக மாறியிருக்கிறார்கள். (பலத்த கைதட்டல்; மீண்டும் மீண்டும் கைதட்டல்.) புரட்சியினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள், அதைப் பற்றி மிக அதிகமாகப் புலம்பியவர்கள் இன்று ஒரு புதிய புரட்சியைத் தூண்டிவிடுவதை, அதிலும் தேசத்தின் விருப்பாற்றலைத் தடுப்பதற்காகவே இதைச் செய்

வதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.... எதிர்காலத்தில் இங்கே அமைதி நிலவச் செய்வோம் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.... இதரவை, இதரவை. (பிரமாதம், பிரமாதம் என்ற ஆரவாரம் புயல் போலக் கேட்கிறது.)''

இப்படி தொழில் முதலாளிகள் டிசம்பர் 2ந் தேதி திடீர்ப்புரட்சியை, நாடாளுமன்றம் ஒழிக்கப்பட்டதை, தன்னுடைய சொந்த ஆட்சியின் வீழ்ச்சியை, போனபார்ட்டின் சர்வாதிகாரத்தை அடிமைத் தனமாகப் பாராட்டிக் கைதட்டுவதைப் பார்க்கிறோம். நவம்பர் 25ந் தேதி இடியோசையெனக் கேட்ட கைதட்டலுக்குக் கிடைத்த பதில் டிசம்பர் 4ந் தேதி கேட்ட பீரங்கி வேட்டாகும். அன்று மிக அதிகமாகக் கைதட்டிய திருவாளர் சலண்ட்ரூசின் வீட்டின் மீதுதான் அவர்கள் மிக அதிகமான குண்டுகளை வீசினார்கள்.

குரோம்வெல், நீண்ட நாடாளுமன்றத்தைக்[68] கலைத்த பொழுது, தன்னந்தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் போய் நின்றார். அவர் குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் ஒரு நிமிடம் கூட அது நீடிக்கக் கூடாது என்று தன் பையிலிருந்து கடிகாரத்தை எடுத்தார். நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் வேடிக்கையாகக் கிண்டல் செய்து வெளியே விரட்டினார். நெப்போலியன்—தன்னுடைய முன்மாதிரியைக் காட்டிலும் அவர் சின்னமனிதர்தான்—புரூமேர் 18ந் தேதியன்று சட்டமன்றத்துக்கு நேரில் போகிறார். அதன் மரணத் தீர்ப்பைத் தன்னுடைய திக்கு வாய்க் குரலில் வாசிக்கிறார். இரண்டாவது போனபார்ட்டுக்குக் கிடைத்திருந்த நிர்வாக அதிகாரமோ குரோம்வெலுக்கோ அல்லது நெப்போலியனுக்கோ கிடைத்திருந்ததைக் காட்டிலும் மிகவும் வித்தியாசமானது. அவர் தனக்கு முன்மாதிரியை உலக வரலாற்றின் பதிவேடுகளில் தேடவில்லை; டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தில், கிரிமினல் நீதிமன்றத்தின் பதிவேடுகளில் தேர்ந்தெடுக்கிறார். அவர் பிரான்சின் வங்கியிலிருந்து 250 லட்சம் பிராங்குகளைத் திருடுகிறார்; பத்து லட்சம் பிராங்குகள் கொடுத்து ஜெனரல்

மனுனையும், ஒவ்வொருவருக்கும் பதினைந்து பிராங்குகளும் மதுபானமும் கொடுத்து படைவீரர்களையும் விலைக்கு வாங்குகிறார். இரவு நேரத்தில் வரும் திருடனைப் போலத் தன்னுடைய கூட்டாளிகளோடு இரகசியமாக வருகிறார். நாடாளுமன்றத்தில் மிகவும் ஆபத்தான தலைவர்களின் வீடுகளில் கதவுகளை உடைத்து உள்ளே போகிறார்கள். கவெனாக், லமொரிசியேர், லெப்லோ, ஷன்கர்னியே, ஷராஸ், தியேர், பாஸ் முதலியோர் தங்களுடைய படுக்கைகளிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வரப்படுகிறார்கள். பாரிஸ் நகரத்தின் கேந்திரமான இடங்களையும் நாடாளுமன்றக் கட்டிடத்தையும் துருப்புக்கள் பிடித்து விட்டன. மறுநாள் அதிகாலையில் எல்லாச் சுவர்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருக்கின்றன. தேசிய சபையும் அரசு கவுன்சிலும் கலைக்கப்பட்டுவிட்டன, பொதுவான வாக்குரிமை மறுபடியும் ஏற்படுத்தப்பட்டு விட்டது, சேன் மாவட்டம் முற்றுகை நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது போன்ற அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. இதே விதமாக *Moniteur* பத்திரிகையில், செல்வாக்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஜனாதிபதிக்கு ஆதரவு கொடுக்க முடிவு செய்திருப்பதாகவும், ஒரு விசேஷ அரசு கவுன்சில் அவர்கள் ஏற்படுத்தியிருப்பதாகவும் பொய்யான செய்தி வெளியிடத் தானே ஏற்பாடு செய்கிறார்.

நாடாளுமன்றத்தின் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் பத்தாவது வட்டாரத்தின் மேயரின் அலுவலகத்தில் கூடுகின்றனர். இவர்களில் பெரும் பகுதியினர் முறைமைவாதிகளும் ஆர்லேயானிஸ்டுகளுமே. இவர்கள் ''குடியரசு நீடுழி வாழ்க!'' என்று திரும்பத் திரும்பக் கேட்கும் கோஷங்களுக்கு மத்தியில் போனபார்ட்டைப் பதவியிலிருந்து நீக்கி விட்டதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள். பிறகு கட்டிடத்துக்கு வெளியே வாயைப் பிளந்து கொண்டு நிற்கும் கூட்டத்தினர் மத்தியில் ஆவேசமாகப் பேசுகிறார்கள். அதனால் ஒரு பயனும் ஏற்படவில்லை. கடைசியில் குறிதவறுமல் சுடுவதில் வல்லவர்களான ஆப்பிரிக்கப் படையினர் அவர்களைக் கைது செய்கிறார்கள். அத்தனை பேரும் முதலில்

ட'ஆர்சே படையினர் குடியிருப்புக்குக் கொண்டு போகப் பட்டு, அங்கே சற்று நேரத்துக்குப் பிறகு சிறை வண்டிகளில் அடைக்கப்பட்டு, மசாஸ், ஆம், வென்சேனில் உள்ள சிறை களுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். ஒழுங்குமுறைக் கட்சி, சட்டமன்றம், பிப்ரவரிப் புரட்சி ஆகியவை இவ்விதமாக முடிவடைந்தன.

இப்பகுதியை முடிப்பதற்கு முன்பு பிப்ரவரிப் புரட்சி யின் வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவோம்.

I. முதற் கட்டம். 1848 பிப்ரவரி 24 முதல் மே 4 வரை. பிப்ரவரி காலகட்டம். முன்னுரை. உலக சகோதரத் துவம் என்ற மோசடி.

II. இரண்டாவது கட்டம். குடியரசையும் அரசியல் நிர்ணய சபையையும் அமைத்துக் கொண்டிருக்கும் கட் டம்.

1. 1848 மே 4 முதல் ஜூன் 25 வரை. பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக எல்லா வர்க்கங்களும் நடத்தும் போராட்டம். ஜூன் நாட்களில் பாட்டாளி வர்க்கத்தின் தோல்வி.

2. 1848 ஜூன் 25 முதல் டிசம்பர் 10 வரை. கலப் பற்ற முதலாளித்துவ வர்க்கக் குடியரசுவாதிகளின் சர் வாதிகாரம். அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்கப்படுதல். பாரிஸ் நகரத்தில் முற்றுகை நிலைமை அறிவிப்பு. டிசம் பர் 10ந் தேதியன்று போனபார்ட் ஜனாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவுடன் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரம் ஒதுக்கப்படுதல்.

3. 1848 டிசம்பர் 20 முதல் 1849 மே 28 வரை. போனபார்ட்டுக்கும் அவருடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஒழுங்குமுறைக் கட்சிக்கும் எதிராக அரசியல் நிர்ணய சபை யின் போராட்டம். அரசியல் நிர்ணய சபையின் முடிவு. குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் தோல்வி.

III. மூன்றாவது கட்டம். அரசியலமைப்புச் சட்டக் குடியரசு, தேசிய சட்டமன்றம் ஆகியவற்றின் கட்டம்.

1. 1849 மே 28 முதல் ஜூன் 13 வரை. முதலாளித் துவ வர்க்கத்தையும் போனபார்ட்டையும் எதிர்த்து குட்டி

முதலாளித்துவ வர்க்கத்தின் போராட்டம். குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தினுடைய தோல்வி.

2. 1849 ஜூன் 13 முதல் 1850 மே 31 வரை. ஒழுங்கு முறைக் கட்சியின் நாடாளுமன்ற சர்வாதிகாரம். பொதுவான வாக்குரிமையை ஒழிப்பதன் மூலம் அது தன்னுடைய ஆட்சியைப் பூரணமாக்குகிறது. ஆனால் நாடாளுமன்ற மந்திரிசபையை இழந்து விடுகிறது.

3. 1850 மே 31 முதல் 1851 டிசம்பர் 2 வரை. நாடாளுமன்ற முதலாளி வர்க்கத்தினருக்கும் போனபார்ட்டுக்கும் போராட்டம்.

(அ) 1850 மே 31 முதல் 1851 ஜனவரி 12 வரை. இராணுவத்தின் மீதிருந்த தலைமையான அதிகாரத்தை நாடாளுமன்றம் இழக்கிறது.

(ஆ) 1851 ஜனவரி 12 முதல் ஏப்ரல் 11 வரை. அரசாங்க அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு அது செய்யும் முயற்சிகள் முறியடிக்கப்படுகின்றன. ஒழுங்குமுறைக் கட்சி தன்னுடைய சுயேச்சையான நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்து விடுதல். குடியரசுவாதிகளோடும் மலைக் கட்சியோடும் கூட்டுச் சேருகிறது.

(இ) 1851 ஏப்ரல் 11 முதல் அக்டோபர் 9 வரை. திருத்தியமைத்தல், கூட்டிணைதல், தள்ளி வைத்தல் ஆகிய முயற்சிகள். ஒழுங்குமுறைக் கட்சி அதனுடைய தனித்தனி பிரிவுகளாகப் பிரிந்து விடுகிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் பெரும்பான்மையினருக்கும் முதலாளித்துவ நாடாளுமன்றம் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் முறிவு வலுப்படுகிறது.

(ஈ) 1851 அக்டோபர் 9 முதல் டிசம்பர் 2 வரை. நாடாளுமன்றத்துக்கும் நிர்வாக அதிகாரத்துக்கும் பகிரங்கமான முறிவு ஏற்படுதல். தன்னுடைய வர்க்கத்தாலும் இராணுவத்தாலும் மற்ற எல்லா வர்க்கங்களாலும் கைவிடப்பட்டு மரண அவஸ்தையிலிருக்கும் நாடாளுமன்றம் கடைசியில் மூச்சை நிறுத்துகிறது. நாடாளுமன்ற ஆட்சி முறை, முதலாளித்துவ வர்க்க ஆதிக்கம் ஆகியவற்றின் முடிவு. போனபார்ட்டின் வெற்றி. பேரரசின் மறுவருகை என்று கேலிக்கூத்து.

VII

பிப்ரவரி மாதப் புரட்சியின் ஆரம்ப நிலையில் சமூகக் குடியரசு என்பது ஒரு சொற்றொடராக, முன் அறிவிப் பாகத் தோன்றியது. 1848ம் வருடம் ஜூன் மாதத்தில் பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் இரத்த வெள்ளத்தில் அது மூழ்கடிக்கப்பட்டது, எனினும் அது ஒரு ஆவியைப் போல நாடகத்தின் பிந்திய காட்சிகளில் திரும்பத் திரும்பத் தோன்றுகிறது. ஜனநாயகக் குடியரசு அதன் வருகையை அறிவிக்கிறது. 1849ம் வருடம் ஜூன் 13ந் தேதியன்று வேகமாகத் தப்பியோடுகின்ற குட்டி முதலாளித்துவ வர்க்கத் தினரோடு சேர்ந்து அதுவும் சிதறிக் கலைந்து போகிறது. ஆனால் ஓடிப்போகும் பொழுதும் கூட, அது தன்னுடைய சொந்தப் பேரிகையை இரு மடங்கு அகம்பாவத் தோடு முழங்குகிறது. நாடாளுமன்றக் குடியரசும் அதனோடு சேர்ந்திருக்கிற முதலாளித்துவ வர்க்கத்தினரும் அரசியல் அரங்கத்தை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்கிறார்கள்; அது தன்னுடைய வாழ்க்கையைப் பூரணமாக அனுபவிக் கிறது. ஆனால் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி, ''குடியரசு நீடூழி வாழ்க!'' என்று அரசவம்சவாதிகள் கூட்டணி நெஞ்சுருகக் கதற, நாடாளுமன்றக் குடியரசைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் உழைக்கும் பாட் டாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து லும்பன் பாட் டாளி வர்க்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்தது; டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர் லும்பன் பாட்டாளி வர்க்கத்தின் தலை மீது உட்கார்ந்திருக்கிறார். முதலாளித்துவ வர்க்கம் சிகப்பு அராஜகம் எதிர்காலத்தில் செய்யப் போகும் பயங்கரங்களைச் சொல்லி பிரான்சையே மூச்சுவிட முடியாமல் பயமுறுத்தி வைத்திருந்தது. ஆனால் போன பார்ட் டிசம்பர் 4ந் தேதியன்று மோன்மார்ட்ர் நெடுஞ் சாலையிலும், இத்தாலிய நெடுஞ்சாலையிலும் இருக்கும் மாளிகைகளில் குடியிருந்த பிரபலமான முதலாளிகளைக் குடிவெறியிலிருந்த தமது 'கட்டுப்பாடான' இராணுவத்

தினரைக் கொண்டு, சன்னல்களுக்கு முன்பாக நிறுத்தி அவர்களைச் சுட்டுக் கொல்லச் செய்தார். அதன் மூலம் இவர்கள் எதிர்கால சிகப்பு அராஜகத்தைக் கண்டு அஞ்சுவதற்கு அவசியமில்லாமற் செய்தார். முதலாளிகள் வாளையே தெய்வமாக்கினர்கள்; இப்பொழுது வாள் அவர்களையே ஆட்சி செய்கிறது. இவர்கள் புரட்சிகரமான பத்திரிகைகளை ஒழித்தார்கள், இப்பொழுது அவர்களுடைய சொந்தப் பத்திரிகைகளே ஒழிக்கப்பட்டுவிட்டன. இவர்கள் போலீஸ் மேற்பார்வையோடு மட்டுமே பொதுக் கூட்டங்களை நடத்த அனுமதித்தார்கள்; இன்று அவர்களுடைய வரவேற்பு அறைகளைப் போலீஸார் காவல் செய்கிறார்கள். ஜனநாயகப் போக்குள்ள தேசியக் காவலர் படையை இவர்கள் கலைத்தார்கள்; அவர்களுக்குச் சொந்தமான தேசியக் காவலர் படையே இன்று கலைக்கப்படுகிறது. இவர்கள் முற்றுகை நிலையை விதித்தனர்; இன்று அவர்கள் மீது முற்றுகை நிலை விதிக்கப் படுகிறது. இவர்கள் ஜூரிகளுக்குப் பதிலாக இராணுவ கமிஷன்களை ஏற்படுத்தினர்கள்; இன்று அவர்களது ஜூரிகளை இராணுவ கமிஷன்கள் அகற்றிவிட்டன. இவர்கள் பொதுக்கல்வியை மதகுருக்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர்; இன்று மதகுருக்களுடைய கல்வி முறைக்கு அவர்களும் கீழ்ப்படிந்து நிற்கிறார்கள். இவர்கள் விசாரணையில்லாமல் மக்களைத் தூக்கிச் சென்றார்கள்; இன்று விசாரணையில்லாமல் அவர்களைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். இவர்கள் சமூகத்தின் ஒவ்வொரு முயற்சியையும் அரசு பலத்தைக் கொண்டு ஒடுக்கினர்கள்; இன்று அவர்களது ஒவ்வொரு முயற்சியும் அரசு பலத்தால் ஒடுக்கப்படுகிறது. இவர்கள் பணத்தாசையால் தங்களுடைய அரசியல் வாதிகளையும் கல்வியறிவாளர்களையும் எதிர்த்துக் கலகம் செய்தார்கள்; இப்பொழுது அவர்களது வாய் மூடப்பட்டு விட்டபடியால், பேனை உடைக்கப்பட்டு விட்டதால், அவர்களது பணமூட்டை கொள்ளையடிக்கப்படுகிறது. புனித அர்சேனீ கிறிஸ்தவர்களிடம் "தப்பியோடுங்கள்! மௌனமாக இருங்கள்! ஒன்றும் செய்யாமலிருங்கள் (Fuge, tace, quiesce)" என்று சொன்னார். முதலாளிகள் புரட்சியைப்

பார்த்து இதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப அலுப்படையாமல் சொன்னார்கள். இப்பொழுது போனபார்ட் முதலாளிகளைப் பார்த்துச் சொல்கிறார்: ''தப்பியோடுங்கள்! மௌனமாக இருங்கள்! ஒன்றும் செய்யாமலிருங்கள்!''

நெப்போலியனுக்கு ஏற்பட்ட மனக்குழப்பத்தைத் தீர்ப்பதற்கு உரிய வழியை பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினர் எப்பொழுதோ கண்டுபிடித்து விட்டார்கள். ''இன்னும் ஐம்பது வருடங்களில் ஐரோப்பா குடியரசாக மாறும்; அல்லது கஸாக்குகளிடம் சிக்கும்'' ("Dans cinquante ans, l'Europe sera républicaine ou cosaque"). ''கஸாக்குகளின் குடியரசை'' ஏற்படுத்துவதே இதைத் தீர்க்கும் வழி என்று முடிவு செய்தார்கள். முதலாளித்துவக் குடியரசு என்ற கூலப் பொருளை, எந்த சேர்சேயும், எப்படிப்பட்ட பில்லி சூனியத்தாலும், பயங்கரமான பொருளாக மாற்றி விடவில்லை. அந்தக் குடியரசு, தன்னிடமிருந்த கௌரவமான வெளித்தோற்றத்தைத் தவிர, வேறு எதையும் இழந்து விடவில்லை. இன்றைய பிரான்ஸ்* முழுமையான வளர்ச்சி பெற்ற நிலையில் நாடாளுமன்றக் குடியரசுக்கு உள்ளாகவே இருந்தது. அந்தப் புண் வெடித்து அந்த பயங்கரமான உருவம் நம் கண்களுக்கு முன்பாகவே தாவிக் குதித்து வருவதற்குத் துப்பாக்கி ஈட்டிக் குத்து போதுமானதாக இருந்தது.

டிசம்பர் 2ந் தேதிக்குப் பிறகு பாரிஸ் பாட்டாளி வர்க்கம் புரட்சி செய்யாதது ஏன்?

இது வரை நடந்திருப்பது என்ன? முதலாளித்துவ வர்க்கத்தை முறியடிக்க உத்தரவாகிவிட்டது. ஆனால் அந்த உத்தரவு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பாட்டாளி வர்க்கம் தீவிரமான கலகத்தை ஆரம்பித்திருந்தால் அது உடனே முதலாளித்துவ வர்க்கத்துக்குப் புத்துயிர் கொடுத்திருக்கும். அதற்கும் இராணுவத்துக்கும் சமரசமேற்பட்டு, ஜூன் மாதத்தில் நடந்ததைப் போல தொழிலாளர்கள் மறுபடியும் தோல்வியடைவது நிச்சயமாகியிருக்கும்.

---

* —1851ம் வருடத்தில் நடைபெற்ற திடீர்ப்புரட்சிக்குப் பிறகு உள்ள பிரான்ஸ்.—ப-ர்.

டிசம்பர் 4ந் தேதியன்று முதலாளிகளும் கடைக்காரர் களும் பாட்டாளி வர்க்கத்தைப் போராடுமாறு தூண்டினர் கள். தேசியக் காவலர் படையின் பல பிரிவுகள் இராணுவ உடைகளில் ஆயுதங்களோடு அன்றைய மாலை நேரத்தில் போர்க்களத்துக்கு வரப் போகிறோம் என்று உறுதியாகத் தகவல் கொடுத்திருந்தன. போனபார்ட் டிசம்பர் 2ந் தேதிய தனது ஒரு அரசாணையில் இரகசிய வாக்கெடுப்பு முறையை ஒழித்திருப்பதை முதலாளிகளும் கடைக்காரர்களும் தெரிந்து கொண்டார்கள். அந்த அரசாணையின்படி இனிமேல் தேசியக் காவலர் தங்களுடைய பதிவேட்டில் பெயர் களுக்கு நேராக, ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்று எழுத வேண்டும் என்று அறிவித்தது. டிசம்பர் 4ந் தேதி ஏற்பட்ட எதிர்ப்பைக் கண்டு போனபார்ட் நிலை குலைந்தார். அன்றிர விலேயே போனபார்ட் இரகசிய வாக்கெடுப்பு முறை நீடிக் கும் என்ற சுவரொட்டிகளைப் பாரிஸ் நகரத்தின் தெருமூலை கள் எல்லாவற்றிலும் ஒட்டுமாறு செய்தார். முதலாளி களும் கடைக்காரர்களும் தங்கள் இலட்சியம் நிறைவேறி விட்டதாக நினைத்தார்கள். மறுநாள் காலையில் வராதவர் கள் முதலாளிகளும் கடைக்காரர்களுமே.

டிசம்பர் மாதம் முதல் தேதியன்று இரவில் போன பார்ட் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக ஒரு பிரதான தாக்குதலை நடத்தினர். அதன் தலைவர்களை, தெருத் தடை யரண்களின் தலைவர்களைக் கைது செய்துவிட்டார். தலைவர் களை இழந்த இராணுவமாகிய பாட்டாளி வர்க்கம், 1848 ஜூன், 1849 ஜூன், 1850 மே ஆகிய சந்தர்ப்பங்களைப் பற்றிய நினைவுகள் காரணமாக மலைக் கட்சியின் கொடி யின் கீழ் நின்று போராடுவதற்கு விரும்பவில்லை. பாரிஸ் நகரத்தின் கிளர்ச்சி மரபுகளையும் பெருமைகளையும் முத லாளித்துவ வர்க்கம் இராணுவத்திடம் எத்தகைய மறுப் பும் சொல்லாமல் முன்பே பலியிட்டுவிட்டது. அதனால்தான் பின்னர் ஒரு சமயத்தில் தேசியக் காவலர் படையின் ஆயுதங் களைப் பறித்த பொழுது போனபார்ட் ஏளனமாக அதற்குக் காரணம் சொன்னார்: அராஜகவாதிகள் காவலர் படையின் ஆயுதங்களை அதற்கெதிராகப் பயன்படுத்திவிடலாம் என்று

பயப்படுகிறேன் என்றார். எனவே இப்பொழுது பாட்டாளி வர்க்கம், பாரிஸ் நகரத்தின் கிளர்ச்சி மரபுகளையும் பெருமைகளையும் காப்பாற்ற வேண்டிய கடமையை அதன் முன்னணியிடம், அதன் இரகசியச் சங்கங்களிடம் விட்டு விட்டது.

"இது சோஷலிசத்தின் பரிபூரணமான வெற்றி; இறுதியான வெற்றி (c'est le triomphe complet et définitif du socialismel)" என்று கிஸோ டிசம்பர் 2ந் தேதியை வர்ணித்தார். ஆனல் நாடாளுமன்றக் குடியரசு தூக்கி யெறியப்பட்ட சம்பவத்துக்குள் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியின் வித்து அடங்கியிருக்கிறதென்றும், அதன் உடனடியான, சுலபமாக அறியக் கூடிய விளைவு நாடாளுமன்றத்துக்கு எதிராக போனபார்ட்டின் வெற்றி, சட்டமன்ற அதிகாரத்துக்கு எதிராக நிர்வாக அதிகாரத்தின் வெற்றி, சொற்பொழிவுச் சக்திக்கு எதிராகச் சொற்பொழிவே இல்லாத சக்தியின் வெற்றி என்பதேயாகும். நாடாளுமன்றத்தில் தேசம் தன்னுடைய பொதுப்படையான சித்தத்தைச் சட்டமாக்கியது, அதாவது ஆளும் வர்க்கத்தின் சட்டத்தைத் தன்னுடைய பொதுப்படையான சித்தமாக்கிக் கொண்டது. நிர்வாக அதிகாரத்துக்கு முன்பு அது தன்னுடைய சொந்த சித்தம் அனைத்தையும் கைவிடுகிறது; அந்நிய சித்தத்தின், மேலான அதிகாரத்துக்குக் கீழ்ப்படுகிறது. சட்ட அதிகாரத்தோடு ஒப்பிடுகிற பொழுது நிர்வாக அதிகாரம் ஒரு தேசம் சுயாட்சிக்குப் பதிலாகப் புறச் சட்டங்களுக்கு ஆட்பட்டிருப்பதைக் காட்டுகிறது. எனவே பிரான்ஸ் ஒரு வர்க்கத்தின் கொடுங்கோன்மையிலிருந்து தப்பிவிட்டதாகத் தோன்றிய போதிலும், அது ஒரு தனி நபரின் கொடுங்கோன்மைக்கு உட்பட்டு விட்டது. அது மட்டுமல்ல. மரியாதைக்குத் தகுதியற்ற ஒரு தனி நபரின் கொடுங்கோன்மைக்கு உட்பட்டுவிட்டது. எல்லா வர்க்கங்களும் ஒரே மாதிரியான ஊமைகளாக, சக்தியற்றவர்களாக துப்பாக்கிக் குட்டைக்கு முன்னல் முழங்காலில் குனிந்து நிற்கும் வகையில் போராட்டம் முடிந்து விட்டது போலத் தோன்றுகிறது.

ஆனால் புரட்சி கடுங்கண்டிப்பானது. அது இன்னும் பாவங்களைப் போக்கும் இடத்தின் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அது தன்னுடைய வேலையை முறைப் படியாகச் செய்யும். 1851ம் வருடம் டிசம்பர் 2ந் தேதி வரை அது தன்னுடைய பூர்வாங்க வேலையில் பாதியை முடித்திருக்கிறது. இப்பொழுது மறுபாதியை முடித்துக் கொண்டிருக்கிறது. முதலில் அது நாடாளுமன்ற அதி காரத்தைத் தூக்கியெறிவதற்காக அதை முழுநிறைவாக்கு கிறது. இப்பொழுது இதைச் செய்து முடித்து விட்டபடியால் அது நிர்வாக அதிகாரத்தை முழுநிறைவாக்குகிறது. அதன் பரிசுத்தமான தோற்றத்துக்கு அதைச் சுருக்குகிறது; அதைத் தனிமைப்படுத்துகிறது. அதற்கு எதிராகத் தன்னுடைய எல்லா அழிவுச் சக்தியைக் குவிப்பதற்காக அதையே குறியிலக்காக நிறுத்துகிறது. அதன் பூர்வாங்க வேலையின் அடுத்த பாதியான இதை முடிக்கும் பொழுது, ஐரோப்பா தன்னுடைய ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்து வியந்து சொல்லும்: ''கிழட்டுக் குழி எலியே, நன்றாகத் துளைத்துச் சென்றிருக்கிறாய்''.*

இந்த நிர்வாக அதிகாரம் பிரம்மாண்டமான அதிகார வர்க்க, இராணுவ ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கிறது; விஸ்தாரமான, செயற்கையான அரசு இயந்திரத்தைக் கொண்டிருக்கிறது; அதிகாரிகளின் எண்ணிக்கை மட்டுமே ஐந்து லட்சம், இதைத் தவிர இராணுவத்திலும் இன்னொரு ஐந்து லட்சம் பேர்கள் உண்டு. இந்தப் பயங்கரமான சுரண்டல் அமைப்பு பிரெஞ்சு சமூகத்தை ஒரு வலையைப் போல சூழ்ந்து கொண்டு அதன் துவாரங்கள் எல்லாவற்றை யும் அடைத்து மூச்சுத் திணறச் செய்கிறது. இது நிலப் பிரபுத்துவ அமைப்பு தகர்ந்து கொண்டிருந்த பொழுது ஏற்பட்ட சர்வவல்லமையுடைய முடியாட்சிக் காலத்தில் தோன்றி, அந்த நிலப்பிரபுத்துவ அமைப்பின் முடிவைத் துரிதப்படுத்தியது. முன்பு நிலச்சுவான்தார்களுக்கும் நகரங்

---

* ஷேக்ஸ்பியர், ஹாம்லெட், பகுதி I, ஐந்தாம் காட்சி.—ப-ர்.

களுக்கும் அனுமதிக்கப்பட்ட பிரபுவுக்குரிய தனி உரிமைகள் [seignorial priveleges] அரசு அதிகாரத்தின் பற்பல கூறுகளாக மாற்றமடைந்தன; நிலப்பிரபுத்துவப் பெருமக்கள் சம்பளம் வாங்கும் அதிகாரிகளாக மாறினர்கள். ஒன்றுக்கொன்று மாறுபட்ட மத்திய கால முழு அதிகாரங்கள் என்னும் கதம்பமான கலவை அரசு அதிகாரத்தின் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டமாக மாற்றமடைந்தது. இங்கே தொழிற்சாலையைப் போல வேலை பிரித்துக் கொடுக்கப்பட்டு மத்தியத்துவப்படுத்தப்பட்டிருக்கிறது. முதல் பிரெஞ்சுப் புரட்சி தனித்தனியான எல்லாவிதமான ஸ்தல, பிராந்திய, நகர, மாநில அதிகாரங்களையும் ஒழித்து தேசத்தின் சிவில் ஒற்றுமையை உருவாக்குவதைத் தன்னுடைய கடமையாகக் கொண்டிருந்ததனால், சர்வவல்லமையுடைய முடியாட்சி ஆரம்பித்ததை, அரசு அதிகாரத்தை மத்தியப்படுத்துதலை, வளர்க்க வேண்டியிருந்தது; அதே சமயத்தில் இது அரசாட்சியின் விஸ்தரிப்பு, குணங்கள், ஆதரவாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வளரச் செய்துள்ளது. நெப்போலியன் இந்த அரசு இயந்திரத்தை முழுநிறைவாக்கினர். முறைப்படியமைந்த முடியாட்சியும் ஜூலை மாத முடியாட்சியும் இன்னும் அதிகமான வேலைப் பிரிவினையை ஏற்படுத்தியதைத் தவிர புதிதாக வேறு எதையும் சேர்த்து விடவில்லை. முதலாளித்துவ சமூகத்துக்குள் ஏற்பட்ட வேலைப் பிரிவினை புதிய நல உரிமைகளைக் கொண்ட குழுக்களை—அரசு நிர்வாகத்துக்குரிய புதிய அரங்கங்களை—உருவாக்கிய அளவுக்கு ஏற்ப அதிகரித்து வந்தது. ஒவ்வொரு பொது நலனும் சமூகத்திலிருந்து உடனே பிரிக்கப்பட்டது; உயர்வான பொதுப்படையான நலன் என்ற முறையில் அதற்கு எதிராக வைக்கப்பட்டது; பாலமோ, பள்ளிக்கூடமோ, கிராம சமூகத்தின் பொதுச்சொத்தோ அல்லது ரயில்வேக்களோ, தேசியச் செல்வமோ, பிரான்சின் தேசியப் பல்கலைக்கழகமோ எதைக் கட்டுவதென்றாலும் அது சமூகத்தின் உறுப்பினர்களின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டு அரசாங்க நடவடிக்கைக்கு உரியதாக ஆக்கப்பட்டது. கடைசியாக நாடாளுமன்றக் குடியரசு

புரட்சிக்கு எதிராகப் போராட்டத்தை நடத்திய பொழுது, அடக்குமுறைச் சாதனங்களோடு சேர்த்து, அரசாங்க அதிகாரத்தின் மூல ஆதாரங்களையும், மத்தியப்படுத்தலையும் தானே பலப்படுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. எல்லாப் புரட்சிகளுமே இந்த இயந்திரத்தை உடைத்து நொறுக்கி விடுவதற்குப் பதிலாக அதை முழுநிறைவாக்கின. தலைமையான ஆதிக்கத்தைப் பெறுவதற்காக மாறிமாறிப் போராடிய கட்சிகள் ஒவ்வொன்றுமே இந்தப் பிரம்மாண்டமான அரசு இயந்திரத்தைக் கைப்பற்றுவதுதான் போரில் வெற்றி பெற்றவர்களுக்குக் கிடைக்கும் ஆதாயம் என்று கருதின.

ஆனால் சர்வாதிகார முடியாட்சியின் போதும், முதல் புரட்சியின் போதும், நெப்போலியன் காலத்திலும் அதிகார வர்க்கம் என்பது முதலாளிகளின் வர்க்க ஆட்சிக்குத் தயாரிப்பதற்கான வழியாக மட்டுமே இருந்தது. மறுவருகைக் காலத்தில், லுயீ பிலிப்பின் ஆட்சியின் போது, நாடாளுமன்றக் குடியரசு ஆட்சி செய்த காலத்தில், அது தன்னுடைய சொந்த அதிகாரத்துக்காக எப்படியெல்லாமோ முயற்சி செய்த போதிலும், அது ஆளும் வர்க்கத்தின் கருவியாகத்தான் இருந்தது.

இரண்டாம் போனபார்ட்டின் காலத்தில் மட்டும்தான் அரசு தன்னை முற்றிலும் சுதந்திரமானதாக ஆக்கிக் கொண்டதாகத் தோன்றுகிறது. சிவில் சமூகத்தின் மீது அரசு இயந்திரம் தன்னுடைய நிலையை மிகவும் தீவிரமான முறையில் உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டது. அதனால்தான் வெளி நாட்டிலிருந்து வந்த ஒரு சாகஸக்காரன், டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவன், குடிகார இராணுவத்தினர்களால் தலைவனாக உயர்த்தப்பட்ட நபர்கூட (மதுபானமும் கொத்திறைச்சியும் இராணுவத்தினருக்குக் கொடுத்து இந்த ஆதரவைப் பெற்றிருப்பதால், இனி மேலும் தொடர்ந்து அவர்களுக்குக் கொத்திறைச்சி கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்) இந்த அரசு இயந்திரத்தின் தலைமையை வகிக்க முடிகிறது. எனவேதான் நாம் மிகக் கேவலமாக அவமதிக்கப்பட்டு அலங்கோலப்பட்டுவிட்டோம் என்ற உணர்ச்சி பிரான்சை வேதனைப்படுத்துகிறது. பிரான்ஸ் முகத்தைத்

தாழ்த்திக் கொண்டு தாங்க முடியாத சோகத்தை அனுபவிக் கிறது; மூச்சுக் கூட விட முடியாமல் திணறுகிறது; கற்பழிக்கப்பட்டேன் என்று கதறுகிறது.

எனினும் அரசு அதிகாரம் என்பது ஆகாயத்தில் தொங்க விடப்பட்டிருப்பதல்ல. போனபார்ட் ஒரு வர்க்கத் தின் பிரதிநிதி; அதிலும் பிரெஞ்சு சமூகத்தின் மிகப் பெரிய வர்க்கமான, **சிறு நிலவுடைமை விவசாயிகள்** வர்க்கத் தின் பிரதிநிதி.

பூர்போன்கள் பெரும் நிலவுடைமை மரபைச் சேர்ந்த வர்கள் என்பதைப் போல, ஆர்லேயானிஸ்டுகள் பணக் கார வம்சங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைப் போல, போனபார்ட்டுகள் விவசாயிகளின் அதாவது பிரெஞ்சு மக் களின் பெரும் பகுதியினரின் பிரதிநிதிகள். விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் போனபார்ட்—முதலாளித்துவ நாடாளுமன்றத்துக்கு அடிபணிந்த போனபார்ட் அல்ல; முதலாளித்துவ நாடாளுமன்றத்தைக் கலைத்த போனபார்ட். கரங்கள் மூன்று வருட காலமாக டிசம்பர் மாதம் 10ந் நதித் தேர்தலின் அர்த்தத்தைத் திரித்துக் கூறின; பரசு மீண்டும் ஏற்பட்டதன் பலனை விவசாயிகள் அனுப விக்க முடியாமல் அவர்களை மோசடி செய்தன. 1848ம் வருடம் டிசம்பர் 10ந் தேதி நடைபெற்ற தேர்தல் 1851ம் வருடம் டிசம்பர் 2ந் தேதி நடைபெற்ற திடீர்ப்புரட்சியில் நிறைவு பெற்றது.

சிறிய அளவில் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒரே மாதிரி யான நிலைமைகளில் வாழ்க்கை நடத்திய போதிலும் ஒருவரோடொருவர் பன்முகப்பட்ட உறவுகளை உருவாக்கிக் கொள்வது கிடையாது. அவர்களுடைய உற்பத்தி முறை அவர்களிடையே ஒருவரோடொருவர் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்தாமல் அவர்களைத் தனிமைப்படுத்துகிறது. பிரான் சில் உள்ள போக்குவரத்து முறைகள் மோசமாக இருப்பதனா லும் விவசாயிகளின் ஏழ்மை காரணமாகவும் இந்தத் தனி யான நிலை அதிகரிக்கிறது. அவர்களுடைய உற்பத்திக் களம் சிறு அளவு நிலம் என்பதால், அதைப் பயிர் செய்வதில்

வேலைப் பிரிவினைக்கு இடமில்லை; விஞ்ஞானத்தை அதில் பயன்படுத்த முடியாது என்பதால் பல்வகைப்பட்ட வளர்ச்சிக்கும், பல விதமான திறமைகளைப் பயன்படுத்துவதற்கும், வளமான சமூக உறவுகளுக்கும் அங்கே வழியில்லை. ஒவ்வொரு விவசாயக் குடும்பமும் அநேகமாக சுய தேவைப் பூர்த்தி உடையதாக இருக்கிறது; தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களில் பெரும்பகுதியை அது தானே நேரடியாக உற்பத்தி செய்கிறது. எனவே அது தன் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை சமூகத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் உறவின் மூலமாகப் பெறுவதைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு இயற்கையோடு பண்டமாற்றுச் செய்வதன் மூலமாகவே அடைந்துவிடுகிறது. ஒரு சிறு நிலவுடைமை, ஒரு விவசாயியும் அவருடைய குடும்பமும்; அதற்குப் பக்கத்தில் இன்னொரு சிறு நிலவுடைமை, இன்னொரு விவசாயியும் அவருடைய குடும்பமும். இப்படிச் சில இருபது பேர்களைக் கொண்டு ஒரு கிராமம்; இப்படிச் சில இருபது கிராமங்களைக் கொண்டு ஒரு பிராந்தியம். இம்மாதிரியே, ஒரே மாதிரியான பரிமாணங்களைக் கொண்ட தொகுதிகளைச் சேர்த்துச் சேர்த்து, சாக்கிலிருக்கும் உருளைக்கிழங்குகளை மொத்தமாக ஒரு சாக்கு உருளைக்கிழங்கு என்று சொல்வதைப் போல, மிகப் பெரிய பிரெஞ்சு தேசம் அமைந்திருக்கிறது. பல லட்சம் குடும்பங்கள் மற்ற வர்க்கங்களிடமிருந்து தங்கள் வாழ்க்கை முறையையும் நலன்களையும் கலாச்சாரத்தையும் பிரித்துக் காட்டும் பொருளாதார வாழ்க்கை நிலைமையின் கீழ் வசிக்கும் பொழுது, அந்த மற்ற வர்க்கங்களிடம் விரோதமான எதிர்ப்பு நிலையில் வைக்கப்படும் பொழுது, அவர்கள் ஒரு வர்க்கமாக அமைகிறார்கள். இந்தச் சிறு நிலவுடைமை விவசாயிகளிடம் ஸ்தலத் தொடர்புகள் மட்டுமே இருப்பதனாலும் அவர்களுடைய நலன்கள் ஒரே மாதிரியாக அமைந்திருந்தும் அவர்களுக்கிடையே ஒரு பொதுமை என்பதோ, தேசியப் பிணைப்போ, அரசியல் ஸ்தாபனமோ ஏற்படாதபடியால், அவர்கள் ஒரு வர்க்கமாக அமைவது கிடையாது. எனவே அவர்கள் தங்களுடைய பெயரிலேயே—நாடாளுமன்றம் மூலமோ

அல்லது சட்டமன்றம் மூலமோ—தங்களுடைய வர்க்க நலன்களைக் காப்பதற்குத் தகுதியில்லாதவர்கள். அவர்கள் தங்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்க இயலாதவர்கள் என்பதால், யாராவது அவர்களுக்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டும். அவர்களுடைய பிரதிநிதியும் கூட அதே சமயத்தில் அவர்களுடைய எஜமானனைக, ஆள்கின்ற சக்தியாகத் தோற்றமளிக்க வேண்டும்; மற்ற வர்க்கங்களிடமிருந்து அவர்களைக் காத்து, அவர்களுக்கு மேலேயிருந்து மழையும் சுதிரவன் ஒளியும் வழங்குகின்ற முடிவில்லாத அரசாங்க அதிகாரமாகத் தோற்றமளிக்க வேண்டும். எனவே நிர்வாக அதிகாரம் சமூகத்தையே தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்வதில் இந்தச் சிறு நிலவுடைமை விவசாயிகளின் அரசியல் செல்வாக்கு கடைசியாக வெளிப்படுகிறது.

சரித்திர ரீதியான மரபுகளின் காரணமாக பிரெஞ்சு விவசாயிகள் ஓர் அதிசயத்தில், நெப்போலியன் என்ற மனிதர் தங்களுடைய பழைய கீர்த்தியைத் தங்களிடம் மறுபடியும் சேர்ப்பார் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். நெப்போலியன் என்ற பெயரைக் கொண்டிருந்த ஒரே காரணத்தால் நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அதிசய புருஷன் நானே என்று சொல்லிக் கொண்டு ஒரு நபர் வந்தார். அதிலும் ''நெப்போலியன் விதிகள்'' (Code Napoléon) ''ஒரு நபரின் பிறப்பைப் பற்றி ஆராயக் கூடாது'' ("La recherche de la paternité est interdite") என்று தடை விதிக்கின்றன. இருபது வருட காலம் ஊர் சுற்றியாகத் திரிந்துவிட்டு, கோமாளித்தனமான சாகஸங்களுக்குப் பிறகு, கட்டுக் கதை நிறைவேறுகிறது. அந்த நபர் பிரெஞ்சு சக்கரவர்த்தியாகிறார். மருமகனின் நிலையான கருத்துக்கள் நிறைவேறுகின்றன. ஏனென்றால் எண்ணிக்கையில் மிகவும் அதிகமான பிரெஞ்சு மக்களின் நிலையான கருத்துக்களோடு அவை பொருந்திவிடுகின்றன.

பிரான்சின் பாதிப் பிரதேசத்தில் ஏற்பட்ட விவசாயிகள் எழுச்சிகளைப் பற்றி, விவசாயிகளின் மீது இராணுவத்தின் படையெடுப்புகளைப் பற்றி, விவசாயிகள் கூட்டம் கூட்டமாகச் சிறையிலடைக்கப்பட்டதையும் வெளியேற்றப்

பட்டதையும் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று யாராவது மறுத்துக் கேட்கலாம்.

பிரான்சில் பதினன்காம் லுயியின் ஆட்சிக் காலத்திலிருந்து ''பிரசங்கித்ததற்காக'' விவசாயிகள் இப்படி ஒடுக்கப்பட்டது இதுவரை இல்லை.

ஆனால் இங்கே கருத்து வேறுபாடு தேவையில்லை. போனபார்ட் வம்சம், புரட்சிகரமான விவசாயியை அல்ல, பழமையில் ஊறிய விவசாயியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தன்னுடைய சமூக வாழ்க்கையின் நிலைமையான சிறு நிலவுடைமையை மீறிச் செல்கின்ற விவசாயியை அல்ல; அதற்குப் பதிலாக இந்தச் சிறு நிலவுடைமையை உறுதி செய்து கொள்ள ஆசைப்படுகிற விவசாயியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நகரங்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, தங்களுடைய சொந்த பலத்தைத் திரட்டி பழைய அமைப்பைத் தூக்கி எறிய ஆசைப்படுகிற கிராம மக்களை அல்ல; அதற்கு மாறாக, இந்தப் பழைய அமைப்புக்குள்ளாகவே உணர்வு மழுங்கிப்போன தனிமை நிலையில், தங்களையும் தங்களுடைய சிறு நில உடைமைகளையும் பேரரசின் நிழல் காத்து அருள் புரிவதைக் காண விரும்பும் கிராம மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. விவசாயியின் அறிவொளியை அல்ல, அவனுடைய மூடநம்பிக்கையை; விவசாயியின் நுண்ணறிவை அல்ல, அவனுடைய வெறுப்புணர்ச்சியை; விவசாயியின் எதிர்காலத்தையல்ல, அவனுடைய கடந்த காலத்தை; விவசாயியின் நவீன செவேனையல்ல, அவனுடைய வண்டேயை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.[69]

நாடாளுமன்றக் குடியரசு மூன்று வருட காலம் கடுமையாக ஆட்சி செய்ததன் விளைவு பிரெஞ்சு விவசாயிகளில் ஒரு பகுதியினரை நெப்போலியன் பிரமைகளிலிருந்து விடுதலை செய்திருந்தது; அவர்களை மேலெழுந்தவாரியாகவாவது புரட்சிகரமாக மாற்றியிருந்தது. ஆனால் அந்த விவசாயிகள் எந்த முயற்சியிலாவது ஈடுபட்ட பொழுது முதலாளித்துவ வர்க்கம் அவர்களை வன்முறையால் ஒடுக்கியது. நாடாளுமன்றக் குடியரசுக் காலத்தில் விவசாயிகளின் மரபு

வழிப்பட்ட உணர்வும் நவீன உணர்வும் ஒன்றுக்கொன்று தலைமை வகிப்பதற்குப் போராடின. இந்த முன்னேற்றம் பள்ளி ஆசிரியர்களுக்கும் மதகுருக்களுக்குமிடையே தொடர்ச்சியான போராட்டமாக வடிவமெடுத்தது. முதலாளித்துவ வர்க்கம் பள்ளி ஆசிரியர்களைத் தாக்கி வீழ்த்தியது. அரசாங்க நடவடிக்கைகளைப் பொறுத்தவரை விவசாயிகள் சுயேச்சையாக நடந்து கொள்வதற்கு முதன் முறையாக முயற்சிகள் செய்தனர். மேயர்களுக்கும் போலீசு அதிகாரிகளுக்கும் தொடர்ந்து நடைபெற்ற மோதல்கள் இதை எடுத்துக்காட்டுகின்றன. முதலாளித்துவ வர்க்கம் மேயர்களைப் பதவிகளிலிருந்து நீக்கியது. நாடாளுமன்றக் குடியரசுக் காலத்தில் கடைசியாக, வெவ்வேறு வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களுடைய குழந்தையை, இராணுவத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். முதலாளித்துவ வர்க்கம் முற்றுகை நிலையை அறிவித்தும் படைகளை அனுப்பியும் அவர்களைத் தண்டித்தது. அதே முதலாளித்துவ வர்க்கம்தான் இப்பொழுது முட்டாள்தனமான ஜனங்கள், வெறுக்கத்தக்கக் கூட்டம் (vile multitude) போனபார்ட்டிடம் தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூக்குரலிடுகிறது. விவசாயிகளின் பேரரசு உணர்வுகளை முதலாளித்துவ வர்க்கத்தினர்தான் பலவந்தமாக வலுப்படுத்தினர்; அவர்கள்தான் இந்த விவசாய மதத்தைத் தோற்றுவிக்கும் நிலைமைகளைத் தொடர்ந்து பாதுகாத்தார்கள். ஜனங்கள் பழமையில் ஊறியிருக்கும் வரை முதலாளித்துவ வர்க்கம் அவர்களுடைய முட்டாள்தனத்தைக் கண்டு பயப்படும்; ஜனங்கள் புரட்சிகரமாக வளர்ந்தவுடன் அவர்களுடைய நுண்ணறிவைக் கண்டு பயப்படும் என்பது உண்மையே.

திடீர்ப்புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட கலகங்களில், பிரெஞ்சு விவசாயிகளில் ஒரு பகுதியினர், கைகளில் ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு 1848ம் வருடம் டிசம்பர் 10ந் தேதியன்று தாங்கள் அளித்த வாக்குகளை எதிர்த்துப் போராடினார்கள். 1848ம் வருடத்திலிருந்து அவர்களுக்கேற்பட்ட அனுபவங்கள் அவர்களுடைய அறிவைக் கூர்மைப்

படுத்தியிருந்தது. ஆனால் முன்பே அவர்கள் சரித்திரத்தின் பாதாள உலகத்தில் தங்களை ஒப்படைத்து விட்டார்கள்; சரித்திரம் அவர்களுடைய வாக்கைப் பிடித்துக் கொண்டு தொங்கியது; பெரும்பான்மையினரிடம் இன்னும் தவறுன எண்ணங்கள் நீடித்தபடியால், அதிகச் சிவப்பான பிராந்தி யங்களில் கூட விவசாய மக்கள் பகிரங்கமாக போன பார்ட்டுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். தேசிய சபை அவருடைய முன்னேற்றத்தைத் தடுத்ததாக விவசாயிகள் கருதினர்கள். கிராமப்புறங்களின் விருப்பாற்றலின் மீது நகரங்கள் பூட்டியிருந்த விலங்குகளை உடைப்பதை போன பார்ட் தற்பொழுது செய்தார். சில பகுதிகளில் விவசாயி கள் நெப்போலியனுடன் கூடவே கன்வென்டைக் கூட்டுவ தென்ற கோமாளித்தனமான யோசனையைக்கூட வைத்திருந் தார்கள்.

முதல் புரட்சி விவசாயிகளை அரைப் பண்ணையடிமை கள் என்ற நிலையிலிருந்து சுதந்திரமான நிலவுடைமை யாளர்களாக மாற்றிய பிறகு, அவர்கள் எத்தகைய தொந் தரவும் இல்லாதபடி தங்களுக்கு அப்பொழுதுதான் கிடைத் திருக்கும் பிரெஞ்சு நிலத்தை உழுது பயன்படுத்திக் கொண்டு, சொத்துக்களின் மீது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இளமை யான ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்கான நிலைமைகளை நெப்போலியன் ஒழுங்குபடுத்தி, உறுதி செய்து கொடுத்தார். ஆனால் இன்று பிரெஞ்சு விவசாயியின் சீர்குலைவுக்குக் காரண மாக இருப்பது பிரான்சில் நெப்போலியன் உறுதிப்படுத் திய சொத்து வடிவமான நிலப் பிரிவினையே, சிறு நில வுடைமையே. இந்தப் பொருளாயத நிலைமைகளே பிரெஞ்சு பண்ணையடிமையான விவசாயியைச் சிறு நிலவுடைமையாள ராகவும், நெப்போலியனை சக்கரவர்த்தியாகவும் மாற்றின. ஒரு தவிர்க்க முடியாத விளைவைக் கொண்டுவர இரண்டு தலைமுறைகளே போதுமானதாக உள்ளது. அதாவது விவ சாயச் சிரழிவு மேலும் மேலும் அதிகரித்தது; விவசாயி யின் கடன்சுமை மென்மேலும் அதிகரித்தது. பத்தொன் பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்சின் கிராமப் புற மக்களின் விடுதலைக்கும் வளப்பெருக்கத்துக்கும் காரண

மாக இருந்த ''நெப்போலியன்'' சொத்து வடிவம் இந்த நூற்றாண்டுக் காலத்திலேயே அந்த விவசாயிகளின் ஏழ்மைத்தனத்துக்கும் அடிமை நிலைக்குமான வரிச்சட்ட மாக வளர்ந்துவிட்டது. இரண்டாம் போனபார்ட் ஆதரிக்க வேண்டிய ''நெப்போலியன் கருத்துக்களில்'' (idées napoléoniennes) முதலாவதாக இருப்பது இந்தச் சட்டமே. அவரும் விவசாயிகளோடு சேர்ந்து அவர்களுடைய சீரழிவுக்குக் காரணத்தை அந்தச் சிறு அளவிலான நிலவுடமைக்குள்ளே தேடாமல், அதற்கு வெளியே தேடுகிற, இரண்டாந்தர மான சூழ்நிலைமைகளின் பாதிப்பில் தேடுகிற பிரமைக்கு உட்பட்டால், அவருடைய பரிசோதனைகள் உற்பத்தி உறவுகளோடு தொடர்பு ஏற்பட்டவுடன் சோப்புத் தண்ணீரில் ஊதிய காற்று முட்டைகளைப் போல உடைந்து விடும்.

சிறு நிலவுடமை முறையின் பொருளாதார வளர்ச்சி சமூகத்தின் மற்ற வர்க்கங்களின்பால் விவசாயிகளின் உறவை அடிப்படையான முறையில் மாற்றியிருக்கிறது. நெப்போலியன் காலத்தில் கிராமப்புறங்களில் நிலம் துண்டு துண்டாகப் பிரிக்கப்படுதல், சுதந்திரமான போட்டிக்கும் நகரங்களில் பெருந்தொழில்களின் தொடக்கத்துக்கும் இணை கூட்டாக நடைபெற்றது. சமீபத்தில் தூக்கியெறியப்பட்ட நிலப்பிரபுக்களை எதிர்த்து நாடு முழுவதும் தோன்றிய ஆட்சேபமே விவசாய வர்க்கம். சிறு நிலவுடைமை முறை பிரெஞ்சு மண்ணில் வேரூன்றியதன் விளைவாக நிலப்பிரபுத்துவம் தனது சத்துணவை இழந்தது. பழைய ஆட்சியாளர்கள் முதலாளிகளை எதிர்த்துத் திடீரென தாக்குதல் செய்தால், அவர்களுக்கு எதிராக முதலாளிகளின் இயற்கை அரணாக அந்தத் துண்டு நிலங்களின் எல்லைக்கோடுகள் இருந்தன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிகழ்வுப் போக்கில் பண்ணையடிமைக் காலத்திலிருந்த பிரபுக்களின் இடத்தில் நகரத்தின் வட்டிக்கடைக்காரர்கள் வந்துவிட்டார்கள். நிலப்பிரபுத்துவக் கட்டாய உழைப்பின் இடத்தில் அடமானம் வந்துவிட்டது. நிலப்பிரபுக்களின் பெரும் நிலவுடைமைக்குப் பதிலாக முதலாளித்துவ மூலதனம்

வந்துவிட்டது. முதலாளி தன்னுடைய லாபம், வட்டி, வாரம் எல்லாவற்றையும் நிலத்திலிருந்து எடுத்துக் கொண்ட பிறகு, அதை உழுது பயிரிடுபவன் தன்னுடைய கூலியை எவ்வித மாவது அதிலிருந்து பெற்றுக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவதற்கு விவசாயியின் சிறு நிலவுடைமை என்பது ஒரு சாக்காகிவிட்டது. பிரிட்டனில் மொத்த தேசியக் கடனின் வருடாந்தர வட்டிக்குச் சமமான ஒரு தொகையை பிரெஞ்சு விவசாயி வருடந்தோறும் வட்டியாகக் கட்டுகிற அளவுக்கு பிரெஞ்சு மண்ணைக் கடன் சுமை அழுத்துகிறது. சிறு அளவு நிலவுடைமை—மூலதனத்திடம் அடிமைப்படுமாறு அதன் வளர்ச்சி தவிர்க்க முடியாதபடி அதை முன்னே தள்ளிச் செல்கிறது—பிரெஞ்சு தேசத்தின் பெரும்பான்மையினரைக் கற்காலத்தில் வாழ்பவர்களாக மாற்றியிருக்கிறது. ஒரு கோடியே அறுபது லட்சம் விவசாயிகள் (பெண்கள், குழந்தைகள் உட்பட) மோசமான சிறு குடிசைகளில் வசிக் கிறார்கள். பெரும்பாலும் இந்தக் குடிசைகளில் ஒரே ஒரு சன்னல்தான் உண்டு; சில குடிசைகளில் இரண்டும் அதிக வசதியுடையவர்களுக்கு மூன்று சன்னல்களும் உண்டு. மனித னின் தலைக்கு ஐம்புலன்கள் எப்படியோ அப்படித்தான் சன்னல்களும் ஒரு வீட்டுக்குத் தேவைப்படுகின்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிதாக ஏற்பட்ட சிறு நிலவுடைமைக்குக் காவலாக இருக்குமாறு முதலாளித்துவ அமைப்பு அரசை ஏவியது. அதற்கு மாலை சூட்டி மகிழ்ச்சி யடைந்தது. ஆனால் இப்பொழுது அதனுடைய மூளையை யும் இரத்தத்தையும் உறிஞ்சிக் குடித்து, மூலதனம் என்ற ரஸவாதியின் இருப்புச் சட்டியில் அதைத் தூக்கிப் போடுகிற இரத்தம் குடிக்கிற பேயாக மாறிவிட்டது. நெப்போலியன் விதிகள் (Code Napoléon) இன்று கடன் ஜப்தி, கட்டாயப் பறிமுதல், பலவந்தமான ஏலம் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. பிரான்சில் நாற்பது லட்சம் (குழந்தைகள், மற்றவர்கள் உட்பட) இரவலர்கள், நாடோடிகள், குற்றவாளிகள், விபச்சாரிகள் இருப்பதாக அரசாங்கப் புள்ளி விவரம் கொடுக்கப்படுகிறது. இவர்களோடு வாழ்க்கையின் வறுமைக் கோட்டில் இருந்து கொண்டு

கிராமங்களில் வசித்துக் கொண்டோ அல்லது தங்களுடைய குழந்தைகளோடும் கிழிந்த உடைகளோடும் தொடர்ச்சியாக கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் போய்க் கொண்டும் நகரங்களிலிருந்து கிராமங்களுக்குத் திரும்பிக் கொண்டும் இருக்கிற ஐம்பது லட்சம் பேர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இனிமேல் விவசாயிகளின் நலன்கள் நெப்போலியன் காலத்திலிருந்த மாதிரி முதலாளித்துவ நலன்களோடு மூலதனத்தோடு பொருந்தியிருக்கவில்லை; அவற்றுக்கு எதிர்ப்பாக இருக்கின்றன. எனவே விவசாயிகள் முதலாளித்துவ ஆட்சி அமைப்பை ஒழிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ள நகரப்புறப் பாட்டாளி வர்க்கத்தைத் தங்களுடைய இயற்கையான தோழனாக, தலைவனாகக் காண்கின்றனர். ஆனால் பலமான, வரையறை இல்லாத அரசாங்கம் என்பது ''நெப்போலியன் கருத்துக்களின்'' இரண்டாவது அம்சமாகும். இதை இரண்டாவது நெப்போலியன் நிறைவேற்ற வேண்டும். இந்த அரசாங்கம் இத்தகைய ''பொருளாயத'' அமைப்பை வன்முறையினால் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. கலகம் செய்கிற விவசாயிகளுக்கு எதிராக போனபார்ட் வெளியிட்டிருக்கும் பிரகடனங்கள் எல்லாவற்றிலும் இந்தப் ''பொருளாயத அமைப்பு'' (ordre matériel) என்பது முக்கியமான கோஷமாக இருக்கிறது.

சிறு நிலவுடைமை மீது மூலதனம் சுமத்தியிருக்கும் அடிமானத்தைத் தவிர, வரிகளும் அதை அழுத்துகின்றன. அதிகாரவர்க்கத்துக்கும் இராணுவத்துக்கும் மதகுருக்களுக்கும் அரசவைக்கும் சுருக்கமாகச் சொல்வதென்றால் நிர்வாக அதிகாரத்தின் இயந்திரம் அனைத்துக்கும் வரிகள்தான் வாழ்க்கையின் ஆதாரம். பலமான அரசாங்கமும் அதிகமான வரிச்சுமையும் ஒன்றுசேர்ந்திருப்பவையாகும். அதிகாரமும் கணக்கில்லாத அளவுக்கு ஏராளமான வரிகளையும் கொண்ட அதிகார வர்க்கத்திற்கான அடிப்படையைச் சிறு நிலவுடைமை இயல்பாகவே வகுத்துத் தருகிறது. தேசத்தின் முழுப் பரப்பிலும் மனித அந்தஸ்துகளிலும் மனித உறவுகளிலும் ஒரே வகையான மாதிரியை அது ஏற்படுத்துகிறது. எனவே ஒரே தலைமைக் கேந்திரத்திலிருந்து இந்த ஒரே

வகையான ஜனத்திரளின் எல்லாப் பகுதிகள் மீது ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகிறது. ஜனங்களின் மிகப் பெரும் பகுதியினருக்கும் அரசு அதிகாரத்துக்கும் இடையிலான மேன் மக்களுக்குரிய படிநிலைகளை அது ஒழித்துவிடுகிறது. எனவே இந்த அரசு அதிகாரம் எல்லாப் பக்கங்களிலுமிருந்தும் நேரடியாகத் தலையிடுவதற்கும் அதன் நேரடி அமைப்புக்கள் எல்லாவற்றிலும் குறுக்கிடுவதற்கும் இது வகை செய்கிறது. கடைசியாக, இது வேலையில்லாத மிகை ஜனத்தொகையை உருவாக்குகிறது. இதற்கு கிராமங்களிலோ நகரங்களிலோ எந்த இடமும் கிடைக்காத காரணத்தால் அரசாங்கப் பதவிகளை கௌரவமாகப் பறிக்கிறது. மேலும் மேலும் அரசாங்கப் பதவிகள் ஏற்படுவதற்குத் தூண்டுதலாக இருக்கிறது. நெப்போலியன் தன்னுடைய ஆயுத பலத்தால் புதிய மார்க்கெட்டுகளைத் திறந்தும் ஐரோப்பாக் கண்டத்தைக் கொள்ளையடித்தும் கட்டாய வரிகளின் மூலமாக வசூலிக்கப்பட்ட பணத்தை வட்டியோடு திருப்பிக் கொடுத்தார். இந்த வரிகள் விவசாயியின் கைத்தொழிலைத் தூண்டிவிட்டன. ஆனால் இப்பொழுது வரிகள் இந்தத் தொழிலின் கடைசி ஆதாரத்தைத் திருடி, பிச்சை எடுப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் செய்கின்றன. ''நெப்போலியன் கருத்துக்களில்'' இரண்டாம் போனபார்ட்டுக்கு மற்றெல்லாவற்றையும் காட்டிலும் பிடித்தமானது, நன்றுகச் சாப்பிட்டு ஆடம்பரமாக உடையணிந்த பிரம்மாண்டமான அதிகார வர்க்கம்தான். சமூகத்தில் உண்மையில் இருக்கும் மற்ற வர்க்கங்களுக்குப் பக்கத்தில் ஒரு செயற்கையான ஜாதியை, அவருடைய ஆட்சி நீடிப்பதைத் தன்னுடைய சோற்றுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு ஜாதியை உருவாக்குவதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுது இது வேறு எப்படி இருக்க முடியும்? எனவே அதிகாரிகளின் ஊதியங்களைப் பழைய நிலைக்கு உயர்த்தியதும் புதிய மானியங்களை ஏற்படுத்தியதும் நிதித்துறையில் அவருடைய முதல் நடவடிக்கைகளில் இடம் பெற்றன.

''நெப்போலியன் கருத்துக்களில்'' அரசாங்கத்தின்

கருவி என்ற முறையில் மதகுருக்களின் ஆதிக்கம் என்பதும் ஒன்றுகும். சமூகத்தோடு ஒத்துப் போன காரணத்தால், இயற்கைச் சக்திகளைச் சார்ந்திருந்தபடியால், மேலேயிருந்து தன்னைக் காப்பாற்றும் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்ததால் புதிதாக ஏற்பட்ட சிறு நிலவுடைமை இயல்பாகவே மதநம்பிக்கை கொண்டிருந்தது. ஆனல் கடன்களால் சீரழிந்து போய், சமூகத்தையும் அதிகாரத்தையும் எதிர்த்துக் கொண்டு, தன்னுடைய எல்லைகளுக்கு அப்பால் விரட்டியடிக்கப்படுகிற சிறு நிலவுடைமைக்கு இயல்பாகவே மத நம்பிக்கை போய் விடுகிறது. அவர்களுக்கு இப்பொழுதுதான் ஒரு குறுகலான துண்டு நிலம் கிடைத்திருக்கிறது; அதோடு சொர்க்கத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுல் அவர்கள் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொள்வார்கள். ஏனென்றுல் சாதகமான பருவநிலையைக் கொடுப்பது சொர்க்கம் தானே. ஆனல் அந்தச் சிறு நிலவுடைமைக்குப் பதிலாக சொர்க்கம் என்று நிறுத்திஞல் அது அவர்களை அவமதிப்புச் செய்வதாகும். அந்தச் சூழ்நிலையில் மதகுருக்கள், ''நெப்போலியன் கருத்துக்களின்'' மற்றெரு அம்சமான மண்ணுலகப் போலீசின் ஆசீர்வதிக்கப்பட்ட வேட்டை நாய்களாக மாறிவிடுகிறார்கள். ரோம் மீது படையெடுத்ததற்குப் பதிலாக அடுத்த தடவை, பிரான்சுக்குள்ளேயே படையெடுத்துப் போக வேண்டியிருக்கும்; நோக்கத்தைப் பொறுத்தவரை மான்டலம்பேருக்கு மாறுபட்ட நோக்கத்தில் இதைச் செய்ய நேரும்.

கடைசியாக, ''நெப்போலியன் கருத்துக்களின்'' சிகரம் இராணுவத்தின் தலைமையான முக்கியத்துவம்தானே. சிறு நிலவுடைமை விவசாயிகளின் உச்சநிலை கௌரவமாக (point d'honneur) இராணுவம் இருந்தது. அவர்கள் வெளியுலகத்துக்கு எதிராகத் தங்களுடைய புதிய சொத்துக்களைப் பாதுகாத்தும், சமீபத்தில் கிடைத்த தேசம் என்ற அந்தஸ்தை வானளாவப் புகழ்ந்தும், உலகத்தைக் கொள்ளையடித்தும் புரட்சி மயமாக்கியும் வருகின்ற இராணுவத்தின் வீர புருஷர்களாக மாறியிருந்தார்கள். அந்த இராணுவ உடை அவர்களுடைய சொந்தத் திருநாள் உடையாக

இருந்தது; யுத்தம் அவர்கள் பாடிய கவிதையாக இருந்தது; தங்களுடைய சிறு நிலவுடைமையை அவர்கள் கற்பனையில் விஸ்தரித்து அழகுபடுத்தி அதைத் தங்களுடைய தேசம் என்று போற்றினார்கள்; தேசபக்தியே அவர்களுடைய சொத்துணர்ச்சியின் இலட்சிய வடிவமாக இருந்தது. ஆனால் இப்பொழுது பிரெஞ்சு விவசாயி கஸாக்கு எதிரிகளிடமிருந்து தன்னுடைய சொத்தைக் காப்பாற்றப் போராடவில்லை: அமீனுக்களையும் வரி வசூலிப்பவர்களையும் எதிர்த்தே அவன் போராட வேண்டியிருந்தது. அந்தச் சிறு நிலவுடைமை அவன் போற்றிய தாய்நாட்டில் இப்பொழுது இல்லை; ஒத்திவைப்புப் பேரேட்டில்தான் அது இடம் பெற்றிருந்தது. இராணுவத்திலும் இப்பொழுது விவசாய இளைஞர்கள் என்ற இளம் மலர்களைக் காணவில்லை; அதிலிருந்தெல்லாம் விவசாய லும்பன் பாட்டாளி வர்க்கத்தினர் என்ற சதுப்பு நிலப் பூக்களே. நெப்போலியனுக்குப் பதிலாக இரண்டாம் போனபார்ட் என்பதைப் போல, இராணுவமும் பெரும்பாலும் பதிலாட்களைக் கொண்டதாக இருக்கிறது. மான்களை வேட்டையாடுவதைப் போல விவசாயிகளை வேட்டையாடுவதும், வன்முறை செய்யும் போலீசாரின் பந்தோபஸ்து வேலையைச் செய்வதுமே இப்பொழுது இராணுவத்தின் வீரச் செயல்கள். டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர் தன்னுடைய அமைப்பின் உள் முரண்பாடுகளினால் துரத்தப்பட்டு பிரான்சின் எல்லைகளுக்கு வெளியே போவாரானால், அவருடைய இராணுவம் சிற்சில இடங்களில் கொள்ளையடித்த பிறகு வாசை மாலையைச் சூடாது; நன்றாக உதை வாங்கும்.

''நெப்போலியன் கருத்துக்கள்'' அனைத்தும் வளர்ச்சியடையாத, சிறு நிலவுடைமையின் இளம்பருவ மலர்ச்சியில் பிறந்த கருத்துக்களாகும்; காலம் கடந்த பிறகும் நீடித்துக் கொண்டிருக்கும் நிலவுடைமைக்கு அவை பொருளற்றவையாகும்; அவை அவனுடைய மரணவஸ்தையின் பொழுது ஏற்படும் கற்பனைகள் மட்டுமே; சொற்றொடர்களாக மாற்றமடைந்திருக்கும் சொற்கள்; பேய்களாக மாற்றமடைந்திருக்கும் ஆவிகள். பிரெஞ்சு தேசத்தின் பெருந்திரளான

மக்களை மரபுகளின் சுமையிலிருந்து விடுவிப்பதற்கும், அரசாட்சிக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள எதிர்ப்பைக் கலப்பற்ற வடிவத்தில் மாற்றியமைப்பதற்கும் பேரரசு என்ற கேலிக்கூத்து தேவையாக இருந்தது. சிறு அளவு நிலவுடைமை மென்மேலும் அதிகமாகத் தகர்ந்து கொண்டிருக்கும் பொழுது அதன் மீது உருவாக்கப்பட்டிருக்கும் அரசு அமைப்பும் வீழ்ச்சி அடைகிறது. நவீன சமூகத்துக்குத் தேவைப்படுகின்ற அரசு மத்தியப்படுத்தப்படுதல் என்பது நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து உருவாகியிருக்கிற இராணுவ-அதிகாரவர்க்க அரசு இயந்திரத்தின் அழிவிலே தான் உருவாகிறது.*

இரண்டாம் போனபார்ட்டை சிஞ்ய மலை மீது—சட்டங்களைப் பெறுவதற்கு அல்ல, சட்டங்களைக் கொடுப்பதற்காக—தூக்கி வைத்த டிசம்பர் மாதம் 20—21ந் தேதிகளில் நடந்த பொதுத் தேர்தல் புதிருக்குப் பதிலை பிரெஞ்சு விவசாயிகளின் நிலை விளக்குகிறது.

இப்பொழுது போனபார்ட்டைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர முதலாளித்துவ வர்க்கத்துக்கு வேறுவழி கிடையாது என்பது வெளிப்படை. கான்ஸ்டான்சில் நடைபெற்ற திருச்சபை

---

* இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பாராவிலுள்ள கடைசி இரண்டு வார்த்தைகளுக்குப் பதிலாக 1852ம் வருடத்திய பதிப்பில் பின்வரும் பகுதி இடம் பெற்றிருக்கிறது: ''அரசு இயந்திரத்தை உடைத்து விடுவதால் மத்தியப்படுத்துதலுக்கு எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை. மத்தியப்படுத்துதலின் மிகவும் கீழான, கொச்சையான வடிவமே அதிகாரவர்க்க முறை; அது இன்னும் அதற்கு எதிர்நிலையான நிலப்பிரபுத்துவத்தால் அழுத்தப்படுகிறது. நெப்போலியனின் மறுவருகையில் பிரெஞ்சு விவசாயிக்கு ஏமாற்றம் ஏற்படுகின்ற பொழுது அவன் தன்னுடைய துண்டு நிலச் சொத்து மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் இழப்பான். இந்தத் துண்டு நிலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டிருக்கின்ற மொத்த அரசுக் கட்டிடமுமே நொறுங்கிக் கீழே விழுந்துவிடும். அப்பொழுது பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது கூட்டு இசையாக மாறும். அது இல்லையென்றால் எல்லா விவசாய நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் தனிப்பாட்டு அதன் கடைசிப் பாட்டாக மாறிவிடும்.''—ப-ர்.

யினர் கூட்டத்தில்[70] பரிசுத்தவாதிகள் போப்புகளின் ஒழுக்கக் கேடான வாழ்க்கையைக் குறை கூறிய பிறகு ஒழுக்கச் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருந்தார்கள். கர்தினல் பியேர் டஆயி அவர்களைப் பார்த்து இடியோசை போலச் சொன்னார். ''பிசாசே நேரில் வந்தால் தான் இனிமேல் கத்தோலிக்கத் திருச்சபையைக் காப்பாற்ற முடியும்; நீங்கள் தேவதைகளைப் பற்றிப் பேசி என்ன பயன்?'' என்றார். திடீர்ப்புரட்சிக்குப் பிறகு இதைப் போலவே பிரெஞ்சு முதலாளிகளும் கூக்குரலிட்டார்கள்: இனிமேல் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவரால் மட்டுமே முதலாளித்துவ சமூகத்தைக் காப்பாற்ற முடியும்! திருட்டு மட்டுமே இன்னும் சொத்தைக் காப்பாற்ற முடியும்; பொய்ச் சத்தியம் மட்டுமே மதத்தைக் காப்பாற்றும்; விபசாரமே குடும்பத்தைக் காப்பாற்றும்; குழப்பமே ஒழுங்கைக் காக்கும்!

சுயேச்சையான சக்தியாக மாறிவிட்ட நிர்வாக அதிகாரம் என்ற முறையில் போனபார்ட் ''முதலாளித்துவ அமைப்பைக்'' காப்பதே தன்னுடைய வாழ்க்கைப் பணி என்று கருதுகிறார். ஆனால் முதலாளித்துவ அமைப்பின் பலம் மத்தியதர வர்க்கத்திடம் இருக்கிறது. எனவே அவர் தன்னை இந்த மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதியாகக் கருதி, தன்னுடைய உத்தரவுகளையும் அந்த உணர்ச்சியிலேயே வெளியிடுகிறார். எனினும் இந்த மத்தியதர வர்க்கத்தின் அரசியல் பலத்தை நொறுக்கியதாலும், தினந்தோறும் அதை நொறுக்கிக் கொண்டிருப்பதாலுமே அவர் ஒரு பிரமுகராக இருக்கிறார். எனவே அவர் தன்னை மத்தியதர வர்க்கத்தின் அரசியல், இலக்கிய சக்தியின் எதிரியாகக் கருதுகிறார். எனினும் அதன் பொருள்வகை சக்தியைப் பாதுகாப்பதன் மூலமாக அதற்கு அரசியல் பலத்தைப் புதியதாக அவர் ஏற்படுத்தித் தருகிறார். ஆகவே காரணத்தை உயிரோடு வைத்திருக்க வேண்டும்; ஆனால் விளைவு எங்கே வெளிப்படுகிறதோ, அங்கே அதை ஒழித்துக் கட்டிவிட வேண்டும். ஆனால் காரணம், விளைவு பற்றிய லேசான குழப்பங்கள் ஏற்படாமல் நடக்கப் போவதில்லை.

ஏனென்றால் கூட்டுச் செயலின் போது இரண்டுமே தங்களைத் தனியாக எடுத்துக் காட்டும் அம்சங்களை இழந்து விடுகின்றன. இந்த எல்லைக் கோட்டை அழித்துவிடும் புதிய அரசாணைகள் வெளியிடப்படுகின்றன. போனபார்ட் அதே சமயத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மாறான விதத்தில் தன்னை விவசாயிகளுக்கும் பொதுப்படையாக மக்களுக்கும் பிரதிநிதியாக நினைத்துக் கொள்கிறார்; முதலாளித்துவ சமூகத்தின் எல்லைக்குள் கீழ்த்தட்டுக்களைச் சேர்ந்த வர்க்கங்களை சந்தோஷமாக வைத்திருக்க விரும்பும் பிரதிநிதியாகத் தன்னை நினைத்துக் கொள்கிறார். ''உண்மையான சோஷலிஸ்டுகளின்''[71] ஆட்சித் தந்திரத்தை முன்னதாகவே ஏமாற்றி விடும் புதிய அரசாணைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக போனபார்ட் தன்னை டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவராக, அவரும் அவருடைய பரிவாரங்களும் அரசாங்கமும் இராணுவமும் சேர்ந்துள்ள லும்பன் பாட்டாளி வர்க்கத்தினரின் பிரதிநிதியாக நினைத்துக் கொள்கிறார். அந்த லும்பன் பாட்டாளி வர்க்கத்தினரின் பிரதான நோக்கம் தங்களுக்கு லாபம் தேடுவதும் அரசாங்கக் கருவூலத்திலிருந்து கலிபோர்னியா லாட்டரிப் பரிசை அடைவதுமே. அவர் அரசாணைகள் மூலமாகவும் அரசாணைகள் இல்லாமலும் அரசாணைகளுக்கு எதிராகவும் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர் என்ற தன் தகுதியை நியாயப்படுத்துகிறார்.

இந்த நபரின் முரண்பாடான கடமைகள் அவருடைய அரசாங்கம் குழப்பமான வகையில் குருட்டுத்தனமாக இங்குமங்கும் ஓடுவதும், முதலில் ஒரு வர்க்கத்தையும் பிறகு மற்றொரு வர்க்கத்தையும் தனக்கு ஆதரவாகத் திரட்ட முயற்சிப்பதும் பிறகு அவற்றையே அவமதிப்பதும் கடைசியில் அவை எல்லாவற்றையும் ஒரே மாதிரியாகத் தனக்கு எதிர்ப்புக் கொடுக்கச் செய்வதும் முதலிய முரண்பாடுகளை விளக்குகின்றன. அந்த அரசாங்கம் செயல்துறையில் எவ்வளவு நிச்சயமில்லாதிருக்கிறதோ அதே அளவுக்குத் தன்னுடைய அரசாணைகள் தீர்மானமாகவும் அதிகார தோரணையிலும் எழுதப்படுவது மிகவும் வேடிக்

கையூட்டும் வேறுபாடாக இருக்கிறது. அவர் தன்னுடைய மாமாவைக் கீழ்ப்படிதலோடு பின்பற்றும் பாணியை அவருடைய அரசாணைகளில் பார்க்கிறோம்.

மத்தியதர வர்க்கம் ஈடுபட்டிருக்கும் தொழில் துறையும் வர்த்தகமும் வலுவான அரசாங்கத்தின் கீழ், செயற்கை முறையில் வெப்பம் ஏற்படுத்தி செடிகளை வளர்ப்பதைப் போல நன்கு வளர்ச்சியடைய வேண்டும். இரயில் பாதைகளைக் கட்டுவதற்கு ஏராளமான சலுகைகள் கொடுக்கப் படுகின்றன. ஆனால் போனபார்ட்டின் லும்பன் பாட்டாளி வர்க்கம் பணத்தைச் சுருட்ட வேண்டும். எனவே விவரம் தெரிந்தவர்கள் பங்கு மார்க்கெட்டில் இரயில்வே சலுகைகளை வைத்துச் சூதாடுகிறார்கள். இரயில் பாதைகளைப் போடுவதற்கு மூலதனம் முன்வரவில்லையே. அப்படியானால் இரயில்வே பங்குகளின் பேரில் வங்கிகள் முன்பணம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடு. ஆனால் அதே சமயத்தில் வங்கிகளைச் சொந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்காக தாஜா செய்ய வேண்டுமே. வங்கிகள் வாராந்திர நிதிநிலை அறிக்கையை வெளியிடுவதிலிருந்து விதிவிலக்குக் கொடு. அரசாங்கத்துக்கும் வங்கிக்கும் ஒப்பந்தம் ஏற்படுத்துதல். அதன்படி வங்கிக்கே அதிகமான பங்கு கிடைக்கும். மக்களுக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும். பொதுப் பணிகளை ஆரம்பிப்போம். ஆனால் பொதுப் பணிகளின் விளைவாகப் பொதுமக்கள் தானே அரசாங்கத்துக்கு அதிகமான வரிகட்ட நேரும். அப்படியானால் சுகவாசிகளைத் [rentier] தாக்கு, அரசாங்க பத்திரங்களுக்கு வட்டி ஐந்து சதவிகிதம் என்பதை நாலரை சதவிகிதமாகக் குறைத்து விடு. ஆனால் மத்தியதர வர்க்கத்துக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே என்று மறுபடியும் யோசனை வருகிறது. அப்படியானால் ஒயினைச் சில்லறையாக (en detail) வாங்குபவர்களுக்கு ஒயின் வரியை இரண்டு மடங்காக்கு; மத்தியதர வர்க்கம் மொத்தமாக (en gros) வாங்குவதால் ஒயின் வரியைப் பாதியாகக் குறைத்துவிடு. அன்றுள்ள தொழிலாளர் சங்கங்கள் கலைக்கப்படுகின்றன; ஆனால் எதிர்காலத்தில் சங்கங்கள் வைத்து அதிசயங்களைச் சாதிக்கலாம் என்று உறுதி

சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமே. அவர்களைச் சிக்கிரமாகக் கடனுளியாக்கி சொத்துக் குவிதலைத் தீவிரப்படுத்தும் அடமான வங்கிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆனால் ஆர்லேயான் குடும்பத்தினரின் பறிமுதல் செய்யப்பட்ட எஸ்டேட்டுகளிலிருந்து பணம் பிடுங்குவதற்கு இந்த அடமான வங்கிகளைப் பயன்படுத்த உத்தேசித்தல். இந்த நிபந்தனை அரசாணையில் இல்லாதபடியால் எந்த முதலாளியும் இதற்கு ஒத்துக்கொள்ள விரும்பவில்லை. அடமான வங்கி அரசாணையில் மட்டுமே இருக்கிறது, இதரவை, இதரவை.

எல்லா வர்க்கங்களுக்கும் தானே தந்தை வழிப் பரோபகாரியாகத் தோன்ற வேண்டுமென்று போனபார்ட் விரும்பலாம். ஆனால் அவர் ஒரு வர்க்கத்திலிருந்து எடுக்காமல் மற்றொரு வர்க்கத்துக்குக் கொடுக்க முடியாது. பிரோண்டா கிளர்ச்சிகளின் போது கீஸ் கோமகனைப் பற்றிப் பின்வருமாறு சொல்வதுண்டு. பிரான்சிலேயே அவர்தான் அதிகமான நன்றிக்கடன்பட்டவர். ஏனென்றால் அவர் தன்னுடைய எஸ்டேட்டுகள் எல்லாவற்றையும் தன்னுடைய ஆதரவாளர்களுக்குக் கடனுக்குக் கொடுத்து விட்டார். அது போல போனபார்ட்டும் பிரான்சிலேயே அதிகமான நன்றிக்கடன் பட்டவராக இருக்க விரும்புகிறார். தேசத்தின் சொத்தை, பிரான்சின் உழைப்பு முழுவதையும் தனக்குத் தனிப்பட்ட முறையில் சேரவேண்டிய நன்றிக்கடனுக மாற்றிக் கொள்வார். அவர் பிரான்சுக்கே அதை அன்பளிப்பாகக் கொடுக்கும் நோக்கத்தில் பிரான்ஸ் முழுவதையுமே திருடுவதற்கு விரும்புவார். அல்லது பிரெஞ்சுப் பணத்தைக் கொண்டு புதிதாக பிரான்சை விலைக்கு வாங்குகிற நோக்கத்தில் அதைச் செய்வார். ஏனென்றால் டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் தனக்குச் சொந்தமாக இருக்க வேண்டியதைக்கூட அவர் விலைக்கு வாங்குவதற்கே விரும்புவார். செனெட், அரசு கவுன்சில், சட்டமன்றம், கௌரவப் படையினர் பட்டம், போர்வீரர்களுக்குத் தரப்படும் பதக்கங்கள், சலவைச்சாலைகள், பொதுப் பணித்துறை, ரயில்வேக்கள், தேசியக் காவலர் படையில் சாதாரணப்

பதவிகளைத் தவிர உயர்ந்த பதவிகள் அனைத்தும், ஆர்லேயான் குடும்பத்தினருடைய பறிமுதலான எஸ்டேட்டுகள் போன்ற அரசு ஏற்பாடுகள் எல்லாமே விலை பேசப்பட்டு விற்கப்படுகின்றன. இராணுவத்திலும் அரசாங்க இயந்திரத்திலும் ஒவ்வொரு பதவியும் விலைக்கு விற்கப்படுகிறது. ஆனால் திருப்பிக் கொடுப்பதற்காக பிரான்சை எடுத்துக் கொள்கிற இந்த வியாபாரத்தின் மிக முக்கியமான அம்சம், அந்த பேரத்தின் போது டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் தலைவர், உறுப்பினர்களுடைய பைகளுக்குள் போய் சேரும் சதவிகிதப் பணமாகும். ஆர்லேயான் எஸ்டேட்டுகளைப் பறிமுதல் செய்தபொழுது திரு எம் ட மார்னீயின் ஆசைநாயகியான கோமகள் எல். அதைப் பற்றி ''கழுகு பறக்க ஆரம்பித்துவிட்டது'' (C'est le premier vol de l'aigle)* என்று சொன்னாளாம். இந்தக் கழுகு அண்டங்காக்கையையே அதிகமாக ஒத்திருக்கிறது. அதன் ஒவ்வொரு பயணத்துக்கும் இச்சொற்கள் பொருந்துவதாகும். ஒரு கஞ்சன் தான் இன்னும் பல வருடங்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான சாமான்களை அகம்பாவமாக எடுத்துக் காட்டிய பொழுது இத்தாலியக் கார்த்தூசியன் ஒருவர் அவனிடம் ''சரக்குகளை எண்ணுவது ஏன்? முதலில் உனக்கு எஞ்சியிருக்கும் வருடங்களை எண்ணிப் பார்'' (Tu fai conto sopra i beni, bisogna prima far il conto sopra gli anni) என்று சொன்னாராம். போனபார்ட்டும் அவருடைய ஆதரவாளர்களும் தினந்தோறும் இதையே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். வருடங்களை எண்ணும் பொழுது தவறு செய்து விடக்கூடாது என்பதற்காக நிமிடங்களை எண்ணுகிறார்கள். அதிகமான கூச்சல் போட்டுக் கொண்டு, கௌரவம் என்பதே சிறிதுமில்லாமல் பிடுங்கித் தின்பதைப் பிழைப்பாகக் கொண்ட கூட்டம், சுலூக்கின் பிரமுகர்களின் கோமாளித்தனமான கம்பீரத்தோடு, விலையுயர்ந்த கோட்டுகளுக்குள் உடலைத் திணித்துக் கொண்டு சந்தேகத்

---

* பிரெஞ்சு மொழியில் "vol" என்பதன் பொருள் ''பறத்தல்'' மற்றும் ''திருடுதல்''.—ப-ர்.

துக்கு இடமளிக்கும் நபர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி அரசவைக்குள், மந்திரிசபைக்குள், நிர்வாகத்தின் தலைமையான இடத்துக்குள், இராணுவத்துக்குள் முண்டியடித்துக் கொண்டு நுழைகிறது. இந்தக் கூட்டத்திலேயே மிக நல்லவர்களைக் கூட அவர் எங்கே இருந்து வருகிறார் என்று யாருக்கும் தெரியாது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? இவர்களுக்கு ஒழுக்கத்தை போதிப்பவர் வெரோன்-கிரெவேல்;* இவர்களுடைய சிந்தனையாளர் கிரானியே டெ கசனாக் என்பதை நினைவுபடுத்திக் கொண்டால், டிசம்பர் 10ந் தேதிச் சங்கத்தின் மேல்தட்டிலுள்ள நபர்களை நாம் நன்கு கற்பனை செய்ய முடியும். கிஸோ மந்திரிசபை இருந்த பொழுது, அரசவம்ச எதிர்க்கட்சிக்கு எதிராக இந்த கிரானியேயை ஒரு மஞ்சள் பத்திரிகையில் அவர் பயன்படுத்திக் கொண்ட பொழுது ''அவன் கோமாளிகளின் அரசன்'' (C'est le roi des drôles) என்று பெருமையாகச் சொல்வாராம். லுயீ போனபார்ட்டின் அரசவையையும் அவருடைய கோஷ்டியினரையும் பற்றிப் பேசும் பொழுது பகர ஆட்சியை[72] அல்லது பதினேந்தாம் லுயீ மன்னரை நினைவுபடுத்திக் கொள்வது ஒரு வகையில் தவறு செய்வதாகும். ஏனென்றால் ''இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் பிரான்ஸ் ஆசைநாயகிகளின் ஆட்சியை அனுபவித்தது; ஆனால் எந்தக் காலத்திலும் ஆசைநாயகர்களின் ஆட்சி இருந்ததில்லை.''**

போனபார்ட் தன்னுடைய நிலைமையின் முரண்பட்ட தேவைகளினால் துரத்தப்பட்டு, அதே சமயத்தில் நெப்போலியனின் பதிலாள் என்ற முறையில் பொதுமக்களின் கவனத்தைத் தன்னிடமே நிலையாக வைத்திருக்க வேண்டும்

---

* பிரெஞ்சு நாவலாசிரியரான பால்ஸாக் *Cousine Bette* (''மாமன் மகள் பெட்டே'') என்ற நாவலில் பாரிஸ் நகரத்தின் ஒழுக்கக் கேடான பிலிஸ்தியனைக் கிரெவேல் என்ற பாத்திரமாகப் படைத்திருக்கிறார். *Constitutionnel* என்ற பத்திரிகை முதலாளியான வெரோன் என்பவரைத் தழுவி இந்தப் பாத்திரத்தைச் சித்தரிக்கிறார்.

** திருமதி ஜிரார்டேன் இப்படிக் குறிப்பிட்டார்.

என்ற தேவையினால் ஒரு மந்திரவாதியைப் போல ஆச்சரியமேற்படுத்தக் கூடிய காரியங்களைத் தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கிறார், அதாவது தினந்தோறும் சிறிய அளவில் திடீர்ப்புரட்சி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறார். போனபார்ட் முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதையுமே குழப்பத்திலே தள்ளிவிட்டு, 1848ம் வருடத்திய புரட்சி மீறமுடியாதவை என்று கருதியவற்றையெல்லாம் மீறிச் சென்று, புரட்சியை சகித்துக் கொள்ளுமாறு சிலரையும், புரட்சிக்காகத் துடிக்குமாறு மற்றவர்களையும் செய்திருக்கிறார்; ஒழுங்குமுறை என்ற பெயரில் உண்மையான அராஜகத்தை ஏற்படுத்தி, அரசு இயந்திரம் முழுவதிலிருந்தும் அதனுடைய கீர்த்தியைப் போக்கி, அதன் தெய்விகத்தன்மையைக் களங்கப்படுத்தி அதை அருவருப்பானதாகவும் கேலிக்குரியதாகவும் செய்கிறார். டீரியர் ''புனித மேலாடை''[73] வழிபாட்டைப் போல பாரிஸ் நகரத்திலும் நெப்போலியனின் சக்கரவர்த்தி மகுடத்தை வழிபடுவதற்கு ஏற்பாடு செய்கிறார். ஆனால் கடைசியாக லுயீ போனபார்ட்டின் தலையில் சக்கரவர்த்தி மகுடம் சூட்டப்படும் பொழுது, வெண்டோம் ஸ்தூபி மீது நிறுத்தப்பட்டிருக்கும் நெப்போலியனின் வெண்கலச் சிலை உச்சியிலிருந்து கீழே விழுந்து நொறுங்கிப் போகும்.

1851 டிசம்பர்—1852 மார்ச்சில்
கா. மார்க்சால் எழுதப்பட்டது

Die Revolution, New-York, 1852 என்ற சஞ்சிகையின் முதல் வெளியீடு என்ற முறையில் அச்சிடப்பட்டது

1869 ஆம் ஆண்டு பதிப்பின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

கையொப்பம்: கார்ல் மார்க்ஸ்

கா. மார்க்ஸ்

*The People's Paper*இன் ஆண்டுவிழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவு

லண்டன், ஏப்ரல் 14, 1856[74]

1848ம் வருடப் புரட்சிகள் என்று சொல்லப்படுபவை அற்பமான சம்பவங்களைத் தவிர ஒன்றுமில்லை; ஐரோப்பிய சமூகத்தின் காய்ந்து போன மேற்பரப்பில் தோன்றிய சிறு பிளவுகளும் வெடிப்புகளும்தான். எனினும் அவை படு குழியைச் சுட்டிக் காட்டின. கெட்டியாகத் தோன்றும் மேற் பரப்புக்குக் கீழே சமுத்திரத்தைப் போல திரவப் பொருள் இருப்பதையும் அது சற்று பொங்கினால் உறுதியான பாறை களைக் கொண்ட கண்டங்கள் சுக்குச் சுக்காக நொறுங்கிப் போய்விடும் என்பதையும் அவை எடுத்துக் காட்டின. அவை பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையை, அதாவது பத்தொன் பதாம் நூற்றாண்டின் இரகசியத்தையும் அந்த நூற்றாண்டின் புரட்சியின் இரகசியத்தையும் கூச்சலோடும் குழப்பத் தோடும் அறிவித்தன.

அந்தச் சமூகப் புரட்சி 1848ல் கண்டுபிடிக்கப்பட்ட புதுமை அல்ல என்பது உண்மையே. நீராவியும் மின்சார மும் நூற்பு இயந்திரமும் குடிமக்களான பர்பே, ரஸ்பைல் மற்றும் பிளாங்கியைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு ஆபத்தான தன்மையைக் கொண்ட புரட்சியாளர்களாக இருந்தன. நாம் வாழ்கின்ற காற்று மண்டலம் 20,000 பவுண்டு சக்தியோடு ஒவ்வொருவரையும் அழுத்துகிறது என்றாலும் நீங்கள் அதை உணர்கிறீர்களா? 1848க்கு முன் பிருந்த ஐரோப்பிய சமூகம் எல்லாப் பக்கங்களிலும் அதைச்

சூழ்ந்து அழுத்திக் கொண்டிருந்த புரட்சிகரமான சூழலை உணர்ந்த அளவைக் காட்டிலும் கூடுதலாக நாம் உணர் வதில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் குறியடையாளமான மகத்தான உண்மையை நாம் காணலாம்; இந்த உண்மையை எந்தக் கட்சியும் மறுக்கத் துணிவதில்லை. ஒரு பக்கத்தில், இதற்கு முந்திய மனிதகுல வரலாற்றின் எந்தச் சகாப்தத் திலும் சந்தேகிக்கப்பட்டிராத தொழில் துறை மற்றும் விஞ் ஞான சக்திகள் வாழ்க்கையில் ஆரம்பமாகி விட்டன. மறு பக்கத்தில், ரோமானியப் பேரரசின் கடைசிக் காலங்களில் பதிவுசெய்யப்பட்ட பயங்கரங்களையும் மிஞ்சுகின்ற அழிவின் அறிகுறிகள் இருந்து வருகின்றன.

நம் காலத்தில் ஒவ்வொன்றும் அதன் மறுப்பையும் சூல் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மனித உழைப் பைக் குறைக்கக் கூடிய, பலன் விளைவிக்கக் கூடிய அதிசய மான சக்தியைக் கொண்ட இயந்திரம் மக்களைப் பட்டினி போடுவதையும் கூடுதலாக உழைக்கச் செய்வதையும் பார்க் கிறோம். புதுவரவான செல்வத்தின் தோற்றுவாய்கள் ஏதோ ஒரு விசித்திரமான சாபத்தினால் வறுமையின் தோற்றுவாய் களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஒழுக்கத்தின் வீழ்ச்சியை விலையாகக் கொடுத்துக் கலையின் வெற்றிச் சாதனைகளை வாங்குவதாகத் தோன்றுகிறது. மனிதகுலம் இயற்கையை அடிமைப்படுத்துகின்ற அதே வேகத்தில் மனிதன் மற்ற மனி தர்களுக்கு அல்லது தன்னுடைய கொடும்பழிகளுக்கு அடிமை யாகி விடுவதைப் போலத் தோன்றுகிறது. விஞ்ஞானத்தின் தூய்மையான வெளிச்சம் அறியாமை என்ற இருண்ட பின்னணி இல்லாவிட்டால் ஒளி வீச முடியாது என்று தோன்றுகிறது. நம்முடைய எல்லாக் கண்டுபிடிப்பும் முன் னேற்றமும் பொருளாயதச் சக்திகளுக்கு அறிவு பூர்வமான வாழ்க்கையைக் கொடுத்து மனித வாழ்க்கையை ஒரு பொரு ளாயதச் சக்தியாக வீணைக்கும் விளைவில் முடிவதைப் போலத் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் நவீனத் தொழில் துறை மற்றும் விஞ்ஞானத்துக்கும் மறு பக்கத்தில் நவீன வறுமை மற்றும் சீரழிவுக்கும் இடையிலுள்ள இந்த முரண்பாடு,

நம் சகாப்தத்தின் உற்பத்திச் சக்திகளுக்கும் சமூக உறவுகளுக்கும் இடையே உள்ள இந்த முரண்பாடு உணரக் கூடிய, நம்மை மூழ்கடிக்கின்ற உண்மை, மறுக்கப்பட முடியாத உண்மை. சில கட்சிகள் அதைப் பற்றி ஓலமிடலாம். மற்ற கட்சிகள் நவீன மோதல்களை ஒழிப்பதற்காக நவீனக் கலைகளை ஒழிக்க விரும்பலாம்; அல்லது தொழில் துறையில் அடைந்த சிறந்த முன்னேற்றத்தைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் துறையில் சிறப்பான பின்னேற்றம் வேண்டும் என்று அது விரும்புவதாக இக்கட்சிகள் கற்பனை செய்து கொள்ளலாம். நம்மைப் பொறுத்தவரை, இம்முரண்பாடுகள் அனைத்திலும் தொடர்ந்து இடம்பெற்றுள்ள கூருணர்ச்சியின் வடிவத்தை நாம் தவருகப் புரிந்து கொள்ளவில்லை. சமூகத்தில் புதிதாகத் தோன்றியுள்ள இச்சக்திகளை நன்முக உபயோகிப்பதற்கு, அவை புதிய மனிதர்களால் மட்டுமே அடக்கியாளப்படுவதை விரும்புகின்றன—உழைக்கும் மனிதர்கள் அப்படிப்பட்டவர்களே. இயந்திரத்தைப் போல அதே அளவுக்கு அவர்களும் நவீன காலத்தின் கண்டுபிடிப்பே. முதலாளி வர்க்கம், மேன்மக்கள், பின்னேற்றத்தின் பரிதாபத்துக்குரிய தீர்க்கதரிசிகள் ஆகியோரைக் குழப்புகின்ற அறிகுறிகளில் நம்முடைய வீரமான நண்பரை, இராபின் குட்பெல்லோவை, பூமியில் மிகவும் வேகமாகத் துளைத்துக் கொண்டு போகின்ற பழைய அகழ் எலியை, தகுதி மிக்க முன்னேடியை, புரட்சியை நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம். இங்கிலாந்தின் தொழிலாளர்கள் நவீனத் தொழில் துறையின் முதற்குழந்தைகள். அந்தத் தொழில் துறையால் உற்பத்தி செய்யப்பட்ட சமூகப் புரட்சிக்கு—உலக முழுவதிலும் மூலதனத்தின் ஆட்சியும் கூலி உழைப்பின் அடிமைத்தனமும் இருப்பதைப் போலவே உலக முழுவதிலுமுள்ள அவர்களுடைய சொந்த வர்க்கத்தின் விடுதலையே அந்தப் புரட்சியின் அர்த்தம்—உதவியளிப்பதில் அவர்கள் கடைசியாக இருக்க மாட்டார்கள் என்பது உறுதி. ஆங்கிலத் தொழிலாளி வர்க்கம் கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து நடத்தியிருக்கும் வீரமிக்க போராட்டங்களை நான் தெரிந்து கொள்கிறேன்; அந்தப்

போராட்டங்களைப் பற்றி அதிகமாகத் தெரியாததால், முதலாளி வர்க்க வரலாற்றுசிரியர்கள் அவற்றை மறைத்து விட்டபடியால் அவை பிரபலமடையவில்லை. மத்திய காலத்தில் ஜெர்மனியில் ஆளும் வர்க்கத்தின் கொடுமைகளுக்குப் பழி வாங்குவதற்காக "Vehmgericht" என்ற பெயரில் ஒரு இரகசிய நீதி மன்றம் இருந்தது. ஒரு வீட்டுச் சுவரில் சிகப்பு நிறத்தில் சிலுவைக் குறி போடப்பட்டிருந்தால் அதன் உடைமையாளரை "Vehm" ஒழிக்கப் போகிறது என்பதை மக்கள் அறிந்து கொண்டார்கள். ஐரோப்பாவில் இன்று எல்லா வீடுகளிலும் மர்மமான சிகப்புச் சிலுவைக் குறி போடப்பட்டிருக்கிறது. வரலாறுதான் நீதிபதி, தண்டனையை நிறைவேற்றுபவர் பாட்டாளி வர்க்கம்.

The People's Paper, இதழ் 207,
1856 ஏப்ரல் 19ல்
அச்சிடப்பட்டது

பத்திரிகையின்படி
அச்சிடப்பட்டது.
ஆங்கில மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை[75]

முன்னுரை

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைக் கீழ்க் கண்ட வரிசைமுறைப்படி நான் ஆராய்கிறேன்: மூலதனம், நிலச் சொத்துடைமை, கூலி உழைப்பு, அரசு, வெளிநாட்டு பர்த்தகம், உலகச் சந்தை. நவீன முதலாளித்துவச் சமூகம் முன்று மாபெரும் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வர்க்கங்களின் பொருளாதார வாழ்க்கையின் நிலைமைகளை முதல் மூன்று தலைப்புகளில் ஆராய்கிறேன்; அடுத்த மூன்று தலைப்புகளுக்கு இடையே இருக்கின்ற உள்ளிணைப்பு இயல்பாகவே புலப்படும். முதல் புத்தகத் தின் முதல் பகுதி மூலதனத்தைப் பற்றி ஆராய்கிறது. அதில் கீழ்க்கண்ட அத்தியாயங்கள் உள்ளன: 1) பண்டம்; 2) பணம் அல்லது சாதாரண நாணயச் செலாவணி முறை; 3) பொதுவாக மூலதனத்தைப் பற்றி. முதல் இரண்டு அத்தியாயங்களையும் கொண்டதே இந்தப் புத்தகம். இந்தக் கையெழுத்துப் பிரதிகள் எனக்கு முன்பாகக் கிடக்கின்றன. இவை அச்சிடப்படுவதற்காக எழுதப்பட்டவையல்ல; நீண்ட இடைவெளி கொண்ட வெவ்வேறு காலங்களில் என்னுடைய சுயவிளக்கத்துக்காக எழுதப்பட்டவையே. ஆரம்பத்தில் குறிப்பிட்ட திட்டப்படி இவற்றை ஒன்றுதிரட்டி ஒரே இணைப்பாகத் திருத்தியமைப்பதென்பது எனக்குக் கிடைக் கும் சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகும்.

நான் எழுதிய பொதுவான முன்னுரையை[76] இங்கே சேர்க்கவில்லை. ஏனென்றால் மேலும் சிந்தித்த பொழுது இன்னும் ஆதாரங்களைத் திரட்டி நிரூபிக்கப்பட வேண்டிய முடிவுகளை முன்கூட்டியே தெரிவிப்பது குழப்பத்தை ஏற் படுத்தும் என்று எனக்குத் தோன்றுகிறது; உண்மையிலேயே என்னைப் புரிந்துகொள்ள விரும்பும் வாசகர் குறிப்பிட்டவற் றிலிருந்து பொதுப்படையானவற்றுக்கு முன்னேறுவதென்று முடிவு செய்து கொள்ள வேண்டும். எனினும் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய என்னுடைய ஆராய்ச்சியின் வளர்ச்சிப் போக்கைப் பற்றி சுருக்கமாகச் சில வார்த்தை களைச் சொல்வது இங்கே பொருத்தமானதாகும்.

நான் நீதி இயலைப் படித்த போதிலும், தத்துவஞானத் துக்கும் வரலாற்றுக்கும் உட்பட்ட பாடமாகவே அதைப் படித்தேன். 1842-43ம் வருடங்களில், *Rheinische Zeitung*[77] என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில், பொருளாயத நலன்கள் என்று வர்ணிக்கப்படுகின்றவற்றை விவாதிக்க வேண்டிய இக்கட்டான நிலை முதல் தடவை யாக எனக்கு ஏற்பட்டது. காட்டு விறகுகள் திருட்டுத் தனமாக எடுத்துச் செல்லப்படுவதையும், நிலச் சொத் துடைமை துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதையும் பற்றி ரைனிஷ் நாடாளுமன்றத்தில் [Landtag] நடைபெற்ற விவாதங்கள்; மோஸெல் பள்ளத்தாக்கிலுள்ள விவசாயி களின் நிலையைப் பற்றி *Rheinische Zeitung* எழுதியவற்றுக்கு எதிராக ரைன் மாநிலத்தின் ஓபர்-பிரசிடெண்ட் ஹெர் வொன் ஷாபெர் எழுப்பிய அதிகார பூர்வமான வாதங் கள்; கடைசியாக வர்த்தக சுதந்திரம், வர்த்தகக் காப்பு வரி பற்றி நடைபெற்ற சொற்போர்கள் என்னை முதலில் பொருளாதாரப் பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்துமாறு செய்தன. இதற்கு மாறாக, ''முன்னுக்குப் போக'' ஆசைப் படுகிற நல்லெண்ணங்கள் விவரமான அறிவின் இடத்தைப் பிடித்திருந்த அந்தக் காலத்தில் லேசான தத்துவஞான முலாம் பூசப்பட்ட பிரெஞ்சு சோஷலிசம், கம்யூனிசத் தின் எதிரொலி, *Rheinische Zeitung* பத்திரிகையில் குறிப் பிடத்தக்க விதத்தில் தென்பட்டது. இந்த மேற்போக்

கான அறிவுக்கு [dilettantism] என்னுடைய மறுப்பைத் தெரிவித்தேன் என்றாலும் *Allgemeine Zeitung*[78] என்ற அவுக்ஸ்பர்க் நகரப் பத்திரிகையோடு நடத்திய விவாதத்தில் பிரெஞ்சுக் கொள்கைகளின் உள்ளடக்கத்தைப் பற்றி ஏதாவது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனது கடந்த கால ஆராய்ச்சிகள் அனுமதிக்கவில்லை என்பதை அதே சமயத்தில் வெளிப்படையாக ஒத்துக் கொண்டேன். *Rheinische Zeitung* பத்திரிகையை வெளியிட்டவர்கள், தங்கள் பத்திரிகையில் மேலும் பணிவான கொள்கையைக் கடைப்பிடித்தால் அதன் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்துச் செய்யப்படலாம் என்ற நப்பாசைக்கு ஆளாகிய பொழுது, நான் அந்த வாய்ப்பை ஆர்வத்தோடு பற்றிக் கொண்டேன்; பொது அரங்கத்திலிருந்து விலகி என்னுடைய ஆராய்ச்சி உலகத்தில் ஈடுபட்டேன்.

என்னை வாட்டிய சந்தேகங்களைப் போக்கிக் கொள்வதற்காக நான் செய்த முதல் ஆராய்ச்சி சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவத்தை விமர்சன ரீதியாக மறு பரிசீலனை செய்ததாகும்;* இந்தப் புத்தகத்துக்கு நான் எழுதிய அறிமுகம் 1844ம் வருடத்தில் பாரிஸ் நகரத்தில் *Deutsch-Französische Jahrbücher*[79] என்ற இதழில் வெளியிடப்பட்டது. சட்ட உறவுகளையோ அல்லது அரசியல் வடிவங்களையோ, தனித்தனியாகவோ அல்லது மனித அறிவின் பொதுவான வளர்ச்சிப் போக்கு என்று சொல்லப்படுகிற அடிப்படையைக் கொண்டோ புரிந்துகொள்ள முடியாது; அதற்கு மாறாக, அவை வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளில் பிறக்கின்றன; இவற்றின் முழுத்தொகுதியையே ஹெகல், பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில, பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் உதாரணத்தைப் பின்பற்றி ''சிவில் சமூகம்'' [civil society] என்ற வார்த்தைகளில் அடைக்கிறார்; எனினும் இந்த சிவில் சமூகத்தின்

---

* கா. மார்க்ஸ், சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவ ஞானத்துக்கு விமர்சனம்.—ப-ர்.

உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேட வேண்டும்—என்னுடைய ஆராய்ச்சியின் பலனாக மேற்கூறிய முடிவுகளுக்கு வந்தேன். பாரிசில் இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினேன். ஆனால் திரு கிஸோ என்னை பாரிசிலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டபடியால் இந்த ஆராய்ச்சியை பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் தொடர்ந்து செய்தேன். இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை—இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக மாறியது—பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டடம் எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள்

என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையும் சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன. இப்படிப் பட்ட மாற்றங்களை ஆராய்கிற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங்களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், மதம், கலைத் துறை அல்லது தத்துவஞானத் துறைகளில்—சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத் துறைகளில்—இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும். ஒரு தனிநபர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அது போலவே இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாறாக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, சமூக உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும். எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை; புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்று வட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னால் சாதிக்கக் கூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய பொருளாயத

நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்த பட்சம் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகிறது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும். விரிவான உருவரையில் ஆசிய, பண்டைக்கால, நிலப்பிரபுத்துவ, நவீன முதலாளித்துவ உற்பத்தி முறைகளே சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கும் சகாப்தங்கள் என்று குறிப்பிடலாம். முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம்— முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியலே; ஆனால் முதலாளித்துவ சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணியலைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன. எனவே இந்த சமூக அமைப்போடு மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவடைகிறது.

பிரெடெரிக் எங்கெல்ஸ் பொருளாதார இலங்களைப் பற்றிய விமர்சனம் பற்றிய மிகச் சிறந்த கட்டுரையை* வெளியிட்டது முதல் (*Deutsch-Französische Jahrbücher* இதழில் அச்சிடப்பட்டது) நான் அவருடன் கடிதங்களின் மூலமாகத் தொடர்ந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தேன். என்னைப் போலவே அவரும் இதே முடிவுக்கு வேறு வழியின் மூலமாக வந்தார் (இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை [*The Condition of the Working Class in England*] என்ற தலைப்பில் அவர் எழுதியிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கவும்). 1845ம் வருடத்தின் வசந்த காலத்தில் அவரும் பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் குடியேறிய பிறகு நாங்களிருவரும் ஜெர்மன் தத்துவஞானத்தின் சித்தாந்தத்துக்கு எதிராக எங்களுடைய

---

* பி. எங்கெல்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்தைப் பற்றிய முதற்குறிப்புகள்.—ப-ர்.

கருதுகோளை விளக்கி எழுதுவதென்று, அதாவது எங்களுடைய கடந்த காலத் தத்துவஞான மனச் சாட்சியோடு கணக்குத் தீர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தோம். ஹெகலுக்குப் பிந்திய தத்துவஞானத்தின் விமர்சனம் என்ற வடிவத்தில் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டோம்.* அச்சுக் காகிதத்தில் எட்டில் ஒரு பங்கின் அளவில் இரண்டு புத்தகங்களாக இருந்த இந்தக் கையெழுத்துப் பிரதியை வெஸ்ட்ஃபாலியாவிலிருந்த பிரசுரகர்த்தர்களுக்கு அனுப்பி வெகு காலமான பிறகு, சூழ்நிலை மாறி விட்டபடியால் அதை அச்சிட அவர்களால் முடியாது என்று எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கையெழுத்துப் பிரதியை எலிகளின் கொறிக்கும் விமரிசனத்துக்கு நாங்கள் மகிழ்ச்சியோடு கொடுத்து விட்டோம். ஏனென்றால் சுயவிளக்கம் என்ற எங்களுடைய முக்கியமான நோக்கம் நிறைவேறி விட்டது. அந்த நாட்களில் எங்களுடைய கருத்துக்களில் ஏதாவதொரு அம்சத்தைப் பொது மக்களுக்கு விளக்கி நாங்கள் வெவ்வேறு சமயங்களில் வெளியிட்ட புத்தகங்களில், நானும் எங்கெல்சும் கூட்டாக எழுதிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை (*Manifesto of the Communist Party*),** நான் வெளியிட்ட வர்த்தக சுதந்திரம் பற்றிய சொற்பொழிவு (*Discours sur le libre échange*) ஆகியவற்றை மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய கருத்துக்களின் முக்கியமான அம்சங்கள் கோட்பாட்டளவிலானாலும் வாதம் புரிவதற்காக எழுதப்பட்ட மெய்யறிவின் வறுமை (*The Poverty of Philosophy*) என்ற புத்தகத்தில் முதல் தடவையாகச் சொல்லப்பட்டன. புரூதோனுக்கு மறுப்பாக எழுதப்பட்ட இந்த நூல் 1847ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. நான் ஜெர்மன் மொழியில் எழுதிய கூலியுழைப்பு (*Wage-Labour*) என்ற புத்தகத்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், ஜெர்மன் சித்தாந்தம்.—ப-ர்.

** இப்பதிப்பின் தொகுதி 1, பக்கங்கள் 170—249 பார்க்க.—ப-ர்.

தில்* பிரஸ்ஸல்சிலுள்ள ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தில்[80] இதே பொருளில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பயன்படுத்திக் கொண்டேன். பிப்ரவரி புரட்சியினாலும் அதன் காரணமாக பெல்ஜியத்திலிருந்து என்னை பலாத்காரமாக வெளியேற்றி விட்டதனாலும் அதைப் பிரசுரமாக வெளியிடுவது தடைப்பட்டது.

1848, 1849ம் வருடங்களில் *Neue Rheinische Zeitung* இதழை[81] வெளியிடும் பணிகளும், அதன் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் என்னுடைய பொருளாதார ஆராய்ச்சிகளை நிறுத்தி விட்டன. 1850ம் வருடத்தில் லண்டன் நகரத்தில் தான் என்னுடைய ஆராய்ச்சிகளை மறுபடியும் தொடர்ந்து செய்ய முடிந்தது. பிரிட்டிஷ் மியூசியத்தில் அரசியல் பொருளாதார வரலாறு பற்றிச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான விவரத் தொகுப்புகளும், முதலாளித்துவ சமூகத்தை ஆராய்வதற்கு லண்டன் ஒரு வசதியான மையம் என்பதனாலும், கடைசியாக கலிபோர்னியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக இந்தச் சமூகம் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தை எட்டி விட்டது போலத் தோன்றியதும் என்னை மறுபடியும் ஆரம்பத்திலிருந்து தொடங்குமாறும், புதிதாகக் கிடைத்திருக்கும் விவரங்களைக் கவனத்தோடு ஆராயுமாறும் தூண்டியது. இந்த ஆராய்ச்சிகள் வெளித்தோற்றத்தில் சற்று அப்பாற்பட்ட விஷயங்களுக்கும் என்னைத் தாமாகவே இழுத்துச் சென்றபடியால் நான் அதற்கும் ஓரளவு நேரம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் குறிப்பாக, என்னுடைய வாழ்க்கைக்கு நான் சம்பாதித்துத் தர வேண்டிய அத்தியாவசியமான நிலை இந்த ஆராய்ச்சிக்குச் செலவிடக் கூடிய நேரத்தைக் குறைத்தது. *New-York Daily Tribune* என்ற பிரபலமான ஆங்கிலோ-அமெரிக்கப் பத்திரிகையில்[82] நான் கடந்த எட்டு வருடங்களாக எழுதி வருகிறேன். ஆனால் செய்திக் கடிதம் என்ற அடிப்படையில் மட்டுமே

---

* இப்பதிப்பின் தொகுதி 2, பக்கங்கள் 7—71 பார்க்க. —ப-ர்.

நான் எழுதியபடியால் என்னுடைய ஆராய்ச்சிகளை மிகவும் அதிகமான அளவுக்குப் பிரித்துக் கொடுக்க நேர்ந்தது. பெரும்பாலான கட்டுரைகளில் பிரிட்டனிலும், ஐரோப்பாக் கண்டத்திலும் நடைபெறும் முக்கியமான பொருளாதார சம்பவங்களைப் பற்றியே எழுத வேண்டியிருந்தது. எனவே நடைமுறையிலிருக்கும் சில்லரை விவரங்களையும் கூட (அறுதியிட்டுச் சொல்வதென்றால் இவை அரசியல் பொருளாதாரத் தத்துவத்தின் உலகத்துக்கு அப்பாற்பட்டவை) நான் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாயிற்று.

அரசியல் பொருளாதாரம் என்ற துறையில் என்னுடைய ஆராய்ச்சிகளின் போக்கின் முக்கிய கூறுகளை எடுத்துக் காட்டுகின்ற இந்தக் கட்டுரையில் என்னுடைய கருத்துக்கள் — அவற்றை எப்படி மதிப்பிட்ட போதிலும் அந்தக் கருத்துக்கும் ஆளும் வர்க்கங்களின் காரணம் நிறைந்த வெறுப்புக்கும் சிறிதும் பொருத்தமில்லாத போதிலும்— கடந்த பல ஆண்டுகளாக நான் செய்து வந்திருக்கிற நேர்மையான ஆராய்ச்சியின் விளைவாகும். நரகத்தின் வாயிலில் பின்வருமாறு எழுதப்பட்டிருப்பதைப் போல, விஞ்ஞானத்தின் வாயிலிலும் இந்தக் கோரிக்கை வற்புறுத்தப்பட வேண்டும்:

இங்கே அவநம்பிக்கைகளை அகற்றி விடுங்கள்;
எல்லாவிதமான கோழைத்தனத்தையும் ஒழித்து விடுங்கள்.*

கார்ல் மார்க்ஸ்

லண்டன், 1859, ஜனவரி

Zur Kritik der politischen Oekonomie von Karl Marx, Erstes Heft, Berlin, *1859* எனும் புத்தகத்தில் முதலில் அச்சிடப்பட்டது

இப்புத்தகத்தின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

* *Dante, Divina Commedia.*—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

கார்ல் மார்க்ஸ், "அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை"

முதல் பகுதி, பிரான்ஸ் டன்க்கெர், பெர்லின், 1859[83]

I

விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் மற்ற நாகரிக மடைந்த நாடுகளோடு ஜெர்மானியர்கள் சமமான தகுதி கொண்டிருப்பதையும், பெரும்பாலான துறைகளில் அந்த நாடுகளைக் காட்டிலும் மேன்மை அடைந்திருப்பதையும் அவர்கள் வெகு காலத்துக்கு முன்பே எடுத்துக் காட்டி விட்டனர். விஞ்ஞானத்தின் ஒரே ஒரு துறையில்—அரசியல் பொருளாதாரத்தில் மட்டும்—அதன் தலைசிறந்த அறிஞர் களிடையே ஒரு ஜெர்மானியர் இல்லாதிருந்தார். அதன் காரணம் வெளிப்படையாகத் தெரிந்ததே. அரசியல் பொருளாதாரம் என்பது நவீன முதலாளித்துவ சமூகத்தைப் பற்றிய தத்துவரீதியான ஆராய்ச்சியாகும்; எனவே அது வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ உறவுகளே முன்னுகிக்கிறது; ஜெர்மனியில் மதச் சீர்திருத்த இயக்கத்தை[84] ஒட்டி ஏற்பட்ட யுத்தங்கள், விவசாயிகள் யுத்தம் குறிப்பாக முப்பது வருட யுத்தம்[85] ஆகியனவற்றுல் பல நூற்றுண்டுக்

காலமாக இந்த உறவுகள் தம்மை நிறுவிக் கொள்ள முடியவில்லை. பேரரசிலிருந்து ஹாலந்து பிரிக்கப்பட்டது[86] சர்வதேச வர்த்தகப் பாதைகளிலிருந்து ஜெர்மனியை அகற்றிவிட்டதோடு அதன் தொழில் துறை வளர்ச்சியை ஆரம்பத்திலிருந்தே மிகவும் குறைந்த அளவில் வைத்திருந்தது. உள்நாட்டு யுத்தங்களினுல் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து ஜெர்மானியர்கள் மெதுவாகவும் வேதனையோடும் தங்களைப் புனரமைத்துக் கொண்டிருந்த பொழுது, ஜெர்மனியில் ஒவ்வொரு அற்பமான அரசரும், அரசதோரணையுள்ள பிரபுவும் தங்கள் குடிமக்கள் செய்து வந்த தொழில்களின் மீது சுமத்திய பொருளற்ற வர்த்தக ஒழுங்கு விதிகளையும் சுங்கத் தடைகளையும் எதிர்த்து வீணுகப் போராடுவதில் ஜெர்மானியர்கள் தங்களுடைய சமூக வேகத்தை (அது எப் பொழுதுமே அதிகமாக இருக்கவில்லை) செலவிட்டுத் தீர்த்துக் கொண்டிருந்த பொழுது, முக்கியமான நகரங்கள் அவற்றின் கைத்தொழிற் குழுச் செய்முறைகளோடும் பிரபுத்துவ மேல் வர்க்க உணர்ச்சியோடும் சீரழிந்து கொண்டிருந்த பொழுது ஹாலந்தும் இங்கிலாந்தும் பிரான்சும் இதற்கிடையில் சர்வதேச வர்த்தகத்தின் தலைமையான இடங்களைப் பிடித்துவிட்டன. அடுத்தடுத்துக் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தித் தொழில் உற்பத்தியை அதன் உச்ச நிலைக்குக் கொண்டு வந்தன. கடைசியில் இங்கிலாந்தின் நிலக்கரி மற்றும் இரும்புக் கனிப் பொருட் செல்வம் நீராவிச் சக்தியின் உதவியினுல் விலை மதிப்பற்றதாகிவிடவே அந்த நாடு நவீன முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தலைமை தாங்கியது. ஆனல் ஜெர்மனியில் 1830ம் வருடம் வரையிலும் அதன் பொருளாயத சக்திகளின் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாக இருந்த, முற்றிலும் காலம் கடந்த மத்திய கால எச்சங்களுக்கு எதிரான போராட்டம் இன்னும் நடத்தப்பட வேண்டியிருந்த காரணத்தால் அங்கே அரசியல் பொருளாதாரம் தோன்ற முடியவில்லை. சுங்க இணையம் ஏற்பட்ட தனல்[87] மட்டுமே ஜெர்மானியர்கள் அரசியல் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ளவாவது முடிந்தது. ஜெர்மானிய முதலாளி வர்க்கத்தின் நன்மைக்காக ஆங்கில, பிரெஞ்சு

அரசியல் பொருளாதாரத்தின் இறக்குமதி இந்தச் சமயத்தில் ஆரம்பமாயிற்று. அறிவாளிகளும் அதிகார வர்க்கத்தினரும் சிக்கிரத்தில் இந்த இறக்குமதிச் சரக்கைக் கைப்பற்றிக் கொண்டனர்; ''ஜெர்மன் மேதா விலாசத்துக்குச்'' சிறிது கூடப் பெருமையளிக்காத விதத்தில் அவற்றைப் பயன் படுத்தினர். வர்த்தகர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், அதிகார வர்க்கத்தினர் ஆகிய கதம்பக் கூட்டணியின் இலக்கிய முயற்சிகளின் விளைவாக ஒரு கொத்து ஜெர்மன் பொருளாதார நூல்கள் வெளியிடப்பட்டன; அவற்றின் சாதாரணமான, அற்பத்தனமான, விளையாட்டுத்தனமான, வளவளவென்று நீண்டு போகின்ற, காப்பியடிக்கப்பட்ட தன்மைகளுக்கு இணையாக ஜெர்மானிய நாவலே மட்டுமே சொல்ல முடியும். செய்முறை நோக்கங்களைப் பின்பற்றிய வர்கள் மத்தியில் தொழிலதிபர்களின் காப்புவாத மரபு முதலில் தோன்றியது; அவர்களின் முக்கியமான பிரதிநிதியான லிஸ்ட், ஜெர்மன் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் உற்பத்தி செய்த தலைசிறந்த நபராக இன்னும் இருக்கிறார்; ஆனால் அவருடைய பிரபலமான புத்தகம் ''கான்டினென்டல் ஏற்பாட்டைக்''[88] கொள்கை ரீதியில் உருவாக்கிய பிரெஞ்சுக்காரரான ஃபெரியேயின் புத்தகத்திலிருந்து அப்படியே காப்பியடிக்கப்பட்டதாகும். பால்டிக் மாநிலங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் நாற்பதுக்களில் இந்தப் போக்குக்கு எதிராக சுதந்திர வர்த்தக மரபை ஏற்படுத்தினர்கள்; அவர்கள் இங்கிலாந்தில் சுதந்திர வர்த்தகத்தை ஆதரித்தவர்களுடைய[89] வாதங்களைத் தட்டித் தடவித் தடுமாறி, சிறு குழந்தையின் நம்பிக்கையோடு— அதில் லாப நோக்கமும் கலந்திருந்தது—ஒப்பித்தார்கள். கடைசியாக, விஞ்ஞானத்தின் தத்துவ ரீதியான அம்சங்களைக் கையாள வேண்டிய பள்ளி ஆசிரியர்கள், அதிகாரிகள் மத்தியில் ஹெர் ரௌலைவப் போன்று விமர்சனத் திறன் இல்லாத, உலர்ந்த இலைகளைச் சேகரிப்பவர்கள், ஹெர் ஷ்டைனைப் போல அந்நியக் கருதுகோள்களை ஜீரணம் செய்யப்படாத ஹெகலின் மொழியில் மொழிபெயர்த்த, அறிவுடையவர்கள் மாதிரித் தோன்றும் சூதாட்டக்காரர்கள்,

ஹெர் ரீலேப் போல ''நாகரிகத்தின் வரலாறு'' என்று சொல்லப்படுகின்ற துறையில் சலித்தெடுக்கின்ற இலக்கியப் போலிகள் இருக்கிறார்கள். இவை எல்லாவற்றின் விளை வாகவுமே ''காமெரலிஸ்டிக்ஸ்'' [cameralistics][90] தோன்றியது. எல்லாவிதமான சாதாரண அம்சங்களையும் கொண்ட கதம் பமான பொருளாதார அவியல் என்று இதைக் கூறலாம். ஒரு கீழ்நிலை அரசு ஊழியர் தனது கடைசித் தேர்வை எழுதும் நேரத்தில் இந்தப் பாடத்தை நினைவு வைத்துக் கொள்வது ஒருவேளை அவருக்கு உபயோகமாக இருக்கலாம்.

ஜெர்மனியின் முதலாளி வர்க்கமும் பள்ளி ஆசிரியர் களும் அதிகார வர்க்கத்தினரும் ஆங்கில-பிரெஞ்சு அரசியல் பொருளாதாரத்தின் முதற் கூறுகளை (அவர்கள் இவற்றை மறுக்க முடியாத சூத்திரங்களாகக் கருதினர்கள்) உருப் போடவும் ஓரளவுக்குப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் ஜெர்மன் பாட்டாளி வர்க்கக் கட்சி அரங்கத்துக்கு வந்தது. அந்தக் கட்சியின் தத்துவரீதியான அம்சம் அரசியல் பொருளாதார ஆராய்ச் சியையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருந்தது; இந்தக் கட்சி தோன்றியதிலிருந்துதான் தனிப்பட்ட விஞ் ஞானம் என்ற முறையில் ஜெர்மன் அரசியல் பொருளாதாரம் தொடங்குகிறது. வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதம் இந்த ஜெர்மன் அரசியல் பொருளாதாரத்தின் அவசிய மான அடிப்படையாகும்; அதன் முக்கியமான அம்சங்கள் இந்தப் புத்தகத்தின் முன்னுரையில்* சுருக்கமாக எடுத்துக் கூறப்படுகின்றன. இந்த முன்னுரையின் முக்கியமான பகுதி கள் *Das Volk*[91] பத்திரிகையில் முன்பே வெளியிடப்பட் டிருப்பதால் நாம் இங்கே அதை மேற்கோள் காட்டுகிறோம். ''பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது'', எல்லாவிதமான சமூக, அரசியல் உறவு களும், மத, சட்ட அமைப்புக்களும், வரலாற்றுப் போக்கில்

---

* இத்தொகுதியின் பக்கங்கள் 204—212 பார்க்க. —ப-ர்.

உருவாகின்ற அனைத்துத் தத்துவக் கருதுகோள்களும் அந்தக் குறிப்பிட்ட சகாப்தத்தில் நிலவிய வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளைப் புரிந்து கொண்டால் மட்டுமே, பின்னேக்கிச் சென்று இந்த பொருளாயத நிலைமைகளின் தடத்தை முன்னவற்றில் தேடிக் கண்டுபிடித்தால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட முடியும் என்பது அரசியல் பொருளாதாரத்துக்கு மட்டுமல்லாமல், வரலாற்று விஞ்ஞானங்களுக்கும் கூட (இயற்கை விஞ்ஞானங்களில் சேராத மற்ற துறைகள் அனைத்துமே வரலாற்று விஞ்ஞானங்களே) ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்பாகும். ''மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது.'' இந்தக் கருதுகோள் மிக எளிமையாக இருப்பதால், கருத்துமுதல்வாத மோசடியில் சிக்கிவிடாத எவரும் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அது தத்துவத் துறையில் மட்டுமல்லாது செய்முறைத் துறையிலும் கூட மிக அதிகப் புரட்சிகரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறது. ''வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறிவிடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையும் சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன.... முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம்—முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்

றும் முரணியலே; ஆனால் முதலாளித்துவச் சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணியலைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன.''* இந்தப் பொருள்முதல்வாத ஆய்வுரையை நாம் மேலும் தொடர்ந்து அதை நிகழ்காலத்துக்குப் பயன்படுத்திய உடனே பிரம்மாண்டமான புரட்சி, இதற்கு முன்பு எப்போதும் நடைபெற்றிராத மிக பிரம்மாண்டமான புரட்சிக்குரிய வாய்ப்புவளம் தோன்றி விடுகிறது.

மனிதர்களின் உணர்வு அவர்களின் வாழ்க்கையினுல் நிர்ணயிக்கப்படுகிறது (இதற்கு எதிர்முறையில் அல்ல) என்பது சாதாரணமாகத் தோற்றமளிக்கும் கருதுகோள். ஆனால் இதன் முதல் விளைவுகள் கருத்துமுதல்வாதத்தின் எல்லா வடிவங்களையும்—மறைவாக இருக்கின்ற வடிவங்களையும் கூட—ஒதுக்குகின்றன; வரலாற்று விவகாரங்களில் மரபுவழியான, வழக்கத்தை ஒட்டிய எல்லாக் கருத்துக்களையும் நிராகரிக்கின்றன என்பது நுணுக்கமாக ஆராய்கின்ற பொழுது உடனே தெளிவாகிறது. மரபுவழிப்பட்ட அரசியல் வாதங்களின் மொத்த முறையுமே அங்கே கவிழ்ந்து போகிறது. இத்தகைய கொள்கையற்ற பொருள்விளக்கத்தை தேசபக்தப் பெருந்தன்மை ஆத்திரத்தோடு எதிர்க்கிறது. எனவே இந்தப் புதிய கருத்தோட்டம் முதலாளிவர்க்கத்தை ஆதரித்தவர்களுக்கு மட்டுமல்லாமல், liberté, égalité, fraternité (சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்) என்ற சொற்களின் மந்திரசக்தியின் மூலமாக உலகத்தைப் புரட்சிகரமாக்க விரும்பிய பிரெஞ்சு சோஷலிஸ்டுகளில் பெரும்பான்மையினருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது தவிர்க்க முடியாததே. ஆனால் ஓயாது பேசிக் கொண்டிருக்கும் ஜெர்மன் கொச்சையான ஜனநாயகவாதிகளிடம் கூட அது தீவிரமான கோபத்தை ஏற்படுத்தியது. எனினும் இந்தப் புதிய கருத்துக்களை அவர்கள் சிறிது கூடப் புரிந்து கொள்ளா விட்டாலும் கூட, தங்களுடைய சொந்த

* இத்தொகுதியின் பக்கங்கள் 207—209 பார்க்க. —ப-ர்.

நலனுக்காக இவற்றைக் காப்பியடிக்கும் முயற்சியில் தனியான ஆர்வம் காட்டுகிறார்கள்.

பொருள்முதல்வாதக் கருதுகோளை ஒரு தனி வரலாற்று உதாரணத்திற்காவது விளக்கிக் காட்டுவதென்பது பல வருடங்கள் அமைதியாக ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விஞ்ஞானக் கடமையாகும். ஏனென்றால் இந்த விஷயத்தில் வீண் பேச்சைக் கொண்டு எதையும் சாதிக்க முடியாது என்பது வெளிப்படை; விமர்சன ரீதியாக ஆராயப்பட்ட ஏராளமான வரலாற்று விவரங்கள்—அவற்றில் முழுமையான தேர்ச்சியும் அடைந்திருக்க வேண்டும் — மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். பிப்ரவரி புரட்சியின் விளைவாக எங்கள் கட்சி அரசியல் அரங்கத்தை நோக்கி உந்தித் தள்ளப்பட்டபடியால் முற்றிலும் விஞ்ஞான ரீதியான கடமைகளில் தொடர்ந்து ஈடுபட முடியாது போய் விட்டது. எனினும் எங்கள் கட்சியின் இலக்கிய வெளியீடுகளில் இந்த அடிப்படையான கருதுகோள் ஒரு நூலிழை போல நெடுகிலும் இருப்பதைக் காண முடியும். ஒவ்வொரு குறிப்பிட்ட உதாரணத்திலும் பொருளாயதக் காரணங்கள் தான் நடவடிக்கைகளைத் தவறுமல் தொடங்கி வைத்திருக்கின்றன—அவற்றைத் தொடர்ந்து வரும் சொற்றொடர்கள் அல்ல என்பதை அவை ஒவ்வொன்றும் எடுத்துக் காட்டும். இதற்கு மாறுக, அரசியல் நடவடிக்கைகளையும் அவற்றின் விளைவுகளையும் போல அரசியல் மற்றும் சட்டரீதியான சொற்றொடர்கள் பொருளாயதக் காரணங்களில்தான் ஆரம்பமாகின்றன.

1848-49ம் வருடப் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, வெளி நாட்டிலிருந்து ஜெர்மனியின் மீது எத்தகைய தாக்குதலையும் ஏற்படுத்துவது இயலாததாகிவிட்ட நேரத்தில், வெளிநாட்டிலிருந்து கொண்டு கூச்சல் போடுவதை (அன்றைக்கு அது ஒன்று மட்டுமே சாத்தியமாக இருந்தது) எங்கள் கட்சி கொச்சையான ஜனநாயகவாதிகளிடம் விட்டு விட்டது. அவர்கள் இந்த வேலையைத் தாங்கள் திருப்தியடைகின்ற வரை உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தனர்; இன்று சச்சரவு செய்வதும் நாளைக்குச் சேர்ந்து கொள்வதும்

அதற்கு மறுநாள் தங்களுடைய அழுக்கு மூட்டையைப் பொதுமக்களுக்கு முன்னால் மறுபடியும் அம்பலப்படுத்திக் கொள்வதுமாக இருந்தனர்; அமெரிக்கா முழுவதிலும் பிச்சை எடுத்துக் கொண்டு போனார்கள்; அதற்குப் பிறகு தாங்கள் சேகரித்த குறைவான காசுகளை எப்படிப் பிரித்துக் கொள்வ தென்று மறுபடியும் உடனடியாகச் சண்டை போட்டுக் கொண்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தேவையான அமைதியான நேரம் மறு படியும் கிடைத்ததைப் பற்றி எங்கள் கட்சி மகிழ்ச்சி யடைந்தது. ஒரு புதிய விஞ்ஞானக் கருதுகோள் அதன் தத்துவ அடிப்படையாக இருந்தது அதற்குக் கிடைத்த மாபெரும் சாதகமாகும். அதை விரித்துரைப்பதே அதற்குப் போதுமான வேலையாக இருந்தது. இந்த ஒரு காரணத் துக்காக மட்டுமே நாட்டிலிருந்து வெளியேறிய ''மாபெரும் மனிதர்களைப்'' போல அது ஒரு போதும் சோர்வடைய வில்லை.

இங்கே நாம் விமர்சிக்கின்ற புத்தகம் இந்த ஆராய்ச்சி களின் ஆரம்ப விளைவாகும்.

II

இங்கே விமர்சனம் செய்யப்படுகின்ற புத்தகத்தைப் போன்றதொரு நூலின் நோக்கம் அரசியல் பொருளாதாரத் தின் தனித்தனிப் பகுதிகளைப் பற்றி தொடர்பில்லாத வகையில் விமர்சனம் செய்வது அல்லது ஏதாவதொரு பொருளாதாரப் பிரச்சினையைத் தனிமைப்படுத்தி விவாதிப் பதாக மட்டுமே இருக்க முடியாது. அதற்கு மாறாக, அரசியல் பொருளாதாரம் என்ற மொத்த பல்கூட்டுத் தொகுதியையும் முறைப்படியாகத் திரும்ப எடுத்துக் கூறு வதையும் முதலாளித்துவ உற்பத்தியையும் முதலாளித் துவப் பரிவர்த்தனையையும் செயல்படுத்துகின்ற விதிகளைப் புரியக்கூடிய வகையில் விரித்துரைப்பதையும் அது ஆரம்பத் திலிருந்தே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இத்தகைய விரித்துரைத்தல் என்பது அதே சமயத்தில் பொருளா

தார இலக்கியத்தைப் பற்றி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய விமரிசனமாகவும் இருக்கிறது; ஏனென்றால் பொருளியலாளர்கள் என்பவர்கள் இந்த விதிகளை விளக்கிக் கூறுபவர்களாகவும் இவற்றுக்குப் பரிந்து பேசுபவர்களாகவுமே இருக்கிறார்கள்.

ஹெகலின் மரணத்துக்குப் பிறகு விஞ்ஞானத்தின் எந்தத் துறையிலும் அதன் பிரத்யேகமான உள் இசைவை எடுத்துக் காட்டுகின்ற வகையில் எந்த முயற்சியும் செய்யப் படவில்லை. அதிகார பூர்வமான ஹெகலிய மரபு தம் ஆசானின் இயக்கவியலின் மிகச் சாதாரணமான உபாயங்களை மட்டும் தன் வயப்படுத்திக் கொண்டது; அவற்றை எல்லாவற்றுக்கும் எதற்கு வேண்டுமென்றாலும் கையாண்டது; மேலும் பிறர் நகைக்கக் கூடிய திறமைக்குறைவோடு அடிக்கடி கையாண்டது. அவர்களைப் பொறுத்தவரை ஹெகலின் மொத்த பாரம்பரியமுமே வெறும் அச்சு மட்டும் தான்; அதைக் கொண்டு எந்தப் பாடத்தையும் முறைப்படுத்தி விட முடியும். மேலும் அது சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்ட ஒரு தொகுப்பு. அவர்கள் எப்பொழுது கருத்து வறட்சியாலும் ஸ்தூலமான அறிவு இல்லாமலும் சிரமப்படுகிறார்களோ அப்பொழுது அவர்களுடைய உதவிக்கு ஓடிவருவது மட்டுமே அதற்கு எஞ்சியிருக்கின்ற ஒரே கடமை. ஆகவே போன் [Bonn] நகரத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் சொன்னதைப் போல இந்த ஹெகலியவாதிகளுக்கு ''ஒன்றும்'' தெரியாது; ஆனால் அவர்களுக்கு ''எல்லாவற்றையும்'' பற்றி எழுதத் தெரியும். இதன் விளைவுகளும் இதற்குத் தகுந்தாற் போலவே இருந்தன. எனினும் இந்த கனவான்கள் எவ்வளவுதான் அகந்தை உடையவர்களாக இருந்தாலும்கூட முக்கியமான பிரச்சினைகளை முடிந்த வரை தவிர்க்கும் அளவுக்குத் தங்களுடைய குறைகளைப் போதுமான அளவுக்கு உணர்ந்திருந்தார்கள். புதைபடிவங்களைப் போல இறுகிப் போன வகையைச் சேர்ந்த அறிவு அதன் மேன்மையான விவர அறிவினால் இன்னும் களத்திலே நின்று கொண்டிருந்தது. ஃபாயர்பாஹ் தொலை ஹெக முறையைக் கைவிட்ட பிறகு ஹெகலியவாதம் படிப்படி

யாக மறைந்து போய் விட்டது; இறுகிய வகைகளைக் கொண்ட காலங்கடந்து போன இயக்க மறுப்பியல் மறு படியும் விஞ்ஞானத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது போலத் தோன்றியது.

இதற்கு முற்றிலும் இயற்கையான காரணங்கள் இருந்தன. ஹெகலிய டயடோஹீகள் (Diadochi)[92] ஆட்சி வீணை சொற்றொடர்களில் முடிவடைந்ததும் அதன் பிறகு இயற்கையாகத் தொடர்ந்த காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் ஸ்தூலமான அம்சம் அதன் சம்பிரதாயமான வடிவியலான அம்சத்தின் மீது மறுபடியும் மேலாதிக்கம் செலுத்தியது. மேலும், 1848ம் வருடத்துக்குப் பிறகு ஜெர்மனியில் ஏற்பட்ட மகத்தான முதலாளித்துவ வளர்ச்சிக்கு ஏற்ப, அந்த நாடு இயற்கை விஞ்ஞானங்களில் அசாதாரணமான சுறு சுறுப்போடு ஈடுபட்டது. இந்த விஞ்ஞானங்களில் தொலை ஊகப் போக்கு எத்தகைய உண்மையான முக்கியத்துவத் தையும் ஒருபோதும் பெற்றதில்லை; எனவே இந்த விஞ் ஞானங்கள் உயர்வாக மதிக்கப்பட்ட பொழுது, பழைய இயக்க மறுப்பியல் சிந்தனை முறை—வோல்ஃபின் மிகச் சாதாரணமான சிந்தனை உட்பட—வேகமாக செல்வாக்குப் பெற்றது. ஹெகல் மறக்கப்பட்டார்; இயற்கை விஞ்ஞானங் களில் ஒரு புதிய பொருள்முதல்வாதம் தோன்றியது; பதி னெட்டாம் நூற்றாண்டிலிருந்த பொருள்முதல்வாதத்தோடு அது கொள்கையளவில் மிகவும் குறைவான அளவுக்கே வேறுபட்டிருந்தது; இயற்கை விஞ்ஞானங்களில்—குறிப்பாக இரசாயனத்திலும் உடற்கூறு இயலிலும் — அதிகமான விவரங்களைச் சேகரித்தது மட்டுமே அதற்கு முக்கியமான சாதகமாக இருந்தது. கான்ட்டுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்த குறுகிய மனோபாவச் சிந்தனை முறை—அதன் மிகப் பொதுப்படையான சிறப்பற்ற வடிவத்தில்—புஹ்னர், ஃபோக்ட் ஆகியோரிடம் புனருற்பத்தி செய்யப்பட்டது. ஃபாயர்பாஹின் பெயரால் சத்தியம் செய்கின்ற மொலி ஷோட் கூட நமக்கு அதிகமான வேடிக்கையைத் தரும் வகையில் மிகச் சாதாரணமான இனங்களினூடே அடிக்கடி தடுமாறுகிறார். சாதாரண முதலாளித்துவ அறிவின் தளர்ந்து

போன வண்டிக் குதிரை, பொருளை அதன் தோற்றத்திலிருந்தும் காரணத்தை அதன் விளைவிலிருந்தும் பிரித்துக் காட்டுகின்ற பள்ளத்துக்கு முன்னால் குழப்பமடைந்து தடுமாறுகிறது; ஆனால் சூக்குமமான வாதம் என்ற மிகக் கரடுமுரடான நிலத்தின் மீது வேகமாகப் போக விரும்புபவர்கள் வண்டிக் குதிரைகளின் மீது சவாரி செய்யக் கூடாது.

இந்தக் கட்டத்தில், அரசியல் பொருளாதாரம் என்ற வகையில் அதனோடு தொடர்பில்லாத ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருந்தது. எந்த விஞ்ஞான முறையைப் பயன்படுத்துவது? ஒரு பக்கத்தில் ஹெகலின் இயக்கவியல்—ஹெகல் விட்டுச் சென்ற முற்றிலும் சூக்குமமான, ''தொலை ஊக'' வடிவத்தில்—இருந்தது; மறு பக்கத்தில் சாதாரணமான—பிரதானமாக வோல்ஃபின்—இயக்க மறுப்பியல் முறை இருந்தது. அது மறுபடியும் இப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்ததோடு முதலாளித்துவப் பொருளியலாளர்கள் தங்களுடைய கனமான, சுற்றி வளைத்துச் செல்கின்ற புத்தகங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது முறையைக் காண்ட்டும் குறிப்பாக ஹெகலும் தத்துவரீதியில் அழித்துவிட்டனர்; ஆனால் சோம்பலும், அதற்கு பதிலாக உபயோகிப்பதற்கு ஒரு எளிமையான முறை இல்லாததுமே நடைமுறையில் அது இன்னும் கையாளப்படுவதைச் சாத்தியமாக்கியது. மறு பக்கத்தில் ஹெகலின் முறையியல் — அது இருக்கும் வடிவத்தில் — முற்றிலும் பயன்படுத்த முடியாததாகும். அது அடிப்படையில் கருத்து முதல்வாதத் தன்மை கொண்டிருந்தது; இதற்கு முன்பிருந்த எந்த உலகப் பார்வையையும் காட்டிலும் அதிகமான பொருள்முதல்வாதத் தன்மை கொண்ட பார்வையை விரித்துரைப்பதே இங்கு முக்கியமான விஷயமாக இருந்தது. ஹெகலின் முறையியல் கலப்பற்ற சிந்தனையைத் தன்னுடைய திருப்பு முனையாக எடுத்துக்கொண்டது. ஆனால் இங்கே வளையாத விவரங்கள் ஆரம்ப நிலையாக இருப்பது அவசியமாயிற்று. ''சூனியத்திலிருந்து சூனியத்தின் வழியாக சூனியத்தை நோக்கிச் செல்வதாக''[93] அதனுடைய வார்த்தைகளிலேயே ஒத்துக்கொள்கின்ற முறையியல் இந்த

வடிவத்தில் இங்கே ஒரு போதும் ஏற்றதல்ல. எனினும் கிடைத்திருக்கின்ற மொத்த தர்க்கரீதியான விவரங்களிலும் குறைந்த பட்சம் தொடக்க நிலையாகப் பயன்படக் கூடிய கூறுக அது ஒன்று மட்டுமே இருந்தது. அது விமர்சனத்துக்கு உட்படுத்தப்படவில்லை; அது தூக்கியெறியப்படவில்லை; அந்த மாபெரும் இயக்கவியல் மேதையின் எதிரிகளில் ஒருவராலும் அந்தப் பெருமைக்குரிய கட்டிடத்தில் ஒரு பிளவைக் கூட ஏற்படுத்த முடியவில்லை. ஹெகலிய மரபினருக்கு அதை எப்படிக் கையாளுவதென்று தெரியாததால் அது மறக்கப்பட்டது. எனவே முதலில் ஹெகலின் முறையியலைச் சரிவர விமர்சிப்பது அவசியமாயிற்று.

ஹெகலின் வாத முறை அதன் அசாதாரணமான வரலாற்று உணர்வினால் மற்ற எல்லாத் தத்துவஞானிகளிடமிருந்தும் தனித்து விளங்குகிறது. அவர் உபயோகித்த வடிவம் எவ்வளவு சூக்குமமானதாகவும் கருத்துமுதல் வாதத் தன்மை கொண்டதாகவும் இருந்த போதிலும் அவருடைய கருத்துக்களின் பரிணமம் உலக வரலாற்றின் பரிணமத்துக்கு எப்போதும் இணையாகவே போய்க் கொண்டிருந்தது; அதிலும் பின்னால் சொல்லப்பட்டது முன்னதின் ஒரே நிரூபணமாகவும் கருதப்பட்டது. இது நடைமுறையில் உள்ள உறவைத் தலை கீழாக மாற்றி பூமியில் தலையை வைத்துக் கொண்டு நிற்குமாறு செய்தபோதிலும் அதன் உண்மையான உள்ளடக்கம் அவருடைய தத்துவஞானத்தில் தவறுமல் சேர்க்கப்பட்டிருந்தது. அதிலும் ஹெகல்—தன்னைப் பின்பற்றியவர்களைப் போலன்றி—அறியாமையை ஆதாரமாகக் கொள்ளவில்லை; அவர் எக்காலத்துக்கும் அறிவாழமிக்க சிந்தனையாளர்களில் ஒருவர். வரலாற்றில் ஒரு பரிணமம், ஒரு உள்ளார்ந்த இசைவுப் பொருத்தம் இருப்பதை எடுத்துக் காட்டுவதற்கு முதலில் முயற்சித்தவர் அவர்தான்; வரலாற்றைப் பற்றிய அவருடைய தத்துவஞானத்தில் சில அம்சங்கள் இன்று நமக்கு எவ்வளவு விசித்திரமாகத் தோன்றிய போதிலும், அவருக்கு முந்தியவர்களோடும், பொதுவான வரலாற்றுக் கருத்துக்களை எடுத்துக்கூறிய அவருக்குப் பிந்தியவர்களோடும் ஒப்பிடும்

பொழுது அந்த அடிப்படையான கருதுகோள்களின் மாட்சி இன்று கூட இன்னும் போற்றப்படக் கூடியதாக இருக்கிறது. அவர் எழுதிய *Phänomenologie, Ästhetik, Geschichte der Philosophie* நூல்களில் வரலாறு பற்றிய இந்தச் சிறப்பு மிக்க கருதுகோள் நிறைந்திருக்கிறது. இந்தப் பொருள் எல்லா இடங்களிலும் வரலாற்று ரீதியாக, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில்—சூக்குமமான, உருச் சிதைவான முறையில் என்றபோதிலும்—எடுத்துக் காட்டப் படுகிறது.

வரலாறு பற்றிய சகாப்த முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கருதுகோள் புதிய பொருள்முதல்வாத அணுகுமுறையின் நேரடியான தத்துவரீதியான முன்நிபந்தனையாக இருந்தது; இது தர்க்க ரீதியான முறையின் ஆரம்ப நிலையாக உருவாகிவிட்டது. ''கலப்பற்ற சிந்தனை'' என்ற கருத்து நிலையிலிருந்தும் கூட இந்த மறந்து போன இயக்கவியல் இத்தகைய விளைவுகளுக்கு வழி வகுத்திருப்பதால், மேலும் முந்திய தர்க்கவியல், இயக்க மறுப்பியல் ஆகிய மொத்தத்தையும் மிகச் சுலபமாக சமாளித்திருப்பதனாலும், என்னவானாலும் இது சொற்புரட்டையும் நுண்மையான வேறுபாட்டைக் கண்டுபிடிப்பதையும் காட்டிலும் உயர்வானதாகவே இருக்க வேண்டும். ஆனால் அதிகாரபூர்வமான தத்துவஞானம் முழுமையுமே இந்த முறையை விமர்சிப்பதிலிருந்து தப்பிச் சென்றுவிட்டது; இன்னும் அப்படியே தப்பிவருகிறது. அத்தகைய விமர்சனமும் அவ்வளவு சாதாரணமான விஷயமல்ல.

ஹெகலின் தர்க்கவியலிலிருந்து இந்தத் துறையில் ஹெகலின் உண்மையான கண்டுபிடிப்புகளைக் கொண்ட கருவைப் பிரித்தெடுப்பதற்கும் இயக்கவியல் முறையின் மீதுள்ள கருத்துமுதல்வாதப் போர்வைகளை நீக்கி அதன் எளிய வடிவமே கருத்தின் பரிணமத்துக்கு ஒரே சரியான முறை என்பதை நிறுவுவதற்கும் மார்க்ஸ் ஒருவர் மட்டுமே இருந்தார்; இன்னும் அவர் ஒருவர்தான் இருக்கிறார். அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய மார்க்சின் விமர்சனத்துக்கு ஆதாரமான இந்த முறையை உருவாக்கியது அடிப்படை

யான பொருள்முதல்வாதக் கருதுகோளுக்கு எந்த விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்ததல்ல என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்த முறையை நிர்ணயித்த பிறகும் கூட அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனம் இரண்டு வழிகளில் — வரலாற்று ரீதியாக அல்லது தர்க்க ரீதியாக— இன்னும் அமைக்கப்படக் கூடும். வரலாற்றுப் போக்கில்— அதன் இலக்கிய பிரதிபலிப்பைப் போலவே—மொத்தமாகப் பார்க்கும் பொழுது பரிணமம் மிக எளிமையான உறவுகளிலிருந்து மிகுச் சிக்கலான உறவுகளுக்கு முன்னேறுகின்ற படியால் அரசியல் பொருளாதார நூல்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சி ஒரு இயற்கையான குறிப்பைக் கொடுத்தது, விமர்சனம் அதைத் திருப்பு முனையாக எடுத்துக் கொள்ளலாம்; அவ்வாறுயின் பொருளாதார இனங்கள் மொத்தத்தில் அவற்றின் தர்க்கரீதியான விளக்கவுரையிலிருக்கும் அதே தொடர்வரிசையில் தோன்றும். இந்த வடிவம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய சாதகத்தைக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது; ஏனென்றால் அது உண்மையான வளர்ச்சியைத் தேடிக் கண்டு பிடிக்கிறது. ஆனால் அது—மிக உயர்நிலையில்—இம்முறையில் மிகவும் விரும்பப்படுவதாக இருக்கும். வரலாறு அடிக்கடி தாவிக்குதித்தும் குறுக்கு நெடுக்காக வளைந்தும் போகிறது. ஆரம்பத்திலிருந்து கடைசிவரையிலும் இதை இப்படியே பின்பற்ற வேண்டுமென்பதால், அதில் குறைவான முக்கியத்துவத்தைக் கொண்ட ஏராளமான விவரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதோடு சிந்தனை ஓட்டமும் அடிக்கடி நிறுத்தப்பட வேண்டியிருக்கும்; மேலும் முதலாளித்துவ சமூகத்தின் வரலாற்றைச் சொல்லாமல் அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றை எழுத முடியாதென்பதால் — அதைப் பற்றி பூர்வாங்க ஆராய்ச்சிகள் இல்லாதிருப்பதால்—இந்தப் பணி மிகப் பெரிய அளவை அடைந்துவிடும். எனவே தர்க்க ரீதியான அணுகுமுறையே இதற்குப் பொருத்தமான ஒரே அணுகுமுறையாகும். ஆனால் இது வரலாற்று முறையைத் தவிர வேறு ஒன்றுமல்ல;

வரலாற்று ரீதியான வடிவமும் கவனத்தைத் திருப்பக் கூடிய தற்செயலான சம்பவங்களும் இங்கே நீக்கப்பட்டுவிடுகின்றன. இந்த வரலாறு தொடங்கும் நிலையே சிந்தனை ஓட்டத்தின் ஆரம்ப நிலையாகவும் இருக்க வேண்டும்; அதன் தொடர்ச்சியான முன்னேற்றம் சூக்குமமான, தத்துவரீதியாக முரணில்லாத வடிவத்தில் வரலாற்று நிகழ்வுப் போக்கின் பிரதிபலிப்பாக மட்டும் இருக்கும். இந்தப் பிரதிபலிப்பு திருத்தப்பட்ட போதிலும் அது உண்மையான வரலாற்றுப் போக்கில் ஏற் பட்ட விதிகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தப் படுகிறது; அதோடு ஒவ்வொரு காரணியையும் நிகழ்வுப் போக்கு தன்னுடைய முழு முதிர்ச்சியை, அதன் மூலச் சிறப்பான வடிவத்தை அடைகின்ற வளர்ச்சிக் கட்டத்தில் ஆராய முடிகின்றது.

வரலாற்று ரீதியான, உண்மையிலேயே இருக்கின்ற முதலாவதும் அதிக எளிமையானதுமான உறவிலிருந்து, ஆகவே இந்தச் சூழ்நிலையில் நமக்குக் கிடைக்கின்ற முதல் பொருளாதார உறவிலிருந்து இந்த முறையை நாம் தொடங்குகின்றோம். இந்த உறவை நாம் ஆராய்கின்றோம். அது ஒரு உறவு என்பதிலிருந்தே ஒன்றோடொன்று உறவு கொண் டிருக்கும் இரண்டு அம்சங்கள் அதிலிருப்பது முன்பே அதிலடங்கியிருக்கிறது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் தனியே ஆராயப்படுகின்றன; அதன் மூலம் அவற்றின் பரஸ்பர நடத்தையின் தன்மையும், எதிரிடை நடவடிக்கை யும் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒரு தீர்வு வேண்டு மென்று வற்புறுத்துகின்ற முரண்பாடுகள் தோன்றும். ஆனல் நம்முடைய மூளையிலே மட்டும் நடைபெறுகின்ற சூக்கும மான சிந்தனைப் போக்கை நாம் ஆராயவில்லை, எப்பொழுதோ ஒரு சமயத்தில் உண்மையாகவே நடைபெற்ற அல்லது இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மெய்யான நிகழ்ச்சியை ஆராய்கின்றோம்; எனவே இந்த முரண்பாடு கள் முன்பே நடைமுறையில் தோன்றியிருக்கும்; ஒரு வேளை அவற்றின் தீர்வும் முடிந்திருக்கும். இந்தத் தீர்வு ஏற்பட்ட முறையைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடும் பொழுது ஒரு

புதிய உறவை ஏற்படுத்துவதன் மூலம் தீர்வு முடிந்திருக் கிறது என்பதைக் காண்போம். அதன் பிறகு அதனுடைய இரண்டு முரண்பாடான அம்சங்களையும் நாம் எடுத்துக் கூற வேண்டும். இது இப்படியே தொடரும்.

அரசியல் பொருளாதாரம் **பண்டம்** என்பதிலிருந்து, தனிநபர்களாலோ அல்லது பூர்விக சமூகக் குழுக்களாலோ பொருட்கள் பரிவர்த்தனை செய்யப்படுகின்ற கணத்திலிருந்து ஆரம்பமாகிறது. பரிவர்த்தனை செய்யப்படுகின்ற பொருள் பண்டமாகும். இரண்டு நபர்கள் அல்லது சமூகக் குழுக் களுக்கு இடையேயுள்ள **உறவினால்**, உற்பத்தியாளருக்கும் நுகர்பவருக்கும் (இந்தக் கட்டத்தில் அவர்கள் ஒரே நபராக இனியும் இருப்பதில்லை) இடையே உள்ள உறவினால் அந்தப் பொருள் பண்டமாகிறது. இங்கே அரசியல் பொருளாதாரம் முழுவதிலும் நிறைந்திருக்கின்ற, முதலாளித் துவப் பொருளியலாளர்களிடம் அதிகமான குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்ற பிரத்யேகமான உண்மைக்கு இது காரணமாகும். அரசியல் பொருளாதாரம் பொருள் களோடு சம்பந்தப்பட்டதல்ல, அது நபர்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு, கடைசி நிலையில் வர்க்கங்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு சம்பந்தப்பட்டது; எனினும் இந்த உறவுகள் எப்போதும் பொருள்களோடு **பிணைக்கப்பட்டிருக்கின்றன; பொருள்களாகவே தோன்றுகின்றன** என்பது அந்த உண்மையாகும். சில பொருளியலாளர்கள் தனித்தனியான எடுத்துக்காட்டுகளில் இதை ஊகித்தார்கள் என்றாலும், அரசியல் பொருளாதாரம் முழுவதுக்குமே இதன் முக்கியத்துவத்தை முதன் முதலாக எடுத்துக் காட்டியவர் மார்க்ஸ். அதன் மூலம் மிகச் சிக்கலான பிரச்சினைகளைக் கூட மிகச் சாதாரணமாகவும் தெளிவாகவும் ஆக்கினார்; இப்பொழுது முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூட அவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு பண்டத்தின் (அதாவது முழுமையான பரிணமத்தை அடைந்த பண்டமே தவிர இரு பூர்விக சமூகக் குழுக் களுக்கிடையே தானாகவே உருவாகும் பண்ட மாற்றில்

அது மெதுவாகத் தோன்றுகின்ற ஆரம்ப நிலையில் அல்ல) பல விதமான அம்சங்களை நாம் ஆராய்ந்தால், அது பயன் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்ற இரண்டு கோணங்களில் நமக்கு முன்னிற்கிறது; ஆகவே நாம் உடனடியாகவே பொருளாதார விவாதம் என்ற துறைக்குள் நுழைந்து விடுகிறோம். ஜெர்மானிய இயக்கவியல் முறை அதன் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் பழைய, மேலெழுந்தவாரியான, வெறுஞ் சொல்லோட்டமுள்ள இயக்க மறுப்பியல் முறையோடு ஒப்பிடும் பொழுது மத்திய காலப் போக்குவரத்துச் சாதனத்தோடு ஒப்பிடுகையில் ரயில்வேயைப் போன்று முன்னது உயர்வானது. இந்த உண்மைக்கு யாரேனும் குறிப்பிட்ட எடுத்துக்காட்டைப் பார்க்க விரும்பினால் அவர் ஆடம் ஸ்மித் அல்லது வேறு அதிகார பூர்வமான புகழ் பெற்ற பொருளியலாளர் எவராவது எழுதிய புத்தகத்தை எடுத்துப் படிக்கட்டும்; பரிவர்த்தனை மதிப்பும் பயன் மதிப்பும் இந்த கனவான்களுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுத்தன; இந்த இரண்டையும் சரியான முறையில் வேறுபடுத்துவதிலும் அவை ஒவ்வொன்றுக்கும் உரித்தான வரையறுக்கப்பட்ட வடிவத்தை எடுத்துரைப்பதிலும் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைப் பார்க்கட்டும். பிறகு மார்க்ஸ் எழுதிய தெளிவான, எளிமையான விளக்கத்தை அவற்றோடு ஒப்பிடட்டும்.

பயன் மதிப்பையும் பரிவர்த்தனை மதிப்பையும் எடுத்துக் கூறிய பிறகு, இந்த இரண்டின் நேரடியான ஒருமை என்ற வகையில் பண்டம்—அது **பரிவர்த்தனை நிகழ்வுப் போக்கில்** நுழைகின்ற பொழுது — வர்ணிக்கப்படுகிறது. இந்தக் கட்டத்தில் தோன்றுகின்ற முரண்பாடுகளை இப்புத்தகத்தின் 20—21ம் பக்கங்களில் காணலாம்.* இந்த முரண்பாடுகளில் ஆர்வங்காட்டுவது தத்துவரீதியான, சூக்குமமான காரணங்களுக்காக மட்டுமல்ல; நேரடியான இடைமாற்றம், அதாவது சாதாரணமான பண்டமாற்றின் தன்மையில் தொடங்குகின்ற நெருக்கடிகளை, பரிவர்த்தனையின்

* கா. மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை.—ப-ர்.

முதல் கரடுமுரடான வடிவமாகிய இதில் தவிர்க்க முடியாத வகையில் எதிரிடுகின்ற பொருத்தமற்ற அம்சங்களை அவை பிரதிபலிக்கின்றன என்பதை மட்டும் நாம் இங்கே குறிப்பிடுகின்றோம். ஒரு தனிப் பண்டத்துக்கு—பணத்துக்கு—மற்ற எல்லாப் பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற தன்மையைக் கொடுப்பதன் மூலம் இந்தப் பொருத்தமற்ற அம்சங்களுக்குத் தீர்வு கிடைக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தில் பணம் அல்லது சாதாரணச் செலாவணி ஆராயப்படுகிறது, அதாவது: 1) பணம் மதிப்பின் அளவுகோல் என்ற முறையிலும், அதே சமயத்தில் பணத்தின் மூலமாக அளக்கப்படுகின்ற மதிப்பு, அதாவது விலை இன்னும் அதிக நுணுக்கமாக வரையறுக்கப்படுகிறது, 2) பணம் செலாவணிச் சாதனம் என்ற முறையிலும், 3) முதலாளித்துவப் பொருளாயதச் செல்வம் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உண்மையான பணம் இந்த இரண்டு அம்சங்களின் ஒருமை என்ற வகையிலும் ஆராயப்படுகிறது. இதோடு முதற் பகுதி முடிவடைகின்றது; பணம் மூலதனமாக மாற்றமடைவது இரண்டாம் பகுதியில் எடுத்துக் கூறப்படும்.

இந்த முறையைப் பின்பற்றும் பொழுது, தர்க்கரீதியான வளர்ச்சி கலப்பற்ற சூக்குமமான துறையோடு மட்டுமே எப்போதும் நின்றுவிடுவதில்லை. இதற்கு மாறாக, வரலாற்று ரீதியான உதாரணங்களும் யதார்த்தத்தோடு தொடர்ச்சியான தொடர்பும் அதற்கு அவசியமாகும். ஆகவே அத்தகைய வெவ்வேறு விதமான ஆதாரங்கள் மிக அதிகமான அளவுக்கு இங்கே கொடுக்கப்படுகின்றன. இவை சமூக வளர்ச்சியின் உண்மையான வரலாற்று ரீதியான நிகழ்வுப் போக்கில் வெவ்வேறு கட்டங்கள், பொருளாதார நூல்கள் ஆகிய இரண்டையும் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நூல்களில் பொருளாதார உறவுகளைப் பற்றிய தெளிவான வரையறுப்புகள் உருவாக்கப்பட்ட விதம் தொடக்கத்திலிருந்து தேடிக் கண்டுபிடிக்கப்படுகிறது. குறிப்பிட்ட, அநேகமாக ஒரு தலைப்பட்சமான அல்லது குழப்பமான பொருள்விளக்கங்களின் விமர்

சனம் தர்க்கரீதியான விளக்கவுரையில் முன்பே விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றபடியால் இவை சுருக்கமாகவே தரப்படுகின்றன.

இந்தப் புத்தகத்தின் பொருளாதார உள்ளடக்கத்தைப் பற்றி மூன்றுவது கட்டுரையில் எழுதுவோம்.[94]

1859 ஆகஸ்ட் 3—15ல்
பி. எங்கெல்சால் எழுதப்பட்டது

Das Volk, இதழ்கள் 14, 16ல்
1859 ஆகஸ்ட் 6, 20ல்
அச்சிடப்பட்டது

பத்திரிகையின்படி
அச்சிடப்பட்டது.
ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

கா. மார்க்ஸ்
யோ. வெய்டமெயருக்கு
எழுதிய கடிதம்

நியூயார்க் நகரத்துக்கு

லண்டன், மார்ச் 5, 1852

...மற்றும் இப்போது என்னைப் பொறுத்த வரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவற்றின் இடையே போராட்டம் நடைபெறுவதையோ கண்டுபிடித்த பெருமை எதுவும் எனக்கு உரியது அல்ல. எனக்கு நீண்டகாலத்துக்கு முன்பே, முதலாளித்துவ வரலாற்று சிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை வருணித்திருக்கிறார்கள், மற்றும் முதலாளித்துவப் பொருளியலாளர்கள் வர்க்கங்களின் பொருளாதார அமைப்பியலை விரித்துரைத்திருந்தார்கள். நான் புதிதாகச் செய்தது என்னவென்றால்: 1) வர்க்கங்களின் இருத்தல் என்பது பொருளுற்பத்தியின் வளர்ச்சியிலான குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் மட்டுமே கட்டுண்டவை என்பதையும், 2) வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதையும் 3) இந்த சர்வாதிகாரம் தான் மட்டுமே சகலவித வர்க்கங்களின் ஒழிப்பு மற்றும் வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கான மாறுதல் கட்டமாக அமைகிறது என்பதையும் நிரூபித்துக் காட்டியதேயாகும்....

ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

கா. மார்க்ஸ்
பி. எங்கெல்சுக்கு
எழுதிய கடிதம்

மான்செஸ்டர் நகரத்துக்கு

லண்டன், ஏப்ரல் 16 [1856]

...நேற்றைக்கு முந்திய நாளன்று *People's Paper* இன் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக ஒரு சிறிய விருந்து நடைபெற்றது. இந்த சந்தர்ப்பத்தில் நான் அழைப்பை ஏற்றுக் கொண்டேன்; ஏனென்றால் அது அவசிய மென்று காலம் வற்புறுத்துவதாகத் தோன்றியது. அதோடு மட்டுமல்லாமல் இங்கேயிருக்கும் எல்லாக் குடியேறியவர் களிலும் என்னை மட்டுமே அழைத்திருந்தார்கள் (*Paper* இல் அப்படி வெளியிடப்பட்டிருந்தது); அனைத்து நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் அரசுரிமைக்கு முதல் வாழ்த்துக் கூறுகின்ற பெருமை எனக்கு அளிக்கப்பட்டிருந் தது. எனவே நான் ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொற் பொழிவாற்றினேன். ஆனால் அதை அச்சிடுவதற்கு நான் உத்தேசிக்கவில்லை.* நான் மனதில் கொண்டிருந்த நோக்கம் நிறைவேறி விட்டது: தலண்டியேயும்—அவர் இரண்டு ஷில்லிங் ஆறு பென்ஸ் செலவிட்டு அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டு வந்தார்—இன்னும் எல்லா பிரெஞ்சு

---

* இத்தொகுதியின் பக்கங்கள் 200—203 பார்க்க. —ப-ர்.

மற்றும் பிற குடிபெயர்ந்த கும்பல்களும் சாசனவாதிகளிடம்[95] ''நெருக்கமாகவுள்ள'' ஒரே கூட்டாளிகள் நாமே என்பதை யும் நாம் அதைப் பகிரங்கமாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும், சாசனவாதத்தோடு பகிரங்கமாக சல்லாபம் செய்வதைப் பிரெஞ்சுக்காரர்களிடம் விட்டுவிட்டாலும், முன்பே வரலாற்று ரீதியில் நமக்கு உரியதாகிவிட்ட இடத்தை எந்த நேரத்திலும் மறுபடியும் பிடிப்பதற்கு நம்மிடம் சக்தி இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டார்கள். இது முன்னைக் காட்டிலும் மிகவும் அவசியமே. ஏனென்றால் பிப்ரவரி 25ந் தேதியன்று பியாவின் தலைமையில் நடை பெற்ற மேலே குறிப்பிடப்பட்ட கூட்டத்தில் அந்த ஜெர்மன் முட்டாள் ஷோர்த்ஸார் (கிழட்டுப் பையன்) எழுந்து உண்மை யாகவே சகிக்க முடியாத கில்டு அமைப்புகளின் குறுகிய மனப்பாங்கு பாணியில் ஜெர்மன் ''அறிவாளிகளை'', ஆபத்தான நிலையில் தங்களை (முட்டாள்களை)க் கைவிட்டுப் போய் அதனால் மற்ற தேசிய இனங்களுக்கு முன்னால் அவ மானமடையுமாறு தங்களை நிர்ப்பந்தித்துவிட்ட ''கருத்து உழைப்பாளிகளைக்'' கண்டனம் செய்திருக்கிறார். இந்த ஷோர்த்ஸாரைப் பாரிஸ் நாட்களிலிருந்தே உங்களுக்குத் தெரியும். நண்பர் ஷாப்பரை நான் மேலும் சில தடவைகள் சந்தித்தேன்; அவர் செய்த பாவத்துக்காக வருந்துவதைக் கண்டேன். கடந்த இரண்டு வருடங்களாக ஒதுங்கி வாழ்ந் தது அவருடைய அறிவாற்றலைக் கூர்மைப்படுத்தியிருப்பது போலத் தோன்றுகிறது. எது எப்படிப் போனாலும் இந்த மனிதரைப் பக்கத்திலே வைத்துக் கொள்வது, அதிலும் வில்லிஹின் கைகளில் சிக்கிவிடாமல் வைத்துக் கொள்வது எப்பொழுதும் நன்மையே என்பதை நீங்கள் புரிந்து கொள் வீர்கள். வின்ட்மில் தெருவில் இருக்கும் முட்டாள்கள்[96] மீது ஷாப்பர் இப்பொழுது கடுங்கோபமடைந்திருக்கிறார்.

ஷ்தேஃபெனுக்கு நீங்கள் எழுதிய கடிதத்தை நான் அடையச் செய்வேன். லே.இன்* கடிதத்தை உங்களிடமே நீங்கள் வைத்திருந்திருக்க வேண்டும். பொதுவாக, எனக்கு

---

* —லேவியின்.—ப-ர்.

அனுப்புமாறு உங்களிடம் சொல்லாத எல்லாக் கடிதங்களையும் அப்படியே வைத்திருக்கவும். அவற்றை எவ்வளவு குறைவாகத் தபாலில் திருப்பி அனுப்புகிறோமோ அவ்வளவு நல்லது. ரைன் பிரதேசத்தைப் பற்றி உங்கள் கருத்தை நான் முழுமையாக ஒத்துக் கொள்கிறேன். நமக்கு ஆபத்தான ஒன்று எதிர்காலத்தில் தோன்றிக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன்—''தந்தையர் நாட்டுக்குத் துரோகம்'' என்று சிறிதளவாவது சொல்லக் கூடும் என்பதே அது. பழைய புரட்சியின் போது மயென்ஸ் கிளப்புவாதிகளுக்கு[97] ஏற்பட்ட அதே நிலை நமக்கு ஏற்படாமலிருப்பது பெர்லினில் நடக்கும் சம்பவங்களைப் பெரிதும் பொருத்திருக்கும். அது கடினமானதே. ரைன் நதியின் மறு கரையில் வசிக்கும் தகுதிமிக்க எங்களது சகோதரர்களைப் பற்றி அதிகமாக அறிந்திருப்பவர்கள் நாம்! ''விவசாயிகள் யுத்தத்தின்'' ஏதாவதொரு வகையான இரண்டாம் பதிப்பின் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஆதரவளிக்கும் சாத்தியத்தின் மீது ஜெர்மனியில் எல்லாமே சார்ந்திருக்கிறது. அது நடந்தால் சம்பவம் பிரமாதமாக இருக்கும்.

ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

கா. மார்க்ஸ்
பி. எங்கெல்சுக்கு
எழுதிய கடிதம்

ரைட் நகரத்துக்கு

[லண்டன்], செப்டெம்பர் 25, 1857

...உங்கள் ''இராணுவம்'' மிக நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் அளவு என்னை வியப்பில் ஆழ்த்தியது; ஏனென்றால் இவ்வளவு அதிகமாகப் பாடுபடுவது உங்களுக்கு அதிகமான துன்பத்தைத் தரும். இப்படி இரவில் நெடுநேரம் விழித்திருந்து பாடுபடப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தால் இந்த விஷயம் முழுவதையுமே நான் தள்ளிப் போட்டிருப்பேன்.

உற்பத்திச் சக்திகளுக்கும் சமூக உறவுகளுக்குமிடையே உள்ள தொடர்பைப் பற்றி நம் கருதுகோளின் சரியான தன்மையை இராணுவத்தைப் பற்றிய வரலாறு வேறு எதைக் காட்டிலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக, இராணுவம் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக இருக்கிறது. உதாரணமாக, பழங்காலத்திலிருந்தவர்கள் முதலில் இராணுவத்தில்தான் கூலி முறையை முழுமையாக வளர்த்திருந்தார்கள். அதைப் போல ரோமானியர்களுடைய peculium castrense* என்பது ஜங்கம

---

* —இராணுவ முகாம் சொத்து(பண்டைக்கால ரோமானியர்களிடம் இராணுவ முகாமில் படை வீரர்களின் தனிச் சொத்தைக் குறிக்கும் சொற்கள்).—ப-ர்.

சொத்துக்களுக்குக் குடும்பத் தலைவர்களைத் தவிர மற்றவர் களுக்கும் உள்ள உரிமை அங்கீகரிக்கப்பட்டதன் முதல் சட்ட பூர்வமான வடிவமாகும். Fabri* என்ற நிறுவன முறையில் கில்டு அமைப்பும் அப்படிப்பட்டதே. இயந்திரங் களை மிகவும் பெரிய அளவில் முதன் முறையாக உபயோகிப் பதும் இங்கேதான். உலோகங்களின் விசேஷ மதிப்பும் பணம் என்ற முறையில் அவை உபயோகிக்கப்படுவதும் ஆரம்பத்தில்—கிரிம்மின் கல்யுகத்தைக் கடந்த உடனே— அவற்றின் இராணுவ முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. ஒரு துறைக்கு உள் ளாகவே வேலைப் பிரிவினையும் முதலில் இராணுவங்களில் தான் நிறைவேற்றப்பட்டது. சிவில் சமூக வடிவங் களின் மொத்த வரலாறுமே இங்கு மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் சுருக்கித் தரப்படுகிறது. எப்பொழுதாவது உங்களுக்கு நேரம் கிடைக்கும் பொழுது இந்தக் கருத் தோட்டத்திலிருந்து நீங்கள் இதை முழுவதுமாக ஆராய வேண்டும்.

உங்களுடைய கட்டுரையில் பின்வரும் அம்சங்கள் மட்டுமே எடுத்துக் கூறப்படவில்லை என்பது என்னுடைய கருத்து: 1) கூலிப் படைகள் — விரிவான அளவிலும் உடனடியாகவும் உபயோகிப்படுவதற்குத் தகுந்த முறை யில் — கார்த்தஜீனியர்கள் மத்தியில் முதன் முறையாகத் தோன்றிய விதம்(கார்த்தஜீனியர்களுடைய இராணுவத்தைப் பற்றி ஒரு பெர்லின்காரர் எழுதிய ஒரு புத்தகத்தை[98] நம்முடைய சொந்த உபயோகத்துக்காக நான் தேடிப் பார்க்க எண்ணியிருக்கிறேன்; நான் அதை சமீபத்தில்தான் தெரிந்து கொண்டேன்). 2) இத்தாலியில் பதினேந்தாம் நூற்றாண்டிலும் பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இராணுவ அமைப்பின் வளர்ச்சி. போர்த்தந்திர நுட்பங் கள் இங்குதான் வளர்ச்சியடைந்தன. கோன்டோட்டியேரி கள்[99] ஒருவரோடொருவர் யுத்தம் செய்ததைப் பற்றி

---

* —பண்டைக்கால ரோமானியர்களிடம் இருந்த இராணுவத்தின் தொழில் குழுக்கள், இராணுவக் கைத் தொழிலாளர்கள்.—ப-ர்.

மக்கியவேலி தன்னுடைய ஃபிளாரென்ஸ் வரலாற்றில் மிகவும் நகைச்சுவையோடு வர்ணித்திருக்கிறார் (அதைப் பிரதியெடுத்து உங்களுக்கு அனுப்புகிறேன்). (இல்லே, உங்களைப் பார்க்க பிரைட்டனுக்கு வரும் பொழுது—எப்பொழுது? —மக்கியவேலியின் புத்தகத்தையே கொண்டு வந்து விடுகிறேன். அவர் எழுதிய ஃபிளாரென்ஸ் வரலாறு ஒரு பேரிலக்கியமாகும்.) கடைசியாக, 3) முதலில் பாரசீகர்களிடமும் பிறகு மிக அதிகமான பல்வேறு வழிகளில் திருத்தியமைக்கப்பட்டு மங்கோலியர்கள், துருக்கியர்கள், இதரர்களிடமும் தோன்றிய ஆசிய இராணுவ அமைப்பு முறை....

ஜெர்மன் மொழியில்
எழுதப்பட்டது

பதிப்பாளர் குறிப்புகள்

[1] லுயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் எனும் கா. மார்க்சின் நூல் 1848—1851ஆம் ஆண்டுகளில் பிரான்சில் நடைபெற்ற புரட்சிகர நிகழ்ச்சியைப் பற்றிய திட்டவட்டமான பகுப்பாய்வின் அடிப்படையில் எழுதப் பட்டது; அது மார்க்சியத்தின் மிக முக்கியப் படைப்பு களில் ஒன்றாகத் திகழ்கிறது. வர்க்கப் போராட்டம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சித் தத்துவம், அரசையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் பற்றிய போதனை ஆகிய வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படைக் கருத்துநிலைகள் அனைத்தும் இப்படைப்பில் மேற்கொண்டு செழுமைப்படுத்தப்பட்டன. முதலாளித் துவ அரசின் பாலான பாட்டாளி வர்க்கத்தின் உறவைப் பற்றி கா. மார்க்ஸ் செய்யும் முடிவு மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்தது. ''எல்லாப் புரட்சிகளுமே இந்த இயந்திரத்தை உடைத்து நொறுக்கி விடுவதற்குப் பதிலாக அதை முழுநிறைவாக்கின'' (பக்கம் 179) என்கிறார் அவர். அரசைப் பற்றிய மார்க்சியப் போதனை யில் இதை முக்கியமான, அடிப்படையான முடிவுகளில் ஒன்று என லெனின் வருணித்தார்.

''லுயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்'' நூலில் நடைபெறவிருக்கும் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளி என்ற வகையில் விவசாயிகளைப் பற்றியப் பிரச்சினை மேற்கொண்டு அலசி ஆராயப் பட்டுள்ளது; சமுதாய வாழ்வில் அரசியல் கட்சிகளின் பாத் திரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; போனபார்ட்டிசத்தின் சாரத்தைப் பற்றிய ஆழ்ந்த கணிப்பு அளிக்கப்பட்டுள் ளது.—7.

[2] வெண்டோம் ஸ்தூபி—நெப்போலியன் காலத்துப் பிரான்சின் வெற்றிகளின் நினைவாகப் பாரிஸ் நகரத்தில் 1806—1810ல் கட்டப்பட்ட ஸ்தூபி. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீரங்கிகளை உருக்கியதன் மூலமாகக் கிடைத்த வெண்கலம் இந்த ஸ்தூபியைக் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது; அதன் உச்சி மீது நெப்போலியனின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது. 1871ஆம் ஆண்டு மே 16ஆம் தேதி பாரிஸ் கம்யூன் தீர்மானத்தின்படி வெண்டோம் ஸ்தூபி தகர்த்தெறியப்பட்டது; ஆனால் 1875ஆம் ஆண்டு பிற்போக்காளர்களால் மீண்டும் அமைக்கப்பட்டது.—9.

[3] சிமோண்டு ட சிஸ்மண்டீ எழுதிய ''அரசியல் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள்'' (தொகுதி I, பாரிஸ், 1837, பக்கம் 35) என்ற புத்தகம் இங்கே குறிப்பிடப்படுகிறது.—10.

[4] பிரான்சில் முடியாட்சியை ஒழித்துக் குடியரசை ஏற்படுத்திய 1848ஆம் வருட பிப்ரவரி மாதப் புரட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது.—11.

1851ஆம் ஆண்டு டிசம்பர் 2ந் தேதி லுயி போனபார்ட்டாலும் அவரது ஆதரவாளர்களாலும் பிரான்சில் நடத்தப்பட்ட எதிர்ப்புரட்சி ஆட்சி மாற்ற தினம். லுயி போனபார்ட் தம்மை பிரான்சின் சக்கரவர்த்தி என்று அறிவித்து தனக்கு மூன்றாம் நெப்போலியன் என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டார்.—11.

[6] மறுமலர்ச்சி (Renaissance)—பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் பதினாறாம் நூற்றாண்டிலும் மேற்கு ஐரோப்பாவிலும் மத்திய ஐரோப்பாவிலும் முதலாளித்துவ உறவுகள் தோன்ற ஆரம்பித்த பொழுது ஏற்பட்ட கலாச்சார, சித்தாந்த வளர்ச்சியில் ஒரு கட்டம். கலை, விஞ்ஞானத் துறைகளில் வேகமான வளர்ச்சியும் மூலச் சிறப்புடைய கிரேக்க, ரோமானியக் கலாச்சாரத்தில் மறுபடியும் அக்கறை ஏற்படுவதும் இந்தக் காலகட்டத்தின் அம்சங்களாகும் (எனவே இப்பெயர் தரப்பட்டுள்ளது).—12.

[7] பிரான்சில் இரண்டாவது குடியரசு 1848 முதல் 1852 முடிய இருந்தது.—13.

8 மலேக்கட்சி (Montagne) (1793—1795)—18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது கோன்வென்ட்டில் தோன்றிய புரட்சிகர-ஜனநாயகக் குழு.

1848—1851ஆம் ஆண்டுகளில் பிரெஞ்சு அரசியல் நிர்ணய சபை, சட்டமன்றம் ஆகிய இரண்டிலும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளான குடியரசுவாதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழு மலேக்கட்சி என்ற பெயரில் இயங்கியது.—14.

9 புரூமேர்—பிரெஞ்சு குடியரசு வருடாந்தர முறையின் ஒரு மாதம். 18வது புரூமேரின் போது (1799 நவம்பர் 9ந் தேதி) நெப்போலியன் போனபார்ட் திடீர்ப் புரட்சி செய்து இராணுவச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டினார். 1851 டிசம்பர் 2ந் தேதியன்று முதல் நெப்போலியனின் மருமகன் லுயீ போனபார்ட் செய்த திடீர்ப் புரட்சியை ''புரூமேர் பதினெட்டின் இரண்டாம் பதிப்பு'' என்று மார்க்ஸ் கிண்டலாகக் குறிப்பிட்டார்.—14.

10 பெட்லம்—இங்கிலாந்திலுள்ள பைத்தியக்காரர்கள் விடுதிக்குப் பெயர்.—18.

11 1848 டிசம்பர் 10ந் தேதி நடைபெற்று எல்லோருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நடைபெற்ற தேர்தலில் லுயீ போனபார்ட் பிரெஞ்சுக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—19.

12 எகிப்தின் சோற்றுப் பானைக்கு ஏங்குவது என்ற சொற்றொடர் ''பைபிள்'' நூலில் கையாளப்பட்டிருப்பது: எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறிச் சென்ற பொழுது பிரயாணத்தின் போது ஏற்பட்ட சிரமங்களையும் பட்டினியையும் பலவீனமான உள்ளம் படைத்தவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; அவர்கள் எகிப்தில் சிறைப்படுத்தப்பட்டிருந்த பொழுது சாப்பிடுவதற்காவது உணவு கிடைத்ததே என்று அந்த நாட்களை நினைத்து ஏங்கினார்கள்.—19.

13 *Hic Rhodus, hic salta!* (இதுதான் ரோடஸ், இங்கே குதி!)—ஏசோப் எழுதிய ஒரு கதையிலுள்ள சொற்றொடர். இதில் ஒரு தற்பெருமைக்காரன், சாட்சியங்களைக் காட்டி, தான் ஒரு சமயத்தில் ரோடசின் மீது

அற்புதமாக பாய்ந்ததாகக் கூறினன். அதற்கு அவனிடம் ''சாட்சியங்கள் எதற்கு, இதுதான் ரோடஸ், இங்கே குதி!'' என்று கூறினர்கள். இதன் பொருள்: முக்கியமானது இங்கேயுள்ளது, நிரூபி பார்க்கலாம்.

இதுதான் ரோஜா, இங்கே நடனமாடு!—இச்சொற்றொடரை ஹெகல் ''உரிமைத் தத்துவத்தின் கோட்பாடுகள்'' என்ற புத்தகத்தின் முன்னுரையில் மேலே தரப்பட்ட மேற்கோளின் பொழிப்புரையாக எழுதியிருக்கிறார் (ஏனென்றால் கிரேக்க மொழியில் ரோடஸ் என்பதற்கு ''ரோஜா'' என்று மற்றொரு பொருள் உண்டு).—21.

14 1848ஆம் ஆண்டின் பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டத்தின்படி புதிய ஜனாதிபதிக்கான தேர்தல்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று நடைபெற வேண்டும். லுயீ போனபார்ட் வகித்து வந்த குடியரசுத் தலைவர் பதவிக் காலம் 1852 மே மாதத்தில் முடிவடையும்.—22.

15 கிலியாஸ்டுகள் (கிரேக்க மொழியில் ''கிலியாஸ்டு'' என்ற சொல் ஆயிரத்தைக் குறிப்பதாகும்)—ஏசு கிறிஸ்து இரண்டாவது தடவை உலகில் அவதரித்துப் புதிய ஊழியை ஏற்படுத்துவார்; ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு எங்கும் நீதியும் சமத்துவமும் சுபிட்சமும் தழைத்தோங்கும் என்ற மத-மாயாவாதப் போதனை உடையவர்களுக்கு இப் பெயர் தரப்பட்டது.—22.

16 *In partibus infidelium* (''சமய நம்பிக்கை இல்லாதவர்களின் நாட்டில்'' என்பது நேர்ப்பொருள்)—கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் வசிக்கும் நாடுகளில் முற்றிலும் பெயரளவிலான பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற கத்தோலிக்க பிஷப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட கூடுதலான பட்டம். நாட்டில் நிலவும் யதார்த்த நிலையைக் கணக்கில் கொள்ளாமல் அயல் நாடுகளில் அமைக்கப்படும் பல்வேறு விதமான குடிபெயர்ந்த அரசாங்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது மார்க்சும் எங்கெல்சும் இந்த வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துகின்றார்கள்.—22.

17 கப்பிட்டோல் என்பது ரோமா புரியிலிருந்த குன்று. இதன் மீது கோட்டையைக் கட்டியிருந்தார்கள். இங்கேதான் ஜூப்பிட்டர், ஜூனே போன்ற கோயில்கள் கட்டப்

பட்டன. கி. மு. 390ல் கால்லிக் படையெடுப்பின் பொழுது காவல் படையினர் தூங்கிக் கொண்டிருந்தபடியால் ஜூனோவின் ஆலயத்திலிருந்து வாத்துக்கள் சத்தம் போட்டு அவர்களை எழுப்பின; அதன் மூலம் ரோம் நகரத்தைக் காப்பாற்றின என்பது தொல்கதையாகும்.—22.

18 சுதந்திரத்துக்காகப் போராடிய அல்ஜீரியர்களுக்கு எதிரான யுத்தங்களில் அடைந்த வெற்றிகளின் காரணமாக பிரெஞ்சு இராணுவ ஜெனரல்கள் அல்லது அதிகாரிகள் ''ஆப்பிரிக்கர்கள்'' அல்லது ''அல்ஜீரியர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள். தேசியச் சட்டமன்றத்தில் ஆப்பிரிக்க ஜெனரல்களான கவெஞாக், லமொரிசியோர், பெடோ குடியரசுவாதிகளின் கோஷ்டிக்குத் தலைமை தாங்கினர்கள்.—23.

19 அரசவம்சவாத எதிர்த்தரப்பு — ஜூலை முடியாட்சியின் போது பிரெஞ்சு பிரதிநிதிகள் சபையில் ஒடிலோன் பரோ தலைமை தாங்கிய குழுவுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் தொழில், வர்த்தக முதலாளிகளின் மிதவாத வட்டாரங்களின் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் பிரதிபலித்தார்கள்; புரட்சி ஏற்படாமல் தடுப்பதற்கும் ஆர்லேயான் மரபுரிமையைப் பாதுகாப்பதற்கும் தேர்தல் முறையில் மிதமான சீர்திருத்தங்கள் செய்வது ஒரு வழி எனக் கூறினர்கள்.—24.

20 ஜூலை முடியாட்சி—லுயி பிலிப் ஆட்சியில் இருந்த காலம் (1830 — 1848); ஜூலை மாதப் புரட்சியின் காரணமாக அதற்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது.—26.

21 1848 மே மாதம் 15ந் தேதியன்று நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தின் போது பாரிஸ் நகரத் தொழிலாளர்களும் கைவினைஞர்களும் அரசியல் நிர்ணயச் சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மன்றத்துக்குள் பலாத்காரமாக நுழைந்து அரசியல் நிர்ணயச் சபையைக் கலைத்து விட்டதாகவும் புரட்சிகரமான அரசாங்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிவித்தார்கள். எனினும் அரசியல் நிர்ணயச் சபையின் பாதுகாப்புக்காக அங்கே விரைந்து வந்த துருப்புக்களும் தேசியக் காவலர் படையும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தார்கள். தொழிலாளர்

களின் தலைவர்களாகிய பிளாங்கி, பார்பே, அல்பேர்ட், மற்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள்.—26.

22 சக்கரவர்த்தி முதலாம் கான்ஸ்டன்டின் 312ல் மக்சென் சியசை வெற்றி கொள்ளும் முன் வானத்தில் சிலுவைச் சின்னம் தோன்றியதைப் பார்த்தாராம்; ''இந்தச் சின்னத்தின் மூலம் உனக்கு வெற்றி கிட்டும்'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது என்று ரோமானிய வரலாற்றுசிரியர் யூசெபியஸ் சீஸரியென்ஸிஸ் கூறுகிறார்.—30.

23 கிரேக்கக் கடவுளான அப்போலோவுக்கு டெல்பியில் அமைந்திருக்கும் ஆலயத்தில் உள்ள பண்டைய கிரேக்கப் பெண் பூசாரி பித்தியா ஒரு விசேஷமான முக்காலியின் மேல் இருந்து ஜோஸ்யம் கூறினாள்.—30.

24 *Le National* (''தேசியப் பத்திரிகை'')—1830 முதல் 1851 வரை பாரிஸ் நகரத்தில் வெளியிடப்பட்டு வந்த பிரெஞ்சு தினசரி; மிதவாத முதலாளித்துவக் குடியரசு வாதிகளின் முக்கியமான பத்திரிகை. தற்காலிக அரசாங்கத்தில் மராஸ்ட், பாஸ்டீட், கார்னி-பஜே ஆகியோர் இந்தப் போக்கின் மிக வெளிப்படையான பிரதிநிதிகளாயிருந்தனர்.

Journal des Débats politiques et littéraires (''அரசியல், இலக்கிய விவாதப் பத்திரிகை'')—1789ல் பாரிசிலிருந்து வெளியிடப்பட்ட பிரெஞ்சு முதலாளித்துவத் தினசரிப் பத்திரிகை. ஜூலை முடியாட்சியின் போது அது அரசாங்கப் பத்திரிகையாக, ஆர்லேயான் மரபை ஆதரிக்கும் முதலாளி வர்க்கத்தினரின் பத்திரிகையாக இருந்தது; 1848ம் வருடப் புரட்சியின் போது, ஒழுங்குமுறைக் கட்சி என்று சொல்லப்பட்ட எதிர்ப்புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தினரின் கருத்துக்களை வெளியிட்டது.—32.

25 பிரான்சில் முதலாவது குடியரசு 1792 முதல் 1804 வரை நிலவியது.—32.

26 **வியென்ன ஒப்பந்தங்கள்**—1815ஆம் ஆண்டு மே—ஜூனில் வியென்னவில் நெப்போலியன் துருப்புக்களில் கலந்து கொண்ட அரசுகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள். வியென்ன காங்கிரசின் (1814—1815) விளைவாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மக்கள்

இனங்களின் சுதந்திரத்தின் நலன்களுக்கு மாறுக சட்ட பூர்வமான முடியாட்சிகளைப் புனர் நாட்டும் நோக்கங் களுக்காக வியென்னை ஒப்பந்தங்கள் ஐரோப்பிய தேசப் படத்தை மீண்டும் மாற்றி அமைத்தன.—32.

27 பிரான்சில் 1830ல் நடைபெற்ற முதலாளித்துவப் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட அரசியலமைப்புச் சட்டச் சாசனம் ஜூலை மாத முடியாட்சியின் அடிப்படைச் சட்ட மாயிற்று. அந்தச் சாசனம் தேசத்தின் சுயவுரிமையை அறிவித்து அரசரின் அதிகாரத்தை ஓரளவுக்குக் கட்டுப் படுத்தியது.—32.

28 கிளிஷி—1826 முதல் 1867 வரை பாரிஸ் நகரத்தில் கடன்காரர்களுக்கென்று இருந்த சிறைச்சாலை.—40.

29 பண்டைக்கால ரோமா புரியில் படைத் தலைவர் அல்லது சக்கரவர்த்தியின் மெய்க்காவலர் படையினருக்குப் பிரிட்டோரியன்கள் என்று பெயர்; இவர்கள் பல தனியான உரிமைகளைக் கொண்டிருந்தனர். இவர்கள் உள்நாட்டுக் கலவரங்களில் அடிக்கடி பங்கெடுத்துக் கொண்டனர்; சில சமயங்களில் தாங்கள் விரும்பியவர்களை அதிகாரத் திலமர்த்துவதும் உண்டு. ''டிசம்பர் 10ந் தேதி சங்கம்'' இங்கே குறிப்பிடப்படுகிறது (இத்தொகுதியின் பக்கங்கள் 104—109 பார்க்க).—44.

30 ரோம் குடியரசிற்கு (1819ஆம் ஆண்டு பிப்ரவரியில் நிலை நாட்டப்பட்டது) எதிரான ஆக்கிரமிப்பில் நேப்பிள்ஸ் முடியரசும் ஆஸ்திரியாவும் கூட்டாகச் சேர்ந்து பங் கேற்றது குறிப்பிடப்படுகிறது. 1849ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் தேதி ரோம் குடியரசு வீழ்ந்தது.—000.

31 லுயி போனபார்ட்டின் வாழ்க்கையில் பின்வரும் சம்ப வங்களை கா. மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார்: 1832ல் லுயி போனபார்ட் தூர்காவு கான்டன் என்ற பிராந்தி யத்தில் ஸ்விஸ் குடியுரிமையை ஏற்கிறார்; 1848ல் இங்கிலாந்தில் இருந்த பொழுது அங்கேயுள்ள சிவிலி யன்களைக் கொண்ட ஒரு துணைப் போலீஸ் அமைப்பில் தானுகவே சேர்ந்து பணியாற்றினார்.—45.

32 மறுவருகைக் காலம் — 1814 — 1830ஆம் ஆண்டுகளில் பூர்போன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரான்

சில் இரண்டாம் முறையாக ஆட்சி புரிந்த காலம். பிரபுக்கள் மற்றும் மதகுருமார்களின் நலன்களைப் பிரதி பலித்த புர்போனின் பிற்போக்கு ஆட்சி 1830ஆம் ஆண்டு ஜூலை புரட்சியால் முறியடிக்கப்பட்டது.—46.

33 19ஆம் நூற்றுண்டின் முதல் பாதியிலிருந்த பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் இரு முடியரசுவாதக் கட்சிகளைப் பற்றி—முறைமைவாதிகள், ஆர்லேயானிஸ்டுகளைப் பற்றி—இங்கே பேசப்படுகிறது.

முறைமைவாதிகள் — 1830இல் முறியடிக்கப்பட்ட ''முறைமையான'' (''சட்டபூர்வமான'') புர்போன் அரச வம்சத்தின் — இது பெரும் வம்சவழி நில உடைமையின் நலன்களைப் பிரதிபலித்தது—ஆதரவாளர்கள். நிதி மேல் குடியினரையும் பெரும் பூர்ஷ்வாவையும் ஆதாரமாகக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்த ஆர்லேயான் அரச வம்சத்திற்கு (1830—1848) எதிரான போராட்டத்தில் முறைமைவாதிகளில் ஒரு பகுதியினர் அடிக்கடி சமூக வாய்வீச்சை நாடினர்கள்—தம்மை சுரண்டலாளர்களாகிய பூர்ஷ்வாவிடமிருந்து உழைப்பாளிகளைக் காப்பாற்றும் பாதுகாவலர்களாகச் சித்தரித்தார்கள்.

ஆர்லேயானிஸ்டுகள்—ஆர்லேயான் அரச குடும்பத்தின் ஆதரவாளர்கள். இக்குடும்பத்தினர், 1830 ஜூலை மாதப் புரட்சியினால் பதவிக்கு வந்து பின்னர் 1848ம் வருடப் புரட்சியினால் முறியடிக்கப்பட்ட புர்போன் அரச வம்சத்தின் ஒரு இளைய பிரிவினர். ஆர்லேயானிஸ்டுகள் நிதி மேல்குடியினர் மற்றும் பெரிய முதலாளி வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலித்தனர்.

இரண்டாம் குடியரசின் காலத்தில் (1848—1851) இரு முடியரசுவாதக் குழுக்களுமே ''ஒழுங்குமுறைக் கட்சி'' எனும் ஒன்றிணைந்த பிற்போக்குக் கட்சியின் உட்கருவை உருவாக்கின; இது இரண்டாம் குடியரசின் சட்டமன்றத்தில் தலைமை ஸ்தானத்தை வகித்தது.—46.

34 கலிகூலாவைப் பிரிட்டோரியன் காவலர் படையினர் ரோமானியச் சக்கரவர்த்தியாகப் (கி. பி. 37—41) பதவியிலமர்த்தினர்.—51.

35 பிரெஞ்சு அரசாங்கம், ஆஸ்திரியாவுக்கு எதிரான போராட்டத்தில் பியேமோன்ட்டுக்கு உதவி கொடுப்பதற்கும் ரோம் குடியரசைப் பாதுகாப்பதற்கும் என்று பொய்யான காரணத்தைச் சொல்லி 1849 ஏப்ரலில்

இத்தாலிக்குத் துருப்புக்களை அனுப்புவதற்கு அரசியல் நிர்ணயச் சபையிலிருந்து நிதி வழங்கீட்டைப் பெற்றது. ஆனால் ரோம் குடியரசுக்கு எதிராகத் தலையிடுவதே இந்தப் படையெடுப்பின் உண்மையான நோக்கம்.—52.

36 *Le Moniteur universel* (''பொது தூதன்'')—பிரெஞ்சு தினசரிப் பத்திரிகை; 1789 முதல் 1901 வரையிலும் பாரிசிலிருந்து வெளிவந்த அதிகார பூர்வமான அரசாங்கப் பத்திரிகை.—000.

37 அரசவம்சவாதிகள் லெப்லோ, பாஸ், பான் ஆகியோர டங்கிய சட்டமன்றத்தின் குவெஸ்டர்கள் (இவர்களிடம் பொருளாதார, நிதித் துறை விவகாரங்களைக் கவனிக்கு மாறும் தன்னைப் பாதுகாக்குமாறும் பொறுப்பு கொடுத் திருந்தது) 1851 நவம்பர் 6ந் தேதியன்று சட்டமன்றத்தில் பிரேரேபித்த படைகளைத் திரட்டும் உரிமையைத் தேசிய சபையின் தலைவருக்கு அளிப்பதைப் பற்றிய மசோதாவை இது குறிப்பிடுகிறது. காரசாரமான விவாதத்துக்குப் பிறகு இந்த மசோதா நவம்பர் 17ந் தேதியன்று நிரா கரிக்கப்பட்டது.—53.

38 அரசியலமைப்புச் சட்டவாதிகள்—அரசியலமைப்புச் சட்ட விதி களுக்கு உட்பட்ட முடியாட்சியை ஆதரித்தவர்கள்; அரசருடைய ஆட்சியோடு நெருக்கமான தொடர்பு வைத் திருந்த பெரிய முதலாளிகள், மிதவாதிகளான பிரபுக் களின் பிரதிநிதிகள்.

ஜிரோண்டிஸ்டுகள்—பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி யில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது தோன்றிய முதலாளித்துவ அரசியல் பிரிவினர் கள். இவர்கள் மிதமான போக்குள்ள முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள்; புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்குமிடையே ஊசலாடி விட்டுக் கடைசியில் முடியாட்சியோடு சமரசம் செய்து கொண்டார்கள். இப் பிரிவின் தலைவர்களில் பலர் ஜிரோண்டா மாவட்டத் திலிருந்து சட்டமன்றத்துக்கும் கோன்வென்ட்டுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டபடியால் இந்தப் பெயர் ஏற்பட் டது.

ஜக்கோபின்கள்—பிரெஞ்சு பதினெட்டாம் நூற்றாண் டின் இறுதியிலான முதலாளித்துவப் புரட்சியின் போது தோன்றிய இடதுசாரி முதலாளித்துவ அரசியல் பிரி வினர்கள்; இவர்கள் நிலப்பிரபுத்துவத்தையும் எதேச்சாதி

காரத்தையும் ஒழிக்க வேண்டிய அவசியத்தை உறுதியாகவும் முரணில்லாதபடியும் வலியுறுத்தினர்கள்.—54.

39 1848 ஏப்ரல் 16ந் தேதியன்று தற்காலிக அரசாங்கத்திடம் ''தொழிலாளர் வேலை நிலைமைகளை ஒழுங்கமைக்க வேண்டும்'' என்றும் ''மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிக்க வேண்டும்'' என்றும் கேட்டுக் கொள்ளும் மனுவைக் கொடுப்பதற்காக பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற அமைதியான தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தை இந்த நோக்கத்திற்காக விசேஷமாக ஒன்றுசேர்க்கப்பட்ட முதலாளித்துவ தேசியக் காவலர் படை கலைத்தது.—54.

40 பிரோண்டா—எதேச்சாதிகாரத்துக்கு எதிராக பிரெஞ்சு பிரபுக்களிடமும் முதலாளி வர்க்கத்தினரிடமும் தோன்றிய இயக்கம்; இது 1648 முதல் 1653 வரை செயலாற்றியது. பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த அதன் தலைவர்கள் தமது பரிவாரங்களையும் அந்நியத் துருப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டு விவசாயிகள் கலகங்களையும் நகரங்களில் தோன்றிய ஜனநாயக இயக்கத்தையும் தங்களுடைய நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்.—56.

41 பிரிஜியன் தொப்பி—பண்டைக் காலத்தில் பிரிஜியன்கள் (ஆசியா மைனர்) தலையில் அணிந்து கொண்ட சிகப்புத் தொப்பி. பின்பு ஜாக்கோபின்கள் அதைத் தங்களுடைய தொப்பிக்கு மாதிரியாகப் பயன்படுத்தினர்கள்.—57.

42 அல்லி மலர்—பூர்போன் முடியாட்சியின் அரச இலச்சினை.—60.

43 டோரிகள்—பிரிட்டனில் உள்ள கன்சர்வேடிவ் கட்சியின் பெயர்.—62.

44 எம்ஸ் நகரம் (மேற்கு ஜெர்மனி)—பூர்போன் அரச வம்சத்தின் மூத்த தலைமுறையிலிருந்து பிரெஞ்சு அரியணைக்குப் போட்டியிட்ட ஷம்போர் கவுன்டின் நிரந்தர இருப்பிடங்களில் ஒன்றாக விளங்கியது.

கிளெர்மோன்ட் — லண்டனுக்குப் பக்கத்தில் ஒரு கோட்டை. லூயி பிலிப் 1848ஆம் ஆண்டு பிப்ரவரி

புரட்சிக்குப் பின் பிரான்சிலிருந்து தப்பி வந்த பிறகு இங்கே தங்கியிருந்தார்.—62.

45 பூர்ஷெயில் 1849ஆம் ஆண்டு மார்ச் 7 முதல் ஏப்ரல் 3 வரை, 1848ஆம் ஆண்டு மே 15ஆம் தேதி நிகழ்ச்சி சம்பந்தமான (குறிப்பு 21 பார்க்க) விசாரணை நடை பெற்றது. பர்பேயுக்கு ஆயுள் தண்டனையும் பிளாங்கி யுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டன. அல்போர்ட், டெபிலோத், ரஸ்பைல், மற்றவர்களுக்கு வெவ்வேறு ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கப் பட்டது.—69.

46 ஜெரிக்கோ—யூதர்கள் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்த வுடன் கைப்பற்றிய முதல் நகரம்; அந்த நகரத்தை முற்றுகையிட்டவர்களுடைய சங்கநாத முழக்கத்தைக் கேட்டதும் கோட்டைச் சுவர்கள் நொறுங்கி விழுந்து விட்டதாக ''பைபிள்'' நூலில் சொல்லப்படுகிறது.—70.

47 போப்பாண்டவர் ஒன்பதாவது பிய் பிரெஞ்சு முடியைத் தன் தலையில் சூட்டுவார் என்று லுயீ போனபார்ட் எதிர் பார்த்தது இங்கே குறிப்பிடப்படுகிறது. தீர்க்கதரிசி ஸாமுவெல் டேவிட் தலையில் தைலம் தேய்த்து இஸ் ரேலின் அரசராக்கினார் என்பது ''பைபிள்'' கதை.—77.

48 1805 டிசம்பர் 2ந் தேதியன்று ஆஸ்டர்லிட்சில் (மொரே வியா) முதலாம் நெப்போலியன் ருஷ்ய-ஆஸ்திரியத் துருப்புக்களை முறியடித்து வெற்றி பெற்றார்.—77.

49 லுயீ போனபார்ட் எழுதி 1839ல் பாரிசில் வெளியிடப் பட்ட ''நெப்போலியன் கருத்துக்கள்'' (*Des idées napoléo-niennes*) என்ற புத்தகத்தை மார்க்ஸ் இங்கே குறிப்பிடு கிறார்.—86.

50 பூர்கிராவ்கள் — ஆர்லேயானிஸ்டுகள், முறைமைவாதிகளின் பதினேழு தலைவர்கள்; புதிய தேர்தல் சட்டத்தைத் தயாரிக்கும் சட்டமன்றத்தின் கமிஷனின் உறுப்பினர்கள். அவர்கள் ஆட்சி மோகமும் பிற்போக்கு விருப்பங்களும் கொண்டிருந்த காரணத்தால் இந்தப் பெயர் கொடுக்கப் பட்டது. விக்டோர் ஹியூகோ எழுதிய ''பூர்கிராவ் கள்'' என்ற வரலாற்று நாடகத்தின் தலைப்பு அவர்

களுக்குப் பெயராகக் கொடுக்கப்பட்டது. ஜெர்மனியில் நகரங்களையும் வட்டங்களையும் ஆளுவதற்காகப் பேரரசரால் நியமிக்கப்பட்டவர்கள் புர்கிராவ்கள் என்றழைக்கப் பட்டனர்.—94.

51 1850 ஜூலை மாதத்தில் சட்டமன்றத்தில் நிறைவேறிய பத்திரிகைச் சட்டம் பத்திரிகைகளை வெளியிடுபவர்கள் கட்ட வேண்டிய முன்பணத்தை அதிகமான அளவுக்கு உயர்த்தியது; மேலும் அது கொண்டுவந்த ஸ்டாம்புச் சட்டம் பிரசுரங்களுக்கும் வரி விதித்தது.—98.

52 *National* பத்திரிகையைப் பற்றி குறிப்பு 24 பார்க்க. *La Presse* (''பத்திரிகைகள்'')—1836ம் வருடத்திலிருந்து பாரிசில் வெளியிடப்பட்ட தினசரிப் பத்திரிகை; ஜூலை முடியாட்சியின் போது அது எதிர்க்கட்சிப் பத்திரிகையாக இருந்தது; 1848 — 1849ம் வருடங்களில் முதலாளித்துவக் குடியரசுவாதிகளின் பத்திரிகையாக இருந்து பின்னர் போனபார்ட் ஆதரவுப் பத்திரிகையாக மாறியது.—98.

3 லஸ்ஸரோனி (lazzaroni) — இத்தாலியில் வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட லும்பன் பாட்டாளிகளுக்குத் தரப்பட்ட பெயர். பிற்போக்கான முடியாட்சிவாத வட்டாரங்கள் மிதவாத, ஜனநாயக இயக்கத்துக்கு எதிரான போராட்டங்களில் இவர்களை அடிக்கடி உபயோகித்துக் கொண்டன.—104.

54 லுயி போனபார்ட் வாழ்க்கை வரலாற்றின் இரு அம்சங்கள் மீதான குறிப்பு: 1836ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் தேதியன்று இரு பீரங்கி ரெஜிமெண்டுகளின் உதவியோடு ஸ்ட்ராஸ்பர்கில் கலகம் உண்டாக்க முயற்சி செய்தார். ஆனல் கலகக்காரர்களின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டன; லுயி போனபார்ட்டும் கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார். பிறகு பிரான்சில் போனபார்ட் ஆதரவு உணர்ச்சிகள் மீண்டும் ஏற்பட்ட ஒரு சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சில சதிகாரர்களோடு அவர் 1840 ஆகஸ்ட் 6ந் தேதியன்று பூலோன் கடற்கரையில் வந்திறங்கினர்; அங்கேயுள்ள துருப்புக்களைக் கலகம் செய்யுமாறு தூண்டினர். ஆனல் இந்த முயற்சியும் படு தோல்வியடைந்தது. போனபார்ட்டுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனல் 1846ல் அவர் இங்கிலாந்துக்குத் தப்பி ஓடினர்.—106.

55 போனபார்ட்டை ஆதரிக்கும் போக்குள்ள பத்திரிகைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. குடியரசுத் தலைவரான லுயி போனபார்ட்டின் அரசாங்க இருப்பிடத்தின் பெயர் ''எலிசேய் மாளிகை''; எனவே அவரை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கு இந்தப் பெயர் தரப்பட்டிருக்கிறது. —110.

56 மார்க்ஸ் இங்கே ஷில்லர் எழுதிய ''மகிழ்ச்சிக்கு ஒரு பாடல்'' என்ற கவிதையிலுள்ள ஒரு வரியைச் சிலேடையாகப் பயன்படுத்துகிறார். ஷில்லர் ஆனந்தத்தை ''எலிசியம் என்பவரின் மகள்'' என்று வர்ணிக்கிறார். பழங்காலத்துக் கதைகளில் எலிசியம் அல்லது எலிசேய் புரம் என்பது சொர்க்கத்துக்குச் சமம். லுயி போனபார்ட்டின் இருப்பிடம் இருந்த தெருவுக்கு ''எலிசேய் புரம்'' என்பது பெயர்.—119.

57 **பாராளுமன்றங்கள்**—பிரான்சில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட முதலாளித்துவப் புரட்சிக்கு முன்பு உயர் நீதி அமைப்புகள். அவைகள் அரசருடைய உத்தரவுகளைப் பதிவு செய்து கொண்டன; தேசத்தின் மரபுகளுக்கும் சட்டங்களுக்கும் விரோதமான உத்தரவுகளை ஆட்சேபிக்கும் உரிமை அவற்றுக்கு இருந்தது.—126.

58 **பெல் நிவு**—பிஸ்கே வளைகுடாவிலிருந்த தீவு; அரசியல் கைதிகள் இங்கேயுள்ள சிறையிலடைக்கப்பட்டார்கள்.—132.

59 கிரேக்க எழுத்தாளர் அத்தெனியஸ் (கி. பி. II—III நூற்றாண்டு) எழுதிய ''விருந்தின் போது கல்வியுடையோரின் உரையாடல்'' கதையின் கீழ்க் காணும் சம்பவத்தை மார்க்ஸ் முற்றிலும் சரியாகச் சொல்லாமல் இங்கே குறிப்பிடுகிறார். எகிப்திய அரசரான டாகோசுக்கு உதவி செய்வதற்காக ஸ்பார்ட்டாவின் அரசரான அகெசிலஸ் தன் படைகளோடு வந்திருக்கிறார். அவர் குள்ளமான உருவம் கொண்டவர். ''மலைக்குப் பிரசவ வேதனை ஆரம்பமாயிற்று. வானவர் கடவுளான ஜீயஸ் அச்சமடைந்தார். ஆனால் மலை கடைசியில் ஒரு எலியைப் பிரசவித்தது'' என்று எகிப்திய அரசர் கேலியாகச் சொன்னார். ''என்னை எலிதானே என்று நீ நினைக்கலாம்; ஆனால் ஒரு நாள் நான் சிங்கமாக மாறுவேன்'' என்று அகெசிலஸ் பதிலளித்தார்.—135.

60 *L'Assemblée nationale* (''தேசிய சபை'') — பிரெஞ்சு தினசரிப் பத்திரிகை; முடியாட்சியை ஆதரிக்கின்ற முறைமைவாதிகளைப் பின்பற்றி எழுதியது; 1848 முதல் 1857 வரை பாரிசிலிருந்து வெளிவந்தது. இரண்டு வமிச வழிக் கட்சிகளும் — முறைமைவாதிகளும் ஆர்லேயானிஸ்டுகளும்—இணைந்துவிட வேண்டுமென்பதை ஆதரித்தவர்களின் கருத்துக்களை அது பிரதிபலித்தது.—140.

61 பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐம்பதுக்களில் பிரெஞ்சு அரியணைக்கு முறைமைவாத உரிமை கொண்டாடிய ஷம்போர் கவுன்ட் வெனிஸ் நகரத்தில் வசித்து வந்தார்.—141.

62 மறுவருகைக் காலத்தின் போது (1814—1830) முறைமைவாதிகளின் முகாமில் போர்த்தந்திரம் பற்றி ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. பதினெட்டாம் லுயியின் ஆதரவாளரான விலேல் பிற்போக்கான நடவடிக்கைகளை ஜாக்கிரதையாகவே செய்ய வேண்டுமென்று கருதினர்; ஆனல் டஅர்ட்டுவா கவுன்டின் (1824 முதல் அரசர் பத்தாம் சார்லஸ்) ஆதரவாளரான பொலிஞாக் புரட்சிக்கு முன்பிருந்த மாதிரியான ஆட்சி முறைகளை முழுமையாக ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினர்.

டியுல்லரீ மாளிகை—பாரிசிலுள்ள பதினெட்டாம் லுயியின் இருப்பிடம்; **மார்சான் மாளிகை**—மாளிகையின் ஒரு பகுதி, மறுவருகைக் காலத்தின் போது டஅர்ட்டுவா கவுன்ட் அதில் வசித்து வந்தார்.—144.

63 *The Economist* (''பொருளியலாளர்'')—ஆங்கில வாரப் பத்திரிகை; பொருளாதார, அரசியல் கட்டுரைகளை வெளியிட்டு வந்தது; பெரிய தொழில் முதலாளிகளின் கருத்துக்களை வெளியிட்டு வந்த பத்திரிகை; 1843ஆம் வருடத்திலிருந்து லண்டனில் வெளியிடப்பட்டு வருகிறது.—149.

64 **லண்டன் தொழிற் கண்காட்சி** என்ற முதலாவது சர்வதேச வர்த்தக, தொழில் கண்காட்சி 1851 மே மாதம் முதல் அக்டோபர் வரை நடைபெற்றது.—156.

65 **ஜக்கேரியா**—''சாதாரண ஜாக்'' எனும் சொல்லில் இருந்து—பிரான்சில் விவசாயிகளின் பட்டப் பெயர்; உருவகப் பொருளில்—விவசாய எழுச்சிகள்.—160.

66 *Le Messager de l'Assemblée* (''சபையின் தூதன்'')—பிரெஞ்சுத் தினசரிப் பத்திரிகை; போனபார்ட்டுக்கு எதிர்ப்பான கருத்துக்களைக் கொண்டிருந்தது; 1851ல் பிப்ரவரி 16 முதல் டிசம்பர் 2ந் தேதி வரை பாரிஸ் நகரத்தில் வெளியிடப்பட்டு வந்தது.—161.

67 **வெஸ்டல்கள்** — பண்டைய ரோமானியர்களிடையே இருந்த மதகுருமார்கள்; இவர்கள் ஒழுக்கத் தூய்மை குறித்து சபதம் அளித்தார்கள்; வீடு மற்றும் மந்தைகளின் பெண் கடவுளாகிய வெஸ்டாவின் கோயிலில் புனித அக்கினியைப் பேணிக் காத்தார்கள்.—167.

68 **நீண்ட நாடாளுமன்றம்** (1640—1653)—இங்கிலாந்தில் முதலாளித்துவப் புரட்சி ஏற்பட்ட பொழுது அரசர் முதலாம் சார்லஸ் கூட்டிய நாடாளுமன்றம்; அந்த முதலாளித்துவப் புரட்சியின் சட்டமன்றமாக மாறியது. 1649ல் நாடாளுமன்றம் முதலாம் சார்லசுக்கு மரண தண்டனை விதித்து இங்கிலாந்தைக் குடியரசாக அறிவித்தது. 1653ல் குரோம்வெல் நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.—168.

69 **செவேன்**—பிரான்சில் லங்கெடோக் என்ற பிராந்தியத்தில் உள்ள மலை வட்டாரம். அங்கே 1702 முதல் 1705 முடிய விவசாயிகளின் எழுச்சி ஏற்பட்டது. புரோட்டஸ்டென்டுகளை ஒடுக்குவதை எதிர்த்துத் தொடங்கிய இந்தக் கலகம் தீவிரமான நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மை கொண்டிருந்தது.

வண்டே—பிரெஞ்சுப் பிரதேசம், 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது எதிர்ப்புரட்சியின் இருப்பிடமாக இருந்தது. கத்தோலிக்க மத ஸ்தாபனத்தின் தீவிர செல்வாக்கின் கீழிருந்த பின்தங்கிய வண்டே விவசாயிகளை புரட்சிகரப் பிரான்சிற்கு எதிரான போராட்டத்தில் எதிர்ப்புரட்சி பயன்படுத்தியது.—183.

70 **கான்ஸ்டான்சில் நடைபெற்ற திருச்சபையினர் கூட்டம்** (1414—1418) — வளர்ச்சியடைந்து வந்த மதச்சீர்திருத்த இயக்கத்தினால் பலவீனமடைந்து கொண்டிருந்த கத்தோலிக்க திருச்சபையை வலுப்படுத்துவதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.—193.

71 **உண்மையான சோஷலிஸ்டுகள்**—ஜெர்மனியில் சென்ற நூற்றாண்டின் நாற்பதுக்களில் குட்டி முதலாளித்துவ அறிவுப் பகுதியினர் மத்தியில் பரவலாக இருந்த பிற்போக்கான போக்கின் பிரதிநிதிகள். ''உண்மையான சோஷலிஸ்டுகள்'' சோஷலிசத்தின் கருத்துக்களுக்குப் பதிலாக அன்பு, சகோதரத்துவம் பற்றி உணர்ச்சிக் கனிவான பிரசங்கங்களை நிகழ்த்தினர்கள்; ஜெர்மனியில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் அவசியத்தை மறுத்தார்கள்.—194.

72 பதினைந்தாம் லுயீ குழந்தைப் பருவத்திலிருந்த பொழுது பிலிப் ட ஆர்லேயான் பிரான்சில் 1715 முதல் 1723 முடிய நடத்திய பகர ஆட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது.—198.

73 **டிரியர் புனித மேலாடை**—டிரீயர் நகரத்தின் மாதா கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் கத்தோலிக்க திருச்சின்னம்; ஏசுநாதர் சிலுவையில் அறையப்படும் போது அவர் மேலிருந்து கழற்றப்பட்டதாகக் கூறப்படும் மேலாடை. மத நம்பிக்கையுள்ளவர்கள் இந்த மேலாடையை வணங்கினர்கள்.—199.

74 *People's Paper* எனும் சாசனவாதப் பத்திரிகையின் 4வது ஆண்டு நிறைவையொட்டி 1856ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி நடைபெற்ற விருந்தில் முதலாவதாக உரை நிகழ்த்தும் வாய்ப்பைப் பெற்ற மார்க்ஸ் அதைப் பயன்படுத்திக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தைப் பற்றி பேசினர். *People's Paper* பத்திரிகைக் கொண்டாட்டங்களில் மார்க்சின் பங்கேற்பானது, விஞ்ஞானக் கம்யூனிச ஆசான்களுக்கும் ஆங்கிலேய சாசனவாதிகளுக்கும் (குறிப்பு 95 பார்க்க) இடையே நிலவிய உறவுகளுக்கும் ஆங்கிலேய பாட்டாளி வர்க்கத்தின் மீது சித்தாந்த ரீதியாகத் தாக்கம் செலுத்தி புதிய, சோஷலிச அடிப்படையில் இங்கிலாந்தில் தொழிலாளர் இயக்கத்தைப் புனரமைக்கும் நோக்கத்தோடு சாசனவாதத்தின் தலைவர்களுக்கு ஆதரவளிக்க மார்க்சும் எங்கெல்சும் செய்த முயற்சிகளுக்கும் தக்க உதாரணமாகத் திகழ்ந்தது.

The People's Paper (''மக்கள் பத்திரிகை'') — சாசனவாதத் தினசரிப் பத்திரிகை; 1852 மே முதல் 1858 ஜூன் வரை லண்டனில் வெளிவந்தது; 1852

அக்டோபர் முதல் 1856 டிசம்பர் வரை மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையுடன் ஒத்துழைத்தனர், பத்திரிகையைப் பதிப்பித்தலில் அதற்கு உதவினர்கள். 1858 ஜூனில் பத்திரிகை முதலாளித்துவ நபர்களின் கரங்களுக்கு மாறியது.—200.

75 கா. மார்க்சின் அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை எனும் நூல் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தைத் தோற்றுவித்ததில் ஒரு முக்கியக் கட்டமாகத் திகழ்கிறது. இந்நூலை எழுதுவதற்கு முன் மார்க்ஸ் 15 ஆண்டு காலத்தை விஞ்ஞான-ஆராய்ச்சிப் பணிகளில் செலவிட்டார்; இச்சமயத்தில் ஏராளமான நூல்களை, கட்டுரைகளைப் பயின்ற அவர் தனது பொருளாதாரப் போதனையின் அடிப்படைகளை உருவாக்கினர். தனது ஆராய்ச்சியின் முடிவுகளை ஒரு பெரிய பொருளாதாரப் படைப்பாக எழுத மார்க்ஸ் திட்டமிட்டிருந்தார். 1857ஆம் ஆண்டு ஆகஸ்ட்—செப்டெம்பரில் அவர் தான் சேகரித்த விவரங்களை முறைப்படுத்தத் தொடங்கி இந்தப் படைப்பின் முதல் திட்டத்தைத் தீட்டுகிறார். அடுத்த சில மாதங்களில் மார்க்ஸ் இத்திட்டத்தை விரிவுபடுத்தி தன் படைப்பைச் சிறு சிறு பகுதிகளாக, தனிப்பட்ட வெளியீடுகளாக வெளியிட முடிவு செய்கிறார். பி. டன்கெர் எனும் பெர்லின் பதிப்பாளருடன் பூர்வாங்க ஒப்பந்தம் செய்து கொண்ட அவர் முதல் வெளியீட்டிற்கான வேலையில் மூழ்கினர்; இது 1859 ஜூனில் வெளிவந்தது.

முதல் வெளியீட்டை அடுத்து உடனடியாக இரண்டாவது வெளியீட்டை வெளியிட ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்; இதில் மூலதனத்தின் பிரச்சினைகள் அடங்கியிருந்திருக்க வேண்டும். ஆனால் பிந்திய ஆராய்ச்சிகள் தனது பெரும் படைப்பைப் பற்றிய ஆரம்பத் திட்டத்தை மாற்றும்படி மார்க்சைத் தூண்டின. இரண்டாவது, இதற்குப் பிந்திய வெளியீடுகளுக்குப் பதிலாக மார்க்ஸ் ''மூலதனத்தைத்'' தயார் செய்தார்; ''அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை'' எனும் நூலின் முக்கியக் கருத்து நிலைகளையும் இவர் மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் இதில் சேர்த்தார். —204.

76 முடிவு பெறுத ''முன்னுரை'' இங்கே குறிப்பிடப்படுகிறது; மார்க்ஸ் திட்டமிட்டிருந்த பெரும் பொருளா

தாரப் படைப்பிற்காக இது எழுதப்பட்டது (குறிப்பு 75 பார்க்க).—205.

77 *Rheinische Zeitung* (முழுப் பெயர்: *Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe*) (''அரசியல், வர்த்தகம் மற்றும் தொழிற் துறைப் பிரச்சினைகள் சம்பந்தமான ரைன் பத்திரிகை'')—தினசரிப் பத்திரிகை; 1842 ஜனவரி 1 முதல் 1843 மார்ச் 31 வரை கேல்னில் வெளிவந்தது. 1842 ஏப்ரல் முதல் பத்திரிகையுடன் மார்க்ஸ் ஒத்துழைத்தார்; அதே ஆண்டு அக்டோபரிலிருந்து இதன் பதிப்பாசிரியர்களில் ஒருவரானார்.—205.

78 *Allgemeine Zeitung* (''பொதுப் பத்திரிகை'')—பிற்போக்கு ஜெர்மன் தினசரிப் பத்திரிகை; 1798இல் நிறுவப்பட்டது; 1810 முதல் 1882 வரை அவுக்ஸ்பர்கில் வெளிவந்தது. 1842இல் இது கற்பனாவாதக் கம்யூனிச மற்றும் சோஷலிசக் கருத்துக்களைத் திரித்துக் கூறியது; இதை மார்க்ஸ் ''கம்யூனிசம் மற்றும் அவுக்ஸ்பர்க் *Allgemeine Zeitung*" எனும் தனது கட்டுரையில் அம்பலப்படுத்தினர்.—206.

79 *Deutsch-Französische Jahrbücher* (''ஜெர்மன்-பிரெஞ்சு ஆண்டு மலர்'')கா. மார்க்ஸ், அ. ரூகேயைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு பாரிசில் வெளிவந்தது. 1844ஆம் ஆண்டு பிப்ரவரியில் இதன் முதலாவது இரட்டை இதழ் மட்டுமே வெளியிடப்பட்டது. இந்தச் சஞ்சிகை நிறுத்தப்பட்டதற்கு முக்கியக் காரணம் மார்க்சிற்கும் முதலாளித்துவத் தீவிரவாதியான ரூகேயிற்கும் இடையேயான கோட்பாடு ரீதியான கருத்து வேறுபாடுகளாகும்.—206.

80 ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கம் பெல்ஜியத்தில் வாழ்ந்து வந்த ஜெர்மன் தொழிலாளர்களுக்கு அரசியல் ரீதியாக அறிவொளியூட்டவும் இவர்களிடையே விஞ்ஞானக் கம்யூனிசக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யவும் 1847ஆம் ஆண்டு ஆகஸ்ட் இறுதியில் பிரஸ்ஸல்சில் மார்க்ஸ், எங்கெல்சால் நிறுவப்பட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் இவர்களது சகதோழர்களின் தலைமையின் கீழ் இச்சங்கம், பெல்ஜியத்திலிருந்த புரட்சிகர

ஜெர்மன் பாட்டாளிகளை ஒன்றிணைக்கும் சட்ட பூர்வமான மையமாக ஆக்கப்பட்டது. இச்சங்கத்தின் சிறந்த நபர்கள் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பிரஸ்ஸல்ஸ் கூட்டமைப்பில் இடம் பெற்றிருந்தனர். 1848இல் பிரான்சில் நடைபெற்ற பிப்ரவரி முதலாளித்துவப் புரட்சியை அடுத்து இச்சங்கத்தின் உறுப்பினர்களை பெல்ஜியப் போலீஸ் கைது செய்து நாட்டை விட்டு வெளியேற்றியதையடுத்து பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தின் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.—211.

81 *Neue Rheinische Zeitung. Organ der Demokratie* (''புதிய ரைன் பத்திரிகை. ஜனநாயகத்தின் பத்திரிகை'') — மார்க்சைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கேல்னில் 1848 ஜூன் 1 முதல் 1849 மே 19 வரை அன்றுடம் வெளியானது; பதிப்பாசிரியர் குழுவில் எங்கெல்சும் இடம் பெற்றிருந்தார்.—211.

82 *New-York Daily Tribune* — அமெரிக்க முற்போக்கு முதலாளித்துவப் பத்திரிகை; 1841 முதல் 1924 வரை வெளியானது. 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச் வரை பத்திரிகையுடன் மார்க்சும் எங்கெல்சும் ஒத்துழைத்தனர்.—211.

83 இந்தக் கட்டுரை ''அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை'' எனும் கா. மார்க்சின் நூலைப் பற்றி பி. எங்கெல்ஸ் எழுதிய ஒரு மதிப்புரை ஆகும். எங்கெல்ஸ் இந்நூலை, பாட்டாளி வர்க்கக் கட்சியின் மகத்தான விஞ்ஞானச் சாதனை என்றும் பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞான பூர்வமான உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குவதில் முக்கியக் கட்டம் என்றும் வர்ணிக்கின்றார். இந்த மதிப்புரை முடிக்கப்படவில்லை. முதல் இரு பகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டன. பத்திரிகை நிறுத்தப்பட்டதால் மூன்றும் பகுதி—இதில் எங்கெல்ஸ் நூலின் பொருளாதார உள்ளடக்கத்தை விவரிக்கத் திட்டமிட்டிருந்தார்—பிரசுரமாகவில்லை; இதன் கையெழுத்துப் பிரதி கண்டுபிடிக்கப்படவில்லை.—213.

84 மதச் சீர்திருத்த இயக்கம்—கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான பரவலான சமூக இயக்கம்; 16ஆம் நூற்றாண்டில் பல ஐரோப்பிய நாடுகளை ஆட்கொண்டது. பெரும்பாலான நாடுகளில் மதச் சீர்திருத்த இயக்கம் பெரும்

வர்க்கப் போராட்டங்களுடன் இணைந்தது; இந்த இயக்கத்தின் சித்தாந்தப் பதாகையின் கீழ் ஜெர்மனியில் 1524—1525ஆம் ஆண்டுகளில் விவசாயிகள் யுத்தம் நடைபெற்றது.—213.

85 முப்பது வருட் யுத்தம் (1618—1648) — புரோட்டஸ்டென்ட்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையேயான போராட்டத்தால் தோன்றிய பொது ஐரோப்பிய யுத்தம். இந்தப் போராட்டத்தின் முக்கிய அரங்கமாகவும் இராணுவக் கொள்ளை மற்றும் யுத்தத்தில் கலந்து கொண்டவர்களின் ஆக்கிரமிப்புக் கோரிக்கைகளின் மையமாகவும் ஜெர்மனி ஆக்கப்பட்டது.—213.

86 1477 முதல் 1555 வரை ஹாலந்து ஜெர்மன் இனத்தின் புனித ரோமானியப் பேரரசில் இடம் பெற்றிருந்தது; இது பிரிக்கப்பட்டதும் ஹாலந்து ஸ்பெயின் ஆட்சியின் கீழ் வந்தது. 16ஆம் நூற்றாண்டு முதலாளித்துவப் புரட்சியின் இறுதியில் ஹாலந்து ஸ்பானிய ஆட்சியிலிருந்து விடுதலையடைந்து சுதந்திரமான முதலாளித்துவக் குடியரசாக மாறியது.—214.

87 சுங்க இணையம்—1834இல் பிரஷ்யாவை முக்கியமாகக் கொண்டு அமைக்கப்பட்ட இது கிட்டத்தட்ட எல்லா ஜெர்மன் அரசுகளையும் ஒன்றிணைத்தது; பொது சுங்க எல்லையை நிலைநாட்டிய இது மேற்கொண்டு ஜெர்மனியின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு வழிகோலியது.—214.

88 கான்டினென்டல் ஏற்பாடு அல்லது கான்டினென்டல் முற்றுகை—இங்கிலாந்தோடு வர்த்தகம் செய்வதைத் தடுத்து ஐரோப்பிய நாடுகளுக்கு முதலாம் நெப்போலியன் 1806இல் புகுத்திய தடைச் சட்டம். 1812இல் ருஷ்யாவில் நெப்போலியன் தோல்வியடைந்ததும் கான்டினென்டல் முற்றுகை வீழ்ச்சியடைந்தது.—215.

89 சுதந்திர வர்த்தகத்தை ஆதரித்தவர்கள்—சுதந்திர வர்த்தகத்தையும் பொருளாதார வாழ்வில் அரசு தலையிடக் கூடாது என்பதையும் ஆதரித்தவர்கள். 19ஆம் நூற்றாண்டின் 40—50ஆம் ஆண்டுகளில் இவர்கள் இங்கிலாந்தில் விசேஷ அரசியல் குழுவாக இருந்தார்கள். — 215.

90 காமெரலிஸ்டிக்ஸ் (அல்லது காமெரல் விஞ்ஞானங்கள்)—

முதலில் மத்திய காலப் பல்கலைக்கழகங்களிலும் பின் ஒரு சில ஐரோப்பிய நாடுகளின் முதலாளித்துவப் பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்ட நிர்வாக, நிதி, பொருளாதார, மற்ற பாடப் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரே பாடத் திட்டம்.—216.

91 *Das Volk* (''மக்கள்'') — வாரப் பத்திரிகை; மார்க்சின் நெருக்கமான பங்கேற்போடு ஜெர்மன் மொழியில் 1859 மே 7 முதல் ஆகஸ்ட் 20 வரை லண்டனில் வெளிவந்தது; ஜூலை மாதம் முதல் நடைமுறை ரீதியாக அவர் இப்பத்திரிகையின் பதிப்பாசிரியரானார்.—216

92 19ஆம் நூற்றாண்டின் 30-40ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் பல துறைகளை ஆக்கிரமித்து தத்துவஞானத்தின் அதிக தீவிரமான போக்கின் பிரதிநிதிகளைத் தாக்குவதற்காக தமது நிலையைப் பயன்படுத்திய வலதுசாரி ஹெகலியவாதிகளின் மீதான நையாண்டிக் குறிப்பாகும் இது.

டயடோஹிகள் (Diadochi) — மசெடோனியாவைச் சேர்ந்த அலெக்சாண்டரின் படைத் தளபதிகள்; அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒருவரோடு ஒருவர் கடுமையாகப் போரிட்டனர்.—222.

93 கி. வி. பி. ஹெகல் எழுதிய ''தர்க்க விஞ்ஞானம்'', முதல் பகுதி, இரண்டாம் பிரிவைப் பார்க்க.—223.

94 மார்க்ஸ் திட்டமிட்டிருந்த ''அரசியல் மற்றும் அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனம்'' எனும் படைப்பு இங்கு குறிப்பிடப்படுகிறது.—231.

95 **சாசனவாதிகள்**—19ஆம் நூற்றாண்டின் 30ஆம் ஆண்டுகள்—50ஆம் ஆண்டுகளின் மத்தியில் கிரேட் பிரிட்டனில் நிலவிய கடுமையான பொருளாதார நிலையாலும் அரசியல் உரிமையின்மையாலும் தோன்றிய தொழிலாளர்களுடைய அரசியல் இயக்கத்தில் கலந்து கொண்டவர்கள். சர்வபொது வாக்குரிமையையும் இந்த உரிமையைத் தொழிலாளர்களுக்கு அளிக்கும் சில நிபந்தனைகளையும் உள்ளடக்கிய ''மக்கள் சாசனத்தை'' நிறைவேற்றக் கோரும் போராட்டக் கோஷத்தின் கீழ் இந்த இயக்கம் நடைபெற்றது. லெனினுடைய கணிப்பின்படி இதுதான் ''பரவலான, உண்மையிலேயே வெகுஜன,

அரசியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சிகர முதல் இயக்கமாக'' இருந்தது.—234.

96 லண்டனிலிருந்த ஜெர்மன் தொழிலாளர்களின் அறிவொளிச் சங்கம் இங்கு குறிப்பிடப்படுகிறது; இது 19ஆம் நூற்றாண்டின் 50ஆம் ஆண்டுகளில் கிரேட் விண்ட்மில் தெருவிலிருந்தது. இச்சங்கம் 1840 பிப்ரவரியில் ஷாப்பர், மோல், நியாயமானவர்களின் சங்கத்தின் (கம்யூனிஸ்டுகள் சங்கத்திற்கு முன்பிருந்தது) மற்ற உறுப்பினர்களால் நிறுவப்பட்டது. 1849 — 1850இல் இதன் நடவடிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் தீவிரப் பங்கேற்றனர். இச்சங்கத்தின் பெரும் பகுதி வில்லிஹ்-ஷாப்பரின் குறுங்குழுவாத-துர்சாகசவாதப் பிரிவிற்கு ஆதரவாக மாறியதால் 1850 செப்டெம்பர் 17இல் மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் இவர்களுடைய சில ஆதரவாளர்கள் சங்கத்திலிருந்து வெளியேறினர்கள். 1864இல் அகிலம் தோற்றுவிக்கப்பட்டதும் இச்சங்கம் லண்டனில் சர்வதேச சங்கத்தின் ஜெர்மன் கிளையானது. லண்டன் அறிவொளிச் சங்கம் 1918ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கத்தால் மூடப்படும் வரை நிலவியது.—234.

97 புரட்சிகர பிரெஞ்சு ராணுவம் மயென்சைக் கைப்பற்றியதும் ஜெர்மன் ஜனநாயகவாதிகளான குடியரசுவாதிகள் 1792 அக்டோபரில் நகரத்தில் சமத்துவம், சகோதரத்துவத்தின் நண்பர்கள் கிளப்பு என்றழைக்கப்படுவதைத் தோற்றுவித்தனர். பழைய நிலப்பிரபுத்துவ முறைகளை ஒழிக்க வேண்டுமென்றும் குடியரசு அமைப்பை நிலைநாட்ட வேண்டுமென்றும் ரைனின் இடது கரையைப் புரட்சிகர பிரான்சுடன் இணைக்க வேண்டுமென்றும் கோரி மயென்ஸ் கிளப்புவாதிகள் பிரச்சாரம் செய்தார்கள். நகர மக்களோ அல்லது விவசாயிகளோ இவர்களுடைய கருத்துக்களுக்கு அனுதாபம் காட்டவில்லை, ஆதரவளிக்கவில்லை. 1793 ஜூலையில் மயென்சை பிரஷ்யப் படைகள் கைப்பற்றியதும் மயென்ஸ் கிளப்பின் உறுப்பினர்களின் நடவடிக்கை நின்றது.—235.

98 அநேகமாக பெத்திஹெர் எழுதிய ''கார்த்தஜீனின் வரலாறு'' (பெர்லின், 1827) இங்கு குறிப்பிடப்படலாம்; இது பெரும்பாலும் கார்த்தஜீனின் இராணுவ வரலாற்றைப் பற்றியது.—237.

99 கோன்டோட்டியேரிகள் — 14 — 15ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியிலிருந்த இராணுவக் கூலிப் படையினர்களின் தலைவர்கள்.—237.

பெயர்க் குறிப்பகராதி

அகிஸ் முதலாவது [Agis I] (மரணம்: சுமார் கி. மு. 399)—ஸ்பார்ட்டாவின் அரசர் (சுமார் கி. மு. 426—399).—135.

அகெசிலஸ் [Agesilaus] (சுமார் கி.மு.442—358)—ஸ்பார்ட்டாவின் அரசர் (சுமார் கி. மு. 399—358).—135.

அங்கிலேஸ் [Anglès], பிரான்சுவா எர்னெஸ்ட் (1807—1861)—பிரெஞ்சு நிலவுடைமையாளர், சட்டமன்ற உறுப்பினர் (1850—1851), ஒழுங்குமுறைக் கட்சியைச் சேர்ந்தவர்.—150.

அலெக்சாண்டர், மசேடோனியாவைச் சேர்ந்தவர் [Alexander of Macedon] (கி.மு.356—323)—மாபெரும் போர்வீரர், படைத்தலைவர், ராஜீய அறிஞர்.—108.

அலே [Allais], லுயி பியேர் காஸ்டான் (பிறப்பு: சுமார் 1821)—பிரெஞ்சு போலீஸ் ஒற்றன்.—107, 115.

ஆப்பூல் [Hautpoul], அல்போன்ஸ் அன்ரி (1789—1865)—பிரெஞ்சு ஜெனரல், முதலில் முறைமைவாதி, பிறகு போனபார்ட்டின் ஆதரவாளர்; இராணுவ அமைச்சர் (1849—1850).—85, 95, 109, 111, 113.

ஆயி [Ailly], பியேர் ட (1350—1420 அல்லது 1425)—பிரெஞ்சுக் கர்தினல்; கான்ஸ்டான்சில் நடைபெற்ற திருச்சபையின் கூட்டத்தில் முக்கியமான பங்கு வகித்தார்.—193.

ஆர்லேயான் [Orléans], டியூக்—லுயி பிலிப் பார்க்க.

ஆர்லேயான் [Orléans], யெலேன் (பிறப்பின்படி மெக்லென் பர்க், டச்சஸ்) (1814—1858)—லுயி பிலிப்பின் மூத்த மகன் பெர்டினண்டின் விதவை.—33, 83.

ஆர்லேயான்கள் [Orléans] — பிரெஞ்சு அரச வம்சம் (1830—1848).—46, 60, 136, 137, 140, 141, 180, 196, 197.

உடினே [Oudinot], நிக்கொலா ஷார்ல் விக்டோர் (1791—1863)—பிரெஞ்சு ஜெனரல், ஆர்லேயானிஸ்டு; 1849ல் ரோம் குடியரசுக்கு எதிராக அனுப்பப்பட்ட படைகளின் தளகர்த்தர்; 1851 டிசம்பர் 2ந் தேதி திடீர்ப் புரட்சிக்கு எதிர்ப்பை ஏற்படுத்த முயற்சி செய்தார்.—52, 76, 82.

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் (1820—1895)—209, 210.

ஃபாயர்பாஹ் [Feuerbach], லுத்விக் (1804—1872)—பெரும் ஜெர்மன் தத்துவஞானி, மார்க்சிற்கு முந்திய காலகட்டத்தின் பொருள்முதல்வாதி.—221, 222.

ஃபெரியே [Ferrier], பிரான்சுவா லுயி ஆகூஸ்ட் (1777—1861)—பிரெஞ்சு விஞ்ஞானக்கேடான பொருளியலாளர்.—215.

ஃபோக்ட் [Vogt], கார்ல் (1817—1895) — ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, விஞ்ஞானக்கேடான பொருள் முதல்வாதி, குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி; 1848—1849இல் பிரெஞ்சு தேசிய சபையின் உறுப்பினர், இடதுசாரிப் பிரிவைச் சார்ந்திருந்தார்.—222.

கார்லியே [Carlier], பியேர் (1799—1858)—பாரிஸ் நகரப் போலீஸ் பிரதம அதிகாரி (1849—1851), போனபார்ட் ஆதரவாளர்.—86, 108, 119, 163.

கலிகூலா [Caligula], கேயஸ் சிஸர் (12—41) — ரோமானியச் சக்கரவர்த்தி (37—41).—51.

கவெஞாக் [Cavaignac], லுயி எஜேன் (1802—1857)—பிரெஞ்சு ஜெனரல், அரசியல்வாதி, மிதமான போக்குள்ள முதலாளித்துவக் குடியரசுவாதி; 1848 மே

மாதத்திலிருந்து இராணுவ அமைச்சராக இருந்தார்; பாரிஸ் தொழிலாளி வர்க்கத்தின் 1848 ஜூன் மாத எழுச்சியை அதிகக் குரூரமாக ஒடுக்கியவர்; நிர்வாக ஆட்சியின் தலைவர் (1848 ஜூன்—டிசம்பர்).—34, 42, 44, 45, 58, 129, 152, 169.

காசிடியேர் [Caussidière], மார்க் (1808—1861)—பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1834ல் லியோனில் நடைபெற்ற கலகத்தில் பங்கு கொண்டவர்; 1848 பிப்ரவரி — ஜூன் மாதங்களில் பாரிஸ் நகரப் போலீஸ் பிரதம அதிகாரி; அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர்; 1848 ஜூன் மாதத்தில் நாட்டை விட்டு இங்கிலாந்துக்குப் போய்விட்டார்.—14.

காண்ட் [Kant], இம்மனுயேல் (1724—1804)—ஜெர்மன் தத்துவஞானி, 18ஆம் நூற்றாண்டு இறுதி—19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றிய ஜெர்மன் கருத்துமுதல்வாதத்தின் ஆரம்பகர்த்தா.—223.

கான்ஸ்டான் [Constant], பெஞ்சமின் (1767—1830)—பிரெஞ்சு எழுத்தாளர், மிதவாத முதலாளித்துவ அரசியல்வாதி.—16.

கிராக்கஸ் [Gracchus], சகோதரர்கள் கேயஸ் ஸெம்ப்ரோனியஸ் (கி. மு. 153—121) மற்றும் டிபேரியஸ் ஸெம்ப்ரோனியஸ் (கி. மு. 163—133)—ரோமானிய மக்கள் பிரமுகர்கள்; விவசாயிகளுக்குச் சாதகமான முறையில் விவசாயச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று போராடியவர்கள்.—16.

கிரானியே டி கசஞாக் [Granier de Cassagnac], அடோல்ப் (1806 — 1880) — பிரெஞ்சுப் பத்திரிகையாளர், நேர்மை இல்லாத அரசியல்வாதி; 1848க்கு முன்பு ஆர்லேயானிஸ்டு, பிறகு போனபார்ட்டின் ஆதரவாளர்; இரண்டாவது சாம்ராஜ்யத்தின் போது சட்டமன்றத் துறையைச் சேர்ந்தவர்.—198.

கிரிம் [Grimm], யாக்கப் (1785—1863)—ஜெர்மன் தத்துவஞானி, கலாச்சாரத் துறை வரலாற்றுசிரியர்.—237.

கிரெட்டோன் [Creton], நிக்கொலா ஜோஸேப் (1798—1864)—பிரெஞ்சு வழக்கறிஞர்; இரண்டாவது குடியரசின் போது அரசியல் நிர்ணயச் சபை, சட்ட மன்றம் ஆகிய இரண்டிலும் உறுப்பினராக இருந்தவர்; ஆர்லேயானிஸ்டு.—138.

கிஸோ [Guizot], பிரான்சுவா பியேர் கியோம் (1787—1874)—பிரெஞ்சு வரலாற்றுசிரியராகவும் அரசாங்கப் பிரமுகராகவும் இருந்தவர்; 1840 முதல் 1848 வரையிலும் நடைமுறை ரீதியாக பிரான்சின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைத் தலைமை தாங்கி நடத்தினர்.—16, 38, 142, 144, 176, 198, 206.

கிஸ் [Guise], டியூக்—ஹென்ரி இரண்டாவது டி லோரைன் பார்க்க.

குரோம்வெல் [Cromwell], ஆலிவர் (1599—1658)—இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் நடைபெற்ற முதலாளித்துவப் புரட்சியின் போது முதலாளித்துவ வர்க்கத்தினருக்கும் முதலாளித்துவப் போக்குள்ள பிரபுக்களுக்கும் தலைவராக இருந்தவர்; 1653ம் வருடத்திலிருந்து இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் உயர் பாதுகாவலராக (Lord Protector) இருந்தார்.—17, 168.

குஸேன் [Cousin], விக்டோர் (1792—1867)—பிரெஞ்சுக் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி, கதம்பவாதி(eclectic).—16.

கேதே [Goethe], யோஹன் வோல்ஃப்காங்க் (1749—1832)—மாபெரும் ஜெர்மன் எழுத்தாளர், சிந்தனையாளர்.—23.

சலண்ட்ரூஸ் [Sallandrouze], சார்ல் ஜான் (1808—1867)—பிரெஞ்சுத் தொழிலதிபர், அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர் (1848—1849); லுயி போனபார்ட்டை ஆதரித்தார்.—168.

சல்வாண்டி [Salvandy], நர்சிஸ் அஷில், கவுண்ட் (1795—1856)—பிரெஞ்சு எழுத்தாளர் மற்றும் அரசாங்கப்

பிரமுகர், ஆர்லேயானிஸ்டு, கல்வி அமைச்சர்(1837—1839 மற்றும் 1845—1848).—141.

சிஸ்மண்டீ [Sismondi], ஜான் சார்ல் லியானர் சிமோண்டு ட (1773 — 1842) — ஸ்விஸ் பொருளாதார நிபுணர், குட்டி முதலாளித்துவ நிலைகளிலிருந்து முதலாளித்துவத்தை விமர்சித்தவர்.—10.

சிஸர் [Caesar], கேயஸ் ஜூலியஸ் (சுமார் கி. மு. 100—44)—ரோமானிய தளபதியாகவும் ராஜீய அறிஞராகவும் இருந்தவர்.—16.

சுலூக் [Soulouque], பாவுஸ்டீன் (சுமார் 1782—1867)—ஹைட்டி தீவின் நீகிரோ குடியரசின் ஜனாதிபதி; 1849ல் முதலாவது பாவுஸ்டீன் என்ற பெயரில் தன்னைச் சக்கரவர்த்தியாக அறிவித்துக் கொண்டார்.—198.

சூ [Sue], எஜேன் (1804—1857)—பிரெஞ்சு எழுத்தாளர், சட்டமன்றத்தின் உறுப்பினர் (1850—1851).—96.

சென் அர்னே [Saint-Arnaud], அர்மான் ஜாக் அஷில் லெருவா ட (1801—1854) — பிரெஞ்சு மார்ஷல், போனபார்ட் ஆதரவாளர்; 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்புரட்சியைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவர்; இராணுவ அமைச்சர் (1851—1854).—53.

சென் பியோவ் [Saint-Beuve], பியேர் அன்ரி (1819—1855)—பிரெஞ்சு முதலாளி, நிலவுடைமையாளர்; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர், ஒழுங்குமுறைக் கட்சியின் பிரதிநிதி.—150.

சென் பிரிஸ்ட் [Saint-Priest], எம்மானுவேல் லுயி மரி, வைக்கவுண்ட் (1789—1881)—பிரெஞ்சு ஜெனரல், இராஜதந்திரி, முறைமைவாதி, சட்டமன்றத்தின் உறுப்பினர் (1849—1851).—141.

சென் ஜான் ட அன்ஜெலி [Saint-Jean d'Angély] —ரெனியே ட சென் ஜான் ட அன்ஜெலி, ஆகூஸ்ட் மிஷெல் எட்டியேன் பார்க்க.

சென் ஜுஸ்ட் [Saint-Just], லூயி அன்டுவான் (1767—1794)—பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் தலைவர்களில் ஒருவர், ஜாக்கோபின்களின் தலைவர்களில் ஒருவர். —15.

சேய் [Say], ஜான் பப்டிஸ்ட் (1767—1832)—பிரெஞ்சு பொருளாதார நிபுணர், விஞ்ஞானக்கேடான அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—16.

டன்க்கெர் [Duncker], பிரான்ஸ் (1822—1888)—ஜெர்மன் முதலாளித்துவ அரசியல் பிரமுகர், பதிப்பாளர்.—213.

டாக்வில் [Tocqueville], அலெக்சிஸ் (1805 — 1859) — பிரெஞ்சு வரலாற்றுசிரியர் மற்றும் அரசியல்வாதி, முறைமைவாதி; இரண்டாவது குடியரசில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர், வெளித்துறை அமைச்சர் (1849 ஜூன்—அக்டோபர்).—144.

டுஷட்டேல் [Duchâtel], ஷார்ல் (1803 — 1867) — பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், ஆர்லேயானிஸ்டு, உள்துறை அமைச்சர் (1839—1840, 1840—1848 பிப்ரவரி). —142.

டெபிலோத் [De Flotte], பால் (1817—1860)—பிரெஞ்சுக் கடற்படை அதிகாரி, பிளாங்கீயைப் பின்பற்றியவர்; பாரிசில் 1848 மே 15ந் தேதிய சம்பவங்களிலும் ஜூன் மாதத்திய எழுச்சியிலும் தீவிரமாகப் பங்கெடுத்தவர், சட்டமன்றத்தின் உறுப்பினராக (1850—1851) இருந்தவர்.—94.

டெமுலேன் [Desmoulins], கமீல் (1760—1794)—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர், பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் ஏற்பட்ட முதலாளித்துவப் புரட்சியில் தீவிரமாகப் பங்கெடுத்தவர், வலதுசாரி ஜக்கோபின்.—15.

டேவிட் [David]—கி.மு. பதினொன்றும் நூற்றுண்டின் இறுதி—பத்தாம் நூற்றுண்டின் முதற்பாதியில் இஸ்ரேல்-யூத நாட்டின் அரசர்.—77.

தலன்டியே [Talandier], பியேர் தெயொடோர் அல்ஃபிரேட் (1822—1890)—பிரெஞ்சுப் பத்திரிகையாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1848ஆம் ஆண்டு புரட்சியில் கலந்து கொண்டவர், 1851இலிருந்து நாடு பெயர்ந்தவர்; அகிலத்தின் பொதுக் கவுன்சிலின் உறுப்பினர் (1864); பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் உறுப்பினர் (1876—1880, 1881—1885).—233.

தன்டோன் [Danton], ஜார்ஜ் ஜாக் (1759—1794)—பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் பிரமுகர், ஜக்கோபின்களின் வலதுசாரி அணியின் தலைவர்.—14, 15.

தாந்தே அலிகியேரி [Dante Alighieri] (1265—1321)—மாபெரும் இத்தாலியக் கவிஞர்.—212.

தாரினியி [Thorigny], பியேர் பிரான்சுவா எலிசபெத் (1798—1869) — பிரெஞ்சு வழக்கறிஞர்; 1834ல் லியோனில் நடைபெற்ற ஏப்ரல் எழுச்சியில் கலந்து கொண்டவர்களின் செயல் பற்றிய நீதி விசாரணையை நடத்தினர்; போனபார்ட் ஆதரவாளர், உள்துறை அமைச்சர் (1851).—163.

தியேர் [Thiers], அடோல்ப் (1797—1877)—பிரெஞ்சு வரலாற்றுசிரியர் மற்றும் அரசாங்கப் பிரமுகர், சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்தவர் (1849—1851), ஆர்லேயானிஸ்டு; குடியரசின் தலைவர்(1871—1873), பாரிஸ் கம்யூனின் கொலையாளி.—53, 64, 68, 75, 94, 128, 142, 145, 150, 155, 161, 165, 169.

துப்பேன் [Dupin], அன்ரே மரி ஜான் ஜாக் (1783—1865)—பிரெஞ்சு வழக்கறிஞர்; அரசியல்வாதி, ஆர்லேயானிஸ்டு, சட்டமன்றத்தின் தலைவராக (1849—1851) இருந்தார்; பிற்காலத்தில் போனபார்ட் ஆதரவாளர்.—107, 115, 116.

துப்ரா [Duprat], பஸ்கால் (1815—1885)—பிரெஞ்சு பத்திரிகையாளர், முதலாளித்துவக் குடியரசுவாதி; இரண்டாவது குடியரசின் போது அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் ஆகிய இரண்டிலும் உறுப்

பினராக இருந்தவர், லுயீ போனபார்ட்டை எதிர்த்தவர்.—119, 120.

நெப்போலியன் முதலாம், போனபார்ட் [Napoleon I, Bonaparte] (1769—1821)—பிரெஞ்சு சக்கரவர்த்தி (1804—1814 மற்றும் 1815).—9, 15, 17, 19, 42, 52, 105, 106, 109, 168, 174, 178—192, 198, 199.

நெப்போலியன் மூன்றுவது (லுயி நெப்போலியன் போனபார்ட்) [Napoleon III (Louis Napoleon Bonaparte)] (1808—1873)—முதலாம் நெப்போலியனின் மருமகன், இரண்டாம் குடியரசின் தலைவர் (1848—1851), பிரெஞ்சு சக்கரவர்த்தி (1852—1870).—7, 9, 14, 18, 31, 32, 45—53, 57, 59, 65, 68, 75—85, 92—96, 101, 137, 143, 146—155, 160,—176, 179—185, 188—199.

நெய்மெயர் [Neumayer], மாக்சிமிலியான் ஜார்ஜ் ஜொசேப் (1789—1866)—பிரெஞ்சு ஜெனரல், ஒழுங்குமுறைக் கட்சிக்கு ஆதரவளித்தவர்.—110.

நேய் [Ney], எட்கார் (1812—1882)—பிரெஞ்சு ராணுவ அதிகாரி, போனபார்ட் ஆதரவாளர், குடியரசின் தலைவர் லுயி போனபார்ட்டின் உதவி அதிகாரி.—82.

பரகே ட இல் [Baraguay d'Hilliers], அஷில் (1795—1878)—பிரெஞ்சு ஜெனரல்; இரண்டாம் குடியரசின் போது அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினராக இருந்தவர்; 1851ல் பாரிஸ் நகரப் படைப் பிரிவின் தளகர்த்தராக இருந்தார்; போனபார்ட்டின் ஆதரவாளர் —124, 146.

பரோ [Barrot], ஒடிலோன் (1791—1873)—பிரெஞ்சு முதலாளித்துவ அரசியல்வாதி; 1848 டிசம்பர் முதல் 1849 அக்டோபர் வரை ஒழுங்குமுறைக் கட்சியை ஆதாரமாகக் கொண்டிருந்த அமைச்சரவைக்குத் தலைமை தாங்கினர்.—48—50, 52, 57, 81—83, 85, 101, 128, 132, 144, 161.

பரோஷ் [Baroche], பியேர் ஜூல் (1802—1870)—பிரெஞ்சு அரசியல்வாதியும் அரசாங்கப் பிரமுகரும்; ஒழுங்கு முறைக் கட்சியின் பிரதிநிதியாக இருந்தார்; பின்பு போனபார்ட்டின் ஆதரவாளர்; 1849ல் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் தலைமைப் பிராக்யூரேட்டராக இருந்தவர்.—95, 115, 116, 125, 133, 134.

பர்பே [Barbès], அர்மான் (1809 — 1870) — பிரெஞ்சுப் புரட்சியாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி; 1848ஆம் ஆண்டு புரட்சியில் தீவிரமாகப் பங்கேற்றார்; 1848 மே 15ந் தேதி நிகழ்ச்சிகளில் பங்கேற்றதற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார், 1854ஆம் ஆண்டு மன்னித்து விடுவிக்கப்பட்டார்.—200.

பல்லூ [Falloux], அல்பிரேட் (1811—1886)—பிரெஞ்சு அரசியல்வாதி, முறைமைவாதி, சமயத்துறையினர்; 1848ல் தேசியப் பட்டறைகளின் கலைப்பைத் தொடங்கி வைத்தார்; பாரிஸ் நகரத்தில் ஜூன் மாதத்திய எழுச்சியை நசுக்குவதற்குத் தூண்டுதலாக இருந்தவர்; கல்வி அமைச்சர் (1848—1849).—57, 81, 83, 144, 148.

பல்ஸாக் [Balzac], ஒனரே ட (1799—1850)—மாபெரும் பிரெஞ்சு யதார்த்தவாத எழுத்தாளர்.—198.

பாயி [Bailly], ஜான் சில்வேன் (1736—1793)—பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சிப் பிரமுகர், மிதவாத அரசியலமைப்புச் சட்ட முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைவர்களில் ஒருவர்.—17.

பாரிஸ் [Paris], கவுன்ட்—லுயி பிலிப் அல்பேர்ட் பார்க்க.

பாஸ் [Baze], ஜான் டிடியே (1800—1881)—பிரெஞ்சு வழக்கறிஞராகவும் அரசியல்வாதியாகவும் இருந்தவர்; ஆர்லேயானிஸ்டு.—142, 169.

பியா [Pyat], ஃபெலிக்ஸ் (1810—1889) — பிரெஞ்சுக் கட்டுரையாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1848ஆம் ஆண்டுப் புரட்சியில் கலந்து கொண்டவர், 1849இலிருந்து குடி பெயர்ந்தவர்; ஒரு சில ஆண்டுகளுக்கு மார்க்சையும் அகிலத்தையும் எதிர்த்து

அவதூறுப் பிரச்சாரம் செய்தார், இதற்காக லண்டனிலிருந்த பிரெஞ்சுக் கிளையைப் பயன்படுத்தினர்; பாரிஸ் கம்யூனின் உறுப்பினர்.—234.

பியோ [Billault], ஆகூஸ்ட் அடோல்ப் மரி (1805—1863) — பிரெஞ்சு அரசியல்வாதி, ஆர்லேயானிஸ்டு, அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர் (1848—1849), 1849க்குப் பிறகு போனபார்ட் ஆதரவாளர், உள்துறை அமைச்சர் (1854—1858).—132.

பிய் ஒன்பதாவது [Pius IX] (1792—1878)—ரோமானியப் போப்பாண்டவர் (1846—1878).—82.

பிளாங் [Blanc], லுயி (1811—1882)—பிரெஞ்சு குட்டி முதலாளித்துவச் சோஷலிஸ்ட், வரலாற்றுசிரியர்; 1848ல் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினராக இருந்தவர்; லுக்ஸம்பர்க் கமிஷனின் தலைவர்; 1848 ஆகஸ்ட் மாதத்துக்குப் பிறகு லண்டனிலுள்ள நாடு பெயர்ந்த குட்டி முதலாளிகளின் தலைவர்களில் ஒருவராக இருந்தார்.—14.

பிளாங்கி [Blanqui], லுயி ஆகூஸ்ட் (1805—1881)—பிரெஞ்சுப் புரட்சியாளர், கற்பனாவாதக் கம்யூனிஸ்ட்; 1848ம் வருடப் புரட்சியின் போது பிரான்சின் ஜனநாயக, பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அதிதீவிர இடதுசாரி அணியில் இருந்தவர்; பல முறை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்.—26, 200.

புப்லிக்கோலா [Publicola], புப்லியஸ் வலேரியஸ் (மரணம்: கி.மு.503)—பாதி கற்பனையும் பாதி உண்மையுமான ரோமானிய அரசாங்கப் பிரமுகர்.—16.

புரூட்டஸ் [Brutus], மார்கஸ் ஜூனியஸ் (சுமார் கி.மு.85—42)—ரோமானிய அரசியல்வாதி, ஜூலியஸ் சீஸருக்கு எதிராகச் சதி செய்தவர்களில் தலைவர்.—16.

புரூதோன் [Proudhon], பியேர் ஜோஸேப் (1809—1865)—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர்; பொருளியல், சமூகவியல் ஆகிய துறைகளில் நிபுணர்; குட்டி முதலாளிகளின் சித்தாந்தி; அராஜகவாதத்தைத் தொடங்கி

வைத்தவர்களில் ஒருவர்; 1848ல் அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர்.—8, 74, 210.

புரொலி [Broglie], அஷில் ஷார்ல் (1785—1870)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், பிரதம மந்திரி (1835—1836), சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்தவர் (1849—1851), ஆர்லேயானிஸ்டு.—94, 144.

புர்போன்கள் [Bourbons] — பிரான்சில் 1589—1792, 1814—1815 மற்றும் 1815—1830ம் வருடங்களில் ஆட்சி புரிந்த அரச குடும்பத்தினர்.—46, 60, 136, 137, 138, 142, 148, 180.

புல்ட் [Fould], அஷில் (1800—1867)—பிரெஞ்சு வங்கி முதலாளி, ஆர்லேயானிஸ்டு, பிற்காலத்தில் போனபார்ட்டின் ஆதரவாளர்; 1849க்கும் 1867க்கும் இடையில் பல தடவைகள் நிதி அமைச்சராக இருந்தவர்.—85, 125, 133, 134, 148.

புஷ்னர் [Büchner], லுத்விக் (1824 — 1899) — ஜெர்மன் உடலியல் விஞ்ஞானி, தத்துவஞானி, விஞ்ஞானக்கேடான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி.—222.

பெடோ [Bedeau], மரி அல்போன்ஸ் (1804—1863)—பிரெஞ்சு ஜெனரலாகவும் அரசியல்வாதியாகவும் இருந்தவர், மிதமான போக்குள்ள முதலாளித்துவக் குடியரசுவாதி; இரண்டாம் குடியரசின் போது அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் ஆகிய இரண்டு சபைகளிலும் துணைத் தலைவராக இருந்தவர்.—58, 126.

பெரியே [Berryer], பியேர் அன்டுவான் (1790—1868)—பிரெஞ்சு வழக்கறிஞராகவும் அரசியல்வாதியாகவும் இருந்தவர், முறைமைவாதி.—64, 94, 128, 141, 144, 148, 155.

பெரோ [Perrot], பெஞ்சமின் பியேர் (1791—1865)—பிரெஞ்சு ஜெனரல், 1848 ஜூன் மாதத்தில் ஏற்பட்ட எழுச்சியை ஒடுக்குவதில் பங்கு கொண்டவர், 1849ல் பாரிஸ் தேசியக் காவலர் படையின் தளபதி.—125.

பெர்சினியி [Persigny], ஜான் ஜில்பேர் விக்டோர், கவுண்ட் (1808—1872)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், போனபார்ட் ஆதரவாளர்; சட்டமன்றத்தின் உறுப்பினர் (1849—1851), 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்புரட்சியைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவர், உள்துறை அமைச்சர் (1852—1854 மற்றும் 1860—1863).—134, 161.

பெர்னர் [Bernard] — பிரெஞ்சு கர்னல், 1848 ஜூன் மாதத்திய பாரிஸ் எழுச்சியில் பங்கு கொண்டவர்களைத் தண்டித்த இராணுவக் கமிஷன்களுக்குத் தலைவராக இருந்தார்; 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப் புரட்சிக்குப் பிறகு போனபார்ட்டுக்கு எதிரான குடியரசுவாதிகள் மீது நீதிமன்றங்களை நடவடிக்கை எடுக்குமாறு தூண்டியவர்களில் ஒருவர்.—44.

பெனுவா ட அசி [Benoit d'Azy], டெனி (1796—1880)—பிரெஞ்சு அரசியல்வாதி, நிதித் துறை அதிபர்; சட்டமன்றத்தின் துணைத் தலைவர் (1849—1851), முறைமைவாதி.—132, 141.

பொலிஞாக் [Polignac], ஆகூஸ்ட் ஜூல் அர்மான் மரி, இளவரசர் (1780—1847) — பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், முறைமைவாதி, சமயத்துறையினர், வெளி நாட்டு அமைச்சராகவும் மந்திரி சபையின் தலைவராகவும் (1829—1830) இருந்தவர்.—144.

பொஷே [Faucher], லியோன் (1803—1854)—பிரெஞ்சு அரசியல்வாதி, ஆர்லேயானிஸ்டு, மால்தூசியப் பொருளாதார நிபுணர், உள்துறை அமைச்சர் (1848 டிசம்பர்—1849 மே, 1851), பிற்காலத்தில் போனபார்ட்டின் ஆதரவாளர்.—97, 133, 134, 143.

போனபார்ட் [Bonaparte] — நெப்போலியன் மூன்றுவது பார்க்க.

போனபார்ட்டுகள் [Bonapartes]—பிரான்சிலிருந்த பேரரசு வம்சத்தினர் (1804—1814, 1815, 1852—1870).—180, 183.

மக்கியவேலி [Machiavelli], நிக்கோலோ (1469 — 1527)—இத்தாலிய அரசியல் பிரமுகர், வரலாற்றுசிரியர், எழுத்தாளர்.—238.

மஞான் [Magnan], பெர்னர் பியேர் (1791—1865) — பிரெஞ்சு மார்ஷல், போனபார்ட் ஆதரவாளர், 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்புரட்சியைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவர்.—146, 163, 169.

மராஸ்ட் [Marrast], அர்மான் (1801—1852)—பிரெஞ்சுக் கட்டுரையாளர், மிதமான போக்குள்ள முதலாளித்துவக் குடியரசுவாதிகளின் தலைவர்களில் ஒருவர், *National* என்ற செய்தித்தாளின் ஆசிரியர்; 1848ல் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினராகவும் பாரிஸ் நகரத்தின் மேயராகவும் இருந்தவர்; அரசியல் நிர்ணயச் சபைக்குத் தலைவராக இருந்தார் (1848—1849).—17, 34, 52, 53.

மஸனியேலோ [Masaniello] (டொமாஸோ அனியேலோ என்பது உண்மைப் பெயர்) (1620—1647)—மீனவர், 1647ல் ஸ்பானிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நேப்பிள்சில் ஏற்பட்ட வெகுஜன எழுச்சியின் தலைவர்.—165.

மாகேன் [Mauquin], பிரான்சுவா (1785—1854)—பிரெஞ்சு வழக்கறிஞர், 1848 வரை மிதவாத முடியாட்சி எதிர்த்தரப்பின் தலைவர்களில் ஒருவர்; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர்.—114—117.

மாப்பா [Maupas], ஷார்லெமாஞ் எமீல் (1818—1888)—பிரெஞ்சு வழக்கறிஞர், போனபார்ட் ஆதரவாளர்; பாரிஸ் நகரப் போலீஸ் படையின் பிரதம அதிகாரி (1851), 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்புரட்சியைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவர், போலீஸ் அமைச்சர் (1852—1853).—163.

மார்க்ஸ் [Marx], கார்ல் (1818—1883)—7, 10, 13, 225, 228, 229.

மார்னி [Morny], ஷார்ல் ஆகூஸ்ட் லுயி ஜோஸேப், கவுன்ட் (1811 — 1865) — பிரெஞ்சு அரசியல்வாதி, போனபார்ட் ஆதரவாளர், சட்டமன்றத்தின் உறுப்பினர் (1849—1851), 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்

புரட்சியைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவர், உள்துறை அமைச்சர் (1851 டிசம்பர்—1852 ஜனவரி). —197.

மாலே [Molé], லூயி மட்டியே, கவுன்ட் (1781—1855)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், ஆர்லேயானிஸ்டு, பிரதம மந்திரி (1836—1837, 1837—1839); இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர்.—94, 144.

மால்வில் [Maleville], லியோன் (1803—1879)—பிரெஞ்சு அரசியல்வாதி, ஆர்லேயானிஸ்டு; இரண்டாவது குடியரசின் போது அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர்; உள்துறை அமைச்சர் (1848 டிசம்பர் மாதத்தின் பிற்பாதியில்).—132.

மான்க் [Monk], ஜார்ஜ் (1608—1670)—ஆங்கில ஜெனரல், 1660ல் இங்கிலாந்தில் முடியாட்சி மீண்டும் ஏற்படுவதற்கு உதவி செய்தவர்.—109.

மான்டலம்பேர் [Montalembert], சார்ல் (1810—1870)—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர்; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினர்; ஆர்லேயானிஸ்டு; கத்தோலிக்கக் கட்சியின் தலைவர்.—128, 144, 190.

மொலிஷோட் [Moleschott], யாக்கப் (1822—1893)—உடலியல் விஞ்ஞானி, தத்துவஞானி, விஞ்ஞானக்கேடான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி; ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இத்தாலியிலிருந்த கல்வி நிலையங்களில் கல்வி போதித்தார்.—222.

யோன் [Yon]—பிரெஞ்சு போலீஸ் கமிஷனர்; 1850ல் சட்டமன்றத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்.—107, 115, 116.

ரட்டோ [Rateau], ஜான் பியேர் (1800 — 1887) — பிரெஞ்சு வழக்கறிஞர், இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம்

இரண்டிலும் உறுப்பினர், போனபார்ட் ஆதரவாளர். —49.

ரஸ்பைல் [Raspail], பிரான்சுவா (1794—1878)—பிரெஞ்சு இயற்கையியல் விஞ்ஞானி, சோஷலிஸ்டு, புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தினருக்கு நெருங்கியவராயிருந்தார்; 1830, 1848ஆம் ஆண்டுகளின் புரட்சிகளில் பங்கு கொண்டவர்; அரசியல் நிர்ணயச் சபையின் உறுப்பினர்.—200.

ரிச்சர்ட் மூன்றுவது [Richard III] (1452—1485)—இங்கிலாந்தின் அரசர் (1483—1485).—138.

ரீல் [Riehl], வில்ஹெல்ம் ஹென்ரிஹ் (1823—1897)—இலக்கியத் துறையில் பிற்போக்கு ஜெர்மன் வரலாற்றுசிரியர்.—216.

ருயே [Rouher], எஜேன் (1814—1884)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், போனபார்ட் ஆதரவாளர், நீதித் துறை அமைச்சர் (1849 — 1852 வருடங்களில் இடையிடையே).—114, 133.

ருவயே-காலார் [Royer-Collard], பியேர் பால் (1763—1845)—பிரெஞ்சுத் தத்துவஞானி மற்றும் அரசியல்வாதி, முடியாட்சியின் ஆதரவாளர்.—16.

ரெமூஸா [Rémusat], ஷார்ல் பிரான்சுவா மரீ, கவுன்ட் (1797 — 1875) — பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர் மற்றும் எழுத்தாளர், ஆர்லேயானிஸ்டு, உள்துறை அமைச்சர் (1840); வெளித்துறை அமைச்சர் (1871—1873).—126.

ரெனியே ட சென் ஜான் ட அன்ஜெலி [Regnault de Saint-Jean d'Angély], ஆகூஸ்ட் மிஷெல் எட்டியேன், கவுன்ட் (1794—1870)—பிரெஞ்சு ஜெனரல், போனபார்ட் ஆதரவாளர்; இராணுவ அமைச்சர் (1851 ஜனவரி).—124.

ரொபெஸ்பியேர் [Robespierre], மக்சிமிலியேன் (1758—1794)—பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் தலைவர்களில்

ஒருவர், ஜக்கோபின்களின் தலைவர், புரட்சிகர அரசாங்கத்தின் தலைவர் (1793—1794).—14, 15.

ரௌ [Rau], **கார்ல் ஹென்ரிஹ்** (1792—1870)—ஜெர்மன் விஞ்ஞானக்கேடான பொருளாதார நிபுணர்.—215.

லமர்ட்டீன் [Lamartine], **அல்போன்ஸ்** (1790 — 1869)—பிரெஞ்சுக் கவிஞர், வரலாற்றுசிரியர், அரசியல்வாதி; 1848ல் வெளித்துறை அமைச்சர், தற்காலிக அரசாங்கத்துக்கு உண்மையில் தலைவராக இருந்தவர்.—132.

லமொரிசியேர் [Lamoricière], **கிஸ்டோப் லுயி லியோன்** (1806—1865)—பிரெஞ்சு ஜெனரல், மிதமான போக்குள்ள முதலாளித்துவக் குடியரசுவாதி, 1848ல் ஜூன் மாத எழுச்சியை நசுக்கியதில் தீவிரமான பங்கு கொண்டவர், பின்னர் கவெஞாக் அரசாங்கத்தில் இர்ாணுவ அமைச்சராகப் (1848 ஜூன் முதல் டிசம்பர் முடிய) பணியாற்றியவர்.—58, 169.

லயிட் [La Hitte], **ஜான் எர்னேஸ்ட்** (1789—1878)—பிரெஞ்சு ஜெனரல், போனபார்ட்டின் ஆதரவாளர், சட்டமன்றத்தின் உறுப்பினர் (1850—1851), வெளித்துறை அமைச்சர் (1849—1851).—94.

லரோஷ்ஜக்லேன் [La Rochejaquelein], **அன்ரி ஆகூஸ்ட் ஜார்ஜ், மார்க்விஸ்** (1805—1867)—பிரெஞ்சு அரசியல்வாதி, முறைமைவாதக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினராக இருந்தவர்.—144.

லாக் [Locke], **ஜான்** (1632—1704)—ஆங்கில இருமைவாதத்தின் தத்துவஞானி, புலனுணர்ச்சிக் கோட்பாட்டாளர்.—17.

லிஸ்ட் [List], **பிரெடெரிக்** (1789 — 1846) — ஜெர்மன் விஞ்ஞானக்கேடான பொருளாதார நிபுணர், தீவிரமான காப்புவாதத்தைப் பிரச்சாரம் செய்தவர்.—215.

லூயி நெப்போலியன் [Louis Napoleon] — நெப்போலியன் மூன்றுவது பார்க்க.

லூயி பதினான்காவது [Louis XIV] *(1638—1715)*—பிரான்சின் அரசர் *(1643—1715)*.—*183*.

லூயி பதினைந்தாவது [Louis XV] *(1710—1774)*—பிரான்சின் அரசர் *(1715—1774)*.—*198*.

லூயி பதினெட்டாவது [Louis XVIII] *(1755—1824)*—பிரான்சின் அரசர் *(1814—1815* மற்றும் *1815—1824)*.—*16*.

லூயி பிலிப் [Louis Philippe] *(1773 — 1850)*—ஆர்லேயான் டியூக், பிரான்சின் அரசர் *(1830—1848)*.—*24, 27, 31—34, 44, 48, 57, 78, 81, 103, 140, 143, 146, 148, 179*.

லூயி பிலிப் ஆல்பேர் [Louis Philippe Albert], ஆர்லேயான் டியூக், பாரிஸ் கவுன்ட் *(1838—1894)*—அரசர் லூயி பிலிப்பின் பேரன், பிரெஞ்சு அரியணைக்கு உரிமை கொண்டாடியவர்.—*140*.

லூயி போனபார்ட் [Louis Bonaparte] — நெப்போலியன் மூன்றுவது பார்க்க.

லூதர் [Luther], மார்ட்டின் *(1483—1546)*—மதச் சீர்திருத்த இயக்கத்தின் பெருந்தலைவர், ஜெர்மனியில் புரோட்டஸ்டென்ட் (லூதரன்) திருச்சபையை நிறுவியவர், ஜெர்மன் மத்தியதர வர்க்கத்தின் சித்தாந்தி.—*15*.

லெட்ரு-ராலேன் [Ledru-Rollin], அலெக்சாண்டர் ஆகூஸ்ட் *(1807—1874)*—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் தலைவர்களில் ஒருவர், La Réforme என்ற செய்தித்தாளின் ஆசிரியர்; அரசியல் நிர்ணயச் சபையிலும் சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்த பொழுது மலைக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைவராக இருந்தார்; பிறகு பிரான்சை விட்டு போய்விட்டார்.—*34, 58, 68, 74*.

லெப்லோ [Le Flô], அடோல்ப் எம்மானுவேல் ஷார்ல் (1804—1887)—பிரெஞ்சு ஜெனரல், அரசியல்வாதி, ஒழுங்குமுறைக் கட்சியின் பிரதிநிதி; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் ஆகிய இரண்டிலும் உறுப்பினர்.—53, 169.

லேவி [Lewy], கூஸ்தவ்—ஜெர்மன் சோஷலிஸ்ட், ஜெர்மன் தொழிலாளர் பொதுச் சங்கத்தின் தீவிரப் பிரமுகர்களில் ஒருவர்.—234.

வட்டிமெனில் [Vatimesnil], அன்டுவான் (1789 — 1860)—பிரெஞ்சு அரசியல்வாதி, முறைமைவாதி, சட்டமன்றத்தின் உறுப்பினர் (1849—1851).—132.

வயிஸ் [Vaisse], கிலோட் மாரியஸ் (1799—1864)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், போனபார்ட் ஆதரவாளர், உள்துறை அமைச்சர் (1851 ஜனவரி—ஏப்ரல்).—131, 132.

வால்தேர் [Voltaire], பிரான்சுவா மரி (அரூயே என்பது உண்மைப் பெயர்) (1694 — 1778) — பிரெஞ்சு அறிவியக்கவாதி, தத்துவஞானி, எழுத்தாளர்-நகைச்சுவையாளர், வரலாற்று ஆசிரியர்.—87.

விடேல் [Vidal], பிரான்சுவா (1814—1872)—பிரெஞ்சுப் பொருளாதார நிபுணர், குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்ட், 1848ல் லுக்ஸம்பர்க் கமிஷனின் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் (1850—1851).—96.

வியேரா [Vieyra], — பிரெஞ்சு கர்னல், போனபார்ட் ஆதரவாளர், 1851 டிசம்பர் 2ந் தேதிய திடீர்ப்புரட்சியில் தீவிரமான பங்கெடுத்துக் கொண்டார்.—76.

விலேல் [Villèle], ஜான் பப்டீஸ்ட் செரபிம் ஜோஸெப் (1773—1854)—பிரெஞ்சு அரசாங்கப் பிரமுகர், முறைமைவாதி, பிரதமர் (1822—1828).—144.

வில்லிஹ் [Willich], ஔகுஸ்ட் (1810 — 1878) — பிரஷ்ய இராணுவ அதிகாரி, கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1849ஆம் ஆண்டு பதேன்-ஃபல்த்ஸ் எழுச்சியில் பங்கேற்றவர்; 1850இல் கம்யூனிஸ்டுகள் சங்கத்

திலிருந்து பிரிந்த குறுங்குழுவாத-துர்சாகசவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்; 1853இல் அமெரிக்காவிற்குக் குடி பெயர்ந்தார், உள்நாட்டு யுத்தத்தில் வடக்குப் பிரதேசத்தவர்களின் தரப்பிலிருந்தார்.—234.

வெய்டமெயர் [Weydemeyer], யோசிப் (1818 — 1866) — ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமானவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்; ஜெர்மனியில் 1848 — 1849ல் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டார்; அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தம் நடந்த பொழுது வடக்குப் பிரதேசத்தவர்களின் தரப்பிலிருந்தார்; அமெரிக்காவில் மார்க்சியத்தைப் பரப்பிய முதல் நபர்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், அவர்களோடு நெருங்கி ஒத்துழைத்தவர்.—7, 232.

வெரோன் [Véron], லுயி டெசிரே (1798—1867)—பிரெஞ்சுப் பத்திரிகையாளர் மற்றும் அரசியல்வாதி, போனபார்ட் ஆதரவாளர்; Constitutionnel என்ற செய்தித்தாளின் உரிமையாளர்.—198.

வோல்ஃப் [Wolff], கிரிஸ்தியன் (1679—1754)—ஜெர்மன் தத்துவஞானி, இயக்கமறுப்பியல்வாதி.—222, 223.

ஜிரார்டென் [Girardin], எமீல் ட (1806 — 1881) — பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர், அரசியல்வாதி, La Presse என்ற நாளிதழை ஆசிரியராக இருந்து நடத்தியவர்; 1848 புரட்சிக்கு முன்பு கிஸோ அரசாங்கத்தை எதிர்த்தவர்; புரட்சியின் போது முதலாளித்துவக் குடியரசுவாதியாக இருந்தவர், சட்டமன்றத்தின் உறுப்பினர் (1850—1851); பிற்காலத்தில் போனபார்ட்டின் ஆதரவாளர்.—120.

ஜிரார்டென் [Girardin], டெல்பினே ட (1804—1855)—பிரெஞ்சு எழுத்தாளர், எமீல் ட ஜிரார்டென் என்பவருடைய மனைவி.—198.

ஜிரோ [Giraud], ஷார்ல் ஜோஸேப் பர்டெலெமி (1802—1881)—பிரெஞ்சு வழக்கறிஞர், முடியாட்சியின் ஆதரவாளர், கல்வி அமைச்சர் (1851).—164.

ஜுவன்வில் [Joinville], பிரான்சுவா பெர்டினன்ட் பிலிப் லுயி மரி ட ஆர்லேயான், இளவரசர் (1818—1900)—லுயி பிலிப்பின் மகன், 1848 பிப்ரவரிப் புரட்சி வெற்றி பெற்ற பிறகு பிரான்சை விட்டு இங்கிலாந்துக்குப் போனர்.—142, 161.

ஷம்போர் [Chambord], அன்ரி ஷார்ல், கவுன்ட் (1820—1883)—பூர்போன் அரசமரபின் அதிகப் பழமையான கிளையின் கடைசிப் பிரதிநிதி; பத்தாம் சார்லசின் பேரன்; ஐந்தாம் ஹென்ரி என்ற பெயரில் பிரெஞ்சு அரியணைக்கு உரிமை கொண்டாடியவர்.—64, 103, 140, 148.

ஷராஸ் [Charras], ஜான் பப்டிஸ்ட் அடோல்ப் (1810—1865)—பிரெஞ்சு இராணுவ அதிகாரியாகவும் அரசியல் வாதியாகவும் இருந்தவர், மிதமான போக்குள்ள முதலாளித்துவக் குடியரசுவாதி; 1848 ஜூன் மாதத்தில் பாரிஸ் நகரத்தில் தொழிலாளர்களின் எழுச்சியை ஒடுக்குவதில் பங்கு கொண்டவர்; லுயி போனபார்ட்டை எதிர்த்தவர்; பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டார்.—9, 169.

ஷன்கர்னியே [Changarnier], நிக்கோலா ஜூன் தியோடுல் (1793—1877)—பிரெஞ்சு ஜெனரல், அரசியல்வாதி, முடியாட்சியின் ஆதரவாளர்; 1848 ஜூன் மாதத்துக்குப் பிறகு பாரிஸ் நகரப் படைப் பிரிவுக்கும் தேசியக் காவலர் படைக்கும் தளகர்த்தராக இருந்தவர்; 1849 ஜூன் 13ந் தேதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதில் முக்கிய பங்கு வகித்தவர்.—51, 53, 57, 69, 77, 78, 107, 109, 110, 115, 116, 121—126, 129, 134, 135, 145, 150, 161, 165, 169.

ஷாபெர் [Schaper], ஹெர் வொன் — பிரஷ்ய பிற்போக்கு அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவர், ரைன் பிரதேசத்தின் தலைவர் (1842—1845).—205.

ஷாப்பர் [Schapper], கார்ல் (1812 — 1870) — ஜெர்மன் மற்றும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் பிரபல பிரமுகர், நியாயமானவர்களின் சங்கத்தின் தலைவர்களில் ஒருவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், ஜெர்மனியில் 1848—

1849ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சியில் கலந்து கொண்டவர்; 1850ஆம் ஆண்டு கம்யூனிஸ்டுகள் சங்கப் பிளவின் போது குறுங்குழுவாத-துர்சாகசவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்; 1856 முதல் கா. மார்க்சின் ஆதரவாளர்; முதலாம் அகிலத்தின் பொதுக் கவுன்சிலின் உறுப்பினர்.—234.

ஷேக்ஸ்பியர் [Shakespeare], வில்லியம் (1564—1616)—மாபெரும் ஆங்கில நாடகாசிரியர்.4—177.

ஷேர்ட்ஸார் [Scherzer], ஆண்ட்ரியஸ் (1807—1879)—ஜெர்மன் தையற்காரர், பாரிஸ் கழகங்கள் ஒன்றின்—1850இல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பிளவிற்குப் பின் இது வில்லிஷ்-ஷாப்பரின் குறுங்குழுவாத-துர்சாகசவாதப் பிரிவுடன் சேர்ந்தது — உறுப்பினர்; 1852ஆம் ஆண்டு பிப்ரவரியில் பாரிசில் நடைபெற்ற ஜெர்மன்-பிரெஞ்சு சதி என்றழைக்கப்படுவது சம்பந்தமான விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர்; பின்னல் இங்கிலாந்திற்கு நாடு பெயர்ந்தார்.—234.

ஷ்டைன் [Stein], லோரென்ட்ஸ் (1815—1890)—ஜெர்மன் சட்ட நிபுணர், விஞ்ஞானக்கேடான பொருளாதார நிபுணர்.—215.

ஷ்தேஃபென் [Steffen], வில்ஹெல்ம்—முந்தைய பிரஷ்ய இராணுவ அதிகாரி, கேல்னில் கம்யூனிஸ்டுகள் மீது நடைபெற்ற விசாரணையின் போது (1852) எதிர்த்தரப்பின் சாட்சி; 1853இல் இங்கிலாந்திற்கும் பின் அமெரிக்காவிற்கும் குடி பெயர்ந்தார்; 50ஆம் ஆண்டுகளில் மார்க்ஸ், எங்கெல்சுக்கு நெருக்கமானவராய் இருந்தார்.—234.

ஷ்ராம் [Schramm], ஜான் பால் ஆடாம் (1789—1884)—பிரெஞ்சு ஜெனரல் மற்றும் அரசியல்வாதி, போனபார்ட் ஆதரவாளர், இராணுவ அமைச்சர் (1850—1851).—111.

ஸ்மித் [Smith], ஆடம் (1723—1790)—ஆங்கிலேய பொருளாதார நிபுணர், மூலச்சிறப்புடைய அரசியல் பொருளாதாரத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவர்.—229.

ஹியூகோ [Hugo], விக்டோர் *(1802 — 1885)* — பிரெஞ்சு எழுத்தாளர்; இரண்டாவது குடியரசுக் காலத்தில் அரசியல் நிர்ணயச் சபை, சட்டமன்றம் இரண்டிலும் உறுப்பினராக இருந்தவர்.—*8, 82.*

ஹெகல்[Hegel],கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக்*(1770—1831)*— மூலச்சிறப்புடைய ஜெர்மானியத் தத்துவஞானத்தின் மிகச் சிறந்த பிரதிநிதி, புறவியல் ரீதியான கருத்து முதல்வாதத்தை எடுத்துரைத்தார். — *14, 206, 210, 215, 221, 224, 225.*

ஹென்ரி இரண்டாவது ட லோரைன் [Henry II of Lorraine], கிஸ், டியூக் *(1614—1664)*—''பிரோண்டா'' என்ற சமூக இயக்கத்தின் ஒரு பிரமுகர்.—*196.*

ஹென்ரி ஐந்தாம் [Henry V] — ஷம்போர், அன்ரீ ஷார்ல் பார்க்க.

ஹென்ரி ஆறுவது [Henry VI] *(1421—1471)* — இங்கிலாந்தின் அரசர் *(1422—1461).—138.*

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக்களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
சேர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.